


9 789550 585366


மெகா பதிப்பகம்

உ

சித்த மருத்துவ வெளியீடு இல – 02

# சித்த மருத்துவத்தில் நாடி






**தொகுப்பாசிரியர்கள்**

தயாளினி

வித்தியா

கௌரீதரசர்மா

சரணியா

வைகலை

# சித்த மருத்துவத்தில் நாடி

**தொகுப்பாசிரியர்கள்**

**தி.தயாளினி** **BSMS(Jaffna),MPhil(JAffna),PhD(Pera)**
சிரேஷ்ட விரிவுரையாளர்
(தலைவர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**மி.பி.வித்தியா** **BSMS(Jaffna)**
(விரிவுரையாளர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**ச.கௌரீதரசர்மா** **BSMS(Jaffna)**
(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**தி.சரணியா** **BSMS(Jaffna)**
(சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**பி.வைகலை** **BSMS(Jaffna)**
(சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**வெளியீடு**
சித்த மருத்துவ அலகு
யாழ் பல்கலைக்கழகம்
2020

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | சித்த மருத்துவத்தில் நாடி |
| சித்த மருத்துவ வெளியீடு | : | இல. 02 |
| தொகுப்பாசிரியர்கள் | : | தி.தயாளினி<br>மி.பி.வித்தியா<br>ச.கௌரீதரசர்மா<br>த.சரணியா<br>பி.வைகலை |
| வெளியீடு | : | சித்த மருத்துவ அலகு,<br>யாழ் பல்கலைக்கழகம் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு,2020 |
| பதிப்புரிமை | : | தொகுப்பாசிரியருக்கே |
| அச்சு | : | மெகா பிரின்டர்ஸ் |
| ISBN | : | 9 789550 585366 |
| விலை | : | 450/- |

# பொருளடக்கம்

ஆசியுரை………………………………………… i

வாழ்த்துரை…………………………………………… iii

முகவுரை………………………………………… v

1. நாடி நடையின் இலக்கணம். 1

2. நாடி நிதானம் 4

3. நாடி பார்க்குமிடங்கள் 7

4. நாடி பார்க்கும் விதம். 12

5. நாடி நடையும் கதியும் 27

6. நாடியின் நிலைமை 41

7. நாடியும் சுவையும் 46

8. நாடியின்வகைகள் 49

9. நாடியின் வேறுபட்ட நிலைகள் 76

10. நோய்களில் நாடி நடை 87

11. சுகதேகிகளில் நாடி 108

12. அசாத்திய நாடியும் மரணக்குறிகளும் 115

13. தொகுப்புரை 141

உசாத்துணை நூல்கள் ……………………..…………154

## அட்டவணைகள்

**அட்டவணை 01** : நாடிச் சக்கரம் 66

**அட்டவணை 02** : ஐம்புலன் தசநாடி தோஷம் இவற்றிற்கு இடையேயான தொடர்பு 52

## படங்கள்

**படம் 01** : சாதாரண நாடி நடை அலைகள் 38

**படம் 02** : ஓர் அலையின் அமைப்பு 39

**படம் 03** : வாத,பித்த ,கப நாடிகளின் சலனக்குறிப்பு 39

**படம் 04** : இடைகலை, பிங்கலை நாடிகளின் பாதை 145

**படம் 05** : ஐம்பொறிகள் உணரும் உணர்ச்சிகள் 146

**படம் 06** : காந்தாரி நாடியின் பாதை 149

**படம் 07** : அத்தி, சிகுவை நாடியின் பாதை 150

**படம் 08** : அலம்புருடன், அலம்படை நாடியின் பாதை 151

# ஆசியுரை

உலகம் போற்றும் சித்த மருத்துவமானது அனாதியானது, இறைவனால் அருளப்பட்டதே சித்த மருத்துவமாகும். அதன் காரணத்தால் இறைவனுக்கு வைத்தியநாதன் எனும் பெயரும் உண்டு. இறைவனானவர் நந்தி தேவருக்கு கூற நந்திதேவர் சித்தர்களுக்கு இவ் வைத்திய முறையினை கூறியதாக நம்பப்படுகிறது. சித்தர்களாலே அருளப்பட்ட இயற்கையுடன் இணைந்த பக்க விளைவுகளற்ற மருத்துவ முறையே சித்த மருத்துவம் ஆகும். உலக வாழ்வில் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைப்பது மட்டும் அல்லாது ஆத்மாவையும் பரமாத்மாவையும் இணைக்கும் தத்துவங்கள் சித்த மருத்துவத்தில் மட்டுமே உண்டு.

சித்த மருத்துவம் எனும் பெருங்கடலை கடக்க அல்லது அக்கடலிலே நல்ல விடயங்களைப் பெற சிறந்த வைத்தியராக பிணியாளர்களை நாட, நோயை நாடி தெளிவுற, இறையடியை நாட பயன்படும் முறையே நாடி எனும் மார்க்கமாகும். ஒவ்வோர் சித்த மருத்துவனும் மிக அவசியமாக கற்க வேண்டிய பயிற்சி பெற வேண்டிய விடயம் நாடி சாஸ்திரம் ஆகும். சித்த மருத்துவ மூலதர்மமும் நாடி சாஸ்திரமும் முறையாக கற்றவர்களே சிறந்த சித்த மருத்துவர்களாக திகழ முடியும்.

நாடி பற்றி திருவள்ளுவர் திருக்குறளிலும் பதினெண் சித்தர்கள் தங்கள் நூல்களிலும் தெளிவாக கூறியுள்ளார்கள். எமது முன்னோர்கள் நாடி பற்றி கூறிய பல விடயங்கள் வெவ்வேறு நூல்களில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. தவிர பல்வேறு சித்த வைத்திய நூல்கள் எம்மிடையே இருந்தாலும் அனைத்தையும் தேடி பெறுவது கடினம்.அக்கடின வேலையை இலகுவாக்குவதற்காக பல்வேறு நூல்களையும் ஆராய்ந்து தொகுத்து அனைவரும் பயன்பெற இங்கு வழியை ஏற்படுத்தி தொகுக்க முயற்சி செய்த விரிவுரையாளர் பெருமதிப்பிற்குரிய சித்த வைத்திய கலாநிதி தி.தயாளினி அம்மையாரின் முயற்சி மிகவும் போற்றறத்தக்கது. அது மட்டுமன்றி தனது மருத்துவ மாணவர்களையும் இப்பணியில் ஈடுபட வைத்து அவர்களது வளர்ச்சியிலும் அக்கறை கொண்ட ஆசானாக திகழ்வது மேலும் சிறப்பு.

சித்த மருத்துவத்திலே கூறப்படாத விடயங்கள் எதுவும் இல்லை. வாழ்க்கை முறை, உணவுப்பழக்கம், மனவளம், உடல்வளம், ஆரோக்கிய வாழ்வு, பரம்பொருளை அடையும் உபாயம் இன்னும் பல விடயஙிகள் உண்டு. நாடி சாஸ்திரமானது உரிய முறையில் கற்று உகந்த காலத்தில் பரீட்சித்து உட்பொருளை தெளிவாக அறிந்தால் நோய் பற்றிய நோயாளி பற்றிய நிதானம் தெளிவாக கிடைக்கும். அத்தெளிவு கிடைத்தால் சிகிச்சை இலகுவாகும். பிணி தீரும். பல்வேறு புத்தகங்களில் வெவ்வேறு சித்தர்களால் கூறப்பட்ட நாடி சம்பந்தமான அரிய விடயங்களை தொகுத்த மதிப்பிற்குரிய

வைத்திய ஆசானுக்கும் அவரது நல் மாணாக்கர்களுக்கும் இறையாசி வேண்டுகிறேன். அத்துடன் சித்த மருத்துவமாணவர்கள்,சித்த மருத்துவ சமூகம் இவ்வெளியீட்டால் சிறந்த பயனடைவதுடன் இந்நூலானது சித்த மருத்துவத்தில் நாடி பற்றிய ஆய்விற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

**வைத்தியர்.செ.ப.சத்தியநாதன்(DAM)**
**பாரம்பரிய வைத்தியர்,**
**சாஸ்திரிகூழாங்குளம்,**
**வவுனியா.**

# வாழ்த்துரை

தமிழர் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவமானது எமது வாழ்வியலில் பின்னிப் பிணைந்த வரலாற்றைக் கொண்ட ஒரு தொன்மை மிக்க மருத்துவமாக இருந்த போதும் நவீன மயமாதல் எனும் கால ஓட்டத்தில் அகப்பட்டு பாரியதொரு இடைவெளியைக் கொண்ட மருத்துவமாக இன்று காணப்படுகின்றது. இலங்கையின் சுகாதார சேவை வழங்கலில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் மருத்துவ முறைகளில் ஒன்றாக இருந்த போதிலும் சித்தர்களின் ஞானதிருஷ்டி மூலம் பெறப்பட்ட பல, ஆழமான, பயன் உள்ள, சிறப்பம்சங்களை மீளவும் வெளிக்கொண்டு வருவதில் சேவை வழங்குநராகிய நாம் பாரிய ஒரு சவாலை எதிர்நோக்கியுள்ளோம் எனக்கூறினால் அது மிகையாகாது. முற்றிலும் மேலைத்தேய நவீன வாழ்க்கை முறைக்கும் விஞ்ஞான அடிப்படையிலும் மட்டுப்படுத்தப்பட்ட எமது அறிவானது, இவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்ட மேன்மையான சூட்சுமமான அறிவுசார்ந்த விடயங்களான சித்த மருத்துவ தத்துவங்களை வெளிக்கொணர நாம் பகீரத பிரயோர்த்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வகையில் நாடிப்பரீட்சை/ நாடிவிஞ்ஞானம்/ நாடிதர்ப்பணம் எனும் நாடி தத்துவத்தினை சித்த மருத்துவத்தின் அடிப்படை எனலாம். ஒரு மனிதனின் கர்ப்பப்பைக்குள் ஆரம்பிக்கும் வாழ்க்கை முதல் வாழ்வின் இறுதியான மரணம் வரையிலான அவன் சாந்த சகல விடயங்களையும் அறிந்து கொள்ளக்கூய ஆழமான தத்துவங்களை இந்நாடி விஞ்ஞானம் கொண்டிருக்கின்றது என்பதை உண்மையான சித்த மருத்துவத்தை கையாளும் அனைத்து மருத்துவர்களாலும் உணரப்பட்டுள்ளது. நவீன மருத்துவத்தின் கீழ் உள்ளடங்கும் உடலின் உள்ளார்ந்த மாற்றங்களை அவதானிக்கக்கூடிய MRI Scan,CT Scan போன்ற தொழில்நுட்பம் சார்ந்த பரிசோதனைகளால் கூட கண்டுபிடிக்க முடியாத உடலியக்கம் சார்ந்த, கடந்த கால, நிகழ்கால மாற்றங்களுக்கு அப்பால் எதிர்காலத்தாக்கங்களை கூட எதிர்வு கூறக்கூடிய ஆழமான அறிவே நாடி விஞ்ஞானம் எனப்படும்.

எனினும் மேலைத்தேய விஞ்ஞானம் கூறும் Puls எனும் விடயத்திற்கு அப்பால் செல்லாமல் நம் நாடியை மட்டுப்படுத்தியதன் விளைவே இன்று நாடி விஞ்ஞானத்தின் சரியான அறிவையும் பயன்பாட்டையும் தவறவிட்டமைக்கு ஒரு பிரதான காரணமாக கூறலாம்.

எனவே சித்த மருத்துவத்தின் உண்மையான எதிர்காலமும், பயன்பாடும் சரியான நாடி அறிதல் மூலமே மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்னும் எண்ணக்கருவுடன் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் விரிவுரையாளர் அவர்கள் வழிநடத்தலில் விரிவுரையாளர் உள்ளிட்ட நூலாசிரியர் குழுவின் முயற்சியான நாடி விஞ்ஞானம் சார்ந்த சித்த மருத்துவர்களின் தொகுப்பாகிய ''சித்த மருத்துவத்தின் நாடி'' எனும் தலைப்பிலான இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் மாகாண சுதேச

மருத்துவத்திணைக்களத்தின் ஆணையாளராகிய நான் பெரும் மகிழ்வு அடைகின்றேன். இந்நூலானது மருத்துவர்களதும் மருத்துவ மாணவர்களினதும் நாடி தொடர்பான தேடலையும், ஆய்வுகளையும் ஊக்குவிப்பதில் மிகவும் பயன் உள்ளதாக அமையும் என்பதுடன் இவ்வாறான முயற்சியின் மூலம் மனித வாழ்வின் மேம்பாட்டுக்கான சித்த மருத்துவத்தை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும். இந்நூலாசிரியர் குழாத்துடன் இணைந்து கடமையாற்றி இம்முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

**Dr.(திருமதி)சி.துரைரட்ணம்.**
**மாகாண ஆணையாளர்**
**சுதேச மருத்துவ திணைக்களம்**
**வடமாகாணம்**

# முகவுரை

சித்த மருத்துவமானது இலங்கையில் உள்ள சுதேச மருத்துவத்தில் ஒன்றாகும். இம் மருத்துவமானது இறைவனால் சித்தர்கள் வழியாக மனிதர்கள் நோய் வராது ஆரோக்கியமாக வாழவும் வந்த நோய்களைத் தீர்ப்பதற்குமான வழிகளையும் மருந்துகளையும், நோய் நிதானிப்பு முறைகளையும் வகுத்து அருளப்பட்ட ஒரு மருத்துவமாகும். நாடி என்பது சித்த மருத்துவத்திற்கே உரிய தனித்துவமான ஒரு நோய் நிதானிப்பு முறையாகும்.

திருவள்ளுவர் திருக்குறளில்

''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்''

என மருந்து என்னும் அதிகாரத்தின் கீழ் இந்நோய் இன்னதென ஆராய்ந்து நோய்க்கு மூலகாரணம் இன்னது எனக் கண்டு அது குறைக்கும் வழியை தேடி, உடலுக்கும் பொருந்துமாறு மருத்துவம் செய்தல் வேண்டும் என நாடி பற்றிக் கூறியுள்ளார்.

''நாடி என்பது நாடி அல்ல''எழுவகைத் தோற்றம் ஈறாக அண்டமெல்லாம் ஆராய்ந்து நாடுவதுஆகும் என சித்தமருத்துவம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அலோபதி மருத்துவத்தில் நாடியை Pulse எனக் குறிப்பிட்டு Rate, Rhythm, Volume,Character, condition of the arterial wall என 5 விடயங்களைகணிக்கின்றார்கள். மரணத்தினை உறுதி செய்யவும் pulse ஐப் பார்க்கின்றார்கள். சித்த மருத்துவத்தில் முற்காலத்தில் நாடியைக் கொண்டு எவ்வளவு நேரத்தில் இறப்பு ஏற்படும் என்பதை சித்த வைத்தியர்கள் தெளிவாகக் கணித்தார்கள். இவற்றை விட நோயை நிதானித்தல், நோய்க்குரிய காரணத்தை நாடுதல் என்ற கருத்துக்களில் நாடி தற்போது கருதினாலும் நாடி பற்றிய அறிவும் நாடி பார்ப்பதில் உள்ள திறனும் (Skill) தற்போது மிகவும் அரிதாகிக் கொண்டு வருகின்றது. இதனால் அவ் அறிவினை நூல்கள் வாயிலாகத் தொகுத்து வெளியிட வேண்டிய கட்டாய நிலை தற்போது உருவாகியுள்ளது.

நாடி பற்றி சித்தமருத்துவ நூல்கள் பலவற்றில் நாடி பார்க்கும் இடங்கள், நாடி நடை, நாடி நடையின் தன்மை, வாத பித்த கபங்களும் நாடியும், நாடிக்கும் உணவுக்கும் இடையிலான தொடர்பு, நாடிக்கும் காலநிலைக்கும் இடையான தொடர்பு, நாடிக்கும் வயதிற்கும் இடையான

தொடர்பு, நாடி பார்க்கத் தகுந்த நேரம், மரண நாடி என்பன பற்றி வெகு தெளிவாக கூறப்பட்டுள்ளன. ஆனால் இவை எல்லாம் ஒரே நூல்களில் கூறப்படவில்லை. சில விடயங்கள் சில நூல்களிலும் வேறு சில விடயங்கள், வேறு சில நூல்களிலும் கூறப்பட்டுள்ன. எனவே இவற்றை எல்லாம் பெற்று முறைப்படி தொகுத்து இந்நூல் வெளிவருகின்றது.

மாணவர்கள், சித்த மருத்துவர்கள் மீண்டும் நாடி பற்றிய அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்ள இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் தொகுத்து எழுதுவதற்கு நீண்ட காலம் தேவைப்பட்டது. எனவே இந்நூல் சித்த வைத்திய உலகிற்கு பயன்பெற வேண்டும் எனவும் இதை எழுதி வெளியிட அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

**Dr.தி.தயாளினி**
(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவஅலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**Dr.மி.பி.வித்தியா**
(விரிவுரையாளர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**Dr.ச.கௌரீதரசர்மா**
(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**Dr.தி.சரணியா**
(சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**Dr.பி.வைகலை**
(சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

# 1. நாடி நடையின் இலக்கணம்.

நாடி சித்த மருத்துவத்தின் மிக முக்கியமான ஓர் பகுதியாகும். நாடியின் இலக்கணத்தை ஆய்விற்காக எடுக்கப்பட்ட 20 நூல்களுள் 8 நூல்களில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது

## 1.1 பதினெண் சித்தர் சதக நாடி, சித்த மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவங்களும் எனும் நூல்களில் பின்வருமாறு நாடி இலக்கணம் குறிப்பிடப்படுகிறது

- ''நாடியென்றால் நாடியல்ல நரம்பில் தானே
  நாலமாகத் துடிக்கின்ற துடிதானல்ல
  நாடியென்றால் வாத பித்த சிலேற்பனமுமல்ல
  நாடிஎழுபத்தீராயிரந் தானல்ல
  நாடியென்றால் அண்ட பகிரண்ட மெல்லாம்
  நாடி எழுவகைத் தோற்றத்துள்ளாய் நின்ற
  நாடியது ஆராய்ந்து பார்த்தாரானால்
  நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவதே''

(பதினெண் சித்தர் சதகநாடி)
(சித்த மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவங்களும்)

(பொ.ள்) - அதாவது ''துடிக்கின்ற நாடிமட்டுமல்ல, நாடுதலே நாடி எனக் கூறுகின்றனர் இவ்வாறு வாத பித்த சிலேற்பனமும் 72000 நரம்புகளும் நாடியல்லவென்பதும் எழுவகைத் தோற்றம் ஈறாக அண்டமெல்லாம் ஆராய்ந்து நாடுவதே நாடியென்றும்'' தத்துவ ரீதியாகக் கூறப்பட்டுள்ளது.

## 1.2 இதே நாடி இலக்கணத்தை திருமூலர்............

- "சீவனென்ன சிவனென்ன வேறில்லை". (திருமூலர்)

## 1.3 தேரையரால் குறிப்பிட்ட நாடி இலக்கணத்தில்

- "வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய் காத்துச் சேட்ப
  சீதமாய்த் துடைத்துப் பாராந் தேகத்திற்குடியா மைந்து
  பூத விந்தியாமைவர் பூசை கொண்டவர் பால் விந்து
  நாதமாங் கிருட்டிண மூர்த்தி நமக்கென்றும் துணையாவாரே"

(தேரையர்)

(பொ.ள்) - வாதமாய் படைத்தும் பித்தமாய் காத்தும் ஐயமாகத் துடைத்தும் உயிருக்குயிராய் இருந்து அவைகளால் போற்றப்படுவது போலக் கடவுளாகிய

கிருட்டிணன் ஐவராகிய பாண்டவரிடத்தில் இணைபிரியாது உயிருக்குயிராய் நின்றனன் எனப் பொருள் படக்கூறியுள்ளார்.

## 1.4 ஆத்ம ரட்சாமிர்தமெனும் ஜீவசாரசங்கிரகம் எனும் நூலில் நாடியின் இலக்கணம்

- இருதயத்தின் இடது சடங் குவியும் போது இரத்தங்கண்ரை பின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் பாயும் அப்போது நாடிகள் விரியும் மறுபடியும் மிடது சடாம் விரியும்யோது நாடிநரம்பிலிருக்கும் இரதங் குறைந்து நாடிசுருங்கும்.

  இவ்விதமாக இருதயங் குவியவும் சுருங்கவும்மாக இருப்பததால் அதனுடன் சேர்ந்த நாடிநரம்புகளுக்கும் விரியும் சுருங்கும் தன்மையுண்டு இந்தச் செய்கையைத் தான் ''நாடி நடையென்று'' சொல்லப்படும்.

  (ஆத்ம ரட்சாமிர்தமெனும் ஜீவசாரசங்கிரகம்)

## 1.5 நோய்நாடல் நோய்முதல்நாடல் எனும் நூலில் நாடியின் இலக்கணம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது..................

- தேகத்தினிடத்தேயுள்ள எல்லா உறுப்புக்களிலும் சிறந்தது இருதயம். இதன் மூலமாகத்தான் தாதுக்கள் யாவும் பலப்படுத்தப்படுகின்றன.இதுவே தேகம் நன்னிலையிலிருப்பதற்கும் சுகமில்லாமைக்கும் காரணம்.
  இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த்தும். சப்ததாதுக்கள் இருதயம் நாடி நரம்பு இரத்தக்குழாய் முதலியவற்றிக்கும் தொடர்பு உண்டு.
- இருதயத்தினுடைய நடையின் (துடிப்பு) வேறுபாட்டை நாடிகள் மூலம் நமக்கு அறிவிக்கின்றது.
- இருதயத்தினுடைய நடை - உடல் நிலைக்கு ஒத்திருக்கும். உடலில் நோய் கண்டால் இருதயத்தின் சுபாவமான நடை இழந்துபோம். உடலிலிருக்கும் நோயை இருதயம் தெரிந்து கொண்டு நாடிகள் மூலம் நமக்கு அறிவிக்கின்றது.
- எனவே நாடியின் வேறுபாடுகள் யாவும் நன்றாகத் தெரியாவிட்டால் உடலிலிருக்கும் வியாதியின் கூறு செவ்வையாகத் தோன்றாவாம்.

  (நோய்நாடல்)

## 1.6 திருவள்ளுவர் அருளிய திருக்குறலில் நாடியின் இலக்கணம்

- ''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
  வாய் நாடி வாய்ப்ப செயல்''

  (திருக்குறள்)

(பொ.ள்) - நோயை அதன் குறிகளால் அறிந்து அந் நோயின் காரணத்தை அறிந்து அதைத் தீர்க்கும் வழியையறிந்து வழியை தவறுதல் இல்லாமல் செய்யக் கடவன் என்பதாகும்.

## 1.7 நாடி தர்ப்பணம் எனும் நூலில் நாடி இலக்கணம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

நாடிப் பரீக்ஷையாவது ஜீவநிலைமைகளை குறிப்பதான, தாதினிலக்கணங்களை விரல்களினால் நாடிக்குறிப்பிடங்களிற் றொட்டு அந்த இலக்கணங்களின் வேறுபாடுகளைச் சோதனை பண்ணியறிவது.

நாடியில்லக்கணத்தை அறியாமல் நிதானநூல் வாக்கியத்தின் படி எவன் வைத்தியத்தை தொடங்குகின்றானோ அவன் மூடனென்று சொல்லப்படும் கீர்த்தியை அடைகின்றான். மூர்க்க வைத்தினென்று சொல்லப்படும்.

(நாடி தர்ப்பணம்)

## 1.8 வையித்தியரத்தினச்சுருக்கத்தில் நாடி இலக்கணம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

“போற்றிய நாடிதானும் போத்து போற்புறந்துடித்தார்
சீற்றுவின்னுதலேமிக்கிடுஞ் சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற் கருதியே தீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின் மரணமென்றுரைக்கலாமே

குறித்திடுஞ்சேத்துமநாடி குதிரைபோல் திமிர்ந்துநின்றால்
கறுத்திடுவிழியாயர் நல்ல காரிகையாளேகேளாய்
மறுத்திவைபேச வேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றிற் புகள்றிடுமரணமாமே

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடி தானும்
பேதித்துநிற்குமாகிற் பெருக்க வேகையினூடே
சோதித்துக்கண்டு நாடி சுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில் வாய்வு பீடை வந்துற்று நிற்குந்தானே

கடிந்ததோர் நாடி தன்னைய் கருதியே பார்க்கும்போது
விடிந்தபின் சேத்தும நாடி விதறியே தொடர்ந்து நின்றால்
கடிந்தது பித்தநாடி கட்டுச்சிதுடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில் மரணந்தானே

சேத்துமநாடி தானுந் தியங்கியம்மஞ்ஞைபோல
நாட்டியவட்டைபோல நடுங்கிபேபதறிநின்றால்
கூட்டவேவண்டாமேழு நாளினின் மரணங்கொள்ளும்
நாட்டமாய் முனிவர் சொன்னால் நயம்படக்குறித்துப்பாரே

ஏற்றிய தீபற்தன்னி லெரிசுடர்முனைவமை பாலத்
தோற்றிய நாடி தானுந் துயரறநடக்குமாகில்
கூற்றமுக்கிடமுமுில்லை குறைடாம்மருந்து
மாற்றியவாணுடானும் வளர்ந்துந்தி"

## 2. நாடி நிதானம்

நாடி நிதானம் பற்றி ஆறு நூல்களில் வெவ்வேறு பாடல் மூலம் கூறப்பட்டுள்ளது.

### 2.1 யூகிமுனி எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நாடி நிதானம்..........

- ''சாற்றுகிறே னாயிடப் பூர்வமெல்லாம்
  தாக்கான நாக்கு மல மூத்ர மாகும்
  காற்றுகின்றேன் கண்ணோடு பேச்சு தானும்
  காரியமா மெட்டு வகைப்பரீட்சை தன்னில்
  ஆற்றுகின்றேன் வற்றிலுள்ள குணங்களெல்லாம்
  அசாத்திய சாத்தியமறிந் தவையும் பார்த்து
  நாற்றுகிறே னாடியிட நன்மையெல்லாம்
  நற்ணமுந் துர்க்குணமு கயர்ந்த பரே''(யூகிமுனி)

### 2.2 இவ் நாடி நிதானத்தை அகத்தியர் 2000 நூலில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது............

- ''நாடியால் முன்னோர் சொல்லும் நன்குறிக் குணங்களாலும்
  நீடிய விழியினாலும் நின்ழெற வெயிலினாலும்
  கூடிய குணபாடந் தான் குறித்துடன் பார்த்துப் பின்னும்
  சூடிய குணங்களாலே சுகப்பட அறிந்து சொல்லே''

(பொ.ள்) - நாடிகளின் குறி குணங்களாலும் விழியைப் பரீட்சிப்பதாலும் வெயிலினாலும் (காலபேதம்) குணபாடங்களை அறிந்து உபயோகப்படுத்தியும்நோயாளியின் தேக சுகத்தைஅறிய வேண்டும்.

- ''ஏறியுங் குறைந்து நின்று மிட்டதோர் குணத்தைக் கூறிக்
  கூறிய குணம் பிராயம் குறைவில்லாச் சுகம் வறட்சிப்
  பாரிடு குணங்கள் தன்னில் பற்றிடு சுக்கிலத்தில்
  வேறிடு குணங்கள் தன்னை விரித்துடனாயந்து சொல்லே''

(பொ.ள்) - வாத, பித்த, கப, நாடிகளின் ஏற்றத் தாழ்வுகள், நோயாளியின் குணம், வயது, ஆரோக்கியம், வறட்சி, சுக்கிலத்தின் குணங்கள் முதலியவைகளையும் தெரிந்து சொல்ல வேண்டும்
(அகத்தியர் 2000)

### 2.3 இவ் நாடி நிதானம் பற்றி சித்தர் கையேட்டில் கூறப்பட்டவை.........

- ''குண நாடி நோயறிந்து கொண்டு பிணியாளர்
  குணநாடி ஞாபகமுட் கொண்டு- நிணறா
  யுத்து தணிய மடைவிழ்ந்த மீயு
  மதியர் வயித்தியராவர்'' (சித்தர் கையேடு)

(பொ.ள்) - பிணியாளர் குணமறிந்து கொண்டு நோயின் தன்மையைநாடி அறிந்து ஞாபகத்துடன் உள்ளத்திலிருத்தி கொண்டுஅந்நோய் தனிதற்கேற்ற மருந்து கொடுப்பவனே மதிநுட்மானவைத்தியராவர்.

### 2.4 பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் எனும் நூலில் தன்வந்திரி சித்தரால் குறிப்பிடப்பட்ட நாடி நிதானம்.............

- சொல்லியவுந்தி தன்னில செருத்ததோ ரெழுத்தைப் பற்றி
  எல்லையிலெழுந்த நாடி யெழுபத்தீராயிரத்தில்
  வல்லவராய்ந்துச் சொன்ன வளம் பெறுநாடிபத்து
  நல்லதோர் நாடி மூன்று நயந்து நீயறிவாய்ப்பரே
  (பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம்தன்வந்திரி நாடி)

### 2.5 நாடி தர்ப்பணம் எனும் நூலில் பின்வருமாறு கூறப்படுகிறது….

வைத்தியனானவன் முதலிலே ரோகத்தைப் பரீக்ஷிக்கஅதன் பின் ஞானத்தை முதலாகக்கொண்டு ஆசாரிக்கக்கடவன்.

தேவசகால பேதங்களை உணர்ந்தறிந்த ரோகத்தினது பலாபலத்தை யறிந்து வைத்தியன் சிகிச்சையைத் தொடங்க புகழையும் சேபபனத்தையுமடைவான்.

அதன் பின் ரோகியின் அவஸ்தையையும் நாடியையும் காலத்தையும் பாத்திரத்தையும் எவனறிகிறானோ அவனே வைத்தியர்களுக்கு அரசனாவான்.

ரோகத்தையடைந்த சரீரத்தையுடையவனது நாடி, மூத்திரம், மலம், நாக்கு, சத்தம், பரீசம், நேத்திரம், ஆகிருதி என்னும் எட்டிடங்களையும் பரீட்சிக்ககடவன்.

பலவிதமாகிய சாஸ்திரங்களை அறியாதவரும் அற்ப புத்தியுடையவருமாகிய வைத்தியர்களுக்கு நாடி முதலிய அஷ்டவிதப் பரீக்ஷைகளும் சுகத்தின் பொருட்டுக் கூறப்படுகின்றன.

முதலிலே நாடியை அறிதலினாலே வாத பித்தம் கபம் என்பனவற்றாற் பிறக்கின்ற ரோகங்களினது சாத்திய அசாத்திய கஷ்டசாத்திய வேறுபடுயர்வுகள் இலகுவாக வைத்தியர்களால் அறியப்படத்தக்கது ஆதலினாற்றான் நாடியிலட்சணம் முதலிலே நிருபிக்கப்படுகின்றது.

### 2.6 வயித்தியரத்தினச்சுருக்கத்தில் நாடி நிதானம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கரிமகனடியை வாழ்திக் கைதனினாடி பார்க்கில்
பெருவிரலங்குலத்திற்கு சடிகடும் கொட்டால்
ஒருவிரலோடில் பாதமுயர் நடுவிரலிற் பித்தந்
திருவிரணமூன்றிலோடிற் சேத்தும நாடியாமே

**தொகுப்பு:** பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் எனும் நூலில் 96 தத்துவங்களில் தசநாடிகள் பத்திலும் ஒடுங்கி தம் தொழில்களை 3 நாடிகள் மூலம் பார்க்க முடியும் எனவும், அகத்தியர் 2000, நாடி தர்ப்பனம் எனும் நூல்களில் நாடியின் (வா, பி, க)ன் ஏற்றத்தாழ்வுகளை அறிவதுடன் நோயாளியின் விழி, வயது, சுக்கிலம்,ஆரோக்கியம் என்பனவற்றையும் கருதி,காலபேதத்தை கருத்தில் எடுத்து நாடியுடன் நிதானிக்கமுடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய நூல்களில் நாடியை எட்டு வித பரீட்கையில் ஒன்றாக கூறப்பட்டுள்ளது.

# 3. நாடி பார்க்குமிடங்கள்

நாடி பார்க்கும் இடங்கள் பற்றி 8 நூல்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

**3.1 நாடி பார்க்கும் இடங்கள் பற்றி யூகிமுனி எனும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது..................**

- ‘‘நயந்து நீ நாடி தான் பார்க்கும் வாறு

நலமான புரவ முச்சி கண்ட நெஞ்சு<br>
கயந்து கையிற் காலடியின் முழங்கை தன்னிற்<br>
கணுக்காலின் முழங்காலிகை குழியிலாகும்<br>
தயந்து கானங் கடா பரிக்கு நாடி<br>
சகல நரம்பெழுத்தீரா யிரமுஞ் சார்ந்து<br>
தியந்து நிற்கு மிவ்விடங் கணாடி பார்க்கில்<br>
திரேகத்தின் பரீட்சை யெல்லா மியம்பிடாயே’’

(யூகிமுனி)

(பொ.ள்) -

- புருவம்
- உச்சி
- கண்டம்
- நெஞ்சு
- கை
- காலடி
- கணுக்கால்
- முழங்கால்
- முழங்கை

**3.2 உடல் தத்துவம் எனும் நூலில் திருமூலர் கூறிய திருமந்திரத்தை மேற்கோள் காட்டிகுறிப்பிடப்பட்ட நாடி பார்க்கும் இடங்கள் சொல்லப்பட்டுள்ளது**

“தாது முறைகேள் தனித் தகுதிச் சந்தோடு<br>
ஓதற காமியம் உந்தி நெறு மார்பு<br>
காது நெரு மூக்கு கண்டங் கரம் புருவம்<br>
போதூறும் உச்சி புகழ் பத்தும் பார்த்திட”

(திருமூலர்)(திருமந்திரம்)

(பொ.ள்) -

- ✓ குதிச்சந்து
- ✓ காமியம்
- ✓ உந்தி
- ✓ மார்பு
- ✓ காது
- ✓ மூக்கு
- ✓ கண்டம்
- ✓ கரம்
- ✓ புருவம்
- ✓ உச்சி

## 3.3 ஆத்ம ரட்சாமிர்தம் எனும் நூலில் விபரிக்கப்பட்ட நாடி பார்க்கும் இடங்கள்........

- ''கூர்ந்திடவே கன்னமது சுழியிற் தானும்
  குறிப்பான கைகளிலும் மர்ம ஸ்தானந்தன்னில்
  சார்ந்திடவேகணுக்காலினுட் புறத்தில்
  சார்வாகப் பெருவிரற் கால் மேலதாக
  சேர்ந்திடவே நாடி தனையுப யோகிக்கத்
  தெளிவாக மாந்தருக்குச் செப்பலாச்சு
  போர்த்திடவே சகலருங் கரதினாடி
  பேசினார் பிரமுனி பேசினாரே''

(பிரம்மமுனி)
(ஆத்ம ரட்சாமிர்தம்)

(பொ-ள்)-

கைகளிலும் கன்னக் சுழி, காற்பெருவிரல்கட்கு மேலாகக் கணுக்காலி னுட்புறத்திலும் நாடி பரீட்சிக்கலாம். ஆனால் கை, நாடியே சகலதிற்கும் உத்தமம். ஏனெனில் மணிக்கட்டு பரியந்தம் கையில் பெரு நரம்பு ரத்தக் குழாய் சிறுத்திருப்பதால் வாத, பித்த,சிலேத்துமமாகிய நாடிகளை எளிதிலறியலாம். மற்ற இடங்களில் இரத்தக்குழாய் பருத்திருப்பதால் எளிதில் அறியக்கூடாது.

1. Radial - மணிக்கட்டு
2. Brachial – மேல்க்கை
3. Carotid – கண்டம் (கழுத்து)
4. Femoral – தொடையிடுக்கு

5. Poplitial – முழங்கால் குழி
6. Post –tibial – கணுக்காலினுட்புறம்
7. dorsalis pedis – பெருவிரல் (கால்)
8. Temporal – கன்னக்குழி

**3.4 கண்ணுச்சாமியம் எனும் வைத்திய சேகரத்தில் குறிப்பிட்ப்பட்டுள்ள நாடி பார்க்கும் இடங்கள்...........**

“அறிய வுந்தி வாத மடுத்தபித்தந் தானும்
மறியு நடுமார்பில் வன்மை – குறிக்குமே
ஐய முயருச்சி யண்டு நிலை யாங்குணரப்
பையக் கரம் பற்றிப் பார்”

(பொ.ள்) - வாதம் உந்தியிலும், பித்தம் மார்பிலும், ஐயம் உச்சியிலும் குடிநிலையாக அமர்ந்துள்ளன இவற்றை அறியக் கரத்தைபிடித்துப் பார்க்க எனப்படும்.

(கண்ணுச் சாமியம்)

**3.5 நாடி பார்க்கும் இடங்கள் பற்றி நாடி சக்கிரத்தில், நாடியின் ஸ்தானம் எனும் தலைப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.......**

நாடியின் ஸ்தானம்

1. இரண்டு கைகள்
2. இரண்டு கால்கள்
3. கழுத்தின் முன்புறத்திலுள்ள இரு புறங்கள்
4. மூக்கினடியில் இருபுறங்கள்.(நாடி சக்கிரம்)

**3.6அங்காதிபாதத்தில் நாடி பார்க்கும் இடமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது…**

தொந்தமாம் பிராண வாயுச் சொல்லிய கலைகளோடு
வந்துதான் சுழுளை தன்னை வளம் பெறச் சூழ்ந்து காரின்
முந்திய காது விம்மி முடிச்சுது கரங்கா றன்னில்
அந்தமாய்த் தோன்றி நிற்கு மசைவினி னாடி பாரேன்

(பொ-ள்)

பிராணவாயு இடகலை, பின்கலை, சுழிமுனை ஆகிய நாடிகளில் சேர்ந்து நடத்தலினாலே உடம்பின் தாதுக்களாகிய இரத்தம்,நரம்பு, தோல், தசை முதலியவை பருத்து கருக்குவதால் ஏற்படுகின்ற அசைவானது கைகால்களில்

முடிவில் தெரிவதால் அவ்விடங்களில் அதிலிருந்து நாடியைப் பார்ப்பாயாக என்பதாகும்.

## 3.7 நாடிபார்த்தறிகிற இடங்களாக நாடிதர்ப்பணம் சொல்வது....

கரப்பிரயோகம் அங்குஷ்டமூலத்திலும், பாதப் பிரயோகம் குல்பஸ்தாகத்திலும், தேஸப்பிரயோகம் நாபிஸ்தானத்திலும் பால் வேற்றுமையின்படி அறிந்துகொள்ள வேண்டியது. இன்னும் பாரிசபாகம், கபாலம் ஆகிய இந்த இடங்களில் நடக்கின்ற நாடியிலக்கணத்தையும் பரீட்சை செய்து வியாதிகளை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது.

பொதுவாய்க் கூனன், குறளன், முடவன், பேடி இவர்களுக்குப் பாதத்தில் பரீட்சை செய்யலாம்.

அங்குஷ்ட மூலதானத்தில் நடத்துகிற அப்பியாசம் பெரும்பாலுமுரோகிகளுக்குரியவிதி, மஸ்தகநாடிப் பரீட்சை இடைவிடாமல் வாசித்து அதில் புலனைச் செலுத்துபவருடைய குணத்தை வெளிப்படுத்துகிறது. கூறிய தானங்களெவையிலும் அங்குஷ்டமூலத்திற் பார்த்தறிவது இலகுவாய் விளங்கக்கூடிய தன்மையால் அதைப் பிரதானமாகக் கூறியது.

மஸ்தகநாடி ஈவுபெறாத கூடாரத்தைச் சுற்றியிருக்கின்ற துணியின் மறைப்பையொத்த, தேகமும் வித்தியாசமானது. இனன்ஸ்தானநாடி பிரிந்து நடைபெறுகின்ற காரணங்களை விளக்கிக்கொள்கின்ற ஸ்தானத்தைச் தேகநாட்டமென்று கூறப்படுகின்றது. உதராக்கினியின் பலாபலன்களை விளங்கி வியாதிகளைச் சரியாய் நிர்ணயித்துக் கொள்ள வேண்டியது.

உந்தி, உதடு, பாணி, காதம், கண்டம், நாசி என்பனவாகிய இந்த உறுப்புக்களுக்குச் சமீபமாகத் தீவிர கெதியான நாடி ஸதாபித்திருக்கிற காரணம் அந்தந்த உறுப்புகளுக்குரிய ஒலி, முயற்சி, உற்சாகங்களை அதற்கேற்ப பிரகாரம்செய்ய, செய்விக்க நியமிக்கப்பட்டிருக்கின்றது. குறித்த உறுப்புக்களிலிருந்து பிறக்கின்ற ஓசையை யவாவிக் கண்டத்திலிருந்து உற்பத்தியான இசைநரம்பை விளக்குகிற பிராணவாயு பிரத்தியனுகூலமாகச் சஞ்சரிக்கிறது. அது சுத்தபகவனால் ஏவப்பெற்று முதல் உபத்திரவத்தைக் கொடுத்துப் பின் சுகத்தைக் கொடுக்கிறது.

**3.8 நாடியின் இருப்பிடமாக வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் கூறப்பட்டுள்ளவை.**

வாதம் நாபிக்குகீழும், பித்தம் கண்டத்தின் கீழும், சிலேத்துமம் உச்சியின் கீழும் குடிநிலையாக வீற்றிருக்கும்.

**தொகுப்பு:**

அங்காதிபாத நூலில் பிராணவாயு, இடைகலை, பிங்கலை, சுழுமுனை சேர்ந்து உடம்பின் அசைவை அறியமுடியும் எனவும் ஏனைய நூல்களில் நாடி பொதுவாகப் பார்க்கப்படும் இடங்களாக உச்சி (Anterior fontenella) புருவம் / கன்னக்குழி (Temporal) கண்டம் (Carotid) யூகிமுனி வைத்திய சிந்தாமணி, ஆத்ம ரட்சாமிர்தம் ஆகிய இருநூல்களிலும் மேலைத்தேய வைத்தியத்தின் Pulse பார்க்கும் இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 4. நாடி பார்க்கும் விதம்.

**4.1 யூகிமுனி நூலில் நாடி பார்க்கும் விதம் பற்றி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது...............**

➢ ‘‘இயம்பிடவே அங்குஷ்ட விரலுக்கப்பால்
ஏற்றமாய் நெற்கிம்பிடை விட்டில் பால் பார்க்கில்
முயம்பிடவே மூவிரலானாடி தொட்டு
மும்மூர்த்தி நாடியினின் முழக்கம் பாரு
யியம்பிடவே பிரமமது வாத நாடி
பேரான பித்தந்தான் விஷ்ணு நாடி
தியம்பிடவே சேட்பமது ருத்ர நாடி
செயலெல்லாஞ் செப்பி நீ தெளிந்திடாயே’’
(யூகி முனி)

**4.2 இதே நாடி பார்க்கும் விதம் பற்றி ஆத்ம ரட்சாமிர்தத்தில் கூறப்பட்டவை.......**

➢ ‘‘பார்க்கவே கைபிடித்து நாடிதன்னைப்
பகர்ந்திடவே நெட்டையது வாங்கிப் பின்னும்
சேர்க்கவே மணிக்கட்டு மேலதாகச்
சிறப்புடனே நாடிதன்னை விரலாற்காண
தீர்க்கவே யழுத்திப் பின் தளர்த்தியே தான்
திறமுடனே விரல்களையும் மாறிமாறி
ஆர்க்கவே நாடிதனைப் பார்ப்பாயானால்
அப்பனேநாடிநடை தெரியுற்தானே’’
(ஆத்ம ரட்சாமிர்தம்)

(பொ-ள்) -

கையைப்பிடித்து நெட்டை வாங்கி அனல் பறக்கத்தேய்த்தும் பெருவிரற் பக்கமாக விருக்கும் ஆரையென்பின் பேரிலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குல மேலாக மூன்று விரல்களாற் சமமாக மெதுவாக அழுத்தி நாடியைப்பரீட்சித்த பின்பு விரல்களை மாறி மாறி யழுத்தி தளர்த்திப் பார்த்தால் நாடி நடையை அறியலாம்.

**4.3 இவ் நாடி பாாக்கும் விதத்தை அகஸ்தியர் (2000) எனும் நூல் பின்வருமாறு விபரித்துள்ளது..............**

➢ ‘‘பார்க்கிரோ மணிக்கட்டங்கைப் பற்றியே நெட்டை வாங்கி
ஏர்க்க மூவிரலால் தொட்டுயெழுந்த நல் நாடிதன்னைக்

கூர்ப்புறப் பார்த்துநேர்மைகுறைதலுள் வாங்கல் மூன்றில்
சீர் கொள நின்ற நாடித் திருக்கரச் செப்புமன்றே''

(அகஸ்தியர் 2000)

(பொ-ள்) -

நோயாளியின் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு நெட்டை வாங்கி மேற்கூறிய 3 விரல்களினாலும் நாடியைப்பரீட்சை செய்து தோஷத்தின் நேர்மை, தோஷத்தின் குறைவு நாடியின் மிகவும் குறைந்த நிலை முதலானவைகளை அறியவும்.

➢ "மூன்று விரலாம் பெருவிரற் கீழ் முனிவர் தானூன்றி
முன் பார்க்கத்தோன்றும் வாதம் நடுப்பித்தம்
துலையாய்ச் சேத்துமிடத்தென்பகான்று மிகவும்
கரமாய்க் கருகி நடக்கு மவை கண்டால்
உளன்றும் விரலை விட்டு விட்டு உபசாரமாய் நடப்பாயே"

(அகத்தியர் 2000)

(பொ-ள்)-

நோயாளியின் வலது கட்டை விரலுக்கு கீழே வைத்தியர் தன் மூன்று விரலையும் ஊன்றிப் பார்க்க முதல் விரலில் வாதமும் நடுவிரலில்பித்தமும் கடைசிவிரலில் கபமும் ஓடும் பின்னர் இம்மூன்று விரல்களாலும் விட்டு விட்டு ஊன்றிப் பார்க்கவும்

## 4.4 இதே நாடி பார்க்கும் விதம் பற்றி பதினெண் சித்தர் நாடி நூலிலும் அகஸ்தியர் (2000) இலும் கூறப்பட்டவை......

➢ ''கரிமுனகடியை வாழ்த்திக் கை தனில் நாடி பார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்துட னடுவே தொட்டா
லொருவிரலோடில் வாத முயர் நடு விரலிற் பித்தந்
திருவிரல் மூன்றிலோடில் சிலேத்தும் நாடியாமே

(பதினெண் சித்தர் நாடி)
(அகத்தியர் 2000)

(பொ-ள்)

கணபதியை மனதில் நினைத்து பெருவிரலின் மேல் அங்குல அளவில் மோதிர விரல், பாம்புவிரல், ஆட்காட்டி விரல் இவற்றைக் கூட்டி நாடியைப் பார்த்தால், மோதிர விரலில்- கபமும், மத்தியில் - பித்தமும், ஆட்காட்டி விரலில் வாதமும் புலப்படும்.

## 4.5 நாடி சக்கிரத்தில் குறிப்பிடப்பட்ட நாடி பார்க்கும் விதம்..............

நாடி பார்க்கும் விதம்.

வாழைப்பூ அல்லது தாமரை மொட்டுப் போல் அமைந்திருக்கும் ரோகியின் முன்கையை வைத்தியன் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு கட்டை விரலின் அடிபாகத்தில் தனது மூன்று விரல்களை வைத்து அழுத்தி வாதம் பித்தம் கபம் என்ற வரிசையில் சக்கரம் சுழல்வதுபோல நடந்து கொண்டிருக்கும் நாடிகளின் நடையை கவனிக்க வேண்டும்.
(நாடி சக்கிரம்)

## 4.6 அங்காதிபாதத்தில் குறிப்பிடப்பட்ட நாடி பார்க்கும் விதம்..............

கடனதாம் நாடி பார்க்கில் கைதனில் நெட்டி வாங்கி
உடனதாமங்கை மூலத்தொருவிரலடைவு தள்ளி
நெடுவிரல் மூன்று வைத்து நின்றிடு மசைவு தன்னில்
அடரு நாடிகள் குணங்கள் அசாத்திய சாத்தியம் காண்

(பொ-ள்)
நாடி பார்ப்பதானால் கையிலே நெட்டை எடுத்து மணிகட்டிலிருந்து ஒரு விரல் இடைவெளி விட்டு நெடிய விரல்கள் மூன்றையும் வைத்து நாடிகளின் குணத்தைப் பார்ப்பது இன்னோயைத் தீர்க்க முடியாதா என்பதை அறிவாயாக என்பதாகும்.

பார்முதல் விரற்கீழ் வாதம் பகர்நடு விசற்கீழ்ப் பித்தம்
ஆர்தரு நடுவி ரற்கீ ழடுத்திடுஞ் சேற்ப மாரும்
சோவிம் மூன்றுங் கூடித் தெளிவுறப் பின்னி யோடில்
கூர்தருங் கொடிய சன்னிக் குணமெனக் குறிக்கலாமே

(பொ-ள்)
நாடி பார்க்கும் போது முதல் விரலில் கீழ் வாதமும், அடுத்த நடுவிரலின் கீழ் பித்தமும், அணிவிரலின் கீழ் சிரேலற்பனமும் ஓடுவதாகும். மூன்று நாடிகளும் தெளிவில்லாது பின்னியோடுமானால் சன்னி என்னும் நோயாகும் என்பதாகும்.

## 4.7 நாடி தர்ப்பணத்தில் கூறப்பட்ட நாடி பார்க்கும் அகைநிலைப்பிரமாணம்…

நாடி முன்கையிலந்தம் மணிபந்தத்தில் இரண்டங்குலப் பிரமாணமசைந்து நடக்கிறது. காலில் குல்பஸ்தானத்தி லிருவிரலெடையளவு நடக்கிறது. கந்தரமூலத்தி லிரண்டங்குலப் பிரமாணமும், மூக்கிலிரண்டங்குலப்

பிரமாணமும் மேஸ்ரஸ்தானங்களி லிரண்டங்குலப் பிரமாணமுமாகக் காதின் துவாரங்களிலு மப்பியாசஞ் செய்வது.

சுட்டிய வித்தியாசம் நிர்வாணமான வெற்றுடம்பின் பகுதிகளுக்குரியது. மணிபந்தமமையப்பெற்ற இடம் எங்கேயோ அந்த இடத்தில் வஸ்திரகவசஞ் செய்து நாடியோட்டத்தைப் பார்த்தறிந்து கொள்ளலாம். புச்சம் பிரிந்திராத காதகனுடைய முன்னகையிலந்தத்திலுள்ள நரம்புகள் ஒரு திராட்சக் கொடியிலுள்ள உறுப்புக்களுக்குச் சமமான முடிச்சுக்களையுடையதாய் மாறிப் பிணிக்கப்பட்டிருக்கின்றன.

இலட்சண பொருத்தமில்லாத அனேக கிளைகள் அமங்கலப் பொருத்தமாக இடம்பிறழ்ந்து பெயருகின்றன. அவைகளைப் புஜநாடியின் கிளைகளென்று சொல்லப்படும். நாடியின் நடை ஒரு அங்குலப் பிரமாணந்தான் பிரிந்து இரண்டங்குலப் பிரமாணமாக நடக்கிறது.அது தானப்பொருத்தத்திற் குரைத்த இறுதிநிலையின் ஒரு பகுதியே யல்லாமற் றேகத்தின் கடையாகக் கூறப்பட்டதல்ல. பைரவி நாடியில் சிகை உயர்ந்த வருணமாக சிருட்டிக்கப்படாதிருந்தால் நீசத்துவமடைகிறது. மேலே பேசிய இரண்டிரண்டங்குலப் பிரமாணங்களின் விவரம்; அக்கிரபாகம்கர்ன்னரந்திரங்களுக்கும், கண்டஸ்தானம் நாசிக்கும் விட்டு அனுபவிக்கின்றன. நடை துண்டியாமற் கர்ணங்களை ஊடுருவி நடக்கிற குணம் அக்கிரபாகமடைகிறது. இரண்டிரண்டங்குலப் பிரமாணம். ஆரண்டிரண்டங்குலம் என்றது ஈவைக் குறித்தது. காதகியின் நாடி விதிவிகிதமில்லாதது. தூனப்பொருத்தமாக அறிகிற நாடி தேகத்தை யிரக்ஷித்து நடத்துகிறது.

அந்த அங்குலப் பிரமாணம் உண்பது பதர் நீக்கி யெடுத்த வாற்கோதுமை அரிசி ஒன்றுக்குச் சரியென்றுஞ் சொல்லலபம். ஆன்னரசங்களின் சத்துத் தங்கிப் போம்பொழுது நாடிநரம்புகளில் வழக்கப்படி செல்கிற அரத்தத்தின் பிரமாணம் , சிலவேளை தோஷரகிதமானவித்தியாசங்களினால் கூடியுங் குறைந்து மோடுகிறது. அதனாலே அங்குலப் பிரமாணமும் வித்தியாசமடை கின்றது. மூன்று தோஷங்களும் அனாமிகை விரலின் மையத்தில் வளருகிறதும் , தேய்கிறதுமாயிருக்கி காரணத்தினால் ஒரு கர்த்தாவுக்கு நிகர் கூறுவது உப்புவமையல்ல. ஞானவிரலின் அதிகாரமுடையவையளாயிருக்கும் பொீது ஒரு மாதாவுக்குச் சரியாயும் அதிகாரமற்றிருக்கும் பொீது ஒரு கிருகமேதிக்குச் சரியாயு மொப்பிடக் கூடியவைகளா யிருக்கின்றன.ஸ்திரிகளுடைய நாடிப் பரீடசையில் வைத்தியன் தன்னுடைய ஞான விரலில் அந்த நாடியின் நடையை ஸ்பரிசஞ் அசய்து பரிசியாமல் அறிந்துகொள்ள வேண்டிய இரண்டு ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிருகஸ்தன் எவிவிதமான பெண் விஷயத்திற் போய் தரிமை

யடைந்தவனாய்க் காணப்பட்டாலும் அவனுக்கு நாடிப் பரீட்சை சிவரூபமாகப் பார்க்கலாம்.

வேற்றுமைப்பட்ட அங்குலப் பிரமாணமாவது; ஓர் பந்தினதைப்பிலிருந்து விலகி ஒய்ந்த அணுவினளவான துடிப்பை. வருத்துந் தாதுக்குப் பிரதியாகத் துகிற்போர்வையிட்டுப் பரீக்க அந்த அங்குல அளவையிலிருந்து ஒழுகி நடக்கும் உருடுடி நடையை ஒருயவைப் பிரமாணமென்று கூறியது. இரண்டங்குலப் பிரமாணப் பரீ்ை தேகரூபமாயிருந்தால் நாடித்தானம் மாற்றி ரகதிஸ்தானமாக எடுக்கிறது. அது நாடி ரூபமானால் கரமஸ்தானமாக மாற்றிக் கொள்ளுகிறது. தலைவனில்லாத ஸ்திரிக்கு நாடி சிவரூபமாக வளருகிறது. அவளுக்குச் சிவரூபமான காரணங்கள் விலக்கு. தீவிர கெதியை யுடைய கிருகஸ்திரிக்குத் தேவிநாடி கையிலே விவரிக்கிறது.

## 4.8 வைத்திய சிந்தாமணி எனும் நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

கையின் பெருவிரலிற்கு ஒரு விரற்கடை விட்டு மூவிரலால் மெதுவாக அழுத்தியும், தளர்த்தியும் தொட்டுப் பரீட்சிக்க முதல் விரலில் உணர்வது வாதம், இரண்டாவது விரலில் உணர்வது பித்தம், மூன்றாவது விரலில் உணர்வது சிலேத்துமம். இவைகளை முறையே பிரம விஷ்ணு ருத்திர நாடியெனவும் கூறுவர்

## 4.9 ஸ்திரீ புருஷர்கட்கு நாடி பார்க்கும் விதம்.

### 4.9.1 ஸ்திரி புருஷர்கட்கு நாடி பார்க்கும் விதம் பற்றி அகஸ்தியர் (2000) எனும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.........

- ‘‘மருவு மெய்க் குற்ற நாடி மதித்திடில் வலக்கை மாந்தர்
  அரிவையர்க் கிடக்கை நாடி யமுக்கியே சுட்டாய் மூட்டி
  விரைவினில் வெய்யவாத மிக நடு விரலிற் பித்தர்
  தருமணி விரலிலய்யந் தானென வறிந்து சொலிலே’’
  (அகஸ்தியர் 2000)

(பொ-ள்)-

புருடர்கட்கு வலக்கையின் நாடியைப் பிடித்துப் பார்க்கவும் ஸ்திரீகட்கு இடது கை நாடியைப் பார்க்கவும் அப்படிப் பார்க்கையில் மோதிர விரலில் கபமும், நடுவிரலில்பித்தமும், ஆட்காட்டி விரலில் வாதமும் பேசும்.

### 4.9.2 இதே நாடி பார்க்கும் விதம் பற்றி ஆத்ம ரட்சாமிர்தம், பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம் எனும் நூல்களில்.........

- ”தானென வுலகத்துள்ளே தயங்கிய நாடி பார்க்கில்

வானெனு மின்னேகேளா வரும்புலன் சொல்லக் கேளு
நானெனும் புருடற்கெல்லா நாடிதான் வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம் பெற விடக்கை சித்தரே”
(ஆத்ம ரட்சாமிர்தம்) (பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம்)

(பொ-ள்) -

வலது கையிலும், இடது கையிலும் நாடி பரீட்சிக்கலாம் ஆனால், புருடர்க்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் பரிச்சிக்கலாம்.

### 4.9.3 இதனை Dr. சண்முகவேலு பின்வருமாறு குறிப்பிடுகிறார்.........

இதற்குக் காரணமென்னவெனில் நாடிக் கூர்மமானது
பெண்களுக்கு மேல்நோக்கியும்
ஆண்களுக்கு கீழ்நோக்கியும் இருப்பதாகும்

நவீன மருத்துவப்படி இது பிரிமென்றகட்டையே(Diaphragm) குறிக்கிறது இது பெண்களுக்கு மேல்நோக்கி இருப்பதால் Thoracic Respiration உம் ஆண்களுக்கு கீழ் நோக்கி இருப்பதால் Abdominal Respiration உம் தெரியக் கூடியதாயிருக்கிறது.(Dr.ம. சண்முகவேலு)

### 4.9.4 பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம் எனும் நூலில்

- **தன்வந்திரி சித்தரால் கூறப்பட்டவை.....**

  ✓ அறிந்தே கொள் நாடிதானும் ஆண்பாலின் வலபக்கத்தான்
  செறிந்தே மாதர் கிடக்கை ஜென் பித்து விட்ட பின்னம்
  குறித்தேவுந்தனிடக்கையாந் கூட மூன்று விரலில் வைத்து
  தெரிந்தே வாதமருள் பித்தம் சேட்மக்குணமும் பாரீரே
  (பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம்)தன்வந்திரி நாடி

- **அகஸ்திய முனிவரால் கூறப்பட்டவை.......**

  - ‘‘கேளப்பா புருடருக்கு வலதுகையைக்
  கிருபையுடன் நன் பிடித்து நெட்டை வாங்கி
  சூளப்பா பெருவிரலோ ரங்குலத்துக்கப்பாற்
  சுகமாக மூவிரலாலழுதத்திப் பாரு
  வாளப்பா முதல் விரலே வாதநாடி
  வண்மையுடனடுவிரலே பித்த நாடி
  கேளப்பா பெருவிரலே சேத்ம நாடி
  திறமாக நின்னறிவாற் றெளிந்துகானே’’

- ‘‘காணவே புருடருக்கு வாதநாடி
  கானகத்து மயில் போலும் அன்னம்போலும்
  தோணவே கோழிநடை நடக்குஞ் சொன்னேன்
  துரியமென்ற பித் தத்தி னதி கேளு
  ஏனவே யாமையுடனடையைப் போலும்
  என் மகனே அட்டையைப் போல் நடக்கும் பாரு
  வேணவே சேத்துமந்தான் பாம்புபோலும்
  வேண்படி தவளை குதி போலாம் பாரே”

- ‘‘பார்க்கவே பெண்களுக்கிடது பக்கம்
  பதிவாகப் பார்த்திடவே பகரக்கேளும்
  காக்கவே வாதமது சர்ப்பம் போலாங்
  கனமான பித்தமது தவளை போலாஞ்
  சேர்க்கவேயைய மென்ற நாடி தானுஞ்
  சிறுநடையாவன்னம் போற் சொழிப்பாய்க் காணும்
  ஆர்க்கும் மே தோன்றுமிக்க நாடி மூன்றும்
  அனுதினமு நல்லறிவா லறிந்துதேறே’’
  (பதினெண் சித்தர் நாடி சாஸ்திரம்)
  (அகஸ்திய முனிவர் நாடி)

**4.9.5 கண்ணுச்சாமியம் எனும் நூலில் இவ் நாடி பார்க்கும் விதம் பற்றி குறிப்பிடப்பட்டவை........**

செப்பவான் மக்களுக்குச் சேரவலக் கையாகும்
ஒப்பரிவையார்க் கோதவிடம்- தப்பாது
அரைந்தார் முனிவரளவுகேள் தோற்றும்
விரைகோ துமையாய் வியந்து

(பொ.ள்) - ஆண்மக்களுக்கு வலக்கரத்திலும், பெண்களுக்கு இடக்கரத்திலும் நாடி பார்த்தல் வேண்டும். இன்னும் அதன் அளவை நோக்க ஒரு கோதுமை விதைப்பிரமாணம் எழுந்தடங்கக்கூடிய வேனமுடையதாக இருக்கும். (கண்ணுச்சாமியம்)

**4.9.6 ஆத்ம ரட்சாமிர்தம்ப்படி, புருடர்க்கும், பெண்களுக்கும் நாடி நடக்கும் விதம் வேறு வேறாகக் கூறப்பட்டிருக்கிறது.**

**புருடர்க்கு நாடி நடக்கும் விதம்**

- ‘‘வந்திருக்கும் வாத நாடி மயில்போலும் அன்னம் போலும்
  தொந்தமாங் கோழி பொலுந் தொகுப்புடன் பித்தநாடி
  முந்தியவாமை போலும் முனைப்புடனட்டை போலும்
  பிந்திய சிலேத்தும் நாடி பேசொணா தவளை பாம்பே

(ஆத்ம ரட்சாமிர்தம்)

வாத நாடி – மயில் போலும் அன்னம் போலும் , கோழிபோலும்
பித்த நாடி – ஆமைபோலும் அட்டைபோலும்
சிலேத்தும் நாடி – பாம்பு, தவளை போலும்

**பெண்களுக்கும் நாடி நடக்கும் விதம்**

- ‘‘பாம்பென வாத நாடி பருப்புடன் சர்ப்பம் போலாம்
  வேம்பென பித்தத்தானும் விருப்பு மண்டுகம் போலும்
  சாம்பென சிலேத்ம நாடி சடுதியிலன்னம் போலும்
  நரம்பெனப் பெண்களுக்கு நாடிதானடைக்குந் தானே’’

(ஆத்ம ரட்சாமிர்தம்)

வாத நாடி - சர்ப்பம் போலும்
பித்தநாடி - தவளை போலும்
சிலேத்துமம் - அன்னம் போலும் நடக்கும்

**4.9.7 நாடி தர்ப்பணத்தில் கூறப்பட்டிருப்பது....**

புருஷர்களுக்குப் பைரநாடி ஆதாரமாக உந்திஸ்தானத்தில் மூலபாகம் வலப்பக்கமாக ஒருநாடி உற்பத்தியாகிப் பிருக்கஸ் தானத்தைப் புரந்து பின் ஊர்த்துவ மார்க்கமாக இடப்புறம் மேலோக்கி,புப்புசத்திற்கும் சார்பாய் இரத்தாசயத்தையொட்டி வலதுகர நாடியுடன் பொருந்தி அரைப்பலத்துடன் பேசுகிறது.அப்படியே ஸ்திரிகளுக்கும் ஆமாசயஸ்தானத்தில் அதோ பாகம் இடப்பக்கமாக ஒருநாடி உற்பத்தியாகி பிருகஸ்தானத்தைப் புரந்து பின் ஊர்த்துவ மார்க்கமாக வலப்புறம் மேனோக்கிச் சுவாச ஸ்தானத்திற்கும் சார்பாய் இரத்தாசயத்தையொட்டியிடது கர நாடியுடன் பொருந்தி அரைப்பலத்துடன் பேசுகிறது.

பரீணிய நாடி பெண்களுக்கு இடது பக்கத்திலும், ஆடவருக்கு வலது பக்கத்திலும் காரண சம்பந்தமுடையதாய் இருக்கின்றது

### 4.9.8 குணவாகட நாடி எனும் நூலில்

"மருவிடு நோயினாடி மதித்திஜடில்
வலக்கை மைந்தர்க்கு
அரினவயர்க் கிடக்கை தன்னில்
அழுத்தியே கூட்டிக் காட்டும்"

என்று குறிப்பிடப்படுகிறது
(சித்த மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்)

### 4.9.9 வைத்திய சிந்தாமணி எனும் நூலில் கூறப்பட்டவை

புருஷர்களுக்கு வலது கரத்திலும், ஸ்திரிகளுக்கு இடது கரத்திலும் பரிட்சிப்பதே உத்தமமென்று ஆன்றோர் கூறுவாராயினர் என கூறப்பட்டுள்ளது.

### 4.9.10 வயித்தியரத்தினச் சுருக்கத்தில்

" தானெனவுலகத்துள்ளே தயங்கிய நாடி பால்க்கில்
வானெனுமின் னே கேளாய் வரும் புனல் சொல்லக்கேளு
நானுனும் புருடர்க்கெல்லாநாடி தான் வலக்கையாகும்
தேனெனும்டவார்க்கெல்லாந்திடம் பெற விடக்கை சித்தே"

### 4.9.11 அகஸ்தியர் பரிபூரணம்- 400 ல் கூறப்பட்டவை

காணவே புருடருக்கு வாதநாடி கானகத்துமயில் போலும், அன்னம் போலுந், தேனவே கோழி நடை நடக்குஞ் சொன்னேன்
துரியமென்ற பித்ததினாடி கேளு, ஏணவேயாமையுட மடை யைப் போலும் என்மகனே அட்டையைப்போனடக்கும் பாரு, வேணவே சேத்துமந்தான் பரப்பு போலும் வேணபடி தவளை குதிப்டிபாணம் பாரே

பார்க்கவே பெண்டுகளுக் கிடதுபக்கம் பதிவாகப் பார்த்திடவே பகரக்கேளு, கார்க்கவே வாதமது சர்ப்பம்போலாங்கனதானுஞ் சிறு நடையாவன்னம் போற் செழிப்பாய் காணும் ஆர்க்குமே தோன்றுமிந்த நாடிமூன்றும் அனுதினமும் நல்லறிவாலறிந்துதேறே

## 4.10 நாடி பரீட்சிக்கும் முறை நாடி தர்ப்பணத்தில் கூறப்பட்டவை…..

**பரீட்சைப்பிரகாரம்**

தன்னுடைய புய நவீரத்திலும் மாலையையாவது அல்லது பட்டுவஸ்திரத்தையாவது தரிக்கப் பெறாநின்றவனும், பெரிய பீடையைத் தகனஞ்செய்கிற ரோகசங்காரகனுமாகிய வைத்தியன், நோயினாற்

பீடிக்கப்பட்டவனைப் பரீட்சைபண்ணும் பொழுது, தான் எடுக்க வேண்டிய உத்தமஸ்திதி: தேகிக்குச் சவ்யபாகமாவது அல்லது குர்ப்பரபாகமாயாவது பொருந்தாமல் தகுந்த ஆசனத்தில் இஷ்டப்பிரகாரமாகக் கை பார்ப்பிக்கப்படுவனுக்கு எதிர்முகமாக அல்லது விபக்ஷமாகவிருந்து கொண்டு, அவன் பணபக்தியோடு தகனக்கிருக்கிற நோயின் குணாகுணங்களைச் சொல்லிக் கொடுக்கிற நிதியையாவது அல்லது மாசற்ற அடையாளத்தை யாவது பமாக ஏற்று, அந்த ரோகியினுடைய கூர்ப்பரபாகமாகப் பிரிந்து போய் அங்குஷ்ட மூலத்தில் விமபாக மையமாக நடக்கிற நாடியின் நடையைப் பிரபஞ்சனகதியென்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தில் ரு அதிகாரி போலே நின்று தாக்கிக் குணாகுணங்களுக்குக் காரணமாயிருக்கிற மூன்ற தாதுக்களையும் பிடகர் தம்முடைய கையின் கணுள்ள, தர்ச்சனி, மத்திமை, அனாமிகை என்பவனாகிய மூன்று விரல்களினாலும் எப்பொழுதும் அந்த வாதகதிநாடியின் நடையின் பொருட்டுப் பரீக்ஷிதறிய வேண்டியது.

**மேலே சொல்லப்பட்ட நாடிப்பரீட்சையின் வித்தியாசமான அருலட்சணத்தோடு சேர்ந்த சில காரணங்கள்காட்டப்படுகின்றன.**

ரோகியின் கையில் தர்சன நேத்திரக் குறியை யூடுருவி நடக்கின்ற பைரவி நாடி, பாதநாடிக்கு அமங்கலமான ஒலி முயற்சிக்குக் காரணமாகச் சுண்டுவிரல், இடைவிரல், ஆழிவிரல் மூன்றிலும் ஒரு சிற்றெலியானது தன் மூஞ்சையை உன்னுதலுக்கும் நடைகொள்ளுந் தன்மைக்கும் உவமையாகப் பொருந்தி மாறி மாறிச் சம்பந்தமாக நடக்கிறது. உபசமனமான நாடி கையிலே துண்டித்து நடக்கிறது. அப்படியே ரோகியின் பாதநாடியின் பிரதியொலியு மோய்ந்தோய்ந் தொலிக்கிறது. வாத, பித்த சிலேஷ்மங்கள் ஒன்றையொன்று நெருக்கி இடைஞ்சற்பண்ணி நடக்கிறது. பாத நாடியின் நடை துண்டிக்கிற குணமில்லை. அங்குட்ட தேகிகளுக்குற்பத்தியாகிற நாடியின் சிகை ஒன்றுடனொன்று மாட்டப்பட்டு நீசகுணமான தன்மையினால், அவர்களுக்கு நாள்ரோதறும் செய்கிற பரீட்சையிற் கையிலே தோற்றுகிறது வாதநாடியின் நடையேயாம். எவர்களுக்கும் நாடித்தானம் சொல்லப்பட்ட இடத்தில் நாடியுட் குறிப்புத் தோற்றுகிது. வலது பாத நாடி ஒரு வகையான படகமென்னும் வாத்தியத் தொனிக்குவமையாக ஒலிக்கிறது. எருமையின் நடையைப் போல் நடக்கிறது. நபுஞ்சகிக்குப் பாதநாடியொலிக்கிறதுமில்லை; கையிலே பரீட்சைபண்ணி அறிகிற காரணமுமில்லை. உத்தமமான உறுப்பமைந்த தேகிக்குப் பாதத்தில் ஒலிக்காரணமுடையது. ( தேகி-நோயுற்ற தேகம்)

ஆண்,பெண் அலி என வகுக்கப்பட்ட மூன்று மரபினருக்குக்கும் பாதத்தில் நடக்கிற மூன்று தோஷங்களுக்கும் வைத்தியனுடைய வலது கையின்

விரல்களுக்கெதிராகத் தோற்றி அசைந்து பரிசக்குறி நேத்திரங்களில் மாறி மாறி நடக்கின்றன. உபலக்ஷண மாத்திரை தரா காரணமாக அறியவேண்டியது. பெண்ணிடப் பாதநாடி, மனோதண்டம், விகாரம் முதலிய குணங்களைப் பேசுகிறது. இருதயவியக்கத்தை உண்டாக்கி உறுப்புக்களுக்குப் பலனையளிக்கிற ''கோ'' ஊக்கங் குன்றியிருந்தால் மனசுக்குரிய முதன்மையான குணங்கள் சிறப்படைகிறதில்லை. சுற்றோட்டத்திலிருந்து நெறி தவறின நாடியுந் தேகத்திற் குபயோகமில்லாத கேவலத் தன்மையுடையதாய் கோவுக்கும் பரகம் பாகமாய்ப் பிரிந்து இனத்தைத் தழுவி நடக்கிற நாடிகளுக்கும் எதிரிடையான செயலையுடையதென்று கூறுகின்றது. தேகத்திற்குக் காரணப் பொருத்தமான நாடி, ஸ்பந்தன காரணங்களுக்கு மேதுவானது. வலதபாத நாடி இடது பாதத்திலும், இடதுபாத நாடி வலது பாதத்திலுமாக மாறிச் சிருட்டிக்கப்பட்ட பிராணிகளுக்கு நிகழுகிற ஸ்பந்தன காரணம் தகுதியற்றது.

சிலவேளை அந்த நாதம் கையிலே வருத்திக் கடின இசை போலும் தோற்றுகிறது. விவரணமாகக் கூறியவைகளுள், ஏககாதகி நாடி, தேகத்திற்கொரு நேத்திரம் போனின்று ரோககாரணங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. ஞானேந்திரிய உற்பத்திக்குக் காரணமான நாடி சுற்றோட்டத்தையெடுக்கிறது. பிரிந்துகொடாத பாத நாடி தேகத்திற்குப் பிரயோசனமற்றதாய்ப் போகப்போக ஒன்றுடனொன்று பங்கியின் சிக்கைப் போலொற்றுமைப்பட்டிருக்கிற தன்மையை அங்குஷ்டமூலத்திற் பார்த்தறிந்து கொள்ளலாம்.

நபுஞ்சகருக்குத் திரிதோஷங்களின் தோற்றமும் வித்தியாசப்படுகின்றது. அதுபோலவே நாடி முகமும் இடம் வலமாக மாறிப் பேதப்பட்டிருக்கிறதென்றும், உறுப்புகளைப் போஷித்து ஊக்கம் உண்டாக்கிற புச்சங்கள் கோவோடு கூடிய காரணமுடையதாய் நடக்கிறது என்றும் கூறப்படுகிறது. இவைகளினாலும் வேறுகாரணங்களினாலும் குணமறிந்து சொல்லுகிற நாடி பொருத்தமில்லை. இவ்விதமான உறுப்பமைந்த தேகியை விவாகஞ் செய்த மனைவி பிணியினால் வருந்தியிருக்கிறதுமல்லாமல் இருதயத்திற்குப் பலனையுண்டாக்கி அளிக்கிற ஓதையும் யதார்த்த ஞானத்தை அடைந்திருக்கிறதில்லை.

பின்னும் அங்குஷ்டதேகி நியாயங் கூறப்படும் அக்ஷரவடிவம் யூநாநியிற் கூறப்படும்.

**உபலக்கணம்**

ரோகிக்கு நாடியின் நடை வளைந்த ரூபமான செயல்; அதைப்பற்றி அறிய வேண்டிய நியாயம் இரண்டு. அவற்றுள் ஒன்று, அந்தப் பிரதம கதியைத் தோற்றாமல் மறைக்கிற குணம் புயத்தைப்பற்றி நடந்து சுழன்று பிரிந்துபோய் அங்குலிச் சந்திகளில் மறைந்து நின்று ஊறு செய்கிறதோ என்பது; மற்றயது ஊகரூபமான பிரதம கதியை கூர்ப்பரபாகத்திலிருந்து பிரிந்துபோய் அங்குஷ்ட மூலத்திலும் அங்குலிச்சந்திகளிலு மறைந்து நின்று, அதற்குரிய சரியான இலக்ஷணத்தை தெரியவொட்டாமல் ஊறுசெய்கிறதோ என்பது.

தோஷம் இரட்டித்து நடக்கிற காரணம் மாத்திரை நிதானமான இலக்ஷணத்தை வளைந்தரூபமாகச் செய்கிறது. விரலின் பொருத்துக்களிலும் பிரதிநேந்திர நிதானக் குறிப்பிடத்திலும் ரூபமாகிற பரிசுத்தமான உதிரம் பகுதிப் பிரமாணமாகிற அங்குஷ்ட மூலத்திலும், நின்று ஊறு செய்கிற தோஷத்தின் கோளாற்றை அழிக்கக்கூடிய உபசாதனஞ்செய்து அல்லது செய்வித்து விதிப்படி ரோகியின் கையைப் பற்றிப் பார்க்க, அங்குஷ்ட மூலத்திலிருந்து இஷ்டமாக்கிக்கொள்ளுகிற நடை பிரபஞ்சனகதி என்ற பெயரையுடைய வாதநாடியின் நடையேயாம்; அந்த நடையையே முதற் பரீட்சைபண்ணி அறிவது.

அங்குஷ்ட மூலத்தில், பரீக்ஷணிய நாடியின் ஏகபுச்சம் பிரதம கதிக்குரிய நரம்பு.

நாடி தர்சனத்தில் திரிதோஷங்களின் ஏகரூபமான உற்பாதம் இரண்டிரண்டாகத் தொந்தித்து மூவகையான அரிய தந்தரமான நடையையுடையவைகளாய் ஜீவநாடியைத தீபத்தின் பிரகாசத்திற்குச் சமமானதாகப் பிரீதிபண்ணுகின்றது.

ஒரு தலைமகளுக்கு, யாவரும் விரும்பப்படத்தக்க மூவகையான குணம் மருவியிருக்கும் பொழுது, மோகிதபுருடனுக்கும், கையிலே தமனிநாடி சுடரின் ஒளியைப்போற் றோன்றித் தனித்தனி இருவருக்கும் நடக்கிறது. அல்லாமலும் தோஷங்களின சங்கலிதத்தால் விகாரப்பட்டு நடக்கின்ற ஒலியின் காரணமாக மூன்று தாதுக்களும் ஒன்றுடனொன்று கலந்ததுபோலக் கைக்குத் தோற்றி இரண்டிரண்டாய்த் தொந்தித்து அறிதற்கரிய தன்மை ஏகரூபமாகவும் நடக்கிறது. பாதநாடி கற்பிக்கக் கர நாடி தேகத்தையினமாற்றாக்குகிறது.

பிடகர், நாடிநாஸ்திரத்திற் கூறிய விதிப்படி, ஸ்திரீகளுக்கு நாடி பார்ப்பது, முதல் இடதுகையிலும், இடது பாதத்திலும், பிரயத்தன காரணமாகவுடைய ஹாதபைரவி நாடியைப் பரீட்சைபண்ணி அறிய வேண்டியது. அது ஒரு இரத்தினத்தின் நீரோட்டத்திற்குப் போலியான உவமஉதிரம் ஆளப்பெறுவனவாகிய கண்களை எதிர்முகமான நிமேடம் என்று சொல்வது.

கையில் அங்குஷ்டமூல மணிரந்திரத்திற் சுத்தமான இரத்தம் திவ்விய சாதியாக்கப்பெற்று, உயிருக்காதாரமான இந்திரியாதி கரணங்களைப் போஷிக்கிறதினாலும், அந்தந்த உறுப்புக்களுக்குத் தகுந்த பிரமாணத்தின்படி கற்பிக்கிறதினாலும், வேறு காரணங்களினாலும் தர்சனபகுதிகளுள் அங்குஷ்டமூலப்பரீட்சை உத்தமமானதென்று கூறியது. எவ்வகையான குணத்திலும் அந்த இடத்தில் நடையை அறிவது சுகம். பிடகர் வருத்தக்காரரைச் சோதனை பண்ணும்பொழுது தாமறிந்தளவிலாராய்ந்து செப்பமாய்ப் பரீட்சைபண்ண வேண்டியது.

**பிஷக்சுவிதை நாடிப்பாக்சை பண்ணும் முறைமை**

அங்கக்குறைவில்லாத அங்கணையின் இடதுகை அங்குஷ்டமூலத்திற்சுத்த இரத்தத்தைச் சகித்து நடக்கிற தமனிநாடியை வைத்திய பண்டிதைமார் தம் கனிட்டை விரலினாலே அவளுக்கிருக்கிற சுகம், துக்கம், ஜெயம் முதலிய குணங்களை ஜீவரூபமாகப் பரீட்சை பண்ணி அறிய வேண்டியது. வாதம் துண்டித்து நடக்கும் பொழுது, தமனிநாடி நடையின், மத்தியக்குறி தோற்றாது. இதில் உயர்ந்த புதிய வஸ்திரத்தினந்தத்தைப் பார்வைக் குறிப்பிடத்திற் பிரதியாகப் போர்வை செய்து பரீட்சை நடத்த வேண்டியது.

அங்கநிமேடப் பிரதிஸ்தானத்தினின்று தகனநாடி அங்குஷ்டதேகிகளுக்குப் பழுதுடையதாயிருக்கிறது. உத்தமமான பாதநாடியமைந்த அங்குஷ்டதேகியின் ஜடம், ஜீவரூபமான நாடி தமனி காரணமாகக் கொடுத்தனுபவிக்கிறது. அது எவரும் பிரமிக்கத்தக்க இந்தப் பிராணியைப் போன்ற உறுப்பைப் பொருந்தியிருக்கிற சகல ஜீவருக்குமுடைய சுகதுக்கங்களை மானுடவைத்தியனறியும் பொருட்டு அமங்கலமான போலிநாதத்தை யொலிக்கச் செய்கிறது. ஸூசநாகரீகாமமுற்று அந்தரங்களை நினைக்கும்பொழுது கைநாடி பிரபஞ்சனகதி, அல்லது வாதநாடி துண்டித்து கையிலே நடக்கிறது. அங்குஷ்ட தேகிக்குப் புசநாடி கற்பிக்கத் தேகமனுபவிக்கிறது. இவர்களுக்குத் தேகத்திற் சொல்லப்படாத மற்றைய நாடி பேசுகிறதில்லை. பாதநாடி எப்பொழுது இடைவிடாமல் நடை புரிகிறதோ அப்பொழுது கரநாடி பிரயோசனமான கருமச் செயல்களைத் தெரிவிக்கிறது. யாதுமோர்மமான பொருத்தனை கொடுத்து ஓர் கணிகையைக் கலந்து காதலனுபவிப்பவருக்குக் கையிலே நாடியின் நடை தேய்ந்து உருப்பேற்றுப்பெலனற்றுத் தாழ்மையான நிலைமையைப் பொருந்தி நடக்கிறது.

அங்குஷ்ட மூலத்தில் ஸ்பர்ஸனாதிகாரணமாக விருக்கிற பரீக்ஷணிய நாடியின் நுட்பவரலாறுகளை இங்கே எடுத்துக் காண்பிக்கின்றன.

வருத்தக்காரனுக்குத் தீவிரமான வேதனையைக் கொடுக்கக் கூடிய ஷத்திர சடராக்கினிச் சிகிச்சைகளினாலே சிலவேளை பிராணநாடியின் இயல்பான எழுப்பம் ஊக்கமில்லாததாய்ப் பரீக்ஷிக்கப்படவேண்டி நேரிடுகிறது.

நாடி சோதனை நடத்தக் குறித்த சமயங்களில் தன்னடையிற் பிறழாமற் றோற்றி நடக்கிறவனுக்குடைய நாடி தேகத்திற்கொரு நேத்திரம் போனின்று நடத்துகிறது. பரீணிய நாடியின் பிரதிகள் உற்பத்தியான தானத்தில் ஓதை காரணமாகவுடையது. வைத்திய முறைமைக்குத் தகுந்த மக்களுக்குக கையிற் சேர்ந்திருக்கிற குணநாடி சில ஏதுக்களினால் கேடான நிலமைகளை அடைகிறது. அவையாவன: தாபனம், லேகனம், வேதனம் பீடனம், காதனம் முதலிய சிகிச்சைகளை மிதமின்றி வருத்தக்காரனுக்கு ஆய்க்கினை கொடுத்து மேலும் மேலும் நடத்துதலினாலும், தேயதத்துவமான நாடியின் சிகையில் ஊறடைந்தால் கையிலே சூரியன் நாடியின் காரணப் பொருளில்லாமற் சீவசஞ்சாரத்தை விளக்குகிற நாடியின் சென்னி சூம்பலாகின்றது.

மேன்மையான கீர்த்தியையுடைய வைத்தியர் பயிற்றும் பொருளின் விளக்கம். சமாதானமில்லாத குருத்துவாந்தரம், சுகானுபவமான ரோகங்களைப் பிறழச் செய்கிறதில்லை. அங்கக் குறைவில்லாத சிரேஷ்டமான தேகத்தையுடையவரினங் குஷ்டமூலத்திற் பரீட்சை பண்ணுகிற புச்சநாடி அங்குஷ்டதேகியினங் குஷ்டமூலத்திலறியப்படுகிறதில்லை.

இரத்த ஓட்டத்திற்கு முதன்மையாகவுள்ள பிரயத்தனம் கடினத்தன்மையானாலும் போற்றத்தக்கது. அங்குஷ்டதேகிக்குக் கையிலே நடத்துகிற தாண்மையான பரீட்சைக்கு ஜடம் நாடியின் புச்சங்களைக் குணமாக்கிக் கொடுத்துத் தானுமனுபவிக்கிறது. பரீக்ஷணியநாடி ஸ்தாபிக்கப்பெற்ற இடத்தில் பிரதி நிமேஷமுமுடையது. அது இல்லாத அங்குஷ்ட தேகிகளுடைய கையில் குரூத்துவார மார்க்கமாக இரத்தம் ஓடிக்கொண்டு நிற்கிறது. அவர்களுக்குக் கையிலே பண்ணும் நாடிப்பரீட்சை அங்குஷ்டமூலத்திற்குப் பொருத்தமானதல்ல. அங்கே சிகை வசமாக இதம் பண்ணுகிறது. அவர்களுக்கு ஆழமான பகுதியறிய முடியாது; ஞானேந்திரிய வுணர்ச்சியில்லை என்பதாம்.

குருவணக்கஞ் செய்யாத வைத்தியன் செய்யும் பரிகாரம் பலனற்றது; நேர்நிரையில்லாதது.பலசாஸ்திரங்களையுங் கற்றறிந்த புத்திமானாகிய வைத்தியன், தன் இஷ்டகுருவை வழிபட்டு அவர் சீக்ஷைசெய்த உபதேசத்தை முன்னாகக்கொண்டு நாடியின் குணம், பேதம், வாயுக்களின் சஞ்சாரம் இவைகளை நல்லாயறிந்து கரதலப் பரீட்சையைக் செய்யக்கடவன்.

சுகப்படாத வருத்தங்களை மூன்றுவாரம் பரீட்சை செய்து பின்னும் செய்து ஆறவிட்டு, அதில் மனசைச் செலுத்திப் புத்திமான்களோடு யோசனை செய்து ரோகத்திற்குக் கூறிய கைகண்ட மருந்தைக் கொடுத்துச் சுகப்படுத்த வேண்டியது.

அத்துடன் அவனுக்கு இயற்கையான குணத்தைக் கொடுக்கக் கூடிய செயற்கைகளையாவது அல்லது மனச்சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பராக்கையாவ துண்டாக்கிச் சுத்தவாளு சஞ்சாரமான இடத்தில் மாற்றிவைத்துத் தெண்டித்துப்பார்க்க வேண்டும்.

இணக்கமான சேர்க்கையில், தன்னடையை மாறுபடுத்தி நாள்தோறும் எதிரிடையாக நடந்துகொண்ட நாடி ஸ்திரிகளின் அந்தர் ஸ்தானத்திலடைந்திருக்கிறது. அந்தக் கூதனஸ்தான உறுப்புக்குத் தற்காப்பாயுள்ள உதடு மார்க்கம் இடுக்கண் செய்கிறது. துராகிதமாய் நடக்கிறது. அந்தப் பயனையடைகிற நாடி கற்பிக்கிற தன்யாசயம் உஷ்ணகுணமுடையதாய்ப் போய்ச் சிசுபோஷண நாடிக்கு ஒரு திகைப்பான குணத்தை யுண்டாக்கி அங்கே நிகழவேண்டிய கிரமத்தையும் குலைக்கிறது. அங்குஷ்ட மூலக்குறிப்பில், நாடி அந்தக் குணமான நடையி னிலக்ஷணத்தையே விளங்கக்காட்டி நடக்கிறதாகப் பேசுகிறது. இந்த வித்தியாசங்களினால் ‘சௌடி’‘லம்பாவம்’ என்னும் நாடிகள் பலவீனமான குணமுடையதாகின்றன. அப்பொழுது நாடி சீக்கிரகுணமான நடையின் பலனையும் மந்தகுணமான நடையின் பலனையுண்டாக்கி அளிக்கிறது.(சாயங்காலம் நடை வெளிப்படை) இப்படியாக நடக்கிற ரோககுணங்களில் பரீட்சை பண்ணப்படுகிற கையில், ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நாடிக்குமுரிய சந்தித்துவாரங்களில் நடக்கிற இலட்ஷணத்தையும், இருதய ஸ்தான ஆசயங்களிலும் வித்தியாசமாக நடக்கிற குணங்களையும் பிரித்தறிந்து, அந்த ரோகங்களின் குணம் மர்மஸ்தானங்களிற் பிரவேசிக்கமுன், அதற்குக் கூறிய கைகண்ட அவுஷதத்தை உபயோகிக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் ரோகத்தின் குணம் வளர்ந்து தேகத்தை இயல்பிற் குறைந்த இனமாக மாற்றி விடுகிறது. அந்தக் குணம் மர்மஸ்தானங்களில் மாத்திரமல்லச் சீவாதாரமான எந்த உறுப்பிலுஞ் சேரக் கருதுமியல்புடையது.

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பனவாகிய மூன்று தோஷங்களும் தனித்தனி அதிக்கிரமித்துக் கிரமமாய்ப் பிறக்கும் பொழுது றடை, மந்தகதி, மத்தியகதி, தீக்ஷணகதி என உணரப்படும்; அவைகள் ஒன்றுடனொன்று சேர்ந்து நடக்கும் பொழுது வாததொந்தம், மத்தியஸ்பர்ஸம், பித்த தொந்தம், தீணபர்ஸம், னொமிகை விரலிலறியப்படுவதாகிய சிலேஷ்ம தொந்தம, மந்தஸ்பர்ஸமாகவு முணரப்படுகின்றது. தோஷங் கடங்கடங்களுக்குரிய ரூபதலத்தைப் பிறழ்ந்து மாறிமாறி நடக்கும் பொழுது குடில நடையாகவும் சிலவேளை பின்ன நடையாகவும் உணரவேண்டிவரும்.

(நாடி தர்ப்பணம்)

# 5. நாடி நடையும் கதியும்

## 5.1 நாடி நடை பற்றி பின்வரும் நூல்களில் கூறப்பட்டுள்ளது

### 5.1.1 நாடி நடை பற்றி அங்காதிபாதம் கூறுவது……

குறித்தறியு நாடிகளின் பரீட்சை கேளுங்
        குக்குடமோ ணான்மஞ்ஞை முயலே யன்னம்
முறித்திவை போன் மெல்லநடந் திடுகில் வாதம்.
        வயங்காமை யட்டையுறாத் தாராவென்ன
வெறித்துமிடுக் காய்நடத்தல் போலாம் பித்தம்.
        விளங்குமிளங் கிளிமொழியே வேலிமீதில்
கொறித்துநடந் திடுங்குருவி தவளை நாகங்
        கொக்குறக்கம் போலையங் குதிக்குந்தானே

(பொ-ள்)
கோழி, ஓணான், மயில், முயல், அன்னம் இவைகளின் நடை போல நடப்பது வாதமாகும். நடக்கின்ற மாடப்புறா, அட்டை,ஆமை, தாரா ஆகியவற்றின் நடை போல நடப்பது பித்தமாகும். களகனிக்குருவி, தவளை,இவற்றின் நடை போலவும், நாகபாம்பு படமெடுத்து ஆடுவதுபோலவும் குதித்து நடப்பது சிலேற்பனமாகும் என்பதாகும்.

### 5.1.2 நாடி தர்ப்பணத்தில்நாடி நடைக்கு உவமையாகக் கூறப்படும் ஜீவசாதி பேதங்களாவன

**5.1.2.1** நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் சஞ்சரிக்கின்ற பிராணிகளுடைய நடைகளோடு கூட வேறுபட்ட இலக்கணங்களை உடைய நாடிகளின் கதிகளுவமிக்கப்படுகின்றன.

நிர்வாழும் பிராணிகள் தவளை மற்ளம் முதலியன பூமி சம்பந்தமான பிராணிகள் சர்ப்பம் அன்னம் மயில் முதலியன ஆகாசசாரியான பிராணிகள் லவா படேரம் முதலியன.

நாடியிலக்ஷத்தைச் சொல்லப்படாதனவாகிய சுகதேகியிடமிருந்து எந்த இலக்ஷணமுடையதோ ரோகியிடத்தும் அந்த இலக்ஷணமுடைதாகும்.அது வயாதினாலும் காலத்தினாலும் உண்டாகின்ற உரோங்களினது பேதங்களினாலே வேறு வேறாக தன்மை அடைகின்றது.

1. வாயதினாலுண்டாகின்ற பேதம் என்பத பாலியப் பருவத்தில் நாடிநடை கெதியாயும் யெளவனப் பருவத்தில் பலியல் பருவத்தில் நடந்த நாடியின் நடையைப் பார்க்கிலும் ஆறுதலான நடையும் வயோதிபப் பருவத்தில் நாடி யௌனவனப் பருவநாடி நடைக்கு ஆறுவலாயும் நடக்கும்.

2. காலம் என்பது விடியற்காலம் மத்தியான காலம் சாயங்காலம் என்பவை விடியற்காலம் மத்தியான காலம் சாயங்காலம் என்பவை இந்த வேளைகளிற் பெரும்பான்மை சில தேகிகளுக்கு நாடிநடை வித்தியாசாமான குணங்களை எடுகின்றது.

3. ரோகங்களின் பேதங்களாலெனபது சுரத்தோடு கூடிய வருத்தங்களில் நாடிநடை ஒரேமாதிரியாக இருக்கமாட்டாது.அவைகளில் இடையிடை விட்டு வேற்றுமைப்பட்டிருக்கும்.அதிகாரம ˙பொரும்பாடு அதிர்க்கரம் அரசம் முதலிய குணங்களில் காலை நாடி ஒரே தன்மையான நடையென்பது கிந்த கர்த்தாவின் கொள்கை.

### 5.1.2.2 அங்குஷ்ட தேகிகள் நாடி

கூன்,குறள்,முடம்,ஊமை,முணமுணம் முதலாயினோரையும்,அலியரையும் அங்குஷ்ட தேகிகள் என்று சொல்வது.

அலியரில்(பால் வேற்றுமை) பெண்டன்மையானால் இடது பாத நாடியும்: ஆண்டன்மையானால் வலது பாத நாடியும்: சடத்தில் வித்தியாசமான குணாகுணாங்களை மாற்றிச் சம குணத்தை இருவருக்கும் தனித்தனி எடுக்கிறது,ஆனால் இது எல்லா வழியிலும் பொருத்தமானதல்ல.இவர்களுக்குச் சமகுணம் ஏகசாதியான இலகஷ்ணத்தைக் காட்டுகிறதாம்.சிலருக்குக் கோஜத்தில் சமகுணமாகிறது.அந்தக் கோஜம இயல்பிலே மாறானது.இடையிற் பலம் வாங்கப்பெற்ற நபுஞ்சகனுக்கு நாடி,பிரதி குணங்களுண்டாகின்ற அந்தந்தகாலங்களுக்குத் தக்கதாய், ஓதி பொருட்டுநிலை பெறுகிறது.வதன உரோமம் மேலிதழில் 4 பொடித்திருக்கும் பேடருக்கு வலப்பக்கத்திலும்,அப்படி அல்லாமற் கன்னங்களில் மாத்திரம் பொடிந்திருக்கின்ற பெண்டருக்கு இடப்பக்கத்திலும் முதற் பரீட்சையை எடுக்க வேண்டுமென்பது விளங்க வேண்டியிருக்கு.

கபுஞ்சகருக்குரிய பாதநாடியின் சிகை,சிலருக்கு நாபியிலும் சிலருக்கு மேஷ்ரங்களிலும்,சிலருக்கு கருப்பை வாசலிலும்,சிலருக்கு ஆமாசயத்திற்காதாரமாயுள்ள நாடி சக்கரத்திலிம் சேர்த்திருக்கிறதாகக் கூறுகிறது்

அலியருள்ளும் உத்தமிக்கு இடதுகரநாடி கற்பிக்கின்ற நாதத்தை அல்லது சிகையை அடைகின்ற தகனன் கன்னங்களுக்கு முதன்மையாகச் சில சேவலின் வால்களுக்கொப்பான புச்சங்களை விசரிக்கிறது,சுழுமுனாநாடி பல விரிவுகளை உடையதாய்ப் பாரிச பாகங்களில் விகாரப்பட்டிருக்கின்றது,எறிதிந் கோபமுண்டாகும் மனைவிக்கு வலதுகரநாடி புறவடியிற் போய்க் கிரந்திகளையுடைதாய் இருக்கிறது.

பிறவியில் உறுப்பையிழந்த அங்குஷ்டதேகிக்கு நடக்கிற கோஜகதியையும் இடையிட்டு உறுப்பையிழந்த அங்குஷ்ட தேகிக்கு நடக்கிற கிருத்திரிம கதியையும் ஓர்ந்துணர்ந்து அங்குஷ்டமூலம்,கைப்பொருத்து,5(குடிகை,அநுகுடிகை)குல்பஸ்தானம்,கபாலம்,பாரிசம் ஆகிய இந்த ஆறு இடங்களிலும் பரீகைஷபண்ணி வியாதியை நிர்ணயிக்க வேண்டியது.கூறிய ஆறிடங்களுக்கும் விவரணம் -அங்குஷ்ட மூலநாடிப் பரீகைஷயை கூர்ப்பபரத்திலும் புயத்திலும் குஸ்பஸ்தானப் பரீகைஷயை குடிகையிலும் அநுகுடிகையிலும் கபாலநாப் பரீகைஷயை பாரிசத்திலும் கைப்புயத்திலும் அறியலாம்.

கபுஞ்சகிக்குக் கைநாடிப் பரீசைஷயில்லை என்று பின் கூறப்படினும் ரோகமாயிருக்கும் பொழுது கையில் பரீசைஷபண்ணி அறியவேண்டியது. அங்குஷ்ட மூலத்தில் பைரவிநாடி மணிரந்திரம மையப் பெறாத சிகையுடையதான படியாற்றான் நபுஞ்சகிக்குக் கைநாடி பேசுவதில்லையென்று பின் கூறப்படுகிறது. அங்குஷ்ட மூலத்திலமைந்திருக்கிற கிரந்தி இயற்கைக்கு மாறானதாயும் அதிற் சகித்திருக்குமிரத்தம் கிரமமாய் நடைபெறுந் தகுதியில்லாததாயுமிருக்கிறதாம்.

சம்போக காரணமான குறிப்புகள் அறியப்படும் பொழுது அவைகளுக்குப் பலமில்லாத நாடி கற்பிக்கிற அறிவைத் தேகமடைந்திருக்கிறது.தாதுநாடி சம்பந்தமாய்க் கற்பிக்கிற அறிவு தேகத்திலும் இல்லாமலல்ல: அப்படியானாலந்த விகாரம் நிரந்தரமானதானது.இந்தக் குணம் கருப்பை வாசலிற் கால்கொள்ளுகிற பொழுது அவஸ்த்தையை அனுபவிக்கின்றவள் நாடி தேகத்திலறிய முடியாது. கருப்ப காலத்தில் அனுபவிக்கும் வயாவு முதலிய சுபாசுபங்கள் இட்டமாய்ச் சுகப்படுகிறது.

தாது நாடி சம்பந்தமாய் என்பது,- அக்ஷ வடிவமான நாடிச் சக்கரத்தில் உதித்த ரோகநாடியைப் பைரவிநாடி ஒன்றித்து நெருங்கின தன்மை அது விரிந்து கிளைகளையுடையதாய்த் தான் போய்ச் சந்திருக்கும் இடம் எங்கேயோ அங்கே அக்ஷர வடிவமான கிரந்திகளையுடைதாய் முடிகிறதாம்:ஆனபடியால்தான் நாடி அங்க முற்றிலுந் தாதைச் சகித்து நடக்கிற தன்மை.அங்குஷ்ட தேதிகளுட் சிலருக்கு விகாரம் நிருவாகமில்லாமல் இருப்பது.

ரோகங்களின் கூறுபாடுகளையறிகிற கையில் ஊடுருவி நடக்கிற முடவருக்குக் குணங்களை மாற்றி எடுக்கிற நாடி தோற்றிக் கற்பிக்கின்ற அறிவுக்குரிய வலது பாதம் பேசப்படுகிறது.தோஷங்கள் மூன்றும் வைத்தியனுடைய இடது கைவிரல்களுக்கு இணங்கியும்,விரோதமாயும் நடக்கின்றன.உஷ்ணம சம்பவிக்கும் பொழுது பங்கப்பட்ட அந்த உறுப்பின் முடப்பாகத்தையடைந்து பேசுகிறது.மலசலவாதிகளில்,நாடி தெளிவான நடை,அல்லது ஒரு கரடியின் நடையைப் போலாராய்வான நடையென்றும் சொல்லலாம்.இயல்பிலே உள்ள சமமான நடை மந்தகதி,அல்லது ஒரு எருமையின் நடையை உவமையாகக் கூறலாம்.இந்தக் கடைகள் தோற்றி மறைந்து விம்மி உற்பிதமாகின்ற முதற் குணம் வாதத்தை துண்டித்து நடக்கச் செய்கிறது.அந்த வாதத்தின் பிரபஞ்சனகதி பிரயோசனமுடையதாகிற பொழுது கூறிய எருமை நடை சுழன்று அதிகரிக்கின்றது,அப்பொழுது பாதம் கற்பிக்கின்ற கற்கியினுவமையான நடையையும்,நாடியிற் பேசுகிற க்ஷணகுணத்தையும் இடதுபாதம் பேசப்படுகின்ற உரோகிகளுக்குப் பாதம் கற்பிக்கிற 6 ஸாதமான நடையையும்,நாடியிற் பேசுகிற ஆயாசமான குணத்தையும் கையிலே பரீக்ஷைபண்ணி அறிய வேண்டியது.(6ஸாதம்-சுத்தம்,க்ஷீணம்)'தாது நாடி சேர்ந்திருக்கின்ற முடப் பெண்ணுக்கு மத காலக் குறிப்புக் காணப்படும் பொழுது நாடி தராவில் நிலையற்று நடக்கிறது.தாது நாடியில்லாதவளுக்கு அந்தக் காலத்தில் பங்கப் பட்ட உறுப்பின் முடப்பாகத்திற் பேசுகிறது.இங்கே முதற் குறித்த பேதைக்குக் கணபங்கமான தோஷம் வைத்தியருடைய வலது கைக் குறிப்பேற்றும் பொழுது,அந்தப் பாதங் கற்பிக்கிற கேவல உபலக்ஷணமான மாதிதிரை ஒரு இரத்தத்தின் சக்கரச் சுற்றைப் போற் சுழன்று தராவில் நிலைகொள்ளுகின்றது,தேகத்தில் இடப் பாதநாடி பேசுகிறது.இரண்டாவது குறித்த பேதைக்குத் தாது நாடியல்லாத மானச சம்பந்தமான நாடியானால்(தமனிக்குரிய தானால்) அந்தச் சுழற்சியைப் பெற்றிருக்கின்ற நாடி தேகத்திற்குரியதல்ல.அது முடப்பாகத்திற் தத்துவமுடையதாகிப் பேசப்படுகிறது.இவர்களுக்கு வலதுபாத நாடி பேசுகிறது.இவைகளைத் தேகத்தின் கூறு பிரித்தறிந்து இடது,வலது பக்கங்களை மாற்றி எடுத்துப் பரீக்ஷை செய்ய வேண்டியது.(ஏககாதகி நாடி தேகத்திற்கொரு நெத்திரம் போனின்று ரோககாரணங்களைத் தெரிவிக்குமென்று பின்னும் கூறப்படும்)

சிலவேளை யுத்தத்திலாவது அல்லது தற்செயலாயிடையிட்டாவது,அங்கபங்கமான ஒரு கால் முடமானவனுக்குத் தேகத்திற் சுழுமுனாநாடி பேசுகிறது.வியாதியின் கூறுகளை விளக்கும் தோஷமுண்டாக்கின முதற்குணம் இரண்டு கூறாகாமல் ஏக சாதியாய் இருக்கிறது.இந்தப் பந்திப்பை நாபிஸ்தானத்தில் அல்லது வன்மஸ்தானங்களில் அறிய வேண்டியது.அங்குஷ்ட தேகிகளுள் திறமையான கூனன்,குறளன் ஆகிய இவர்களுக்கு ஏகநாடி இடைவிட்டுக் கிரமமாய் நடக்கிறது.

### 5.1.2.3 ஆங்குட்ட தேகிகளின் நாடிவிதி

பெண் கிருத்திமத்திற்கு ஒப்பான உறுப்பமைந்த நபுஞ்சகருக்குப் பார்க்கும் நாடிப் பரீட்சையில் பிரதானமாக அறிந்துகொள்ள வேண்டியது யாதெனின்: முதல் உறுப்பின் வித்தியாசமறிவது அது ஆண் தன்மையோ பெண் தன்மையோ என்பது. ஆண் தன்மையின் வலது பக்க நாடியும், பெண் தன்மையின் இடது பக்க நாடியும் பேசப்படுகின்றது. இரண்டாவதாக தானப்பெயர்ச்சி அறிய வேண்டியது; அது உத்தமதானமோ, அத்தமதானமோ என்பது அவர்களுக்கு நாடிநிலை உத்தமதானத்தை விட்டு நீசதானத்தை அடைந்திருக்கின்றது. நபுஞ்சகனுக்கு அமைந்திருக்கும் குறி எவ்வகையோ அவ்வகையே நபுஞ்நரிக்கும் இவர்களுக்குரிய சாரீர நாடியின் தன்னை ஒப்புவமையில்லாத ஒரே தன்னையானது. அதனுடைய கதியைச் கோசகதி என்றும் கிருத்திருமகதி என்றுஞ் சொல்லலாம். சுடத்திலே உறுப்பு மாற்றப்பட்டது போலவே நரம்புகளுந் தங்களுக்குரிய உறுப்புகளில் அமைந்திராத நிலையைப் பெற்றிருக்கின்றன.அல்லது உத்தம தானத்தை இழந்து குறைந்த தானத்திற் பார்த்தறிகிற நாடி என்றுஞ் சொல்லலாம்.

நாடியின் நடைக்குக் காரணமாயிருக்கிற, ரந்திரம் எப்படி ஸ்தாபித்திருக்கின்றதோ அதற்குப் பொருத்தமாக நாடியும் வைக்கப் பெற்றிருக்கின்றது. பதமே காரணமாயிருக்கிறது. கரநேத்திர குறியும் சரணச் சிகையிலறிந்துகொள்ள வேண்டியது. இடது பக்கத்தில் இருக்க வேண்டிய பைரவிநாடியின் நாதம் வலது பக்கத்திலமைந்த தாயும் அதினுடைய சந்தி மார்க்கத்தில் ஆடு, மாடு முதலிய மிருகங்களுக்குப் பிணிக்கப்பட்ட நரம்பின் முடிச்சுகளுக்கு ஒப்பான தாயும், புச்சம் சேவல் மயில் முதலிய பறவைகளின் வால்களுக்கு ஒப்பானதாகவும் பாரிச பாகங்களில் மாறியிருக்கிறதாகத் தேகம் பெற்றிருக்கிறது. அதுபோலவே வலது பக்கத்திற்குச் சிருட்டிக்கப்பட வேண்டிய பைரவிநாடி இடது பக்கத்திற்கும், இடது பக்கதிற் சிருட்டிக்கப்பட வேண்டிய நாடி வலது பக்கத்திற்கும் மாறியிருக்கின்றன. இவர்கள் பக்க பாரிசங்களில் உவத்திரவத்தோடு கூடிய வேதனை உடையவராயிருப்பார்கள் என்பதாம்.

உத்தமமான உறுப்பமைந்த மனுஷருக்கு விதித்த நாடி ஸ்தானங்களில் நாடியின் குணம், பேதங்களை எப்படியறிந்து கொள்ளுகிறோமோ அப்படியே பிறவியிலே யுறுப்பை யிழந்த ஏகபீசகி, சந்துவாங்கி முதலிய அங்குடேகிகளுக்குப் பக்க பாரிசங்களிற் பார்த்தறிய வேண்டியது.

சிருட்டிப்பிலே பேதப்படாத உறுப்பமைந்த நபருக்கு நாடியின் நடையைக் கையில் அங்குஷ்ட மூலத்திலும், வித்தியாசப்பட்ட உறுப்பமைந்த ஷண்டனென்று சொல்வதாகிய அலிகளுக்கு, காலில் குல்பஸ்தானத்திலும், அங்கக் குறைபாடானவருக்குப் பாரிச பாகங்களிலும் பரீஷை பண்ணி யறியவேண்டியது.

#### 5.1.2.4 யோக்கிய தேக நாடிப் பரீட்சை

ஸ்திரமான சித்தமுடையவருக்கும், பாச சம்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டவருக்கும், அவ்விதமான கபட சிந்தனையில்லாதவருக்கும் அனேக சாஸ்திரங்களைக் கற்றறிந்த அறிஞருக்கும், ஞானமுடையவருக்கும் ஸபர்ஸநாடி வலது கையிலே பரிவர்த்தனமாகிச் சோதனாங்குலியையுந் திருத்தி இனமாற்றாக்கிப் பேரிக்கிறது.

மேலே பேசிய வாயுவேகமான அசைவற்ற சித்தமுடையவருக்கும், பாசசம்பந்தத்திலிருந்து தம்முடைய ஆன்மாவை நீக்கிக் கொண்டவருக்கும், உத்தம பண்டிதருக்கும், ஞானமுடையவருக்கும், திரிகரணசுத்தியமைந்த உத்தம வைத்தியனுக்கும் கையிலே நாடியானது தீபத்தின் பிரசாகத்தைப்போல் தோன்றி வெருட்சி, சாந்தம், பொறுமை ஆகிய இந்தக் குணங்களையுடைய ஒரு காளையின் நடைக்குச் சமமாக நடந்து அங்குஷ்ட மூலத்தில் ஸ்பர்ஸமாகிறது.

#### 5.1.2.5 மட வைத்தியம்

கள்ளு, சாராயம், பிரண்டி முதலிய லகரி வஸ்துக்களை அருந்தி அவைகளிற் சீவிப்பவனுக்கும், நாய், நரி முதலிய மிருகங்களின் நெஞ்சுக்கொப்பான கரவடமான மனசையுடைய கீழ் மகனுக்கும், மல மூத்திராதி வேகங்கள் பழுதாகி நாடிஞானேந்திரியங்களுந் தகுதி அற்றதாகின்றன. ஒருபோது லோபி, சித்த விகாரத்தினாற்றன்னிந்திரியத்தை மொழுகிவிடுகிற காமுகன் ஆகிய இவரகளுக்கும் அப்படியிருக்கும் இல்லாமலுமிருக்கும்.

சொல்லப்பட்ட மூடவருக்க நாடிபகுதி விகுதியில்லாதது. ஆந்த நாடியின் சிகை தரித்தற்குரிய இடத்தில் அதற்குத் தற்காப்பாகவுள்ள ஞானேந்தரிய நிமேட இனமாற்றமும் நிர்ப்பலமானதாகிறது. இவர்களுடைய நாடியின் நடைக்கு ஒரு ஆணெருமையின் நடையைத்தானும் உவமையாகக் கூறுவதரிது.

### 5.1.3 தேரையர் யமக வெண்பாவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

‘‘அன்ன மயில்குயில்மா வாண்டலையூ ரோதிபுளி
அன்ன மயில்குயில்மா வாண்டலையாய் -அன்னமயில்
வித்தகரை யாவாயுள் வேதியரா மேனையர்செய்
வித்தகரை யாவரிது வீண்’’

**5.1.4 வயித்தியரத்தினச்சுருக்கத்தில் நாடி நிதானம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.**

ஆகிய நாடி மூன்றும் படபடென்றேடிற் சன்னி
வாகிணின்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வானம் பட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகியே தவளை பாம்பு போல வாஞ் சேத்துமந்தானே

## 5.2 நாடிகளின் கதிகள்

### 5.2.1 யூகிமுனி எனும் நூலில் நாடிகளின் கதி பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.....

**வாத,பித்த,கப நாடிகளின் கதி.**

''அன்னமே கோழியோணான் மயிலென நடக்கும் வாதம்
பின்னையோ நாமையட்டைப் பெருத்திரு பித்தமாகும்
சொன்னாவாய் மொழியினாளே! சுத்திய தவளை பாம்பு
முன்னமே அயியமென்று மொழிந்தனர் முனிவோர் தாமே

பொ-ள் -

வாதநாடி கோழி, ஓணான்,மயில் இவை நடப்பதைப்போலவும் பித்தநாடி ஆமை, அட்டை, இவைகளின் நடப்பைப்போலவும் கபநாடி தவளை,பாம்பு இவைகளின் கதிகளைப்போலவும் இருக்கும்.

**வாதநாடி**

''தெளிந்திட்ட வரநாடிக் குணத்தான்
        சிறுபிள்ளை தூக்கு தொட்டிலாட்டம் போலும்
வளிந்திட்ட வளைந்துவளைந்தேநடக்கும்
        மண்கேந் தத்துதல் போ லோணான் போலும்
தளிந்திட்ட சர்ப்பம்மயிலினிற் போலட்டைபோலும்
        தவழ்ந்தமேளமயிலினிற் குருவி போலும்
அளிந்திட்ட வாமையின் றனடையைபபோலும்
        ஆதியா வாதமது நடக்குந் தானே''

யூகி முனி)

**பித்தநாடி**

''நடக்கின்ற பித்ததினாடி கேட்கின்
        நாகரீக மாருமன்ன நடையைப்போலும்
மடக்கின்ற மயில் போலுந் தாரா போலும்

மாடப்புறவுக்கு மூர்க்குருவி போலும்
விடக்கின்ற மெத்தனவாம் மீண்டு
மேன்மையாய முடுக்காக விளக்கமாகித்
கிடக்கின்ற கெருடன் போற் பெலத்தே யோங்கழத்
கேசரம் போலசையுமது பித்தந் தானே''

(யூகி முனி)

**சிலேட்ப நாடி**

''தானென்ற சிலேட்பத்தின் றாது கேளாய்
தயங்கியே தோற்றமது தோற்றதாகிக்
கோனென்ற கோழியின்ற னனடையே போலும்
கொக்கிலுறக் கம்பிபோலுக் குருவி போலும்
மானென்ற மங்கை நல்லாள் மயக்கிற் கிக்கி
மருவினவன் றாது போன் மசக மாகித்
தேனென்ற சிலந்தியின் பூச்சுப்போலும்
கேட்பமா நாடியது தெளிவாயிப் பாரே''(யூகி முனி)

### 5.2.2 நாடி சக்கரத்தில் கூறப்பட்ட நாடிகளுக்குரிய கதிகள்

**நாடி நடை பொதுவான விபரம்.**

1. வாத நாடி - சர்பத்தின் நடை
   பித்த நாடி - தவளையின் நடை
   கப நாடி - அன்னத்தின் நடை

| 2. **நாடி** | **வக்கிரமடைந்தால்** | **ஸ்திரமடைந்தால்** |
|---|---|---|
| வாதம் | தவளை சிட்டு ஆமை | மான் மீன் முஞ்சூறு |
| பித்தம் | காகம் கிளி தவளை | புறா அன்னம் ஊர்க்குருவி |
| கபம் | புறா ஊர்குருவி கோழி குதிரை | எருமை பெண்சிட்டு யானை |

(நாடி சக்கிரம்)
வாத நாடி - இருக்கவேண்டிய மாத்திரையளவிற்கு இரண்டு பங்கிருந்த வாதமிகுதி வாதம் கதித்தல் வாதம் மீறி நடத்தல் வாத எனும் பதம் பெறும்

பித்தநாடி - தன் மாத்திரையளவுக்கு 2 பங்கிருப்பின் பித்த மிகுதி பித்தம் மீறி நடத்தல் பித்தம் கதித்தல் பித்ததில் பித்தம் எனப்படும்

ஐயநாடி –தன்மாத்திரையளவுக்கு 2 பங்கிருப்பின் ஐயமிகுதி –ஐயம் மீறி நடத்தல் ஐயம் கதித்தல் ஐயத்தில் ஐயம் (நாடிச்சக்கரம்)

### 5.2.3 நாடி தர்ப்பணத்தில் கூறப்பட்ட நாடிகளின் சுபாவ கதியாவன…..

வைகறையில் ஸிநிக்தமயம், மத்தியானத்தில் உஷ்ணவிதம், சாயுங்காலத்தில் வேகவதி, இராத்திரி காலத்தில் வேகவிவர்ச்சிதம் என்று சொல்லலாம்.

அவற்றுள் ஸிநிக்தம் என்பது எண்ணெய்த் தன்மையுள்ளது, இறுக்கமானது, குளிர்மையானது, சேருந்தன்மையுடையது, அழுத்தமும் பிரகாசமுமானது, அழுத்தமில்லாதது, தடிப்புத்தன்மையுடையது, தடிப்புத்தன்மையில்லாதது, வேகவிவர்ச்சிதம் என்பது நாயுங்காலத்தில் நடந்த வேகம் குறைந்து வருவதாம்.

**வாதாதி நாடிகளின் விசேஷகதி**

வாதநாடியும, பித்தநாடியும் முயையே, சர்ப்பம் சலூாகை இவைகளின் நடையையும் காகம், லாவம், பேகம் என்பனவாகிய இவைகளின் நடையையும் முதன்மையாகவுடையதென்று உவமையாகக் கூறப்பட்டது.

தமனி சிலேஷ்மத்திற் சேர்ந்து தன்னுடைய நடையைத் தெரிவிக்கிற பொழுது இராசஹம்சம், மயூரம், பாராவதம், கபோதம் இவைகளின் சேர்க்கையான பித்தலாட்டமான நடையையும் குக்குட நடையையும் உவமையாகப் பொருந்தி நடக்கிற சிலேஷ்மமானது, அதனுடைய நடையை அமுக்கிச் சிறப்பற்ற நடையாகக் காட்டி நடக்கிறது.

சர்ப்பம், சலூாகை இவைகளின் நடையைச் சங்கீரண உவமையாகப் பொருந்தி நடக்கிற வாதநாடியின் தாழ்மையான நடை நரம்பு மார்க்கமாகிய தமரில் வளருகிறது. அது ஒரு காயகனுடைய அங்குஷ்ட மூலத்தில் துண்டித்த நடையாக வளைந்து அசைந்து நிலைத்து நடக்கிறது; அல்லது ஒரு ஓந்தியின் தலையாட்டத்திற்கு ஒப்பாகத் தோற்றியும், தோற்றாமலும் நடக்கிறது. அந்த வாதம் தனக்குரிய பூர்வகதியிற் சிலபகுதியைப் பித்தநாடிக்கு ஈவுபண்ணி, ககப்புள்ளின் சிறுகிய நடையைப் பிரதி நடையாக அபகரித்துக்கொள்ளுகிறது.

மேற்குறித்த பிரகாரம் பித்தம் மாற்றப்பட்டு, கர்கம், லாவம், பேகம் இவைகளுக்குரிய குறைந்த விகுதி நடைகளை முதன்மையாகப் பொருந்தி ஊறடைந்த நடையை உடையதாக அசைந்து நடக்கிறது.

பித்தநாடியின் பூர்வகதிக்கு உவமையான குலிங்க நடையை ஒரு ஊழியக்காரனைப்போல் பின்பற்றி நடக்கிற சிலேஷ்மம், அற்ப அளவினதாகக் கிரகித்துத் தனக்கொரு பிரதி நடையாக வைத்திருக்கிறது. அப்படிக் கிரகித்து வைத்திருந்தாலும், இராசஹம்சம், மயூரம், பாராவதம், கபோதம், குக்குடம் ஆகிய இந்தப் பட்சிசாதிகளின் குறைவான நடைகளை உவமையாக அடக்கி வைத்திருந்து மந்த, மந்த நடையாகத் தளம்பி நடக்கிறது. சிலேஷ்ம நடையின் உவமானத்தில் முதல் விதிக்கப்பட்ட எகினநடை, இலக்கணவிதிக்கு அமையாதது; அதுபோலவே ஒரு உத்தம ஸ்திரியின் நாடிநடையும், பாகனுக்கடங்காத ஓர் யானையின் நடையை உவமையாகப் பொருந்தி நடக்கிறது.

## துவம் துவஜநாடிசாலம்

இரண்டிரண்டாய்த் தொந்தித்துப் பிறக்கின்ற நாடிகளின் நடை

வாதநாடியும், பித்தநாடியுந் தொந்தித்துப் பிறக்கும் பொழுது முதல் அரவைப் போலும், பின் தவளையைப் போலும் நடக்கும்.

வாதமும், சிலேஷ்மமுந் தொந்தித்து நடக்கும்பொழுது, முதல் சர்ப்பத்தைப் போலும் பின் அன்னப்பறவையைப் போலும் நடக்கும்.

பித்தநாடியும், சிலேஷ்மநாடியுந் தொந்தித்து நடக்கும் பொழுது முதல் தவளையைப் போலும், பின் மயிலைப் போலும் நடக்கும்.

## நாடிகள் அங்குலிக்குறி நிதானத்தை விளக்கும் வேற்றுமை

வாதநாடி அதிகரித்து நடக்கும் பொழுது தர்ச்சனி விரலின் நுனியிலும், பித்தம் மத்திமை விரலின் அந்தத்திலும், கபம் அனாமிகை விரலின் இறுதியிலும், வாதமும், பித்தமுந் தொந்தித்து நடக்கும் பொழுது தர்ச்சனி விரலுக்கும் மத்திமை விரலுக்கும் இடையில் நின்று நடக்கின்றன.

வாதமும், கபமும் தொந்தித்து நடக்கும்பொழுது அனாமிகை விரலிலும், தர்ச்சனி விரலிலுமாக மாறிமாறி நடக்கும். பித்தமுஞ், சிலேஷ்மமும் தொந்தித்து நடக்கும் பொழுது மத்திமை விரலுக்கும், அனாமிகை விரலுக்கும் இடையில் பேசும். இவ்விதமாக நாடிகள் மாறி மாறி நடந்தால் சன்னிபாத இலக்ஷணத்தைக் கருதுகிறது.

### 5.2.4 தொந்திப்பு நாடிநடை பற்றி அங்காதிபாதம் கூறுவது...

குதிக்கின்ற நாடிகடா மொன்றே டொன்று
கூடிநடந் திடிலதுவே தொந்து மாகும்
துதிக்கின்ற வாதமிரண் டொன்று பித்தஞ்
சுமைசுமப்போ னிடுப்பசைவின் றோற்றம் போலும்
விதிக்கின்ற பித்தமிரண் டொன்று வாதம்
மதிக்கின்ற சேடமிரண் டொன்று வாதம்
வாலரணை முறிபோலத் துடிக்கும் தானே

(பொ-ள்)

வாதம்,பித்தம், சிலேற்பனம் என்னும் மூன்று நாடிகளும் தனித்தனி நடக்காது. ஒன்றிரண்டாக கூடி நடப்பதை தொந்தம் என்று சொல்லப்படும். அவ்வாறு வாதம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்கும் சேர்ந்து நடக்கும் நாடியானது தலையில் பாரத்தை வைத்துக் கொண்டு நடப்பவனது இடுப்பாடுவது போலவும், பித்தம் இரண்டு பங்கும், வாதமொரு பங்கும் சேர்ந்து நடக்கும் நாடி பாம்புகள் சேர்க்க பண்ணுவது போலவும், சேற்பனம் இரண்டு பங்கும்,வாதம் ஒரு பங்கும் சேர்ந்து நடக்கும் நாடியானது அறுபட்ட அரணையின் வால் துடிப்பது போலவும் நடக்குமென்பதாகும்.

துடிப்பான சேடமிரண் டொன்று பித்தந்
தூங்குபிள்ளைத் தொட்டிலசைத் திடுதன் மானும்
கெடிப்பான பித்தமிரண் டொன்று சேற்பங்
கிளிமொழியே துடியடிபோற் கிளந்தே யோடும்
வடிப்பான வாதமிரண் டொன்று சேற்ப
மற்கடத்தின் பாய்ச்சலென மருவி யோடும்
பிடிப்பாக மூன்றுந்தா னோடு மாகிற்
பேனாணை வான் முறிபோற் றேந்து போமே

(பொ-ள்)

சேற்பனமிரண்டு பங்கும், பித்தமொரு பங்கும், சேர்ந்த நாடியானது தொட்டிலசைவது போலவும், பித்தமிரண்டு பங்கும் சேற்பனம் ஒரு பங்கும் சேர்ந்த நாடியானது உடுகு அடிக்கும் போது கேட்கும் சத்தம் போலவும், வாதமிரண்டு பங்கும் சிலேற்பனம் ஒரு பங்கும் சேர்ந்த நாடியானது குரங்கு நடப்பதைப் போலவும், மூன்றும் சேர்ந்த நாடியானது அரணையின் வால் குறைந்து போவது போலவும் நடக்கும் என்பதாகும்.

### 5.2.5 நாடி தர்பணத்தில் குறிப்பிடப்பட்ட நாடிகளின் கதிகள்.......

- வாதம் - வக்கிரகதியை உடையது
- பித்தத்தினெழுப்பம் - சபல நடை
- சிலேட்பம் - கெயங்கொண்ட நடை கூடிப்பிறந்தன

### 5.2.6 வைத்திய சிந்தாமணி எனும் நூலில் கூறப்பட்டுள்ள கதிகள்

**வாதநாடி**

சிறுபிள்ளை தூங்கும் தொட்டிலாட்டம் போலும், தவளை தத்துதலைப் போலும், ஓணான் சர்ப்பம் அட்டை இவைகளின் நடையைப் போலும், வேவிகளில் துள்ளித்துள்ளி தாண்டுகின்ற குருவி காடை முதலியவற்றைப்போலும், ஆமையின் நடையைப்போலும் தோற்றும்.

**பித்தநாடி**

அன்னப்பட்சி, மயில், தாறா, மாடப்புறா, ஊர்க்குருவி, கருடன், முதலியவைகளின் நடைகளைப்போல் வன்மையுறத் தோன்றுவதுடன் சிங்கத்தின் அசைவைப்போல் காட்டும்

**சிலேத்தும நாடி**

கோழி, கொக்கினுறக்கம், ஊர்க்குருவி, சிலந்திப்பூச்சி, முதலியவற்றின் நடையைப் பெற்றிருக்கும்

**வாதபித்த நாடி**

சிறுகுருவியைப்போல் நடந்து பின்னர் அட்டையின் நடையைப்போற்றுடிக்கும்

**வாத சிலேத்தும நாடி**

காட்டுக்கோழியைப்போல் நடந்து பின்னர் அட்டையின் நடையைப்போற் றுடிக்கும்

**பித்த சிலேத்தும நாடி**


பாம்பைப்போலசைந்து பின்னர் தவளையின் தத்துதலைப்போற் றுடிக்கும்

## 5.3 நாடி நடை அலைகள்

**படம் 01 :** சாதாரண நாடி நடை அலைகள்




படம் 02 : ஓர் அலையின் அமைப்பு




படம் 03 : வாத,பித்த ,கப நாடிகளின் சலனக்குறிப்பு




| வாதநாடி | பித்தநாடி | கபநாடி |
|---|---|---|
| 1 – வ | 4 – பி | 6 – க |
| 2 – வ1 | 5 – பி1 | 7 – க1 |
| 3 – வ2 | 6 – க | 1 – வ |



வ – வ1 – வ2 - என்ற கோடு - வாதநாடியின் சலனத்தைக் குறிக்கிறது. இவ்வாத எழுச்சியை இதயக் கமலத்தின் குவிதலாகிய ஆக்கத் தொழிலை உணர்த்துகின்றது

பி1 – பி2 – க – என்ற கோடு - வாதத்தை அடுத்து நடக்கும் பித்த நாடியின் சலனத்தைக் குறிக்கிறது குவிந்த இருத்தக் கமலத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்துதல் செய்கையைப் புரிந்து விரியச் செய்கிறது. எனவே காத்தல் தொழிலைச் செய்கிறது.

பித்தநாடி விரிதல் தொழிலை செய்யாவிடில் இருதயம்குவிந்தவாறேயிருக்கும் க- க1 – வ – என்ற கோடு பித்ததை அடுத்துக் கப சலனத்தைக் காட்டும்இருதயக்குவிதலிலும் விரிதலிலும் ஏற்பட்ட அதிர்ச்சியை மறைத்த ஓய்வு செய்கையைப்புரிந்து பாதுகாக்கிறது நோயுற்ற போது அழித்தல் செய்கையைச் செய்கிறது.

(மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்)

# 6 நாடியின் நிலமை.

**6.1. ஒரு நிமிடத்தில் நாடி நடக்கும் விதம்**

| | | |
|---|---|---|
| குழந்தை பிறந்தவுடன் | - | 140 நாடி |
| பாலியத்தில் | - | 120 நாடி - 130 நாடி |
| யௌவனப் பருவம் | - | (90 - 100) நாடி |
| சம்பூரண பருவ புருஷனில் | - | (70 - 80) நாடி |
| சம்பூரண ஸ்திரீகளில் | - | (75 - 80) நாடி |
| ஷீணப் பருவத்தில் | - | 75 |
| விருத்தாப்பியம் | - | (75 - 80) நாடி |
| உட்காந்திருக்கும் போது | - | 40 |
| நிற்கும் போது | - | 79 |
| படுத்திரக்கும் போது | - | 67 |

நோயாளியைப் படுக்க வைத்தாவது உட்கார வைத்தாவது நாடி பரீட்சிக்கலாம் (ஆத்ம ரட்சாமிர்தம்)

**6.2 தினத்தில் நாடியின் நிலமை.**

**6.2.1 அகஸ்தியர் (2000) எனும் நூலில் கூறப்பட்டவை.......**

- ‘‘உத்தம நாடி தானு மொடுங்கி நிலை பெறிற்
  பத்தி நின்று படிகள் முழங்கிடிற் - சித்தமாங்
  காலை வாதங் கடும்பகற் பித்தமா
  மாலை அய்ய வறிற் குரிதுப்பாரே

(அகத்தியர் 2000)

(பொ-ள்)- காலை நேரங்களில் - வாதநாடியும்
மத்யானத்தில் - பித்தநாடியும்
மாலையில்- கபநாடியும் அதிகரித்துக் காணப்படும்

**6.2.2 தினத்தில் நாடி நிலை மாறும் விதம் பற்றி ஆத்ம ரட்சாமிர்தம் இல் குறிப்பிடப்பட்டவை.......**

- ‘‘காலையில் வாத நாடி கடிகையிற் பத்தாகும்

மாலையாம் பித்தநாடி பகருச்சி பத்தாகும்
மாலையாம் சேத்துநாடி மதிப்புடன் பத்தாகும்
வாலையா மனோன்மணிக்கு வகுத்துமே தொகுத்ததாகும்’’

(ஆத்ம ரட்சாமிர்தம்)

உதயத்தில் - 10 கடிகை வரை- வாதம்
உச்சியில் - 10 கடிகை வரை பித்தம்
மாலையில் - 10 கடிகை வரை சிலேத்துமம் நடக்கும்

- காலமேசேத்தும நாடி கட்டுச்சிப்பித்த நாடி
மாலையில் வாத நாடி வகை தப்பிப் பிதறி நின்றல்
ஏலவோயிவர் கட்கெல்லா மியம் பினரிதுதா னென்று
நாலஞ் சில் மரண மென்று நன் முனியருளிச் செய்தார்

(பதினெண் சித்தர்கள் நாடிசாஸ்திரம்)

அகஸ்தியர் முனிவர் நாடி

- ''தெளிந்திட்ட காலை நாழி கைதான் பத்தும்
திறமையாய் வாதத்தின் சுரப்பதாகும்
பிழிந்திட்ட வுருமத்திற் பத்து நாழி
பித்தததி னாடியின் பிரதாபந் தானாம்
தெளிந்திட்ட வந்திதனிற் பத்து நாழி
சிலேட்டுமத்தின் செயலாகுங்கங்குற் போது
வழுந்திட்டவாத்தினாடியாகும்
வலிந்த நசி பத்தின் மேற் பித்த மாமே''

(யூகி வைத்திய சிந்தாமணி)

வாத நாடி - முற்பகலிலும்
பித்த நாடி - நடுப்பகலிலும்
கப நாடி - சாயங் காலத்திலும் அதிகரிக்கும்.
(நாடி சக்கிரம்)
"தினகரனுதஞ் சேரும் வாதம்
எனவாம் நண்பகல் இயலும் பித்தம்
அந்தி வரினே அடையவது ஐயம்
பிந்திரவின் முதற் பேசும் வாதம்
இப்படி நாடி பப்பத் தாங்கடி
கைப்படி செல்லுமென் றறிவீா் பிடகரே"

(நோய் நாடல் 01)

### 6.2.3 வைத்திய சிந்தாமணி எனும் நூலில் கூறப்பட்டவை

- காலை 10 நாழிகைவரையில் வாதத்தின் சுரப்பு, அதற்குமேல் பகல் 10 நாழிகைவரையில் பித்தத்தின் சுரப்பு, அதற்குமேல் அந்தி 10 நாழிகைவரையிவ் சிலேத்துமத்தின் சுரப்பு. இப்படியே இரவு 30 நாழிகைக்கும் கண்டறிக. என கூறப்பட்டுள்ளது

### 6.3 நாடிகள் வாரங்கள் தோறும் சிறப்புறும் சமயம்

**6.3.1** "சந்திர நாட்காலையில் வாதம்
நடந்திடில் சுகமெய்தும்"

"சந்திர நாளாஞ் சசிபுகற் புந்தி
சுக்கில பக்கச் சுரற்கு காலையில்
இறைவனியங்கில் எய்துஞ் சுகமே".

வாதம் - திங்கள் புதன் வெள்ளி சுக்கில பட்சத்து வியாழன் என்பவற்றில் காலை நேரத்தில் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.
பித்தம் - ஞாயிறு செவ்வாய் சனி கிருஸ்ணபட்சத்து வியாழன் என்பவற்றில் காலை நேரத்தில் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.

### 6.3.2 நாடிகள் மூன்றும் வாரங்களில் மாறி நடந்தால் உண்டாகும் பிணியின் தோற்றம்.

✓ வாத நாடி
- ஞாயிறு காலையில் சிறப்புற்றால் - சளி, இருமல், இரைப்பு
- செவ்வாய் காலையில் சிறப்புற்றால் - சுரம்
- சனிக்கிழமை காலையில் சிறப்புற்றால் - சீதளம், சன்னி
- கிருஸ்ண பட்சத்து வியாழன் காலையில் சிறப்புற்றால் - விலா முதல் தேகமெல்லாம் வலியுண்டாகும்.

✓ பித்த நாடி
- திங்கட்கிழமை காலையில் சிறப்புற்றால் - சலதோடம்
- புதன்கிழமை காலையில் சிறப்புற்றால் - நீரேற்றம், தலைவலி
- வெள்ளிக்கிழமை காலையில் சிறப்புற்றால் - கண், காது நோய்
- சுக்கில பட்சத்து வியாழன் காலையில் சிறப்புற்றால் - தாபசுரம், தலைவலி.

✓ ஐய நாடி - காலையில் சிறப்புறுவதாக விபரம் கூறப்படவில்லை.

### 6.4 நாடிகள் மாதங்கள் தோறும் சிறப்புறும் சமயம்

❖ "மூவரு மீறி முனிவு கொளாமல்
தத்தம் நிலையில் தன்னரசியலும்
கால வரைதனைக் கிளறக் கேண்மின
ஆடியாதியாய் ஐப்பசி ஈராய்
அனலமதற் கோரரசியல் காலம்
மீன் முதலானி வீறுகொள் மந்திரி
தேள் முதன் மாசி சேனாபதிக்கே".

❖ "கடக முதல் துலாம் வரையும் வாதமாகும்
கண்ணாடியைப் பசியு மதுவேயாகும்
விடமீன முதல் மிதுனம் பித்தமாகும்
விரை கமழ் பைங்கூனி ஆனியது வேயாகும்
திடமான விருட்சிகமுதற் கும்பஞ் சேத்துமஞ்
சேர்ந்த கார்த்திகை மாசியது வேயாகும்
நடை மேவும் வாத பித்த சேத்துமந்தானும்
நலமாக மாதமுதல் நடக்குங் காணே".

(பதினெண் சித்தர் நாடி)

(பொ.ள்) -

- ✓ வாதம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன
கடகம் முதல் துலாம் வரை (ஆடி - ஐப்பசி)
- ✓ பித்தம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன
மீனம் முதல் மிதுனம் வரை (பங்குனி - ஆனி)
- ✓ கபம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன
விருச்சிகம் முதல் கும்பம் வரை (கார்த்திகை - மாசி)

### 6.5 நாடி பார்க்கும் மாதமும் காலமும்:

(எந்தெந்த மாதங்களில் எந்தெந்த நேரங்களில் நாடியைக் கணிப்பது உத்தமம்)

**6.5.1**

❖ "சித்திரை வைகா சிக்குஞ்
செழுங்க திருதயந் தன்னில்
அந்தமா மானியாடி
ஐப்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்திற் பார்க்க
மார்கழி தையுமாசி
வித்தகன் கதிரோன் மேற்கில்
விழுகின்ற நேரந் தானே".

❖ "தானது பைங்கூனிக்குந்
தனது நல்லா வணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும்
மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்ற மூன்று நாடித்
தெளிவாகக் காணுமென்று
கானமா முனிவர் சொன்ன
கருத்தை நீ கண்டு பாரே".(அகத்தியர் நாடி)

(பொ.ள்) –

✓ சித்திரை, வைகாசி - சூரியோதயத்திலும் - (6 - 6.30)

- ✓ ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை - மத்தியானத்திலும் - (12 - 0.01)
- ✓ மார்கழி, தை, மாசி - சூரியாஸ்தமனம் - (6 - 6.30)
- ✓ பங்குனி, ஆவணி, புரட்டாதி - இராத்திரி.

### 6.5.2 வைத்திய சிந்தாமணியில் நாடி பார்க்குங்காலமாக கூறப்பட்டுள்ளவை

சித்திரை வைசாசி முதலிய மாதங்களில் உதயத்திலும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை முதலிய மாதங்களில் மத்தியானத்திலும், மார்கழி, மாசி முதலிய மாதங்களில் மாலைப்பொழுதிலும், பங்குனி, ஆவணி, புரட்டாசி முதலிய மாதங்களில் இரவுகாலத்திலும் பார்க்க நாடி தெளிவுறத் தோன்றும்.

### 6.5.3 நாடி தர்ப்பணத்தில் கூறப்பட்ட நாடி ஞான சமயம்…

நாடியின் நடையைப் பரீட்சைபண்ணி யறிவதற்குத் தகுந்த காலங்கள் மூன்று; அவை, பிராதகாலம், மத்தியானகாலம், சாயங்காலம், என்பனவாம். காலையில் மலசல விமோசனஞ் செய்து கொண்டபின் எவ்விதமான நிலைமையை யுடைய தேகிகளுக்கும் நாடி பார்த்து மருந்து கொடுப்பது உத்தமம். மத்தியான வேளையில் உணவுகொள்ள முன்பும், சாயுங்காலதிற்குரிய அஸ்தமயன நேரத்திலும் பரீட்சை செய்யவேண்டியது. பரீட்சை

பண்ணப்படுபவனின் மலசல விமோசனா சௌசசுத்தி முதலியவைகளைக் கவனிப்பதுடன் திரிகால தோஷாதிக்கிரம ரகிதங்களையும் கவனிக்க வேண்டியது. சுகதேகருக்கு நடுப்பகலிற் பித்தம் அதிகமாய் நடக்கிறது. ஆனபடியால் அந் நேரத்தில் அவரை ரோகியென்று நிச்சயிப்பது முறைமையல்ல.

### 6.5.4 நாடி பார்க்கும் காலமாக வயித்தியரத்தினச் சுருக்கம் கூறுவது

காலமே சேத்தும நாடி கட்டுச்சி பித்தநாடி
மாலையில் வாதநாடி வகை தப்பிப் பதறிநின்றால்
ஏலவே யிவர்கடகெல்லா மியம் பினாரி துதானென்று
காலஞ்சின்மரணமென்று நன்முனியருளிச்செய்தார்

சித்திரை வைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமர் மானியாடியைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்கமார்கழி தையுமாசி
வித்தகன் கதிரேன் மேற்கில் விழுகின்ற நேரந்தானே
தானது பங்குணிக்குந்தன துநல்லா வணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கு மற்றை ராத்திரியிற் மார்க்கத்
தேனென்று மூன்று நாடித் தெளிவாகக் காணு மென்று
தானமாமுனிவர் சொன்ன கருத்தை நீகண்டு பாரே

# 7. நாடியும் சுவையும்

**சுவைகளினால் (ரஸங்களினால்) ஏற்படும் மாறுதல்கள்.**

| **7.1** | **பிரகோபம் செய்வன.** | **சமனம் செய்வன.** |
|---|---|---|
| 1.வாதம் | கார்ப்பு | இனிப்பு |
| | கைப்பு | புளிப்பு |
| | துவர்ப்பு | உப்பு |
| 2.பித்தம் | கார்ப்பு | இனிப்பு |
| | புளிப்பு | கைப்பு |
| | உப்பு | துவர்ப்பு |
| 3.கபம் | இனிப்பு | கார்ப்பு |
| | புளிப்பு | கைப்பு |
| | உப்பு | துவர்ப்பு |

(நாடி சக்கிரம்)

**7.2அங்காதிபாதத்தில் உணவுடன் தொடர்புபடுத்தி நாடி கூறப்பட்டுள்ளது…**

பாவையே நீரண்ணாந்து பருகிடிச் செவியிரண்டும்
நோவதாய் மந்தம் பற்றி நுடங்கிடும் வியாதி சேரும்
நாவினால் கறுவித்துண்ணில் நண்ணிடும் காசரோக்கி
வாவு மீன் கறிகளுண்டால் அதிபித்தம் வயங்குமாமே

(பொ-ள்)

தண்ணீரை அண்ணார்ந்து குடித்தால் செவிகள் இரண்டும் கேட்கும் தன்மை குறைந்து பலவித செவி நோய்கள் வந்து சேரும் நாவால் உறிஞ்சிக் குடித்தால் பலவித சிலேற்பன நோய்கள் வரும் மீன்கள் சாப்பிட்டால் கூடுதலான பித்தம் நடக்கும் என்பதாகும்.

வயங்கு சீதளவூண் கொள்ளில் வாதம் வந்தித்துக்காணும்
இயங்கிய கோழியுண்டால் எழும்பிடும் பித்தம் என்க
நயங்கொள் நெய், மோர், பாலு ண்டால் நடந்திடும் வாதநாடி
பயங்கொள் நற்பழவற்கங்கள் பருகினும் பருக்கும் வாதம்

(பொ-ள்)

குளிர்ந்த உணவுகளையும் பசுநெய், மோர், பால் இவற்றையும் நல்ல பழவகைகளையும் உண்டால் வாதநாடி பெருத்துக் காணும் கோழி இறைச்சி சாப்பிட்டால் பித்தநாடி எழும்பிக்காணும் என்பதாகும்.

## 7.3 வயித்தியரத்தினச்சுருக்கத்திரல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்பு நாவிலேறும்
ஏற்றியகசப்பு மீறிலெழுப்பிடும் பித்தமாகும்
மாற்றிய புளிப்பு மீறில் வந்திடும் வாதமாகும்
சேத்துமந்தன் னிற் பித்தந்தீக் காற்று வாதமாமே

## 7.4 நாடி தர்ப்பணத்ததில்…

### நாடித்துவார போசன ஞானம்

உண்ணும் உணவுகள் குடலிற் சென்று பக்குவமாகும் பொழுது, அந்தப் பதார்த்தங்களிற் சில மதுரரசமாகவும், சில அம்ல ரசமாகவும், சில கடுரசமாகவும் மாறுதலடைவதுண்டு; அவைகளின் திரவமாக்கப்பெற்ற சுத்தசத்தின் நுண்ணிய அம்சம், நரம்பின் துவாரமார்க்கமாகப்போய் உறுப்புக்களைப் போஷணை செய்ய, அவற்றை அனுபவிக்கிற தேகம் பெறுகிற குணநாடியில் இலக்ஷணத்தை அறிதல்.

எண்ணெயும, வெல்லமும் நாடி நிலைக்குப் பலமுள்ள விதி விகிதமான பலனை உண்டாக்கிறது; நாடி உறுதியுடன் புஷ்டியாய் நடக்கிறது. மாமிசபோசனம் நாடியை ஒரு தண்டுக்குச் சமானமாக அசையச் செய்யுங் குணத்தை உண்டாக்கிறது. கீரம் சாந்தமான வேக நடையின் குணத்தை உண்டாக்கிறது. நடை சபலகெதி, துாதம், பீநிஸ் நாடிக்கும் மந்தகதியான இயக்கத்தைக் கொடுக்கிறது. மதுரச்சுவையான உணவின் குணநாடி மண்டுகம் போன்ற நடை.

முற்றிய வாழைக்காய், மோதகம், வடை முதலாய எண்ணெய் வகையிற் நெய்த பருப்படையற் பலகாரங்களும்,ரூக்ஷை குணமான பதார்த்தங்களும், சுஷ்கத்திரவிய போசனங்களும்; வாத, பித்த ரோகங்களின் குணநாடியின் நடையைக் கொண்ட இலக்ஷணத்தை அளிக்கிறது. அது தாழ்ந்த வருணமாய்ப் பொருத்ததில்லாத பிரமாணமாகத் திரிகிறது.

### இரசஞானம்

மதுரமான சுவையையுடைய இரசத்தின் செயல், நாடிக்கு மயிலின் நடைக்கு உவமையான குணத்தைப் பிறப்பிக்கிறது. திக்தரசத்தை உண்பதினாலுண்டாகும் குணநாடியின் நடைக்குப் பூலதை என்னும் செந்தின் நடையை உவமையாகக் கூறலாம். திக்தத் திரவிய பக்ஷண நாடியின் நடை தூலகதி, புளிப்புச் சுவையான ரசம் உஷ்ணமான குணத்தையும், நாடி நடையை பலநடைக்குச் சமானமாகவும் உண்டாக்கிறது. அம்லபதார்த்த ஆகாரகுணநாடி மண்டூககதி. உறைப்பு, கார்ப்பு, அழற்சி, முதலாய

சுவையையுடைய காரமான இரசம் பிரமரச் செயலின் வடிவுபோன்ற நடையிலக்ஷணத்தை நாடியிற் காட்டுகிறது.

கஷாயரசத்தினால் நாடி கடினத் தன்மையாயும், தெளிவற்ற சுத்த நடையாகவும் நடக்கிறது. உவர்ப்புச் சுவையான இரசத்தின் செயல் நாடிக்குக் கபடமற்ற தீவிரநடையை உண்டாக்கி இரத்த ஓட்டத்தை யொழிக்கிறதற்குச் சலனதாரையை வளைகிறது் இந்த வழிவகையில் நாடி இரண்டின் சேர்க்கையான குணம் போலவும், மூன்றின் சேர்க்கையான குணம் போலவும், சதுர்யோக இலக்ஷணம் போலவும் பலவிதமாய் நடக்கிறது. நிதானமான நெறி கருப்பாசயத்தில் நிகழுகிறது. துண்டித்த பின்னமான இரசத்தின் குணம் சலதாரையைச் சூழ நடக்கிற தன்மை ஒருவேளை ஸ்திரிபுருஷ சங்கமநாடி வித்தியாசம் வித்தியாசமான இலக்ஷண நடையை உருபிகரித்து அர்த்தத்தை கொடுக்கிறதென்றும் சொல்லலாம்.

புளிப்புச் சுவையான இரசங்களினாலும், மிஷ்டை முதலிய மதுராமிலவூணி னிரசங்களினாலும் நாடி சீதகுணமான தன்மையை அடைகிறது. அவல், வறல் முதலிய பிருஷ்டத் திரவியங்களினிரசம் நாடிக்குத் திடமான மந்த நடையைப் பிறப்பிக்கின்றது. குஷ்மாண்டமும், மூலகம், அக்கோடம் முதலிய கந்த வருக்கங்களினிரசமும், நாடியின் நடை இரத்தோட்ட காரணங்களுக்கு அதிக ஆறுதலான குணத்தைக் கொடுத்து லோலிதமாகிறது. சாகம், புஷ்பம் முதலிய மஞ்சரி வருக்க இரசங்களும், அரம்பைக் கனியினிரசமம் நாடிநரம்புகளுக்கு இரத்தம் பூரணமாகிற குணத்தையீகின்றன.

மாம்சவருக்க இரசத்தினால் நாடி உறுதியுடன் ஆறுதலாய் நடக்கிறது. துக்தம் குளிர்ச்சியையும், பலத்தையும் உண்டாக்கிறது. போஞ்சி, கொத்தவரை போன்ற ஓஷதி வகைகளின் பிஞ்சுகளினாலும் நாடி சீதகுணமாய் நடக்கிநது. நெய், வெல்லப்பர்கு, ரவை முதலிய பிஷ்டபதார்த்தங்களினால் நாடியசைவற்ற மந்தநடை கொண்டு தோற்றுகிறது.

கடி, பதநீர், ஸிரிகண்டம் முதலிய உணவின் குணநாடி கடினமானநடை, லட்டு, ஸூகாரம் முதலிய ஆகாரவியல்நாடி, மிருது நடை, திரவப்பதார்த்தம், கர்க்கசம் அது போல இருதயத்திலும் கடினத்தன்மையை எடுக்கிறது. நாடி ஆரம்ப காரணத்திற்கு மிருது கடினமான தத்துவத்ததைக் கொடுத்து இரட்டித்த இயல்புடைய நாடியைப்போல் நடக்கச் செயகிறது.

பிஷ்டம் என்பது – வெல்லம் பால் நெய்யுடன் மாவகையுஞ் சேர்த்துண்டாக்கின் ஒருவகையுணவு.

**பச்சைக்கர்ப்பூரம் பாக்குடனருந்தில்**
**முச்சுரநாடி முயன்று நடக்கும்.** என்பது நாடிசூத்திரம்.

**உபவாசகன் நாடியின் குணம்**

உணவின்றிருப்பவனுக்கு நாடி க்ஷீணகதி போலவும், வேகமாய் நடந்து சமைந்தவனாடி போலவும் தோற்றும்; ஸ்திரீ சம்போகம் செய்தவனாடியுமப்படி. ஆனால் பின் கூறப்பட்டவனுக்கு வேகமான நடை சலன துவாரத்தையடைகிறது.

# 8. நாடிகளின் வகைகள்

**8.1.1பஞ்ச நாடி**

''சாற்றுவோன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென்க
ஏற்றமுள்ளநடுவிரல் தான் பித்தமாகும்
இசைந்ததொரு பவுத்திரமே வையமாகும்
தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி
சுற்றமுள்ள குருநாடி யைந்துட்சேரும்
மாற்றுமே குருநாடியைந்துட்சேர்ந்து
வளர்ந்துநிற்கும் பெரிய வண்மை தானே''

(அகத்தியர் புராணம்)

**8.1.2**

''சொல்லுவேன் ஐந்தாம் விரல் பூதநாடி
சுகமுடன் நாலாம் விரல் வாதமென்க
எல்லுவேன் மூவிரலாம் பித்தமாகும
எழிலான இருவிரலையமாகும்
தொல்லுலகில் வழங்குகின்ற சிறுவிரல்தான்
சுத்தமுள்ள குருநாடி யென்று சொல்வார்
மல்லுமொரு நாடிகள் தானொன்றுக்கொன்று
வளர்கின்ற பின்னலின்றன் வன்மைபாரே''(நோய் நாடல் 1)

**8.1.3**

"ஐவிரலைந்து நாடியது
செய்யும் வகையைக் கேளீர்
மெய் விரலொன்று வாத மொழி
விரலொன்று பித்தம்
நெய் நடுவிரலிலே சிலேத்துமம்
நேர் விரல் பூதநாடி
மை சிறு விரலே சொன்ன பூதநாடி
வகுத்தனர் வால்மீகர் தானே."(வால்மீகர் நூல்)

8.1.4

"தூண்டிடவே பெருவிரல் தான் பூதநாடி
தொந்தமாம் ஆள் தூண்டி வாதமென்க
அண்டிடவே நடுவிரல் தான் பித்த நாடி
அணிவிரல் பௌத்திரந்தான் சேத்தும நாடி
பூண்டிடவே சிறுவிரல் தான் பூத நாடி
பூட்டினார் குருநாடியைந்து கோர்வை
நீண்டிடவே யிப்பின்னால் யார் தான் காண்பார்
நிறைந்த பரிபூரணத்தோர் காண் பார்தாமே."

(வைத்திய சார சங்கிரகம்)

(பொ.ள்) - பஞ்சநாடி என்பது

- பெருவிரலில் உணர்த்தும் துடிப்பு பூத நாடி
- ஆழ்காட்டி விரலில் உணர்த்தும் துடிப்பு வாதம்
- நடுவிரலில் துடிப்பு பித்தம்
- அணிவிரல் துடிப்பு சிலேத்துமம்
- சிறுவிரல் துடிப்பு பூத நாடி
  என்னும் ஐந்து நாடிகளை ஐந்து விரல்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.
- "குரு நாடி" இவ் ஐந்துக்கும் நடுவில் அமைந்திருக்கும்.

**8.1.5 அகஸ்தியர் பரிபூரணம் -400 ல் பஞ்சநாடிக் கிருப்பிடமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது**

**-ஶ்ரீ**

"சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி சங்கையில்லா ஆள் தூண்டி வாதமென்க, ஏற்றமுள்ள நடுவில்தான் பித்தமாகும். இசைந்ததொரு பவுத்திரமே யையமாகும். தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி குக்கமுள்ள குருநாடி யைந்துட்சேரு, மாற்றுமாகுருநாடி யைந்துட்சேர்த்து வளர்ந்து நிற்கும் பேர்பெரிய வன்மை தானே.

பேர்பெயர் குருநாடி குணமேதென்னிற் மிரண்டுவரும் வாய் வுரத்திவட்டைமேல், சீரறியவாய்வுமிகு மிருமற்றேன்றுந் தினவு சொறிமிகவும் வருந் தேகம்வாடுஞ், சூரறியபித்தத்தி லாமை போலத் தோன்றிலேசுரமிப்புச் சுரத்துவாய் நீர், கார்பெருகி வருவதுபோல் வியாதி தோன்றுங் கதித்திடில் நீர் கட்டுஞ் சிலேத்துமத்திற்போமே.

சேத்துமத்திற் குருநாடி சிங்கம்போலே சீறிநிற்கிலதின் குணந்தான் சந்திதோன்றும், ஆற்பணத்தை யூழுருவத்தமருமாகில் அசாத்தியமாம்ரணதுறி தப்பாதப்பா, காற்றெனவே குருநாடி குன்றிப்போகில் கழியும்

வயிற்கடுப்பெடுக்குங் கைகால் வீங்கும், யேற்பனவுமில்லை திட்டஞ்சொன்னோ மிசைந்த குரு நாடியதை யிருத்திப்பாரே.

பாரப்பா குருநாடி பக்கம்பாலில் பாரித்த சிலேத்துமந்தானெதிரே சேரும், கூரப்பா குருநாடி நேரே நிற்கில் குற்றமில்லை. வாதபித்த மிரண்டு சேரும், தாரப்பா குருநாடி பின்னே வாங்கில் தப்பாதே சாத்தியங்கள் தானுண்டாக்கும், காரப்பா உடலுக்கு ளுயிராய் நின்ற கருவான கருநாடி யொன்று காணே. ஒன்றுக்கு மெட்டாத நாடி நேர்மை யூடுருவித் தானிருக்கு முண்மை கேளீர், வண்டுகள் தான் மதுவருந்து நேர்மைபோல வாதபித்த சிலேத்துமத்தின் மதுவையுண்ணும், என்றைக்கு வாதபித்த நழுவே நிற்கில் ஏறுவதுங்குறைவது மில்லையப்பா, கன்றுக்குப் பாலிறங்கும் பருவைப்போல காத்திருக்குங் குருநாடி காலைப்பாரே.

குருநாடி நிலையறியாக் குருடரெல்லாங் கூட்டமிட்டு சாத்திரத்துக்குவமை சொல்வார், மறுநாடிவாத பித்த சிலேத்ம மூன்றின் மத்தியமென்றிதை யறிவார் வார்த்தை சொல்வார், கருநாடி குருநாடி யாகக்காணும் கைம்முறையாய் குருதொட்டுக் காட்டத் தோன்றும், பெருநாடி சாத்திரத்தின் மயங்கிடாதே புலத்தியர் குருநாடி பின்னம்பாரே.

பார்த்தப்பா வாதத்தை நடுவே பார்க்கிற் பண்டது போன் மது வுண்ணு மத்தியத்தில், போற்றப்பா மூவிலுமுருவைத்தாண்டி பூரணமாய் மூலமுதலுருவிப் பாய்ந்து, சாத்தப்பா விசை நரம்பினூடு சேர்ந்து சந்திரமண்டலமேவிச் சார்ந்துயின்னு, தாற்றமுற்ற குருநாடியெங்குஞ் சுற்றி நடுவில் வரும் நேர்மைகளை நாடிப்பாரே.

பம்பரம்போற் குருநாடி கிறுகிறென்று பற்றிநிற்கும் வாத பித்த நடுவிலேதான், அம்பரம் போற் குமுறியெழும் வாதபித்த மையலென்றநாடி முதலாடி யோடித், கம்பமுடன் மண்டலமுங் கண் மூன்றுஞ் சுற்றிக் கத்திரிக்கோன் மாறலெனக் கட்டிச் சேர்ந்து, தம்பமுடன் வாதபித்த நடுவிலேதான் தாமதம் போலாடி நிற்கும் குருவிதாமே.

குருநாடி வாதமது நிற்கும்போது கோழியுடன் அன்னமயில் குறியாமென்ன, வருநாடி பித்தத்தினிற்கும்போது கோழியுடன் அன்னமயில் குறியாமென்ன, வருநாடி பித்தத்தி னிற்கும் போது தெரித்து விடும் விட்டிலைப் போற் றெளிந்துகாளும், பொருநாடி சாத்திரத்திலலைய வேண்டாம் பிராணகலை தனை யறிந்துமரணம் பாரே”

## 8.2குருநாடி

**குரு நாடி இருக்கும் இடம்**

“பாரப்பா குருநாடி யைந்துக்கு நடுவாம்
பாரி நிற்கும்வரலாறு தன்னைக் கேளு
சீரப்பா பித்தத்தின் முன்னே நிற்குந்
தசநாடி பத்துக்குந் நிறமாய் நிற்கும்
ஏரப்பா வாதமென்று செல்வார் மூடர்
இருபத்தியங்கே பார்ப்பளவில் வேறாமல் நிற்குந்
தாரப்பா கொண்ட குரு நாடி நேர்மை
தனையறிய வகையுனக்குச் சாற்றுவேனே.”

(அகத்தியர் பரிபூரணம -400)

“குரு நாடி நிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டு சாத்திரத்துக் குவமை செல்வார்
மருநாடி வாத பித்த சிலேத்ம மூன்றின்
மத்தியமென்றிதையறிவர் வார்த்தை செல்வார்
கருநாடிக் குருநாடி யாகக் காணும்
கைம் முறையாக் குரு தொட்டுக் காட்டத் தோன்றும்
பெருநாடி சாத்திரத்தில் மயங்கிடாதே
புலத்தியா குருநாடி பின்னால் பாரே.”

“பார்த்தப்பா வாத பித்த நடுவே பார்க்கில்
போற்றப்பா மூவிரலு முருவித் தாண்டிப்
பூரணமாய் மூலமுதலுருவிப் பாய்ந்து
சாற்றப்பா விசை நரம்பினூடே சேர்ந்து
சந்திர மண்டல மேவிச் சார்ந்து பின்னும்
நாற்றமுற் குருநாடி யெங்குஞ் சுத்தி
நடுவில் வரும் நேர்மை தனை நாடிப்பாரே.”

(அகத்தியர் பரிபூரணம்)

‘‘பம்பரம் போற் குரு நாடி கிறுகிறென்று
முற்றி நிற்கும் வாத பித்த நடுவிரலே தான்
ஆம்பரம் போற் குமிறியெழும் வாதபித்த
ஐமயமென்ற நாடி முதலாடி யோடிக்
கும்கமுடன் மண்டலங்காண் மூன்றுஞ் சுற்றிக்
குத்தரிக் கோன் மாறலெனக் கட்டிச் சேர்ந்து
தும்பமுடன் வாதபித்த நடுவிலே தான்
துமரகம் போலாடி நிற்குங் குருவிதாமே’’

(பொ.ள்) - எல்லா சரீரங்களிலும் சூட்சுமமாகச் சொல்கிற’’ ஜீவநாடி என்ற ஒரு நாடி இருக்கிறது. அது நெல்லினளவாக இருந்த போதிலும் தெளிவாகப் புலப்படக்கூடியது இது ஒருவருடைய ஆரோக்கியம் வியாதி இவற்றின் நிலமையைத் தெளிவாகக் காட்டக்கூடியது வைத்துப் பார்க்கும் போது இந்தநாடி ஆட்காட்டிவிரலின் நுனியில் மட்டும் கண்டறியமுடியும் வாதம் பித்தம் நடுவே இருக்குமென்பர்.

## 8.3 பூத நாடி

### 8.3.1

‘‘போகுமப்பா வாதமென்ற நாடியொன்றாய்
புகழாக தனித்துநின்றால் பூதநாடி
ஆகுமப்பா அரணைவால் போல் துடித்துக்காணும்
அகன்று விடுவாயப்பா திரேகங்குத்தும்
தாருமடா சுக ஜன்னி மார்க்கமாகும்
தானவனதம் நோக்கி நின்றால் சாகான் பாரும்
பாகுமடா சிலேத்துமந்தான் சிதாரித்தாக்கில்
பதையாமல் தானிருப்பான் பரிந்துகேளே’’

(அகத்தியர் இரத்தினச்சுருக்கம்)

மேற்குறிப்பிட்ட மேற்கோள்களின் படி வாத பித்த கப நாடிகளுக்கு முன்னும் பின்னுமாக உணரப்படும் நாடிகளுக்கு பூத நாடி என்று பெயர்அவ்வாறாக உணரப்பெற்றால் பூதநாடி பெருவிரலிலேனும்,சிறுவிரலிலேனும் அல்லது இரண்டு விரல்களிலேனும் உணரப்படுபவைகளை ‘‘பூதநாடி ‘‘ எனக் கூறலாம்.

### 8.3.2

அங்காதிபாதத்தில் பூதநாடி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது…..

சாற்றுகல்லுத் தனையோங்கி யெறிதல் போலுஞ்
சக்கரஞ்செக் குச்சுற்றுந் தன்மை போலும்
ஊற்றமுறுங் குதிரைகடாப் பாய்தல் போலு
மோங்கியடித் திடவெழும்பும் பந்தைப் போலும்
ஆற்றலுட னுயர்ந்தேறிக் குறித்தல் போலு
முடங்காமற் படபடெனப் பித்தமோனிக்
மாற்றவரி தாம் பூத நாடி யென்றே
வாகட ரெல்லா மூரைத்தார் வையமீதே

(பொ-ள்)

கல்லை ஓங்கி எறிவது போலவும், செக்கினுடைய முறுக்கைப் போலவும், குதிரை கிடாய் பாய்வது போலவும். அடித்த பந்து எழும்புவது போலவும், உயரப் பாய்வது போலவும் பித்த நாடியானது ஓடுமானால் பூத நாடியென்று முன்னோர்கள் சொன்னார்களென்பதாகும். (அங்காதிபாதம்)

**8.3.3**

பித்தநாடியானது கல்லெறிதல்போலவும், ஆட்டுக்கடா பாய்ச்சல்போலும், செக்கிலிட்ட உலக்கைத் திருகலைப்போலும், மூஞ்சூறின் சீறலைப்போலும்,பந்தடிபட்டு கிளம்புதலைப்போலும், ஏற்றத்தி லேறி விழுத்தல் போலும் தோற்றுமாயின், பூதநாடி யெனப் புகர்வர்

(வைத்திய சிந்தாமணி)

**8.4**

**8.4.1** அங்காதிபாதத்தில்…**விகார நாடி கெர்ப்ப நாடி**

அடுத்தவரால் வாளைமச்ச மெனப்பாய்ந் தேறி
யானையின் மும்மதம் போலவார்ப் பரித்துக்
கடுத்து நிமிடத்தில்விட்டு நிற்கு மாகிற்
காமவிகா ரங்கொண்டோர் நாடி யாகும்
எடுத்திடுபோ சனஞ்செய்தோர் நாடியாமை
யியக்கம்போன் மெத்தனவா யிருக்கு மென்ப
விடுத்தபுழு வெறும்பதுபோன் மெல்ல வூர்ந்தான்
மெல்லியர்க்குக் கருப்பமென விளம்ப லாமே

(பொ-ள்)

வரால் மீன், வாளை மீன் இவைகளைப் போல் பாய்ந்து மதயானையின் வெறியைப் போலத் தொடங்கிக்கெதியில் அந்தநிலைமாறும்படியாக ஓடுமேயானால் அது காமநோய் கொண்டவர்களுடைய நாடியாகும். உண்டவுடன் நாடி நடை ஆமை நடைபோல மெதுவாகவிருக்கும். புழு, எறும்பு இவைபோல நாடி ஊர்ந்து நடக்குமானால் பெண்களுக்குக் கருத்தரிக்கின்றதென்று சொல்லலாம் என்பதாகும்.

**8.4.2** வாதநாடி எறும்பு ஊர்வதைப்போல ஊர்ந்திடினும் அல்லது ஆமை அசைவதைப்போல அசைந்திடினும், அல்லது பஞ்சியைப் போல் மெத்தென மெதுவுற்றிருந்திடினும் கருப்பநாடி யென்பர்

### 8.5 பூப்புநாடி

விளம்புகின்ற கின்னரத்தின் மெலிவதாகி
மெள்ளவே நீரோட்ட மாயி ருக்கில்
இளம்பருவத் தன்னநடை மயிலஞ் சாய
லேந்திழையார் பூப்பான நாடி யாகும்
உளம்பரிவாம் நீர்படிந்தோர் நாடி மெத்த
வுள்ளடங்கிப் புழுத்தெறிதாலென்ன வோடும்
தளம்பிவழி நடந்தோர்க்குங் களைத்தோ ருக்குந்
தருச்சுற்றுங் கொடியெனவே சாற்ற லாமே

(பொ-ள்)
வீணையோசை போலவும், மெல்லிய நீரோட்டம் போலவும், நாடி ஓடுமானால் இளம்பெண்களுடைய மாதவிடாய்காலமாகும். நீராடியவர்களின் நாடியானது அமர்ந்து புழுத்தெறிப்பது போல நடக்கும் வழிநடந்தவர்களுக்கும் சோர்வுற்றவர்களுக்கும் நாடி மரத்தைச் சுற்றிப் படருகின்ற கொடியைப் போலவிருக்கும் என்பதாகும்.(அங்காதிபாதம்)

### 8.6 மந்த நாடி

பாடியதாயுறு மிந்தவட்டதனாப்
பரீட்சைதனைத்தெளிவாகப் பார்த்து நீயும்
கூடியதோர் நாடிகளின் தொந்திப்பாகும்
குறிகுணங்களனைத்துமே குறிப்பா்யக் காணு
நாடிய சன்னிக்கு மந்தமாகி
நடுங்கியே பேன்போல நடந்து மெல்ல
ஆடிய பம்பரம் போற் கழன்று பின்னி
யரணைவாலறுதி போலக்குறைந்து போமே.

(பொ-ள்)
சொல்லப்பட்ட அட்டவதானப் பரீட்சையை முடித்த பின்பு நாடிகளின் தொடர்புகளையும்,அவற்றின் குறிகுணங்களையும் கண்டு தெளிந்து கொள்வாயாக. மேலும் சன்னியென்னும் நோய்க்கு வாதநாடியானது குறைந்து பேன் போல மெல்ல நடந்து பித்தநாடியுடன் சேர்ந்து பம்பரம் போலச் சிலேற்பன நாடியுடன் சேர்ந்து அரணையின் வாலைப் போலக்குறைந்து கொண்டு போகும் என்பதாகும்.

(அங்காதிபாதம்)

### 8.7 தச நாடி

**8.7.1**

1. **இடகலை** - வலக்கால் பெருவிரல் நின்று கத்தரிக்கோல் மாறலாக இடதுமூக்கைப் பற்றி நிற்பது
2. **பிங்கலை** - இடக்கால் பெருவிரலில் நின்றுகத்தரிக்கோல் போல மாறலாக வலது மூக்கைப் பற்றி நிற்பது
3. **சுழுமுனை** - மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் நடுநாடியாய் சிரசளவு முட்டி நிற்பது.
4. **சிருவை**– உண்ணாக்கில் நின்று சோறு தண்ணீர் இவைகளை விழுங்கப்பண்ணுகிறது.
5. **புருடன்** - வலக்கண்ணளவாய் நிற்பது
6. **காந்தாரி** - இடக்கண்ணளவாய் நிற்பது
7. **அத்தி**– வலக்காதளவாய் நிற்பது
8. **அலம்புடை**- இடக்காதளவாய் நிற்பது.
9. **சங்குனி**– குறியளவாய் நிற்பது
10. **குரு**– அபானத்தளவாய் நிற்பது

(நோய் நாடல் - 1)

குறிப்பு: யூகிமுனி புருடன் என்ற நாடியை வைரவன் என்கிறால். சில நூல்களில் குகுவை குரு என குறிப்பிடப்பட்டுள்ளது

### 8.7.2 நாடி சக்கரம் கூறும் தசநாடிகள்

1. இடை
2. பிங்கலை
3. ஸீ'ம்னை
4. குாந்தாரி
5. ஹஸ்தபீஜம்

6.பூஷா
7.பயஸ்ஷநீ
8.அலம்பு
9.லகலம்குஹ்
10. சங்கினி

**குருநாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் குணம்.**

1. குருநாடி வாதத்தில் அட்டை போல புரண்டுவரில் வாய்வு மிகும். இருமல், சொறி,தினவு இவை மிகுதியுண்டாகும்

2. குருநாடி பித்தத்தில் அன்னம் போல் நடக்கில் - சுரங்காயும்
வாய்நீர் - சுழற்றும்
வியர்க்கும் நீர் கட்டுப்படும்கை காலோயும்

3. குருநாடி சிலேத்துமத்தில் சிங்கம் போல் சீறி நிற்கில் - சன்னி

4. குருநாடி சிலேத்துமத்தை ஊடுருவி வருமாகில் அசாத்திய மரணக்குறி

5. குருநாடி மொதத்தில் குன்றிப்போகில் வயிறு - கழியும்
கடுப்பெடுக்கும் கை –கால் வீங்கும்

6. குருநாடி பக்கம்பாயில் -சிலேத்துமம் எதிரே மோதும்
அதாவது அதிகரிக்கும்
7. குருநாடி நேரே நிற்கில் வாத பித்தம் ஜயம் மூன்றும் சேரும்
8. குருநாடி பின் வாங்கில் - அசாத்தியங்களுண்டாகும்
9. குருநாடி ஜயத்தில் விட்டிலைப்போல் துடிக்கில் - மரணமாகும்.

**8.8 நாடி தர்ப்பணத்தில் சொல்லப்பட்டவை….**
**ஜீவாதாரமான நாடி**

ஆய், பெண், அலி எனப் பால் வேற்றுமையுடைய மக்களுக்கு பாணி, பாதம், கண்டம், கண், நாசி, செவி, சிங்யுவை, அந்தபாகம், யோனி லிங்கங்களிலும், வலமிடப்பாகமாகப் போய்க் குணங்களைக் கொடுக்கிற நாடிகள் பதினாறும் அவைகள் ஜீவாதாரமான வுணர்ச்சி கருவிகளை யருட்டுகிற நாடிகள்.

சூரியன் நாடி உத்தமமான இலட்சணத்தைப் பெற்றிருக்கிறவருக்கு வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் இனம்மாறி எடுக்கிற நாடியைத் தேகமடைகிறது. இது ஜீவாதாரமான உறுப்புக்களைப் போஷிக்கிற பதினாறு நாடியையும் பின்பற்றுகிறது. தேசன், தேவி என்னும் இரண்டும் அறியுமறிவு இங்கே இல்லை.

**8.9 கண்ட நாடியின் குணம்**

கண்டநாடி, ஆகந்துகச்சுரம், தாகம், ஆயாசம், மைதுனம், மனத்துயரம், பயம், சோகம், கோபம் ஆகிய இவைகள் காரணமாக உண்டாகிற ரோக குணங்களைத் தெரியப்படுத்துகிறது.

**8.10 நாசி நாடியின் குணம்**

நாசி நாடியானது மரணத்திற்கேதுவான வருத்தங்களின் குணங்களையும், பசிபட்டினியிலிருந்து அகடு நிரம்பப் பூர்த்தியாயுட் கொண்ட இரையின் குணவீனங்களினா லுண்டாகின்ற நோயின் காரணங்களையும், விரகநோய், கண்டரோகம், சிரரோகம், கர்ன்ன ரோகம் ஆகிய இவைகளின் குணங்களையும் அனிலசம்பந்தமாகப் பிறக்கிற ரோகங்களையும் வெளிப்படுத்தும்.

**8.11 சுழுமுனா நாடி**

கந்தத்தின் நடுவே ஸ்தாபிக்கப் பெற்றிருக்கி நாடி சுழுமுனை இந்தச் சக்கரத்திலே சூழ்ந்து எல்லா நாடிகளும் நிற்கின்றன.

நாபி நடுவே நறகின்ற நாடி பசுவின் வால்பேன்ற வடிவுடையது. இவைகளெல்லா மெல்லாப் பக்கமும் சூழ்ந்து நிற்கின்றன.

நாடிகளெல்லாம் உந்தி மூலத்திற் குணங்களை மாற்றி எடுக்கின்றன. கோபுச்ச வடிவமான நாடிகளட ஸ்தாபனமாகிற உறுப்பை உறுதிப்படுத்துகின்றன. கோ எல்லாவற்றையும் இரட்சிக்கிறது. கம்பீரவிலஷணத்தைத் தேகமடையப் பெறுகின்றது.எப்போழுதோ அப்பொழுது சூழ்சி பெற்றிருக்கிற கோவின் பார்வையாகிய நுண்ணிய விவேகம் விரைவாயெழும்பி அந்தரங்க உள்ளத்தைச் சமநிலையில் வைக்கிறதற்கு உபகரங்களினம்சம் இனம் மாறி மோடியான பலனை உண்டாக்கியளிக்கிறது. அல்லது நீசத்துவமான கிரமலBணத்தைக் கற்பித்து விடுகிறது. அங்கே மனம் விரும்பிய பிரகாரம் சிBைபண்ணுகிற நாடியறிவில்லை யென்று சொல்வதுஞ் சரியல்ல நிகளத்தில் நடைபெறுகிற செயல்களை நாபி மத்தியநாடி தொரிவிக்கிறது. தரபசாரமான அருட்சி சுழுமுனை காரணமாக நடக்கிறது.

தூலமாயும் சூஷ்மமாயும் மூன்றரைக்கோடி நாடிகள் தேகிகளுக்குண்டு. அவைகள் நாபியிலும் கந்தத்திலும் ஸ்தாபிக்கப்பெற்ற குறக்காகவும் மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் நிற்கின்றன.

மனுடனுக்குரிய தேகத்தில் எவைகள் மூன்றரைக்கோடி உரோமங்களாயிருக்கின்றனவோ அவைகளெல்லாம் நாடிகளின் முகங்களினுள்ளனவாய் வியர்வைத் துளிகளையுஞ் சொரிகின்றன.

அவற்றுள் ஆயிரத்தெழுபத்திரய்டு நாடிகள் தூலநாடிகள்ளென்று சொல்லப்படும் அவைகள் தேகத்திலுள்ள பஞ்சசேந்திரியங்களைச் சுமக்கின்றன. பங்சேந்திரியங்களின் குணங்களை நடத்துகின்றன.

அவைகளுடையதும் சூஷ்மநரம்புகள் எழுநூறும் திப்பி வேறு சாரம் வேறாகப் பிரிந்த அன்னரசங்களின் சுத்தமான திரவச்சத்தைக் கொண்டு இந்தச் சரீரத்தை அடைந்து விசேஷமான குணங்களை நடத்துகின்றன.

அவைகளுடையதும் சூஷ்மநரம்புகள் எழுநூறும் திப்பி வேறு சாரம் வேறாகப் பிரிந்து அன்னரசங்களின் சுத்தமான திரவச்சத்தைக் கொண்டு இந்த சரீரத்தை அடைந்து விசேஷமான குணங்களோடு நடப்பிக்கின்றன. சடத்திற் குபயோகமில்லாமற் செல்கின்ற இரசம்மாத்திரம் அதிகக்கணக்கான வியர்வையாகவும் கண்ணிலிருந்து வடியும் நீராகவும் உரோமகூபங்களாலே பொசிகிறது.

அதிக நுட்பமான தமர்களையுடைய நாடிகள் சரீரத்திலுடுருவி நடக்கக் கூடியது.அந்த நரம்புகளினந்நங்கள் சோடியாகப் பிரிந்து பிளவுபட்ட ஒரு பேனா அலகின் நுனி போன்ற வடிவுடையவைகளாம்.

அந்த எழுறுநூறு நரம்பும் அன்னரசங்களின் சத்தைக்கொண்டு சரீரத்தை வளர்கின்றன

பாதநாடியின் புச்சங்களதிகமாகப் பரந்து கெட்ட குணங்களை உண்டாக்கிறதில்லை. நாபிஸ்தானத்திலுதித்த குணங்களை உண்டாக்கிறதில்லை. நாபிஸ்தானத்திலுதித்த நரம்பு இருதயத்தைப் பூரணப்படுத்துகிறது. மஸ்தகத்தை யருட்டுகிற நரம்பு பைரவிநாடிக்குச் சம்பந்தபமானது. அந்த நாடி தேகத்தில் உள்ள எல்ல உறுப்புக்களிலும் வியாபித்து இருதயத்திற் கருட்சியை உண்டாக்கி அங்கே பரிசுத்த இரத்தமாக்கப் பெற்ற உதிரத்தை ஈகை செய்கிறது. ஒவ்வொரு தானத்திலுமிருந்து இரசதாது சருமதாது இவைகளையும் போஷித்துக் கெட்ட புணத்தைச் செய்கிற கழியச் செய்கிறது. தேகபோஷணைக்கு வேண்டிய அளவில் பிரகாரம் போஷணை செய்கிறதினால் தேகவர்ணம் ஒன்றை உடையதாக்கப் பெற்று நரம்புக்கிடையும் உறுதிப்பட்டு இதசலதியும் விரைவாய் அசைக்கிறதற்கேதுவாகிறது.

சொல்லப்பட்ட எழுநூறு நாடிகளும் காயத்தை இரட்சித்து நடக்கிற தன்மை எப்படியென்றால் ஒரு குரு ஆனவர் யாகாதி கருமங்களால் அடைந்த பலனை உலகத்திற்கு பயன்படுத்துந் தன்மை போலேயாம்.

அவைகளுள் உத்தமமான நாடிகள இருபத்துநான்கும் தேகமுற்றிலும் வியாபித்திருக்கின்றன. அதிலும் நான்கு நாடி முக்கியமானவை. ஒன்று பரிBணிய நாடி இது வலது கையிலும் வலது காலிலுமாக வைக்கப் பெற்றிருக்கிறது.

அந்த இருபத்து நான்கு நாடியின் பொருத்தமான இனமாற்றக்குத் தமனி முதற் காரணமாயிருக்கிறது.நான்கு நாடி உத்தமமானவையென்றது.புருஷருக்குரிய “தகனகாதபைரவி” தானப் பெயர்ச்சியில் விகாரப்பட்டு இனமாற்றாகிறது.மற்றது “வாமாகாதபைரவி’’ இவைகள் முறையே வலது பாதநாடி, வலது கைநாடி, இடது பாதநாடி,இடது கைநாடி எனப் பெயர் பெறும்.ஏகநாடி அங்குஷ்டமூலத்தைச் சுற்றியோடுகின்ற பரீகஷ்ணியநாடி.பாதநாடி சிரசுக்கும் அங்குஷ்ட மூலநாடிநேத்திரங்களுக்கும் போய் அவைகளை நல்ல குணமாகச் செய்கின்றன.இன்னும் தாங்கள் சஞ்சரிக்கும் ஸ்தானங்களௌவையோ அவைகளிலெல்லாம் பிரயோசனமான காரணங்களை உடையவைகளாயிருக்கின்றன.தமனி நாடிக்கு தாதுநாடியென்றும் பெயர்.அதுவும் ஒலியின் காரணமாகின்ற நாடிக்கு மற்ப ஏதுவுடையது.

கிரர்த்தகர்த்தாவானவர் அந்த எழுநூறு நரம்பும் தேகத்திற் சுத்தமான இரத்தத்தைக் கொண்டு சென்று போஷிக்கின்ற தென்றும்,ஒன்று அங்குஷ்ட மூலத்தைப் பொருந்திச் சிரசை காப்பாற்றுகின்றதென்றும் கூறுகிறார்.

## 8.12 யோக்கியரோகி நாடி

உதிரத்திற் தங்கியிருக்கிற மலசலங்களைக் கழித்துச் சௌக்கியமாயிருக்கிற சுகவீனருக்கு நாடி நடை கரசரணாதியவயவங்களில் மறைந்து நின்றாலும், பரீட்சை செய்ய விதிக்கப்பட்ட நேரங்களில் வெளிதோற்றி எழும்பி நடக்கும்.

குறித்துப் பேசிய நாடி, சூரியன் நாடி உத்தமமாயமையப் பெற்ற தேகத்தையுடைய பக்குவரோகிக்கு அங்குஷ்ட மூலத்தோடு கூடிய ஏதுக்களறியப்படுகிறது. நோயுண்டாதற்குத் துணைக்காரணமாயுள்ள மலசலங்களை ஒழுங்காய்க் கழிப்பவருக்கும், சுகத்தைப் பேணியிருப்பவருக்கும், மூலாதாரத்துக்கு முதன்மையான இருதயம் இயங்குகிறதற்கு முதற்காரணமாயும், மேன்மையான மூலாதாரத்திற்குச் சிரேஷ்டமாயுமிருக்கிற அக்கினி, சுத்திகாரணம் பாத நாடியின் சிகையிலும், கைநாடியின் சிகையிலுஞ் சொலித்து அங்குஷ்ட மூலத்திலே பேசுகிறது. கை பார்ப்பிக்கிற ரோகிக்கறியப்படுவதாகிய நாடியின் பிரதியொலி சிகித்சாசாரீரம்: அது பைரவி நாடியின் முயற்சியினாலே பாதநாடி யொலிக்கிறது. உலக வாழ்க்கையை வெறுத்த ஞானிக்கும், முனிவர், சித்தர் முதலாய அறிஞருக்கும், நடக்கிற தக்க பலன் சுகத்தைப்போற்றி நடப்பவருக்கும், கர்னபரம்பரையால் அவதரித்த உத்தம வைத்தியனுக்கு அறிய வேண்டிய சுகபலன் ஞானிகள் முதலாய அறிஞர் கணத்திற்குப் பொருத்தமானது.

## 8.13 அயோக்கிய பிராணி நாடிதர்சனம்

ஒருவன் றான் நின்ற மெய்ச் சமயத்தில் ஞான அருட்சியடைந்து அதினின்றுந் தவறிக் கரவடமான கெட்ட மார்க்கத்தில் நம்பிக்கை வைத்திருப்பவனுக்கும், பசுவின் தீனிக்கு கஞ்பவனுக்கும் அல்லது பீடையுண்டாகக்கூடிய யாதும் துர்ச்செய்கைகளையந்தப் பசுவினத்திற்குச் செய்பவனுக்கும், நாடி தர்சனமறிந்த வைத்தியன்மேற் குற்றமேற்றுபவருக்கும், நாடி பார்த்து வைத்தியஞ் செய்வதும், அத்தகைமையோருக்கு வைத்தியம் படிப்பிப்பதும் கூடாவாம். அப்படியானவருடைய சகவாசம் வைத்தியனுடைய நாடி தர்சனத்தையும் அவனாலவர்களுக்கிடுகிற அவுஷதங்களையுங் குற்றமுள்ளதாக்கி விடுகிறது.

சுகத்தைப் பேணி நடப்பவருக்குக் கூறிய நாடி நோயுற்ற தேகிக்குக் கூறியதல்ல. பாத நாடியின் சிகையிலாவது அல்லது சொல்லப்பட்ட மற்றும் தானங்களிலாவது அறிந்து கொள்ளக்கூடாத நாடியை அங்குஷ்ட மூலத்திலே பார்த்தறிந்து கொள்ள வேண்டியது. தூர்த்தனுக்கு இருதயவியக்கந் தகுதியற்றதாக நடக்கிறது. குரு, உபாத்தி முதலாயினோரையும், உத்தம வைத்தியனையும் லளிதம் பண்ணிப் புறங் கூறுபவர் வைத்திய முறைமைக்குத் தகாதவர். இவ்விதமான மனுஷருக்குரிய பரிகாரநாடி

இரட்டித்துப் பாபப்பகுதியை அடைந்திருந்தாலதை இதயாக்கினியின் பலாபலனென்று சொல்லப்படுகின்றது.

## 8.14 ரோகரகித மனுஷர் நாடி

நோய் மாறிச் சுகம் வரும்பொழுது சிரை தனக்குரிய இயல்பான நிலைமையையடைந்து பூலதை, புஜங்கம் என்பனவாகிய இச்செந்துக்களின் நடைக்குச் சமானமாகப் பொருந்தி வளைந்த இலக்ஷணமுடையதாய்த் தோற்றி நடக்கிறது. நிறைந்த ஒலியை உடையது. ஒருவருடைய உதவியின்றித் தன் கெறுவத்திலிருப்பவருக்கு, நாடி பலவானுக்கு ஏற்படுத்தின நாடியைப் போல் கடினத் தன்மையாக நடக்கிறது. நபுஞ்சகருக்கு நோய் மாறிச் சுகம் வரும்பொழுது அவர்களின் நாடி, இரத்த சுத்திக்கு காரணமாயுள்ள ஜடம் வெளிப்படுத்தின தன்மை நடக்கிறது. அந்த நாடி முன் பேசப்பட்ட சேர்க்கையின் விரோத நடையைப் போலும், அல்லது வருத்தத்தின் குணங்களைத் தாங்கிச் சுகத்தைக் காட்டி நடக்கிறவன் நாடியைப்போலும், அல்லது நோய்க்கு மருந்தை உண்ணுங் காலத்தில் அதற்குமாறுபாடான செய்கை, அவபத்தியங்களைக் கொண்டவன் நாடிபோலும் பலவிதமாய நடக்கிறது. துறவறத்தை விரும்பிய ஒருவனுக்கு நாடி அசைவற்றுறுதியுடன் நடக்கிறது சுகபலமுடையவனுக்கும்.

## 8.15 இரட்டித்து நடக்கிற தோஷதொந்தங்களில் தமனி நடக்கும்முறைமை

தமனிநாடி, வாதபித்த தொந்தத்தில் முடங்கிக் குதிப்புற்ற நடையை உடையதாய்த் தளம்புகிறது; அல்லது பின்வாங்கி அசைகிறது. அல்லது வளைந்த வடிவுடையது போற்றோற்றி மேனோக்கி நடக்கிறது. வாதமும், சிலேஷ்மமும் தொந்தித்து நடக்கும் பொழுது ஒன்றையொன்று தாக்கி அன்யோன்யமாக நுடங்கிப் பின்வாங்கியசைகிற மந்தகதியை உடையதாய்த் தோற்றுகிறது. அல்லது கையிலே வளைந்ததாகத் தோற்றி மந்தகனமாய் நடக்கிறது.

பித்தமும், கபமம் தொந்தித்த நடை முதனிலையை எடுக்கும் பொழுது நடைகுதிப்புற்றுக் கையில் அந்த இலட்சணத்தைப் பகுத்தறியக்கூடிய மந்தக மனமாக நடக்கிறது. அதின் காரணம் யாதெனின் தோஷங்களின் தொந்தத்தினாலே தமனி நாடியிலோடுகிற இரத்தம் தகித்துச் செல்கிறதாம். தமனியின் நடையை மிக நுட்பமாய்ப் பார்த்தறிய வேண்டும்.

வாதமிரட்டித்துப் பித்தத்தை நெருக்குகிற தொந்தத்தில் தமனிநாடி சிறுபிள்ளைத் தொட்டிலாட்டம் போல் வளைந்தசைவதாய் நிந்திக்கப்படுகின் து. (தாழ்மையடைந்த வாதபித்தங்கள் தமனியினடையை வளைந்த வடிவமுடையதாக மேனோக்கி அசையப் பண்ணுகிறதாம்)

## 8.16 திரிதோஷகுண நாடி

சர்ப்பநடையை உவமையான வாதமும், குறும்பூழின் போக்கை உவமையான பித்தமும், அன்னப்பறவையின் நடையை உவமையான சிலேஷ்மநாடியும்; தங்கடங்க நடையை(சேனாதிபதிக்கு அடங்கிய எழுச்சியின் கோலம் போற்றோற்றி ஐக்கியமான) சமநடையை உடையவைகளாய் நடக்க, நிதானமான நடையையுடைய தமனியும் நிதானமாக நடக்க மானுடருக்குப் பொருந்திய பெரிய தத்தும் விலக்கப்படுகிறது.

சுத்திக்கு வசப்படாத உபரக்தம், தான் போய்ச் சேர்ந்த உறுப்புக்களையுந் தாழ்மை அடையப் பண்ணினபடியால், நிதான தேத்திரச் சிகித்சாநாளம் இயக்கமற்றிருக்கின்றது. அப்படியிருந்தாலும் அந்த நாளமூறடைகிறதல்ல. பூர்விக இருஷிகளாற் கூறப்பட்ட வைத்திய சாஸ்திர விதிப்படி தோஷத்தையடைந்த தேகிகளுக்குரிய நாடியின் நடை(திரிதோஷ தொந்தத்திலும்) ஒரு நாடியின் நடையிலிருந்து மற்ற நாடியின் இலக்ஷணத்தைப் பிரித்தறியக் கூடியதாயிருக்கும் வரையுமுண்டான ரோகமசாத்தியமாக மாட்டாது.

வுாதாதி தோஷங்கள் மூன்றுமிணங்கி நடக்கிற சமநடைநாடி சர்ப்பகதி; அது இருதயத் துடிப்பிலே பேசுகிறது. லாவம், ஹம்ஸம் என்பனவாகிய இப்பக்ஷிகளின் சங்கலிதமான நடையை உவமையான சமநடை நாடியின் நடை அங்குஷ்ட மூலத்திற் பேசுகிறது.

## 8.17 சன்னிபாதகோபம்

சன்னிபாதங் கோபங்கொண்ட நாடியின் நடை, லாவம், தித்திரி, வார்த்தாகம் இவைகளின் கமனம் என்று சொல்வதாகிய நடையிலக்ஷணத்தை உவமையாக நடக்கிறது.

திரிதோஷ பூர்வ உற்பத்தி காரணமான ரோகங்களில் நாடி சிலவேளை மந்த கமனமாயும், சிலநேரம் சீக்கிர கெதியாயும், தோற்றி, உரோகிகளைச் சுகமடையவிடாத தன்மையாகத், தாம் ஜெயங் கொள்ளுகிறது.

சன்னிபாதகோபம் அதிகரிக்கிற குணத்தில், காடைப்புள் சகுந்தப்பறவை, வார்த்தாகம் இவைகள் எதிரியிற் செல்லும் எழுச்சிபோலவும், சிலவேளை ஒரு யுத்தசன்னத்தனின் துரிதமான நடைக்கு உவமையாகவும், சிலவேளை பாகனுக்கடங்காத முரட்டுத் தன்மையான யானையின் நடையைப்போலும், சிலவேளை சிலேஷ்மநாடி மந்த கமனமாகவும், சிலவேளை சீக்கிர கமனமாகவும் நடக்கிறது. சன்னியில் வலிப்பின் காரணமாகிய கெட்ட

குணங்களில், நாடியின் அறிவு சுழற்சியை உடையதாகிறது. திரிதோஷம் மாறும்பொழுது, பித்தநாடி உத்தமஸ்தானத்தில் நின்று கிரமமாக நடந்தால், அது சாத்தியாசாத்தியமென்றும், கிருச்சிரமானது அசாத்தியமென்றும் சொல்லப்படுகிறது. பித்தம் அதிகமாக நிற்பது சாத்தியம்; மத்திமமாக நிற்பது கஷ்டசாத்தியம்; நீசகுணமான பித்தம், எல்லா நாடிகளையும் உயர்ந்த அனமாற்றாக்குகிற கோவின் காரணத்தைத் தரிக்கச்செய்து அசாத்தியத்திற்குட்படுத்துகின்றது.

## 8.18 பூதாபிஷங்க நாடியும் அபமிருத்துகாரணமும்

பூதாபிஷங்கத்தில் திரிதோஷங்கள் சகிதமாகச் சேர்ந்து பந்திக்கிறதினால், உடம்பில் உதிரத்தைக் கொண்டு செல்கிற நாடி, உறுப்புக்களுக்குப் பொருத்தமாயும், பிரமாணத்திற்கு மிஞ்சியும் நடக்கிறது. அபமிருந்து காரணங்களில், நாடியுரோகத்தினால் வருந்தியிருப்பவருடைய மரணநாடியின் நடையைப் போலல்ல. அவனுக்கு அந்த நேரத்தில் உடனே கொல்லும் சன்னிபாதரோக நாடியின் நடைக்குச் சமானமாகப் பொருந்தும். (உடனே கொல்லும் சன்னிபாதம் அபின்னியாச சன்னிபாதம்)

ஏவலின் பொருட்டு மனுடரைச் சருவி வருத்தப்படுத்துகிற பூதப் பிரதேசங்களால் உண்டாகிற குணபேதங்கள் வினையற்றிருக்கிற சன்னிபாதங்களில் கெடுதியைச செய்கின்ற நடையைப் போல், நாடி லோலித காரணமாக இரத்தத்தைக் கொண்டு செல்கிறது. உபதொந்தம் போல் ஆளப்பட்ட திரிதோஷங்கள் வழக்கப்படி போஷிக்கப்பட்டுப் பிரமாணத்தைக் கடந்து சென்று, இரத்தாதாரத்தினின்று இரத்தத்தைச் சேர்ப்பதும்பகுதி பகுதியாயுறுப்புக்களுக்கு இயல்வதுமாகிய ‘‘கோ’’ என்பதையொரு புடைவையின் நெசவைப் போல் வனைகிறது, பிரித்துக் கொடுக்கிறது, துர்நிமித்தமான சன்னிபாதத்தைப் போல் மரணம் நிச்சயிக்கப்படுகிறது. நாடி பயங்கரம், மனக்கலங்கம், மனோதண்டம், கோபம், விகாரம், முதலிய குணாகுணங்களமைந்தவன் நாடியைப் போல் நடக்கும் என்றும், அபமிருத்தில் அச்சமில்லாதவன் குணநாடியைப் பிரதியுவமையாக அடைந்து நடக்குமென்றும் கூறுகிறது. அபமிருத்து என்பது அச்சமற்ற காரணங்களைப் பிரதிபலனாக சேர்த்திருக்கிறது. சுபமிருந்து நேரிடும் காலத்தை முன்னாக இருப்பவனுக்குப் பயங்கரமில்லாதவன் நாடியைப்போல் நடந்தால் துர்மரணத்துக்குரிய செயலென்று அறியப்படுகிறது.

உயரமான தானங்களிலிருந்து தவறிவீழ்ந்து ஜீவனுக்க ஆதாரமான உள்ளுறுப்புகள் யாதுமொன்றிற் காயப்பட்டு, சஞ்சலம், குளிர் முதலிய சோகமான கெட்ட குணங்களைப்பட்டிருப்பவனுக்கு நாடி அஷரத் தொனியோடு தெளிவாய்ப் பேசுகிறதில்லை; அவன் உடனேயுயிரிறவாமற் சில தினங்களுக்கு

இருந்தால் பெலன் குன்றி நாடியினது சேர்க்கை அற்பமேனும் இல்லாமற் பழுதாய் வழங்குகிறது.

மேலே சொல்லப்பட்ட அவதானவீனனுக்கு, நோவு விசனம் முதலிய சோகமான குணங்களும், குளிரும் அகலும் பொழுது. நூடி சரருது காலத்திற் காணப்படும் கோகில நடைக்கொப்பாகவும்: பாத நாடி ஒருவில் நாணி லொலியைப் போல க்ஷரவடிவமில்லாத போலி நாதத்தைப் போலும் பேசுகிறது. மூடமும் வெளிப்புமான குணத்தில் நாடி வலிமை குன்றி மிக்க அஞருற்றவன் குணநாடியின் நடையைக் காட்டி நடக்கிறது. இந்தவிதமாக நாணீண்ட அபமிருத்துகளில் உயிர் நீங்கும் சமயம்பட்டனுபவிக்கிற துயரம் சுபமரண வஸ்தையிற் பட்டனுபவிக்கிற துயரமன்றி வேறு பயங்கரமான துயரமடைகிறதில்லை. சிலேஷ்மநாடி தொந்தித்து நேர்நிரையற்ற தன்மையாக நடக்கிறது; மரணத்திற் காக்கையின் நடையைப்போல் நடக்கிறது.

(நாடி தர்ப்பணம்)

### 8.19 விகல்ப நாடி

பித்தநாடி புழுவைப்போல் நிமிர்ந்திடினும், காஷ்டத்தில் நெய் சேர்ந்த காலத்தில் எழுந் தீச்சுடர்போல் தோற்றிடினும், திடுக்கிட்டுக் கிளி பறப்பபைப்போலொத்திடினும், கடல் அலைபுரண்டு மோதிப்பின் அடங்குவதைப்போல் தோற்றிடினும், நாடி படபடத்து ஓடிடினும் விகார நாடியென்று கூறுவர்.

(வைத்திய சிந்தாமணி)

### 8.20. வாத பித்த கப நாடிகளின் பேதம்

**8.20.1** நாடி தர்ப்பணம் எனும் நூலில் மூன்று நாடிகளும் மிக அழகாக சொல்லப்பட்டுள்ளது…

**நாடிகளின் தேவதை**

வாத நாடிக்கு அதிபதி பிரமா; பித்த நாடிக்கு அதிபதி ஈசுரன்; சிலேஷ்ம நாடிக்கு அதிபதி விஷ்ணு என்று கூறப்படும்.

**நாடிகளின் வர்ணம்**

வாதநாடி நீலம்; பித்த நாடி பாண்டுரம்; சிலேஷ்ம நாடி சுவேதம்.

## நாடிகளின் ஸ்பர்ஸம்

பித்தநாடி உஷ்ணமாயும், கபநாடி சீதளமாயும், வாதநாடி மத்திய ஸ்பர்ஸமாகவும் அவைகள் கரநேத்திரக் குறிக்குத் தோற்றுகின்றன.

## வாதாதி நாடிகளின் தன்னிலைக் கிரமம்

பிரதமவாதம் இரண்டாவது விரலிலும், பித்தம் மத்திமை விரலிலும், கபநாடி கடைசி விரலிலுந் தோற்றித் தங்கடங்களுக்குப் பொருத்தமான இலக்ஷணத்துக்கமைய நடக்கின்றன.

அவைகளுக்குரிய நடையானது, ஒரு காப்பியத்தினுள்ள பாவில் வழுவிய இசையிலக்கணங்களைத் திருத்திக் கூறவல்ல பண்டிதனாகிய வைத்தியனுடைய மன எண்ணத்திற்கும் சிலவேளை மாறுதலாக நடந்து அவனையுந் தோல்வியடையச் செய்கின்றது.

ஒரு சகச பெலனுடைய சுகதேகிக்கு நாடிகள் அறுபது மாத்திரை நடக்கின்றன. அதாவது; சந்திரன் றன்னுடைய கலைகளை வளர்க்குந் தன்மையுந் தேயவிடுந் தன்மையும் போல நாடி நடையுந் தேய்ந்துதேய்ந் துரப்பேற்று நடக்கிறதாம். சூரியனுதயம் பண்ணும்பொழுது தோன்றுகின்ற பூவால், உலகத்திலுள்ள பொருள்களை எப்படிப் பிரகாசிக்கச் செய்கிறதோ அது போலவே நாடியினடையுற்பத்தியும், ஸ்புரலைணமும் வைத்தியனுடைய விரல்களிற் றோற்றிப் பிரகாசிக்கச் செய்கின்றன.

பிரதம நாடியாகிய வாதம் தனக்குரிய மாத்திரையிற்றவறாது தற்சனி விரலிற் சீவித்துப் படிப்படியாகக் குறையப் பித்தம் விருத்தியாகிக் கர்ணிகை விரலிற் றனக்குரிய மாத்திரையைக் குறையா தடித்து ஆறக் கபநாடி தன்மாத்திரையிற் குறையாமலசைந்து நடக்கின்றன.

வாயுவினெழுப்பம் இரண்டாம் விரலில் முதல் நின்று கண மாத்திரையையடித்து இடைவிடுகின்றது.

சிலேஷ்ம நாடியின் நடையில் பித்தமும், பித்த நாடியின் தாதில் வாதமுந் தங்கியிருக்கின்றன.

வாயுவினுதவியாலியங்குகிற வாதம் நிர்மூலமானது. அது கை பார்ப்பிப்பவனுடைய கரதலப் பரீட்சைக் குறிப்பை விளக்கும் பிரமாணத்திற்காக நியமிக்கப்பட்டது.

## மதாந்தரம்

வாதமானது ரோகங்களுக்கும் முதற்காரணனாய் நின்று பித்த சிலேஷ்மங்களைத் தூண்டிவிட்டுத் தானு மவைகளோடொத்த ஒருவன்போனின்று சப்த தாதுக்களினாலு முண்டாக்கப்பட்ட தேகத்தை அரசுபுரிவதால் அந்த வாதத்திற்கு அரசனென்றுமொரு பெயருண்டு. தேரையர், ஜீவரக்ஷாமிர்தம் கூறுகின்றன.

இந்த நாடிசாஸ்திரத்தை வடமொழியிற் கூறிய கிரந்த கர்த்தாவானவர், முதலில் பித்தநாடியும், மத்திமையில் கபநாடியும் பின் வாதநாடியுந் தோற்றி ஒன்றையொன்று தாக்கி நடக்கிறதென்றும், அதைத் தன்னுடைய அனுபவப்படியும், நூலறிவின்படியுமெடுத்துக் காட்டியிருந்ததாகக் கூறியிருக்கிறார்.

உத்தம வைத்தியனால் ஒரு நாடியின் நடையிலிருந்து மற்ற நாடியினிலக்ஷணத்தையுஞ் சொல்ல இயலும்; அதற்கு உதாரணமாக துவிகுணத்தில் ''ஸௌதை'' தீர்க்கநடை நடக்க மற்ற இருவரும் தீர்க்கநடையே நடக்கின்றன்; திரிகுணத்தில் ''ஸௌதை'' சமபரிசம், கிரிசநடையாக நடந்து அந்தர்கதியில் ஸ்திதியை எடுக்கிறதென்பதும், ''வல்கம்'' சமநடையாகப் பிரசவித்து கிரிச நடையாக நடந்து விஸ்திருத நடையில் நிலைக்கிறதென்பது விளக்குகின.

**அட்டவணை 01 : நாடிச் சக்கரம்**

| நாடிகளின் பெயர் | வாதம் | பித்தம் | கபம் |
|---|---|---|---|
| நாடிகளின் வர்ணம் | ஸ்பாமா ஹரிதம் | பீதலால நீலம் | ஸபேதம் |
| நாடிகளின் தேவதைகள் | பிரமா | சிவன் | விஷ்ணு |
| நாடிகளின் ஸ்பர்ஸம் | மத்ப ஸ்பர்ஸம் | உஷ்ண ஸ்பர்ஸம் | சீதள ஸ்பர்ஸம் |
| நாடிநடை | விஸம கதி | தீர்க்க கதி | ஹரஸ்வ கதி |
| நாடிகளின் கந்தம் | ஹீன கந்தம் | தீவிர கந்தம் | மத்யம கந்தம் |
| நாடிகளின் கமனம் | திரிபக் கமனம் | ஊர்த்துவ கமனம் | அதோ கமனம் |
| நாடி குரூரமானதா அல்லது லகுவானதா | ஹலகீ | ஹலகீ | பாரி |
| நாடிகளின் பலாபலம | இரவும்பகலும் பலமுடையது | பகலிற் பலமுடையது | இரவிற் பலமுடையது |

இந்தத் திருஷ்டாந்தம் இயல்பிலே வித்தியாசமில்லாத தேகத்தையுடையவரின் கைநாடியில் நடக்கிற தாதுகளின் செயலைப்புடமிட்டறியும் முறைமையைப் பற்றி விவரிக்கின்றது.

பலமுடைய வாதம் கையிலே வளர்ந்து குறைந்து அருத்தமாகி அந்திக்கிறது. இரத்த ஓட்டம் ஒரு சிறு வரிபோற்றோன்றிக் கையிலே அசைகின்றது.

ஒரு அரசனானவன் தனக்கோர் ஆலோசனைக்காரன் வேண்டுமென்று உசாவுவதுபோல், அந்தப் பிரபலவாதமுந் தனக்கொரு மித்துரு வேண்டுமென்று தேடி உடலுறுப்புக்களிற்றங்கி ஆராய்ந்து நடக்கின்றது. அதின் கருத்து யாதெனின் இரத்தம் தடிப்புற்ற காரணத்தினால் நடை மந்தகதியை அடைந்து நடக்கிறது.

தேகமசைவற்ற மரம்போற் கிடத்தல் வாதத்தைப் பெலனாக நடக்கச் செய்கிறது.

வாதம் மலக்குடலில் நாபிக்கும் (Ense-form) என்னும் முருந்தெலும்புக்கும் மத்தியினின்றுலாவும் பொழுது மலசல விபரீதங்களை உண்டாக்குகிறது.

ஸோஷம், தம்ஸம்(அல்லது சுரப்பு வீக்கமும் கடிச்சொறிவும்) தேகத்திற் குடிகொண்டிருந்தால் வாதத்தை வக்கிர கதியாக நடக்கச் செய்து அதற்கு உணவாகின்றன.

பிருதுவித் தத்துவமுடைய வாதநாடி இரட்டித்து வக்கிர கதியாக நடந்தால், தேகத்தில் சிலேஷ்ம ஷயரோகம், வரட்சி, வீக்கம், தலைவலி நிலைத்துக் கேட்டைச் செய்கிறது.

பிராணவாய்வு முதலாய தசவாய்வுக்களும், தேகத்திலொழுங்காய் நடக்க நாடிகளின் நடையும் கிரமமாயிருக்கும்; அவற்றுள் மத்யகதவாய்வு பித்தத்தோடு சேர்ந்து நடந்து அதனை முதனிலையில் வைத்துக்கொள்ளுகிறது.

எப்பொழுதும் நாடிகளின் நடைக்குத் துணைக்காரணமாயுள்ள உயிர்ப்பைச் சிலேஷ்மம் கிரகித்து வைத்திருந்து, தானொரு அமைச்சனைப்போலும், சில குணங்களில் தறுகணாளர் வன்றொழிலின் செயலைப்போலும் பின்பற்றி நடக்கிறது.

இன்னும் முதற்பிரமாணமாக உரைத்த திருஷ்டாந்தத்தில் அவதானம் பண்ணிக்கொள்ள வேண்டிய பிரதான காரணங்கள் பலவுள. அவற்றிற் சில வருமாறு.

1-வது, பிரபலவாதம் அனுகரணவோசைக்குச் சார்பான ஒலியை ஞெள்கி அருத்தமாகிக் கையிலே தனக்குரிய வளர்ச்சியை அனுகூலப்படுத்துகிறது.

2-வது, அந்த அருத்த தாது, அஙகுஷ்ட மூலத்திற் சரலியென்னும் பறவையைக் கண்ட சர்ப்பத்தின் தன்மையைப் போலும், உடலிலே சில்லென்றோலமிடுங் குக்கிற் பட்சியின் அகவலுக்குப் போலியாகவும் வைத்தியருடைய புலனுக்கு விளங்கக் கூடியதாக விலாசமிடுகின்றது.

3-வது, கரசிகையிலே ஓதையின் பயனடைதற்குடன் பாடாகிய பிரதிதினம், அகம் ஆடியையொப்பாயிருக்கும் பொழுதாம்.

4-வது, அரசுத வடிவத்தைப் பொறித்திசைத்து நடக்கும் பிரதிதினம், இருதயகமலம் விகசிதஞ்செய்யும் பொழுதேயாம்.

5-வது, அருத்ததாதாகிய வாதம் கோவின் காரியமாயிருக்கிற லோலிதத்திற்கு மிரக்கமற்ற அதம் என்று சொல்வதாகிய ஒரு குறையை வருவித்துத் தானும் வக்கிரரூபமுடையதாக மாற்றப்படுகிறது.

6-வது, வருந்திய ஸ்திரத்தையுடைய மத்யகதவாய்வு பித்த பீசத்தை நிலையற்ற ஏதுவாகச் செய்கிறது. அல்லது பார்வையற்ற குக்கிற்பட்சியின் போக்குக்குச் சமனாகச் செய்கிறது.

7-வது, இருதயத்திற்கு முதன்மையான குணத்தைக் கொடுக்கிற இயல்பையுடைய கோவின் நிமேஷம் இயக்குகிற சலதி காரணத்தினால், சிலேஷ்ம தாதும் அங்குஷ்ட மூலத்தில் கூனியதாக அல்லது வக்கரிக்கின்ற நடையைப் பொருந்தியதாக மாற்றப்பட்டு நடக்கிறது.

கூறப்பட்ட நியாயங்களினால் பித்தநாடி குடில நடையாகவும், வாதம் வக்கிரகதியாகவும், சிலேஷ்மம் மந்தகதியாகவும் நடக்கும்.

பித்தநாடி ஓரபாயத்தினின்றுந் தப்பியோடுங் கஜக்குலத்திற்கு முந்திச் செல்லும் யானையின் வேகமான கெதியைப்போற் சீக்கிர கெதியாக நடந்தால் மலபந்தம் ஒழுங்கீனமாயக் கழிகிறது.

### 8.20.2 திரிதோஷ ஸம்பவம்

பித்தநாடி சீக்கிரகதியாயும், தாமத நடையாக நடந்த கபநாடி வக்கிர கதியாகவும், வக்கிரகதியாக நடந்த வாதநாடி மத்திய கதியாகவும், முறைதப்பி நடந்தாலும், தொனியதிப் பிரஷ்டகமாய் மானொலியின் போக்கை ஒத்திருந்தாலும், தோஷங்கள் மூன்றும் ஒன்றோடொன்று சேர்ந்து பிறக்கின்றன. இதற்குப் பிரதி சமானியமாயுள்ள ஸ்நாயு திரவவஸ்தைப் பொசியவிட்டு விடுகிறது. ஆகையால் அதற்குரிய நடையையுங் கவனிக்க வேண்டியது.

இன்னமும் நாடி நடையின் அர்த்த மாறுதல்களைக் கூற வேண்டியிருப்பதால், அவைகளை எடுத்துக் காட்டப்படுகின்றன.

பித்தநாடி குடில நடையாகவும், வாதநாடி வக்கிரகதியாகவும், கபநாடி மந்தகதியாகவும், ஒன்றுடன் ஒன்று சேர்ந்து மாறி நடக்கும் பொழுது அவைகளுடைய நடையை அந்வயப்படுத்திக் கொள்ளக்கூடாத தன்மையுடையவைகளாய் ஓரே மாதிரியாக இருந்தால் இரத்த ஓட்டத்திற்கு ஊறு சம்பவிக்கிறதாக அறியவேண்டியிருக்கிறது.

பித்தநாடி குடிலப்பட்டு அதிக வேகமாக நடந்து சிறிய பிரமாணமாகக் குறைந்து வந்து முடிவில் அதினுடைய சிகையுந் தோற்றாமல் அழிந்து போனால் இதயச்சலதி காரணத்திற்கு மூறு சம்பவிக்கிறதாக அறியவேண்டியிருக்கிறது.

ஊசியேற்றல், சுடுதல் முதலிய சித்திரவதையான செய்கைகளினால் பித்தநாடியின் நடை மந்தமான குணத்தை எடுக்கிறது. நாடியின் புச்சங்கள் விம்மி வேறுபடுகின்றன. அதனுடைய காரணமாகக் கபநாடியும் மந்தகதியை எடுக்கிறது. அந்தத்தில் வாதம் வக்கரித்து நடக்கிறது. நாடிகளின் நடைக்குக் காரணமாயிருக்கின்ற வாதநாடியின் நடை இவ்விதமாய் வக்கரித்து நடந்து இல்லாமல் அற்றுப் போய்விட்டால் நாடி ஓட்டமும் தேகத்திலில்லை என்பதறி.

பித்தநாடி குடிலநடையாகவும், வாதநாடி வக்கிரகதியாகவும், ஒன்றுடனொன்று மாறுபாடில்லாமல் இணங்கி நடக்க சிலேஷ்ம நாடி மந்தகதியிற்றானே நடந்துகொண்டால் உண்டான ரோகம் நீங்குமென்பது சந்தேகமில்லை.

பித்தாசயத்தில் வியாதி சம்பவித்தால் புத்திப் பிரமத்தை உண்டாக்கும். வாததோஷத்தின் கோளாறு கருப்பாசயத்தை அடைந்து நடைகொள்ளமுன், நாடி விகாரப்படாமல் அணுப்பிரமானமாய் அசைந்து நடப்பது போற்றோற்றும். அந்த நடைக்குக் கடற்பன்றியானது அசைந்து நடக்கும் நடையை உவமை கூறலாம்.

அந்த வருத்தம் முதிர்ச்சியடைந்து சித்தவிப்பிரமும் அதிகரித்தால், வாதகோபத்தினால் உண்டான உத்தாபம்; கருப்பையில் மாத்திரமன்று, சலப்பை, மலக்குடல், மச்சை முதலிய தாதுக்களிலும் சேர்ந்து விகாரப்படுகிறது. அதற்குத் தகுந்த அவுஷதங்களை உபயோகித்து நிவர்த்தி செய்யாவிட்டால், பித்தகோபம் மேற்கொண்டு மரணத்தை உண்டாக்குகிறது.

வாதாசயத்தில் வியாதிசம்பவித்து மனோவிருத்திக்குக் கெடுதியான குணங்கள் நேரிடும் பொழுதும் பித்தநாடி கடற்பன்றியைப் போல் நடக்கிறது. அப்பொழுது பித்தமதிகரித்து தரா, மூளை, வஸ்தி முதலிய உறுப்புக்களிற் சேரயத்தனமாயிருக்கிறது. அப்படி அந்தப் பித்தம் சீவாதாரமான உறுப்புக்களைச் சேர்ந்து சஞ்சரித்தால் அந்தப் பித்தம் தானே சிலவேளை விரகதாபமுடையவர் நாடி இலக்ஷணத்தைப் போலும் நடக்கும். அந்தத் தோஷங்கள் ஒன்றொன்றாய் அதிகரித்து நிலைபெறமுன் தகுந்த அவுஷதங் கொடுத்து மாற்றாவிட்டால் வாதத்தினுக்கிரம் விருத்தியாகி ஒழுங்கீனமான கெட்ட குணங்களை உண்டாக்கி மரணத்திற்கேதுவாக்கும். கூறிய இரண்டு ஸ்தானங்களிலும் உற்பத்தியாகிற ரோகங்களை உஷ்ணசீதள உபசாந்தியான சிகிச்சைகளால் சுகப்படுத்த வேண்டியது.

தேகத்திற் சீவிக்கிற உதிரம் உறுப்புக்களைப் போஷித்துத் தேஜஸ் முதலிய நல்ல குணங்களைக் கொடுத்துப் பிரகாசிக்கச் செய்கின்றது. அது நெறிவழுவித் தோஷமடைந்த காரணத்தினால் தான் முற்பவத்தை இழந்து தற்பொழுது அற்ப பிரமாணமான குற்றவியல்புடையதாய்ச் சடுதிவேகமும், துாக்கமுமான நிதானமற்ற மாத்திரையான நடையையுடையதாக உறுப்புக்களிலும் பிரமாணமற்றதாகச் சேருகிற குணமுடையது. இயற்கையான குணத்தில் இரத்தமோடும் நெறி மானுடருக்குப் புலரிக் காலத்தில் மெல்ல மெல்ல ஆரம்பித்துப் படிப்படியாக உச்ச மாத்திரையாகி உச்சிப் பொழுதிலிருந்து படிப்படி பிரமாணம் குறைந்து அஸ்தமயன நேரம் உதயகாலத்தில் என்ன பிரமாணமாகத் தொடக்கத்தை எடுத்ததோ அதுபோல; இரத்தத்தின் ஓட்டம் நரம்புகளில் நடக்கிறது. இப்படியே இரத்தத்தின் சுபாவகுணமான செய்கை இரவுக்கும் நடக்குமென்பதாம்.

வாதாதி தோஷங்களின் காரணங்களினாலும், தேச காலபேத சஞ்சாரங்களினாலும், உதிரம் மிதமிஞ்சி விகாரமடைந்து, செல்லுமார்க்கந் தப்பிப் பிரமமுற்றப ஜெயமடைந்து அணுவளவினோர் பகுதி பகுதியாக விகிதப்படி சொந்தஸ்தானததைச் சேருகின்றது. சீவனோடிருக்கிற அங்கத்தின் கருவிகளை இயங்கப் பண்ணுந் திறமையும் அற்ப சுகவீனருக்குச் சிறிது சவுக்கியத்தையும் கொடுக்கிற இதம் பொருந்திய பிராணவாய்வு ஞானேந்திரியங்களை வர்ச்சித்துக் கவர்ந்து கொள்ளுகிறது.

இடையிற் தோஷமடைந்து நீராகிய இரத்தத்தின் பிரமாணமும் சில காரணங்களினால் மிதமிஞ்சிச் செல்லும்பொழுது தமரிற்றாக்கிக் குதிப்புற்று மூளை, கருப்பை, சுக்கிலம் முதலிய பிரதானமான உறுப்புக்களிலும் சேர்வதுண்டு. அவ்வாறு சேரும் வேளையில் அச்சம், திடுக்கம், புளகம் முதலிய சுதாசுதகுணங்களும் நேரிடுகிறதுண்டு. போஷிக்கப் பெறுகிற உறுப்புகள் குறைந்த இனமாகிறது.

இரண்டு கால்வாய்ச் சந்தியில் உண்டாகும் நீரின் சுரியலின் தன்மையை ஒத்த அசுத்த இரத்தமானது; பிராண வாயுவினால் நல்ல குணத்தையாவது அல்லது கெட்ட குணத்தையாவது அடையப்பெற்றுப் பிரிந்து கையையும் மற்றும் உணர்ச்சிக்குரிய கரணங்களையும் போஷிக்கிறது. அப்பொழுது நாடியின் நடை; ஒரு மானானது தனக்குத் தீங்கு செய்ய வரும் பகைவனைச் சுற்றிப் பார்த்து விசைத்தெழும்பியோடுக தன்மைபோல் நடக்கிறதாம்.

இடையில் தோஷமடைந்த குருதி, நீரிற் கலந்து பிரிந்த ஆகப கிரணத்திற்கு ஒப்பான தன்மை உடையதாம்; நாடி தூல இலணமாகத் தோற்றிநடக்கிறதாம்; அந்த நடை சர்ப்பத்தின் வளைவான கதிக்கு உவமை. குருதி கீழ்மை அடைந்தநியாயம் உஷ்ணம் அதிகரித்ததினாலென்றும், வாயு அதிகரித்ததினால் உண்டான உக்கிரமத்தினாலென்றும் கூறப்படுகிறது; இந்த இரண்டில் ஒன்றேயாம்.

உபரக்தம் இரத்தாசயத்திலிருந்து படிப்படியாய் உறுப்புக்களைச் சேர்வதற்கு நித்தியமும் குறித்த அளவின் பிரமாணமாக ஊர்ந்து செல்கிற நடைக்கு ஒட்டை என்னும் மிருகம் கோவேறு கழுதை இவைகளொன்றின் நடையை உவமையாக ஒப்பிடலாம். இரத்தம் ஓடும்பொழுது தேகத்தில் சகிக்க முடியாத வேதனையிருக்கும். சில பொழுதில்லாமல் இருந்தாலுமிருக்கும். அப்படியல்லாத சூனியமானது நாடிப்பரீட்சையில் அர்த்தமாற்றாகிறது; அதாவது வாதநாடி, பித்தநாடி நின்ற இடத்திலும், பித்தநாடி, சிலேஷ்மநாடி, வாதநாடி நின்ற இடத்திலும், முதல் இருவரும் தங்கடங்கணடையில் ஒருவர்க்கொருவர்க் கொருவரீகை புரிவதும், சிலேஷ்மத்திற்கு விட்டுக் கொடுப்பதுமாக மாறி நடப்பதாம். சிலேஷ்மநாடி வாதஸ்தானத்தை எடுக்கும்பொழுது நாடியோட்ட நரம்பின் நடை தோற்றாமல் நடக்கிறது.

நாடியின் நடை, அபூர்வ தந்திரமான பரீக்ஷாதானத்தில், சயதிமானம் இலகுமாத்திரையை அறிந்துகொள்வது சந்தேகம்; அது சிலவேளை பரந்து நீண்டதாகவும், சில குணங்களில் ஒடுக்கமானதாகவும் தோற்றுகிறது. அவற்றுள் விருத்தியாகிப் பருத்துத் தோற்றுகிற புதிய சம்பவங்களை மிகு கவனத்துடன் அறிய வேண்டியது.

நாடியின் சாதாரணமான நடைக்கு உவமை

**1- வது வாததொந்தம்**

வாதநாடி சர்ப்பத்தைப்டீபாலம்! சலூாகையைப்போலும் நடக்கிறது.

**2- வது பித்ததொந்தம்**

பித்தமும், சிலேஷ்மமும் சேர்ந்து நடக்கும்பொழுது அவலக்ஷணமான எடுத்தலோசையுடன் அப்பியாசதானத்தில் குலிங்கம், காகம், மண்டுகம் என்பனவாகிய இந்தப் பிராணிகளின் நடைக்கு உவமையாக நடக்கிறது. அப்பொழுது விளங்குகின்றது பித்தத்தின் கீர்த்தி.

**3- வது வாதகிலேஷ்மதொந்தம்**

வாதமும்**,**சிலேஷ்மமும் கூடின உற்பத்தி முதனிலையாக வரும்பொழுது எடுத்தலோசை நீசத்தன்மை உடையதாகப்˙பிறப்பதுமன்றி, அப்பியாசவைப்பில் கபோதம், மயூரம், அம்சம், குக்குடம் என்பனவாகிய இந்தப் பட்சிகளின் நடைக்கு உவமையாக நடக்கின்றன.( இப்படிச் சங்கலிதமாக நாடி நடக்கும் பொழுது சிலேஷ்மம் பெண்பாலைக் குறித்து நின்றது.)

**4- வது வாதபித்ததொந்தம்**

வாதபித்தங்களளாளவிப் பிறப்பித்த நடை மோனையாக வரும்பொழுது ஈனத்தொனியுடைய எடுத்தலோசை உண்டாவதுமன்றி, வாதத்திற்கும், பித்தத்திற்குந் தனித்தனி உவமையாகக் கூறியிருக்கிற ஜீவர்களின் நடைகளுக்கு ஒப்பாகப் பொருந்தி நடக்கும்.

நோய் பிணி துன்பத்தினாலும், இடைவிடாத யோசனை செய்தல், மிதமின்றி நித்திரை செய்தல், பொறாமை கொள்ளல், யுத்தஞ் செய்தல், நித்திரையற்றிருத்தல், மருந்திடுரோகம் முதலிய பல காரணங்களினாலே வருந்திய இரத்தம் தோற்றாமற் செலவழிகிறது. அந்தக் காலத்தில் சித்தத்திற்கு இயல்பாயுள்ள குணமும் வித்தியாசப்பட்டு, விசாரமான அதிசயமுடைய பயங்கர முதலிய துர்க்குணங்களுண்டாவதுடன், ஞாபகசக்தி, பலம், வீரியம் இவைகளிங் சிலது மந்த உபரக்தத்தோடு கலந்துவிடுகிறது. நுாடி வாதபித்தம் அச்சமுற்தாக புள்ளின் சிறுகிய நடைக்கு உவமையாக நடக்கிறது.

சுட்டிய நடையிலக்ஷணத்தின் சேடமான சஹதிநடையைத் தன்னுடைய நடைக்குப் பிரதியிலக்ஷணமாக அங்கீகரிக்க இருக்கும வாதநாடி தன்னுடைய தானத்தைவிட்டு மத்திமை விரலிலும், அந்திய விரலிலுமாக மாறிமாறி ஒரு

குதிப்புற்ற சுழற்சி போல் தோற்றுகிறது. இந்தநிலை நெடுக நிலைக்கிறதாகவும் சொல்லக் கூடியதல்ல.

இடையிற் தோஷமடைந்து மங்கலான இரத்தம், சுத்த பாவகனாலுயர்ந்த சாதியாக்கப் பெற்றுச் சுத்த உதிரமாகாதிருந்தால், அந்தக் குணமுடையவருக்கு நாடி இணைத்துக் கட்டிய கோலுக்குச் சமானமாகத்தெற்றி நடக்கும் ககப்புள்ளின் இலக்ஷணமான நிலைமை; குறைந்த மாத்திரையைப் பொருந்தி நடக்கிறது.

அமங்கலமான ஸ்திதியை நாடியோட்ட நரம்பின் புச்சங்கள் அமைந்திருக்கிற அங்குஷ்டமூலத்திற் பார்த்தறிய வேண்டியது.

**8.20..3நாடி கடங்களுக்குரிய நடையை ஒன்றுக்கொன்று ஈவுபண்ணும் முறைமையும் அதற்குரிய பிரமாணமுங் கூறுகின்றது.**

சர்ப்பம், சலூகம் இவைகளின் சேர்க்கை நடையை உவமேயமாகப் பொருந்தி நடக்கிற வாதநாடி ஒருயவைப் பிரமாணமாக நடந்து மாறுகிற சத்தப்பிரமம் கையிலே அறியக்கூடியதல்ல. கையிலே அறியக்கூடிய விதி. நாடி நடையின் எண்குறியளவையை இறைநாடி விட்டயவைப்பிரமாணமான அசைவை அனுசரித்த பித்தம் அற்ப பிரமாணமாக ஒழுகவிட அதனைச் சிலேஷ்மநாடி கிரகித்து குலிங்கம், கரகம், மண்டூகம் ஆகிய இப்பிராணிகளின் மிஸ்ர நடைக்கு உவமையாகப் பொருந்தி நடக்கிறது. அப்படி நடந்தாலுமங்கே பித்தத்தின் மேன்மையே விளங்குகின்றது. பித்தநாடி வாதநாடிக்கு விட்டனுபவிக்கிறது சிலேஷ்ம நாடியினந்தப் பிரமமும் கையிற் புலப்படமாட்டாது.

இரத்தம் தடிப்பான தன்மையினால் வாதம் வலிய இயங்குந் தகைமை குன்றிப் பித்த சிலேஷ்மங்களை இணக்கி மாற்றிக் கொள்ளுகிறது. அப்பொழுது கைநாடி குருநடையாகத் தோற்றித் தேய்கிறதும், வளருகிறதுமாக உணரப்படுகிறது. ஏந்தல் அமைச்சனை நெருக்க அமைச்சு அதிகரித்து நடப்பதாகிய நடை பித்ததொந்தம் என்று சொல்லப்படும். அதில் நாடிநடை, குலிங்கம், காகம், மண்டூகம் ஆகிய இந்தப் பிராணிகளின் நடைகளைச் சேருகிற உவமையாகப் பொருந்தி நடக்கிறது. பித்தத்தின் மிகுதி குறைய அடைந்திருந்தயவைப் பிரமாணத்தின் அற்ப பாகத்தைச் சிலேஷ்மத்திற்கும்; ஊர்க்கருவி, காக்கை, மண்டூகம் இவைகளின் நடைகளுக்குவமையான இலட்சணத்தை வாதநாடிக்கும், விட்டு அனுபவிக்கிறது. இந்த விதமாகவே வாதநாடி கபநாடிக்கு மீவு கொடுக்கிறது. ஆனால் கபநாடி தனக்குரிய பிரமத்தைக் கையிலே மோக்ஷித்துப் பிறக்கிறதுமில்லை. மற்ற இரண்டு நாடிகளுக்கும் விடுகிறதுமில்லை; அதாவது

கபநாடி அந்த இலக்கணங்களைக் கிரகித்து வைத்திருந்து மற்ற நாடிகளின் நடைதேய்ந்து கெட்டுப் போனபின் முதனிலைக்கு வருமியல்புடையதாம். வாத சிலேஷ்மத்தொந்தமும் வேறுபாடில்லாத நடையைக்காட்டி ஒரு யவை எடையிலும் குறைந்த பிரமாணமான இலக்ஷணத்தைக் கவருகிறது.

### 8.20..4 வாதாதி நாடிகளின் சேர்க்கையைப் பற்றிய நடையின்முறைமையான இலக்ஷணம்

வாதம் வக்கிரகதியை உடையது; பித்தத்தினெழுப்பம் சபலநடை; அசைவற்ற சிலேஷ்மத்தில் செயங்கொண்ட நடையைக் கலந்து கூடிப்பிறந்தன.

வாதம் முறை தப்பிக் குறுக்கோட்டமான நடையை வளர்த்து நிந்திக்கிற காரணத்தினால் வக்கிரரூபமான இலட்சணத்தைப் பெற்றுக்கொண்டது. பித்தநாடிக்குரிய களங்கமான இரத்தம் சுத்தி அடையாத காரணம் சபல நடையைப் பெற்றது. உவகையோடு கலந்து சம்பந்தப்பட்ட வாத பித்தங்கள் அற்ப பிரமாணத்திலிருந்து விடப்பட்ட இயக்கமற்ற நடையை அந்தச் சிலேஷ்மம் அனுபவித்த காரணம் அசைவற்ற நிலைமையானது; இது தானம் பிறழ்ந்து வாய்வுக்கு எதிர் நோக்கி நடந்த காரணத்தினால் குறைந்த இனமாக்கப் பெற்றுக்கொண்டது.

துவிதோஷ தொந்தமாவது இரண்டு தோஷங்களொன்றாகச் சேர்ந்து பிறந்த எஞ்சிய நடையில் ஒரு பகுதியைச் சேராமல் நின்ற நாடிக்கு விட்டு, தன்னுடைய ஸ்தானத்தில் நின்று மற்றையவைகளை இடைஞ்சற்பண்ணி நடக்கிற நாடிக்கும தனித்தோஷம் இரண்டாய்ப் பிரிந்து ஒன்றை நெருக்கித் தன்னுடைய இடத்தினின்று நடக்கிற நாடிக்கும் துவிதோஷதொந்தமென்று பெயர்.

அப்படியானாலும் பின் சொல்லப்பட்டது தனித்தோஷதொந்தமென்றும் பெயர் பெறும்.திரிதோஷ தொந்தத்தில் மூன்று தோஷங்களும் கலந்து பிறந்தநடை ஒன்றையொன்று நெருங்கி ஆதாரமற்று வருத்தக்காரனுக்கு அச்சத்தைக் கொடுக்கக்கூடிய அகோரகுணமுடைய தோஷம் எதுவோ அந்தத் தோஷத்தின் பெயரே பிரதம நாமமாகப் பெயரிடப்படுகிறது.

தொந்தத்தினாற் பிரமமுற்ற தாதுக்களுக்குரிய சிகரத்துண்டம், கோ, அபிமுகத்தில் அருந்ததாதாகப் பெற்றுப் போஷிக்கின்றன. அவைகளை மூலபதம் மாற்றின தாதுக்களென்று வழங்கப்படும்.

கோவின் நிமேஷத்திற்குரிய இதழ்கள் விரிந்து முறைமையாகச் சீக்ஷைபண்ணாத வருத்தக்காரருக்கும், அப்படியே விரிந்தும் மலராத அரும்புக்குச் சமானமான உறுப்பைப் பொருத்தியிருக்கிறவருக்கும்; நாடி சபல நடையும், ஸ்திரநடையும் சிலவேளை வன்மஸ்தானங்களுடன் காரணமாக நடந்து; அங்குஷ்ட மூலத்தில் நடையில்லாதது போற்றேய்ந்து உணரப்படுகின்றது.

கால வித்தியாசங்களுக்குத் தக்கபடியும் கோநிமேஷம் நடைபெறுகிறதாம்.

### 8.21 தேரையர் யமக வெண்பாவில் கூறப்பட்டவை

வாத பித்த சேட்ப விஷநாடித்துணிவு
‘‘கைகால்வா யாறு கபமந்த மாகவும் பொய்
கைகால்வா யாறு கடுக்குமேற் - கைகால்வாய்
நம்பியிரா தேவிலை நாளிறுமோர் சாமமட்டும்
நம்பியிரா தேவைகன்னல் நால்’’

# 9. நாடியின் வேறுபட்ட நிலைகள்

## 9.1 . நாடி நடை காணப்படாத நிலைமைகள்

❖ “குறையாக ஸ்திரிபோகர் நெடுநோயாளர்
குதிரை மதகரியேறி நடந்தேள் எயித்தோர்
நிறைவாக உண்டிடமுந்தோர் லாகிரி கொண்டோர்
நீர்ப்பாடு நீரிழிவு குறைநோயுற்றோர்
முறையாக வீக்கமுள்ளோர் அத்திக்காய்வால்
முசித்திளைத்தோர் பயமுற்றோர் கிலேசல் கொண்டோர்
அறையம லோட்டமுற்றோர் கிலேசல்கொண்டோர்
அறப்புசித்தோர் தாதுவருப்புறமாட்டாதே”

❖ “மாட்பாங்கி யான பெய்கள் கெர்ப்பத்தோர்க்கு
மாதாவிடயானோர்க்கும் பெரும்பாட்டோர்க்கும்
தோட்டாசை யதிகவிசாரத்தினோர்க்கும்
தேயித்தெண்ணெய்முழுகினார்குஞ் சினங்கொண்டோர்க்கும்
வாட்டாசை தன்னியர்மேல் பராக்கானோர்க்கும்
வயசாக இளைத்தோர்க்கு மதவிகொண்டோர்க்கும்
மோட்டத்து மாக்களுந் தாது பார்த்த
முறையாக வருநாடி வகுப்பறாதே”

❖ “வகுப்பாகக்கை முறிந்தோர் சோகை கொண்டோர்
மாண்டபிணந் தனைத் தொட்டோர் வாந்திவிக்கல்
தொகுப்பாக இவை எடுத்தேர் விரத முற்றோர்
சோனை மழை தனில் நனைந்தோர் காசங்கீதம்
பகுப்பாக வேபடித்தோர் களறி சுற்றிப்
பலநாட்டியங்கள் மிக வாடி எயித்தோர்
மிகுப்பாக சுவாசமதை அடக்கினோர்க்கும்
விரைவான நாடியது விளங்குந் தானே”.

(பொ.ள்) -

- நீண்ட காலம் நோயால் வருந்தினவர்
- குதிரையேற்றம், யானையேற்றம் நடந்து இளைத்தவர்
- அதிகம் உண்டோன்
- மது அருந்தினோர்
- நீர்பாடு, நீரழிவு, பெருவியாதி முதலியவற்றால் வருந்துவோர்.

- வீக்கம், அஸ்தி சுரத்தால் இளைத்தவர்.
- பயம் கொண்டோர்.
- விடம் தீண்டினோர்.
- ஓட்டம்
- அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டோர்.
- அதிக தூக்கம்.
- ஸ்தூலம் பெருத்தவர்கள்.
- என்பு முறிந்தோர்.
- வாந்தி, விக்கல், சோகை.
- விரதம் இருந்தோர்.
- மழையில் நனைந்தோர்.
- சங்கீதம் படித்தோர்.
- நாட்டியம் ஆடி களைத்தோர்.
- சுவாச பந்தனம் செய்தோர்.

என்பதால் பாலர் கயரோகி,காசரோகி,தரித்திரர், சிற்றின்பஞ்செய்த பேர்கள், தண்ணீரில் முழ்கியோர்இவர்களது நாடி நடையின் உண்மைசரியாக புலனாக.

❖ "செப்பவே நாடி தானுஞ்
சிறப்புடன் பார்க்கும் போதில்
ஓப்புடன் பூமியிற்கை
உளன்றிக் கொண்டிருக்கும் போதும்
துப்புறன் காலைக் கட்டிக்
சோர்வடைந்திருக்கும்போதும்
கெப்பவே கட்டி ருந்தால்
சிதையுடன் நாடி தோன்றா"

என்பதால் கரத்தை ஊன்றிக்கொண்டிருக்கும்
போதும் காலைக்கட்டிக்கொண்டிருக்கும்
போதும் நாடிபார்க்கும் ஸ்நானத்திற்கு
மேல் யாதொரு கட்டியிருந்தாலும்,
நாடி நடை சரியாக் தோன்றாது.

"எண்ணெயின் தலையின் போது
மீதமாய் நின்றபோதும்
உண்ணும் நல்லுணவின் போது "

### 9.2 நாடி நடை படபடத்து ஓடும் நிலமைகள்

(அத நாடிநடை சரியாகப் புலனாகாத நிலை)

❖ "வெயிலிலே எப்போதும் நடக்கையாலும்
வெம்பசி யிலாகிரி களருந்தலாலும்
துயிய வெய்யில் புகையிலை கள் கொள்ளலாலும்
துடர்ந்த சுர நித்திரைகள் கொள்ளலாலும்
நையவே கோபமது கொள்ளலாலும்
நாள்தோறும் ரத்தமது வடிதலாலும்
துய்யவே நாடிநடை தீர்க்கமாகத்
துடிதுடித்துப் படபடத்து ஓடுந்தானே"

(நோய் நாடல் - 1)

(பொ.ள்) -

- ❖ வெயிலில் திரிவோர்.
- ❖ பசி நேரத்தில் சூடான உணவு, மதுபானம் அருந்தினோர்.
- ❖ புகையிலை பாவிப்போர்.
- ❖ விடாச்சுரம்.
- ❖ நித்திரை பங்கம்.
- ❖ மனச்சஞ்சலம்.
- ❖ அதிக பலவீனம்.
- ❖ இரத்தம் வடிதல்.

### 9.3. நாடி நடை சரியாகத் தோன்றாத சில நிலைகள்

### 9.3.1

"கொண்டிடவே கயரோகி காசரோகி
குறிப்பாகச் சிற்றின்பம் செய்த பேர்கள்
அன்டிடவே தரித்திரர்கள் விருத்தர் பாலர்
அன்பாகத் தண்ணீரில் முழ்கினோர்கள்
கொண்டிடவே இவர்களது உறுப்பின் தாது
கூறவே முடியாது எவர்க்குக் கிட்டும்
பண்டிடவே இப்பரீட்சை யார்தான் காண்பார்
பராபரத்தின் மகிமையிது பாரு பாரே"

(பொ.ள்) -

- ❖ அதிகபசி
- ❖ விசனம்

- குளிர்
- அதிக நித்திரை.
- விருத்தர்.
- பாலர்
- கசரோகி.
- தண்ணீரில் மூழ்கியோர்.
- தலை முழுகுதல்.
- உடல் குளிர்தல். (நாடிசக்கிரம்)

### 9.3.2 அங்காதிபாதத்தில் நாடி நிதானிக்கக் கூடாதோர் என…..

வசியாம லோடியிளைத் திட்ட பேர்க்கும்
வாகனமா திகளேறி மெலிந்து ளோர்க்கும்
பசியாக நெடுநேர மிருந்த பேர்க்கும்
பலநாளும் வியாதியினி லழுந்தி னேர்க்கும்
நசையுண்ட வுடனெண்ணெய் முழுகி னோர்க்கு
நன்னயமாய்க் கீதங்கள் பாடினோர்க்கும்
கசிவான மழைநீரின் முழுகிநோர்க்குங்
கடிதான வேலைசெய்து களைகொண் டோர்க்கும்

(பொ-ள்)

அதிகமாக ஓடியவர்களுக்கும் வாகனங்களிலேறிச் சவாரி செய்தவர்களுக்கும், பசியோடிருப்பவர்களுக்கும், அதிக நாட்கள் நோயால் க்'டப்படுபவர்களுக்கும், சாப்பிட்டவுடன் நீராடியவர் களுக்கும், அதிக நேரம் பாடியவர்களுக்கும், மழையிலே நனைந்து திரிந்தவர்களுக்கும், கடுமையான வேலை செய்து சோர்வுற்றவர்களுக்கும் என்பதாகும்.

களையாகக் கூத்துவிளை யாடி னோர்க்குங்
கன்னியரைக் கூடியின்பங் களித்து ளோக்கும்
இழிவான பழிக்கஞ்சி யேங்கி னோர்க்கு
மிரவுசய னத்தினிலே துயில்செய் வோர்க்கும்
ஒழியாத பேதிகண்டு கழிந்திட் டோர்கு
முயர்ந்துகுதித் திட்டறிவு மயங்கி னோர்க்கும்
அழிவான மரணந்தான் கிட்டி னோர்க்கு
மறிந்திடுவாய் நாடிசம னாகுமன்றே

(பொ-ள்)

கூத்தாடிக் களைத்தவர்களுக்கும், அதிகமான உடலுறவு கொண்டவர்களுக்கும், குற்றச் செயல்களைச் செய்து ஏக்கம் கொண்டவர்களுக்கும், கல்லின் மேல் நித்திரை கொண்டவர்களுக்கும், அதிகமாக வயிற்றுப் போக்குக் கொண்டவர்களுக்கும், குதித்து குதித்து விழுந்து அறிவு மயங்கியவர்களுக்கும், மரணம் கிட்டியவர்களுக்கும், நாடி ஒரே விதமாக நடக்கும் என்பதாகும். (அங்காதிபாதம்)

### 9.3.3 நாடி விகல்பம் பற்றி வைத்திய சிந்தாமணி கூறுவது

அப்பியங்பஸ்தானம் செய்தவர்களுக்கும், அளவுக்கு மிஞ்சஜ ஆகாரம் கொண்டவர்களுக்கும், கொடிய வெயிலில் அலைந்து திரிந்தவர்களுக்கும், குதிரை சவாரி செய்தவர்களுக்கும், காமவிடாயாலாவிங்கனம் செய்தர்களுக்கும், கஞ்சா, அபினி, மதுபான முதலியவைகளால் புத்தி சபலப்பட்ரெுக்கின்றவர்களுக்கும், மச்சங்களை அதிகமாக உண்டர்களுக்கும், வாசியை யடக்கியாளுகின்ற யோகிகட்கும், நாடி சரிவரத் தோன்றாது.

## 9.4 நோயில்லாமல் வாத பித்த கப பிரகோபித்திருப்பது போன்ற நாடியுள்ள சந்தர்பங்கள்

ஸங்கத்தில் அதிக விருப்பம் இருக்கும் காலத்திலும் ஸங்கத்திற்குப் பிறகும் வழி நடந்த பிறகும் "வாதம்" பிரகோபமடைந்திருப்பதாகக் காணப்படும்.

மலம் சிறுநீர் என்பவற்றின் வேகத்தை அடக்கியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உடம்பில் முள் முதலிய ஏறியவர்களுக்கு "பித்தம்" பிரகோபமடைந்திருப்பதாகக் காணப்படும்.

தூக்கம் மயக்கமுள்ளோர்க்கும் உடம்பில் கொழுப்பு அதிகம் உள்ளோர் திருப்தியாக சாப்பிட்டவர்கள் கர்வம் மிகுந்தவருக்கும் "கபம்" பிரகோபமடைந்திருப்பதாகக் காணப்படும்.

## 9..5 நாடி மிகத் தளர்ந்து அசைவற்ற போன்ற நிலையிலிருந்தாலும் மறுபடியும் நல்ல ஸ்திரத்திற்கு வரக்கூடிய சந்தர்பங்கள்.

- பாரம் தூக்கியோர்
- அடி வாங்கியோர்
- மூர்ச்சையடைந்தோர்
- கீழே விழுந்தவன்
- பேதிபோனோர்
- பயப்பட்டோர்
- துக்கப்பட்டோர்

- ➢ அதிக சுக்கில நட்டமானவன்
- ➢ சங்காதோ'ம் ஏற்பட்டிருத்தல்
- ➢ எலும்பு முறிந்து ஒன்றன் மேல் ஒன்று ஏறியவன்

(நாடி சக்கிரம்)

### 9.6 அசாத்தியம் போல் தோன்றினாலும் பயமில்லை என சொல்லக் கூடிய நாடி நடை

- ✓ வாத பித்த கப நாடி அதன் இடத்தை விட்டு விலகாதிருந்தால்.
- ✓ நாடி மிகவும் மெலிந்திருப்பினும் இடத்தை விட்டு விலகாதிருத்தல்.
- ✓ தெளிவாக பிரிந்து பேசும் நாடி நடை
- ✓ சுத்தமான போக்கு
- ✓ தன் இடத்தை விட்டு விலகாமை.
- ✓ இங்குமங்கும் அலையாமலிருத்தல்.
- ✓ அதிக மெதுதன்மையடைந்திருத்தல்

(நாடி சக்கிரம்)

### 9.7 நாடி நடை நிற்கும் சமயங்கள்

- புஜங்கட்கு கெடதி எற்பட்ட போதும்
- புஜங்கள் வளைந்து விட்ட போதும்
- அடிபட்ட போதும்
- பயமுறுத்தப்பட்ட போதும்
- தேகப்பயிற்சியின் போதும்
- அட்டகாசம் செய்து சிரிக்கும் போதும்

(மேற்கூறிய நிலைகளில் நாடித்துடிப்பு பிரகாசத்தை அடையாது)

(நாடி சக்கிரம்)

### 9.8 நாடி மென்மையடையும் சமயமும் பலமடையும் சமயமும்

- ❖ குளிரினால் வேதனைப்படுபவன்.
- ❖ உடம்பு நனைந்து ஸ்திதியில் உள்ளவன்.

இந்நிலையில் நாடி மென்மையடைந்து தூங்கியெழுந்த பிறகு பலமுள்ளதாக இருக்கும்

### 9.9 ப்ராண பயமில்லை என்பதைக் காட்டும் நாடி நடை

நாடி நடை அதனதன் ஸ்தானத்தில் மாறாமல் ஒரே கால அளவுள்ளதாகக் குறைந்து 30 தடவையாவது நடக்குமானல் ப்ராணபயமில்லை.

### 9.10 நாடிப் பரீட்சைக்குத் தகாத சமையம்

ஸ்நானஞ்செய்தவுடனும், போசனம்பண்ணினவுடனும் நாசியிலாவது தொண்டையிலாவது அடைந்திருக்குஞ் சளிக்கட்டை வெளிப்படுத்தச் செய்த பிரயாசனத்தினாற் ரேகமிளைப் புற்றிருக்கும் பொழுதும், அதிக பசி, தாகம், வெய்யில் வெப்பம் இவற்றால் வருந்திக் களைத்திருக்கும் பொழுதும், நித்திரைவிட்டெழுந்தவுடனும், சரீர அப்பியாசத்திற்குத் தகுந்த தென்று தெவாக்ஷி எடுத்தல், மல்யுத்தஞ்செய்தல் இவைகளினாலும், தேகஉழைப்ப முதலிய பழக்கவழக்கமான செய்கைளினாலும், மனம் வியாகுலமடைந்திருக்கும்பொழுதும் நாடியைப் பரீட்சைபண்ணி யறிவது புத்தியல்ல. அந்தச் சமையல்களில் இரத்தோட்டம் நிதானமில்லாத தன்மையை யடைந்திருக்கிறதானபடியால், வைத்தியன் ஆராய்ந்தறிந்து நிதானஞ் செய்ய வேண்டியது.

தைலம் பொருந்தியிருக்கும்பொழுதும், மைதுனாந்தத்திலும், போசனாந்தத்திலும், நாடி ஊர்த்துவ நோக்கமாக ஆரம்பித்து நடை கொள்ளுகிறது. இப்படியான வேளைகளில் பரிகாரி தன்னுடைய அனுபவப்படி நடத்திவந்த நல்ல குணங்களையும், கெட்ட குணமென்று விளங்கிக் கொள்ளாமற் றன்னுடைய அனுபவப்படி வைத்தியத்தை நடத்தி நிதானஞ் செய்துகொள்ள வேண்டியது.

ஸ்தானவேளையிலும் உறக்கஞ்செய்யும்பொழுதும், பசி பட்டினியாயிருக்கும்பொழுதும், தண்ணீரருந்தும்பொழுதும், வசியம் முதலிய இடுமருந்து தேகத்திற் சேருகிறபொழுதும், ஒரு பெண்ணைக் கற்பழிக்கிறபொழுதும் இருதயத்தில் நடக்க வேண்டிய ஒழுங்கு கபடமான செயலுடையதாகையால் அந்த நேரங்களில் நாடியின் நடை பாகனுக்கடங்காத குதிரையின் நடைக்குச் சமானமானதாயிருக்கும்.

தேக உறுதிக்குரிய அப்பியாசங்களில், இரத்தம் நரம்பின் துவாரங்களில் தகித்து நடக்கிறது. அது உடனே தேகத்திற் செறிந்து அனுகூலமுடையதாகிறது. அப்பொழுது நாடியும் வேறுவேறான குணத்தை எடுக்கிறது: கோநிமேஷம் ஓய்ந்திருக்கிறது. தைல அப்பியங்கம் மனசுக்கு இதமான நேத்திரங்களிற் செறிந்து சுகத்தைக் கொடுக்கிறது. ஸ்திரி சம்போக முடிவிலும், உணவு உட்கொள்ளும்பொழுதும் இருதயவியக்க மோய்ந்திருக்கிறது, முயற்சிகொள்ளுகிறது. இந்தக் காரணங்களினாலே நாடிப்பரீட்சை

பண்ணுதற்குரிய நேரப்பொருத்தமும், பருவப்பெயர்ச்சி காலங்களுக்கேற்றபடியும் மாற்றி எடுக்க வேண்டி நேரிடுகிறது. முத்தேதிகளின் சித்தம் நற்குண நற்செய்கைகளிற் புலாதியடைந்திருக்கின்ற பொழுது, தேகத்தில் சூரியன் நாடி யுறுதியாய் நடக்கிறது. அப்பொழுது மனசுக்குரிய

இயல்பான குணம் ஒரு விதமான தளப்பமும் அமைதியுமாம். இதனை வேறுவிதமாகச் சொல்லப்புகின் வாத நாடி ரோகபேதங்களுக்குப் பொருந்தத் தோற்றியுந் தோற்றாமலும் நடக்கிறது. நாடி நடையையறிதற்கு நியமனம் பண்ணப்பட்ட நேரங்களில் ரோகங்கள் தங்களுக்குரிய குணத்தை மாற்றி இன்னொரு குணத்தையடைகிறதும், விடுகிறதுமாக விருக்கிற சமயமாம். அதனாற்றான் நாடிதர்சனத்திற்கு அந்தந்த நேரங்கள் நியமிக்கப்பட்டன.

தைலாப்பியங்கம், நித்திரை இவற்றின் சார்பான வேறு குணங்களிலும், போசனத்தின் பின்பும் மத்தியில் விட்டெடுக்கிற விளம்பனத்திலும் நாடி, ஒரு ஒடுக்கமான வாய்க்காலிற் செல்லும் நீரோட்டமானது செல்லவியலாமற் குறுக்கே யோடுகிற தன்மை போல நடக்கிறதென்று கூறுகிறார்.

### 9.11 சமான்ய பூர்வசுக சாத்தியத்வம்

எப்பொழுதும் தாதுக்களுக்குரிய பிரமாணம் அல்லது மாத்திரை அப்பியாசக் குறிப்பில் தோற்றாமனின்று விட்டவுடனே நாடி தன்னடையும் அடங்கியிருக்கிறது; அந்த மாதிரியான குணங்களில் நடக்கிற நாடிஞானத்தைச் சுகசாத்தியமல்லாத அசாத்தியமென்று சொல்வது புத்தியல்ல.

நாடிநடை தெளிந்து, சிதைந்து நடக்கும் பொழுது தோஷங்களும் தெறித்து அல்லது சிதைவுற்று கோசத்தில் அடைகிறது. அப்பொழுது இருதயமானது மனரகிதமான அனுகூலத்தையுடையதோ அல்லது துர்ச்சகுனமான சங்கேதத்தைப் பொருத்தியதோ என்பவைகளைச் சொல்வது சந்தேகம். அவைகளுடைய சேர்க்கை, பிரிவினால் உத்தம, மத்திம ஹீனபிரகிருதிகள் பிறவிக்குரிய தன்மை. இருதயகோசம் அசைவற்றிருக்கும் பொழுது கெட்ட குணமான நோய்க்குக் காரணமாயிருக்கிறது. நாடி கற்பனைக்கு உற்பத்தி காரணமாக அங்குஷ்ட மூலத்திற்றோற்றுகின்ற தவறுகள் விருத்தியடையாத காயம் சுகசாத்தியப்பலனை அடைகிறது.(ஞானேந்திரியம் பழுதடையாமலிருக்க வேண்டும்) இருதய ஸ்தானத்தில் நடக்க வேண்டிய கம்பிதமானது ஒருமணியடியின் ஓசைக்குச் சமானமானதாக ஒலிக்கிற குணம் அல்லது ஓர் நதிப்பெருக்கின் இரைச்சலைப் போல் எழுத்தில்லாவோசைக்குச் சமானமானதாக ஒலிக்கிற குணம், தேகத்திற்குத் தீமையைச் செய்கிற காரணங்களைத் தெரிவித்தது.

தேகமானது கால வித்தியாசங்களுக்குத் தக்கபடியும், பருவாந்தங்களில் உரிய நிலைமைமாறி அடுத்த பருவத்தை எடுக்கின்ற இனமாற்றத்திற்குப் பொருத்தமானபடியும் மூன்று தோஷங்களிலும் ஏதுமொன்று அதிகரிக்கிறபொழுது, வாதந்தானே மேற்கொண்டு நின்று, நிமித்தம் பார்ப்பிக்கப்படுபவருடைய கையிற்றன்னுடைய நடையை அசைந்து நடக்க, பித்தம் அக்கினி முறைமையை ஒழுங்காய்ப் பேசக் கபநாடியும் நிலையற்று

நடக்கிறது. பித்தம் அதிக்கிரமித்து நடைகொள்ளமுன் அதினுடைய உற்பத்தியை வாதநாடியின் நடையிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதான உரோகம் கட்டசாத்தியத்திற்குரியது. திருத்தமில்லாத இருதயகோசம் தீமையின் காரணமான விபரீத கருத்தையுடையதாய சாத்தியமான அறிவையடைகிறது. பிறவியில் வித்தியாசமில்லாத அங்குஷ்ட மூலகாரணமான நாடி “பைரவி” எப்பொழுதும் பாலியம், யௌவனம், விருத்தாப்பியம் என்பனவாகிய பருவங்களினீற்றில் இணங்கி நடக்கிற தோஷங்களுக்குரிய ப்ரகோபம் சாந்தமாகிப் பின்னும் பின்னும் பேசுகிறது.

### 9.12 அசாத்தியத்வம்

அசாத்தியக் குணத்தில் அமைச்சன் முறை பிறழ்ந்து பலனற்று நீசத்தன்மையான உருபேற்ற மந்த கமனமாக ஆறி நடக்கிறது; அல்லாமலும் திடுகூறாய்ப் புசலடிப்பது போலெழும்பி நின்று விடுகிறது; நீசத்துவமான உருபேற்ற தன்மை அதிக சூக்சுமமாகித் தரித்துத் தரித்து நின்று கரநேத்திரக் குிப்புக்கு அதர்சனமாகிறது. எப்பொழுதும் ஸ்தானத்திற் சூஷ்மரூபமாகவும் தோற்றாமலும் நடக்கிற தமனி எதிர்நோக்கிக் குதித்துப் பின்வாங்கி நிலைதளம்பித் திக்கித் திக்கிப் போகிறது. மறுபடியும் சோதனாங்குலியிற் றோற்றிக் குதிப்புற்று நடக்கிறது. ஓராற்றின் நீரோட்டத்தைப் போல் கடகடென்றோடுகிறது. தமனியின் நடையை அமுக்கி வைத்திருந்த சிலேஷ்மம் தீவிரகெதியாயெழும்புகிறது; தமனி உறுக்கி நடக்கிறதினால் இருதயத்தின் சுபாவத்தன்மை அனேகவிதமான குணங்களுக்கு ஏதுவாகிச் சன்னிபாதம் அசாத்தியமாகிறது.

அசாத்தியக் குணத்தில், ஸ்பந்தனகாரண மச்சத்தைக் கொடுக்கிறது; வியாகுலமான குணங்களுண்டாகிறது; மயங்கிக் கலந்த நாடி தீவிரகெதியுடைய சிலேஷ்மம் குளிரடைந்து கையிலே தரித்துத் தரித்து எதிர்நோக்கி நெறிவழுவி நிலையற்று அலையுற்ற நடக்கிறது. கோவுக்குச் சிறப்பாகவுடைய பொதுத்தன்மை முற்றாயிழந்து உருவமும் வேற்றுமையை அடைகிறது.

இருதய இயல்பு விழித்து உகைத்தலுக்கரிய இனமான பொருள் எதுவோ அதனையும் உணருகிறதில்லை. தன்னிஷ்டமாகிற நாடி நீசத்தன்மை அடைந்து துரிதகெதியை எடுக்கிறது. அங்குஷ்ட மூலத்தினின்று கற்பிக்கிற தானப்பொருள் பழுதடைகிறது. அசாத்திய இலட்சணத்திற கூறிய பல காரணங்களினாலும் கூர்ம வடிவான நாடியினருட்சிக்குரிய நிதானமாத்திரையும் ஒரு மாறுதலான சுழற்சியை எடுக்கிறது. அது போலவே நாடியின் சந்தித்துவாரத்திலும், பிரத்தியக்ஷமான கோஜத்திலும் பெறுகிறது. அது

உதரவன்னியின் சொலிப்பினால் உண்டான அபப்பிரயோசனத்தைக் கைக்கும் மார்பிற்கும் ஆக மாறிமாறிச் சிக்ஷை செய்கிறது. அப்படியே கருப்பாசய நிலைமையையும் நினைக்க வேண்டியது. பெரும்பான்மை மிருத்து காரணங்களை அங்குஷ்ட மூலத்திலும், இரத்தாசயத் துடிப்பிலும் பார்த்தறிய வேண்டும்.

அசாத்தியரோகிக்குத் தேகத்தில் அதிக தாபமுண்டாணிருத்தல், சீதளத்தன்மை அதிகரித்து நாடி குளிரடைந்திருத்தல், அல்லது நாடி உஷ்ணமதிகரித்தல், உச்சி அதிக உஷ்ணமாயிருத்தல், அப்படியே நடை தேய்ந்து தேய்ந்தில்லாமலற்றுப் போதல், திரிதோஷங்களும் ஸ்பந்தனமாகிற நாடியுடன் பலமற்றதாகின்றன.

சன்னிபாத அவஸ்தைகளின் மரண காலங்களில் தாதோட்ட நாடியின் சமலக்கணம் பிறழ்ந்து நடை நிலையற்றுத் தளம்புகிறது. அசாத்திய அதிசார ரோகங்களில், ஹாதபைரவி அதிகமான வியர்வையை உண்டாக்குகிறது. தேகத்திற்குப் பலனையழிக்கிற அக்கினியின் குணம் கெட்டு, நாடி நியுன குணமாக தடபலக்ஷண முடையதாயடிக்கிறது.

நிலையற்ற பித்தநாடியின் நடை பிரபஞ்சனகதியிலும், பிரபஞ்சனகதி உறுதியான சிலேஷ்ம நாடியிலுந் தோற்றிப் பேதமுடையவைகளாய்ச் சுழன்று, உரிய தானம் பிறழ்ந்து திரிதல், பகுத்தறிய இயலாத நிதானமற்ற நடையாயிருக்கிறது. அந்த நடை சக்கரவாகமென்னும் ஓர் பறவையைப் போல், அல்லது ஒரு சக்கரத்தின் சுற்றைப்போற் கீழ்மேலாகச் சுழன்று அச்சமுண்டாகக்கூடிய தீவிர வேகமாய் நடக்கிறது; ஒரு சமயம் நடவாமலும் தரிக்கிறது. அவைகளைச் சிலேஷ்மம் பாரிபாலித்து வைத்திருந்து பல்வேறு வகைப்படுத்தி மயில்நடைக்கு உவமையாகவாவது அல்லது குயிலநடைக்க உவமையாகவாவது பொருந்த நடக்கிற இலணம் சூஷ்மத்தன்மையதிகரித்து அசாத்தியமாகிறது. துமனியின் சம்வாதம், புடமிட்டறியப்படுபவருடைய கையிலே, சுகநடையைத் தோற்றாது.

ஸ்நாயுவின் நடை அரூபதொந்தமானது; அசாத்தியமாகும் பொழுது அதினுடைய நடை சூஷ்மகதியில் வக்கிரரூபமாகத் தோற்றி தேகத்தில் வருத்தி மனசைக் கலக்கிறது.

நெறிதவறிய அந்தநாடி அதிக தோஷத்தை அடைகிறது. அது சகித்துச் செல்கிற மாம்ஸநீர் உட்டுழையின் கண் மாம்ஸரூபமான செயலைக் காண்பிக்கிறது. நடைதேய்ந்து சிலவழிகிறது. இந்த மாம்ஸரூபம் நரம்பின் துவாரத்தையும், சலன நேத்திரத்தையும் நெருக்குகிதினால், வைத்தியஞ் செய்விக்கிறவனுக்கு நடைபெறுகிற நாடியின் பூர்வாந்தங்களை வளைந்த

காரணமாயும், நாடி முற்றாய்ச் சிறுத்தும் இருக்கிறது. பிரபங்சன கதியும் அசாத்தியமாகிறது.

தலைமீது பாரமேற்றி நடந்து நடக்க இயலாமலிளைத்து மூர்ச்சையுற்றிருப்பவனுக்கும், பூதப் பிரேத பைசாச காரணங்களினாற் பயந்து திகிலடைந்திருப்பவனுக்கும், திரவியம், மனைவி,மகார் முதலிய ஸ்திதிகளையிழந்த காரணங்களினால் பிரமையுற்றிருப்பவனுக்கும் பிரமாணத்திற்கு மிஞ்சிய உணவினால் உதரம் விம்மி வமுளி பிதுங்கி விஷமித்துப் பிறண்டிக் கொண்டிருப்பவனுக்கும், மூர்ச்சையுற்றடங்கிப் பிரதேசத்திற்குச் சரியாயிருப்பவனுக்கும், நாடி அசாத்தியம் போலிருந்தாலும் அது அசாத்தியமல்ல. இவர்களுக்குத் தகுந்த சிகிச்சையைக் கொண்டு உயிரைத் தப்ப வைக்க வேண்டியது. இதின் காரணம் யாதெனின் எலும்பின் பொருத்துக்களிற் சொல்லப்பட்ட நாடியினிரத்தோட்டம் தங்கி உபத்திரவத்தைக் கொடுத்துப் பின் சுகத்தைக் கொடுப்பது.

ஊயரமான ஸ்தானங்களிலிருந்து வழுந்து அறிவு மயங்கி இருப்பவனுக்கும், சில துஷ்டமிருகங்களுடன் போராடிக் காயப்பட்டு மூர்ச்சையுற்றிருப்பவனுக்கும், அதிசாரரோகிக்கும் இராசயக்ஷமரோகிக்கும், மதனயுத்தத்தில் தாழ்மையடைப்பட்ட சுக்ர ஷீணகனுக்கும், நாடி நடை அதிக ஷீணமுடையதாய்த் தோற்றுகிறது. அப்படித் தோற்றினாலும் மரணத்தையுண்டு பண்ண மாட்டாது. சில சமயம், அசாத்தியத்திற்குத் திரும்பினாலும், அந்தக் குணங்களை நிவர்த்தி செய்யக்கூடிய மந்திர, தந்திர, அவுஷதம் முதலிய சிகிச்சைகளினால் வசப்படும்.

(நாடி தர்ப்பணம்)

# 10. நோய்களில் நாடி நடை

## 10.1 நாடி சக்கரத்தில் கூறப்பட்டவை

**1.சுரம்**

- ❖ நாடி மெதுவாக சென்றாலும் தத்திக் குதிப்பது போன்ற கதியுடன்இருக்கும்.
- ❖ உட்டணம் வேகம்.

**2.சன்னி பாத சுரம்**

- ❖ எல்லா வித நடைகளும் மாறி மாறி வருவதோடு பல வித வேதனைகளும் ஏற்படும்.

**4. வாத சுர நாடி**

- ❖ வளைவாக நாடிநடை ஸ்திரமாக நிலைத்து நிற்காமலும் குளிர்ந்தும் இருக்கும்.

**5. பித்த சுர நாடி**

- ❖ துரிதமாகவும் தடையின்றியும் செல்லும்.
- ❖ நீண்டதாகவும் வேகமுள்ளதாகவும் இருக்கும்.

**6. கப சுர நாடி**

- ❖ மெதுவாகவும் நடையுள்ளதாகவும் ஒரே இடத்தில் நிலையாக நிற்பதாகவும் குளிர்ச்சியுள்ளதாகவும் வழவழப்புள்ளதாகவும் இருக்கும்.

**7. வாத பித்த சுர நாடி**

- ❖ ஒரே இடத்தில் நிலையாக நிற்காமலும் அலை போன்ற நடையுள்ளதாகவும் பருமனாக கெட்டியாக இருக்கும்.

**8. வாத கப சுர நாடி**

- ❖ சிறிது உ்ணம் மெதுவாகவும்
- ❖ கபம் குறைவாகவும் வாதம் அதிகமாகவும் இருப்பின் கைக்கு சுறுசுறுப்பாகவும் வறட்சியாகவும் இருக்கும்.

**9. பித்த கப சுர நாடி**

- ❖ மெல்லியாதகவும் குளிர்ச்சியாகவும் ஒரே இடத்தில் இருக்கும்.

**10. பூத சுர நாடி**

- ❖ ஆற்று ஜலம் வேகமாக சமுத்திரத்திற்கு செல்வது போல் இருக்கும்.

**11. முறை சுர நாடி**

- ❖ ஒரு நாள் விட்டு ஒரு நாள் - நாடி தன் இடத்தை விட்டு சிறிது தூரம் சென்று சிறிது நேரத்தின் பின் தன் இடத்திற்கு திரும்பி வரும்.
- ❖ 2 இ3இ 4 நாட்களுக்கு ஒரு முறை - நாடி உ"ணத்தோடு தன் இடத்தை விட்டு சிறிது அகன்று சுழித்துக் கொண்டு பிறகு தன் இடத்துக்கு வரும்.

**12. கோபம்.'. காமத்திலேற்பட்ட சுரம்**

- ❖ ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்டு உ"ணமாகவும் அதிவேகமாகவும் இருக்கும்.

13. **அஜீரணத்தில்**

- ❖ ஆமாசயத்தில் எனின் கல்லுப் போலவும் மெதுவாகவும் நகர்ந்து கொண்டு இருக்கும்.
- ❖ பக்குவாசயத்தில் எனின் நாடி மெலிந்து மெதுவாக நகர்ந்தும் செல்லும்.
- ❖ அஜீரணத்தோடு இரத்த பிரகோபமும் இருப்பின் நாடி உ"ணமாகவும் கனமாகவும் இருக்கும்.

அக்கினி பலம் அதிகமாக இருப்பின் நாடி இலேசாகவும் உ"ணமாகவும் இருக்கும்

**14. கிரஹணி**

- ❖ காலில் உள்ள நாடியில் அன்ன நடை
- ❖ கையில் உள்ள நாடியில் தவளை குதிப்பது போன்ற நடை

**15. பொருமல்**

- ❖ பருத்த நாடி

**16. சூல ரோகம்**

- ❖ வாத சூலை - அதிக வளைவு
- ❖ பித்த சூலை - அதிக உ"ணம்
- ❖ பொருமலுடன் கூடிய சூலை - நல்ல பு்'டி

**17. பிரமமேகம் (நீரிழிவு)**

- ❖ நாடி முடிச்சுடையதாகவும்
- ❖ ஆமதே‘ம் சேர்ந்திருப்பின் அதி உ‘ணமாகவும் இருக்கும்.

**18. விசம் மலபந்தம் குன்மம்**

- ❖ விசம் பரவும் போது நாடி மேலே கிளம்புவது போலவும்
- ❖ மலபந்தம் குன்மம் நாடி வளைவாகவும் இருக்கும்.

19. **இரத்த பித்தம்**

- ❖ மெதுவாகவும் கெட்டியாகவும் நேராகவும் நடக்கும்.

**20. அஸ்மா**

- ❖ யுானை

21. **மதுமயக்கம்**

- ❖ மெல்லிய கெட்டியான மெதுவான நடை

**22. மூலரோகம்**

- ❖ நாடி ஒரே இடத்தில் நிலையாகவும் சில சமயம் வளைவாகவும் சில சமயம் நேராகவும் இருக்கும்.

**23. அதிசாரம்**

- ❖ மெதுவாக இருக்கும்.

24. **குளிர்காலம்**

- ❖ அட்டை போல இருக்கும்.

**25. பாண்டு**

- ❖ ஒரே இடத்தில் நிலையில்லாமல் கடுமையாக சில சமயம் மறைந்தும் சில சமயம் வெளிப்பட்டும் இருக்கும்.

26. **குட்டம்**

- ❖ நாடி கெட்டியாக ஒரே இடத்தில் நிலையுள்ளதாக முன் செல்லாதது போன்றும் நடக்கும்.

**27. வாதரோகம்**

- ❖ நாடி ஒரே இடத்தில் நிலையாக நடக்கும்.

**28. கபரோகம்**

❖ துடிப்புடன் மெல்லியதாகவும் வேகமாகவும் நடையுடையதாகவும் காணப்படும்.

29. **சிரரோகம்**

❖ இங்கு பித்த கபங்களில் எதன் பிரகோபத்தினால் நோய் ஏற்பட்டது என அறிந்து கொண்டு ஊகித்து கை நாடியையும் பார்த்து நாடியின் நிதானத்தை கண்டு கொள்ள வேண்டும்.

**30. இரத்த சம்பந்தமான வியாதி**

❖ வலது கையிலும் இடது கையிலும் நாடி கெட்டியாகவும் உ'‘ணமாகவும் இருக்கும்.

31. **உட்சுரம்**

❖ உடம்பு சீதமாயும் நாடி உ'‘ணமாகவும் இருக்கும்.

(நாடி சக்கிரம்)

## 10.2 நாடி தர்ப்பணத்தில் நோய் நிலையில் நாடியைப்பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது…

### அவபத்திய நாடியின் குணம்

சுரமுண்டாயிருக்கும் பொழுது தயிரளாவிய உணவையுட் கொண்டால், நாடி உஷ்ணகுணம் பொருந்தி விஷமித்து வேகமாய் நடக்கிறது.

**3. சுரப்பூர்வ ரூபம்**

சுரகுணத்திலே பூர்வரூபமான நாடி, அந்தந்தக் குணங்களுக்குப் பொருத்தமானபடி, நடையிலக்கணத்தை மாற்றி எடுக்கிறது.

பொதுவாக, தேகத்திற்றோற்றும் வருந்தங்களில், நாடியின் யதார்த்தகதி, தூலம், மந்தம், வக்கிரம், யுத்தசன்னத்தக்காரரின் சாந்தமான நடை, ஒரு குட்டனின் குதிப்பைப் போன்ற நடை, மந்தி, தேரை, மிதவையின் அசைவோடுவமையான நடை, கரணப்புறா, தாரா என்று சொல்லப்பட்ட இவைகளின் இலக்ஷணத்திற்குச் சில பொருத்தமான உவமையாகவும், அந்தர் கதியாகவும், பலமுடையதாகவும், பலமற்றதாகவும் தோற்றி நடக்கிறது.

சுரதாபமான பூதப்பிரேத குறைபாடுகளில், நாடி; ப்லவ கதியுவமையிற் ப்ரபலமுடையதாக நடக்கிறது. சுரதாபமதிகரிக்கிற நியாயத்திற் குணங்களிரட்டித்து நடக்கி சகல வேதனையைக காட்டுகிறது.

சுரத்தின் வேகமான குணம், சந்தித் துவாரங்களிற் சஞ்சரித்து விபரீதப்பட்டு உவாதிப்படுகிற அங்கனைக்குச் சுகமும், உவாதியும் கணப்பொழுதில் மாறிமாறி எடுக்கிறது. அது, ஆசனமார்க்கமாக ஊடுருவி நடக்கிற வேதனை கணப்பொழுதில் மாறித் தேகத்திற் றோற்றி மாறிக் ''கோ'' சூழ்ச்சியுற்றிருக்கிற துவாரங்களை அடைகிறது. நூடி மந்தநடை, தோஷமொய்ப்பில் மேடகாநடை; இந்தநடை இருதய வியக்கத்திற்குரிய சலனதுவாரங்களையுமடைகிறது. அப்பொழுது தாபச்சுரப் பூர்வகுணங்கடோற்றிக் கடுமைப்படுத்தினால் நாடி ஒரு நீர்நிலையின் ஆட்டத்திற்கொப்பாக அல்லது குதிரையின் போக்கைப்போல் நடக்கிது. இது தோஷகரத்தில் விபரீதமான குணம். அந்தத் தாபத்தின் குணம் யோனி மார்க்கமாக ஊடுருவிக் கருக்குழியில் வித்தியாசமான குணத்தை உண்டாக்கிறது; நாடி மேடகாசாலம் அப்பொழுது சந்திபாதசுரத்திற்குரிய பூர்வனுணங்களுண்டாகிறது, இதில் நாடியின் பிரமாணம் அநேக விதமான வேற்றுமையடைந்து கையிலே சுழன்று நடக்கிறது.

**பக்குவரூப சுரபேதநாடி**

சுரம் கோபங்கொள்ளும்பொழுது தமனி நிலையற்ற உஷ்ணமுடையதாகத் தோற்றி வேகமாய் நடக்கிறது. அந்த உஷ்ணம் நெடுக நிலைத்திராது.

சுரதருணத்தில் நாடி வித்தியாசமான குணங்களைப் புணருகிற வருத்தக்காரருக்கு ஊறுசெய்கிறதற்கு அதுவும் வித்தியாசமான உருபுணர்ந்து சுரத்தைத் தூண்டிவிடுகிது. அப்பொழுது நாடி விரக தாபமுள்ளதாய் நடக்கிறது. விரகதாபக்குணம் கோபங் கொள்ளும் பொழுது நாடி; ஆடவனுக்கு வக்கிரகதியாயும் அரிவைக்கு அலைவுற்றும் நடக்கிறது.

உஷ்ணமடங்கிப் பித்தமதிகரிக்கிற நியாயம் சுரத்தின் குணத்தோடு பொருந்திய அளவான அனலேயன்றிப் பித்தத்திற்குள்ள விழைவல்ல. சுரகோபத்தில் தராநாடி அழன்று வேகமான நடைகொள்ளுகிற நியாயமுடையது.

அந்தச்சுரம் விஷமாக்கினியினால் உண்டானதே அல்லாமல் உத்தமாக்கினியின் காரணமானதல்ல. இந்தக் காரணங்களினால், ஓதை சுரத்திலுள்ள நல்ல குணமான வேகங்களை மாற்றி நாடியையும் விஷமகுணமடையச் செய்து திருத்துகிறது. அப்பொழுது நாடி வேகவான் நாடிக்குச் சமானமாய் நடக்கிறது.

சுரரோகத்திலே நாடி குடிலப்பட்டுக் கெதியாய் நடத்தல், ஸ்திரி சம்பவமான விகார குணமுண்டாயிருக்கும் பொழுது, மைதுனாந்த அல்கலில் வாதநாடி,

பலவகை நடைக்குச் சமானமாக நடக்கிறது. காலையில் விளக்கின் சுடரைப்போற்றளம்பி நடக்கிறது.

சுரதருணத்தில் காமமுற்றவருக்குச் சுரம் கோபங்கொண்டு உக்கிரமானால், தலைமகனுக்கு நாடி வக்கிரகதியாகவும், தலைமகளுக்கு நாடி நிலைதளம்பியும் நடக்குமென்று முன்னருங் கூறப்பட்டது. லீலை முடிந்தவருடைய கைநாடி, பிச்சநாடி என்னும் பிராணியின் நடைக்கு உவமையாக இரவுக்கு நடந்து, காலையில் தீபத்தின் சிகைக்கு ஒப்பான குறியுடையதாய் மந்தநடையாக நடக்கிறது.

**வாதசுரநாடி**

சகஜவாதச் சுரத்தில், நாடி சாந்தமானதாயும், சூக்சுமமானதாயும், உறுதியானதாயும், ஆறுதலானதாயும் தோற்றி நடக்கிறது; மிருதுசூமத்தில் உறுதியான மந்தநடை என்றும் சொல்லலாம்.

தீவிரவாதச்சுரத்தில், நாடி ஸ்பந்தன காரணமும், நடையும் ˙தூலரூபமாகத் தோற்றிக் கடினமாயும், சீக்கிரமாயும் நடக்கிறது. சீதள ஸ்பர்ஸவாதச் சுரத்தில் வக்கிரகதியாகவும் சபல நடையாகவும் நடக்கிறது. குடிலகதியிற் சபலநடையென்றும் சொல்லலாம்.

**பித்தசுர நாடி**

பித்தச் சுரத்தில் நாடி; தீவிரமாயும், நிதானமானதாயும், தீர்க்காகாரமாயும், கெதியுடையதாயும் தோற்றி நடக்கிறது. அந்த நாடி தானே சீக்கிரவேகமாய் நடக்கும்பொழுது, இலக்கணப் பொருத்தமில்லாமல், முன் பின்னாகவும், பின் முன்னாகவும் விபரீதப்பட்டால், அந்தச்சுரம் விஷமித்து நாடி ஸ்பந்தன காரணமும் குரூரமாக அசைகிறது. ஸ்பந்தன காரணம திடத்துவமாக அசையும்பொழுது விஷமிக்கிற குணமுண்டாக மாட்டாது. நாடி தீர்க்க நடையில் தீவிரகெதியடையதாயும், கபடமற்றதாயும் நடக்கிறதென்றும் சொல்லலாம்.

பித்தச்சுரமழிகிறகுணத்தில், நாடியோட்டத்தின் கெதி, இயக்கத்திற்குரிய துவாரத்தை யூடுருவி மாறிச் சுத்தமான நிதான விலணத்தை எடுக்கிறது. நெடுநடை கடின நடைகளுக்கு முதன்மையான குணங்கள் விருத்தியாகிச் சீக்கிரமான நடை அங்குஷ்ட மூலத்திற்றுடித்து நடக்கிறது.

**சிலேஷ்மசுர நாடி**

கபதோஷத்தாற் பிறந்த சுரத்தில், நாடி ஒரு மெல்லிய இளைக்குச் சமானமாகத் தோற்றி மந்தமாகவும், சீதளமுடையதாகவும் நடக்கிறது. மல அசீரணத்தில் அதிகமாய் வளாவி நடக்கிதில்லை. சுரம் சொஸ்தமாகும் வரையும், இரத்தோட்டம் ஆரம்பத்திலும் இப்படியே நடைபெறுகிறது. சுரகோபம் மாறும் பொழுது தந்து சமாகாரத்திற் சூக்சுமகதியுடையதாய் நடக்கிறது. அந்த நடை கெதியற்ற வேகமாகவுறழ்ந்து சீதளகுணமான பலனையுண்டாக்கி அழிக்கிறது. மல அசீரணத்தில் நாடி நடை அதிகமாய் வளாவிச் சர்ப்ப கதியைப் போனடந்தால் அது நல்ல குணமல்ல.

சிலேஷ்மம் அதிகரித்துண்டாகிற சுரத்தில் நாடி மந்தகதியிற் குளிருடையதாய் வழுக்கி, வழுக்கி உறுதியான நடையுடன் நடக்கிறதென்று கிரந்த கர்த்தா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

**தொந்தசுரங்கள் - வாதபித்தசுரநாடி**

வாதபித்தசுரத்தில் நாடியின் நடை; சஞ்சலம், தரலம், தூலம், கடினம் என்று சொல்லப்பட்ட குணற்களை ரூபிக்கிறது. பதறிச் சூனியமான தூலநடையிற் கடினமாக நடக்கிறது.

**சிலேஷ்ம வாதசுரநாடி**

சிலேஷ்ம வாதச்சுரத்தில், இருதயத்தில் நிலையாத வெறுப்புடையதாய் மந்தநடையாக நடக்கிறதென்று சொல்லலாம்.

மந்தசிலேஷ்மாதி வாய்வுப் பொருமலுள்ள சுரங்களில், நாடி எப்பொழுதும் சூடுடையதாயும், நிதானமற்றதாயும் நடக்கிறது. ரூக்சை வாதத்தில் பிக்கிற நாடிநடை, பித்தம் வெப்பித்த காரணமாய் இருக்கலாம்.

**பித்தசிலேஷ்ம சுரநாடி**

பித்தச் சுலேஷ்மச் சுரத்தில் நாடி சூக்சுமரூபமாகவும், சீத குணமாகவும், உறுதியுடன் நடக்கிறது.(சூக்சுமகதியிற் குளிருடையதும் திடமாயும் நடக்கிறதென்றும் சொல்லலாம்)

**வாதசிலேஷ்ம சுரநாடி**

வாதக்கபச்சுர ரோகிக்கு, இரத்தாசயத்தில் அழற்சி உடையதாய், அங்குஷ்ட மூலத்திற் சாந்தமான நடையுடையதாய் நாடி நடக்கிறது.

சுட்டிய வாதசிலேஷ்மச் சுரத்தில் நடைகுலைந்து, சிலேட்டுமத்தின் நடை குறைந்த மாத்திரையுடையதாகவும், வாதத்தின் நடை கூடின

மாத்திரையுடையதாகவும் மாறிக் கபவாதஅமனப் பெயர் பெற்றுப் பயனையளிக்கிற குணம் தீவிரதாபமுடையதாய் ஒன்றுடன் ஒன்றிணங்கி நடவாத எதிரிடையான கடினத் தன்மையாய் அங்குஷ்ட மூலத்தில் நிலைத்து நடக்கின்றன. அதில் வாயு அளவிறந்த கோபத்தைப் பிரதியுபகாரமாக அங்கீகரித்துக் கெட்ட குணமுடையதாய்ச் சஞ்சரிக்கிறதாக அறியப்படுகிறது. பித்தத்தின் நல்ல குணமான சஞ்சரிப்பு ஓய்ந்திருக்கிறது. இந்தக் காரணங்களினால் நாடிநடை முற்றுமுழுதாயக் குடிலப்பட்டு அதிக தூலகதி உடையதாய் நடக்கிறது.

பித்தச் சிலேஷ்மச்சுரத்தில், நாடி அற்ப சீதமுடையதாயும் தோற்றி, அங்குஷ்டமூலத்தில் வனைந்தும் வனையாமல் விடுகிதுமான பொருள்பட நடக்கிறது.

### ருதிரகோபச் சுரநாடி

சுரத்தின் உனுக்கிரமமான வேகத்தினாலுண்டான வேதனை நிலைபெற்றிருந்தாலும், சந்தாப வெந்தழலிலிருந்து வருந்துதுனிலைத்திருந்தாலும் அந்த மக்களுக்குரிய இரத்த பூரிதை மாசுற்று இரத்தத்தைக் கொண்டு செல்கிற நாடி மத்திமை விரலிற்றாங்கி நடக்கிறது.

ஸந்தாபிதமான உஷ்ணம் நிலைத்து வருந்துகிறவருக்கு நாடி மத்திமைவிரல், பிரவேச ஸ்தானத்தில் இனமாற்றாகிறது. ‘‘கோ’’ யத்தனமாகிற தடபலக்ஷணம் இந்திரிய உணர்ச்சி நரம்பில் அறியப்படுகிறது. அது, வாதாதிதோஷங்கள் மூன்றும் உதிரத்தை உஷ்ணமுடையதாய்ப் புழுங்கச்செய்த குணமதிகரித்து, இந்திரிய உணர்ச்சி நரம்பில் அந்தத் தோஷமடைந்த இரத்தத்தின் பலனைப் பிரகாசிக்கச் செய்த காரணமாம்.

## ஆகந்துக சுரபேதங்களின் நாடி நிதானம்

### பூதஜ்வர நாடி

பூதச்சுரத்தில் நாடி ஒரு நீரோட்டத்தின் தன்மைபோற் சிதறி, எழுப்பத்திற்குத் தக்கபடி அது இரத்தாசயத்திற் பிரவேசிக்கிற இரத்தத்தின் சென்னியாகிய முதல் இரத்தத்தை சதுர்த்தாம் சங்களடக்கிக் கொள்ளுகிற நியாயத்தினால், இரத்தமோட வேண்டிய ஸ்பந்தன காரணமும், பூர்வவேக கெதியுடையதாகிறதாம்.

இரத்தோட்டத்தின் அபவாதத்தினால்,‘‘கோ’’ நிகழுகிற சம்வாரகிரியை ஓய்கிறது. பாசம் ஞானேந்திரியங்களை ஒரு ஆபரணம் வழைகிறது போல மறைக்கிறது. அப்பொழுது ஞானேந்திரியங்கள் உணர்ச்சியற்றிருக்கிறது.

கோவின் விகசிதமென்னும் கிரியையின் பகுதி, ஞானேந்திரியங்களை நோக்க, ஞானேந்திரியங்கள் பற்றியிருந்த சம்குசிதம் கோவுடன் தாயமாகி இருதய ஸ்தானத்தில் நடைபெறவேண்டிய விகசித சம்வாரம் கிரமமாய் நிகழப்பெறும். பூதச்சுரம் குணமாகிறபொழுது நாடியின் வேகமான குணம் முற்றுமுழுதாய் மாறி நிலைதளம்பி நடக்கும். ஆகந்துகம் என்பது இடையிற் சம்பவித்தது.

**சந்ததாதி சுரபேதம்**

சந்ததாதி சுரபேதங்களில், தோஷங்கள் கோளாறடைந்த நியாயம், குறிக்கப்படாத அர்த்தத்தைக் கொடுக்கிற பிரமாணம்; அந்தத் தானத்தில் குணங்களைச் செய்கிறது; அங்கே நடைகொள்ளுகிற இயக்கம் மிக ஆழமாயுடையது.

**ஏகாகீகச்சுரம், துவியாகீகச்சுரம், திரியாகீகச்சுரம்,சாதுர்த்திகசுரம், பஞ்சாகீகசுரம்**

ஏகாகீகச்சுரத்தில் நாடி கபடமற்ற நடை; இலக்கணம் பொருத்தமில்லாத பிரமாணமான பயனையளிக்கிற ஸ்தானத்தில் வளருகிற நடையை மிக ஆராய்ந்தறிய வேண்டியது. அது கண மாத்திரைக்கொருமுறை விட்டுவிட்டெடுத்து மோகித்து விஷமச்சுரமாகிறது.

துவியாகிகம், திரியாகிகம், சாதுர்த்திகம என்னும் பெயரை உடைய இந்தச் சுரங்களில் வாதமதிகரித்தல், நாடிசுழன்று வக்கிர கதியையடைகிறது. இவைகளிலும் சுட்டிய ஏகாகீகச் சுரத்திலும் குணத்தை மாற்றியெடுக்கிறநாடி பயிற்றி விடுகிற செயல் பாரிச பாகங்களிற் போய் நிமிஷத்திற்கொருமுறை வித்தியாசமான குணங்களை உண்டாக்கி விடுகிறது. சாதுர்த்திக விபரீதம் அல்லது பஞ்சாகீகசுரம் இதிலும் விஷமச்சுரத்திலும் உஷ்ணமதிகரித்தால் நாடி கெதியாய் நடக்கிறது. மேற்கூறிய சுரங்களிலுமப்படி.

கூறிய சுரங்களில் இரத்தோட்டம் நடைபெறுகிற மாத்திரையின் காரணமாக நாடி வண்டைப் போலெழுப்பியும், பன்றியின் நடையைப்போல் தூக்கமாயும், மானின் நடையைப்போல் குதிப்புற்றும் நடக்கும்.

சுரரோகங்களில் உஷ்ணம் அதிகரித்துக் கோபங்கொள்ளும் பொழுது ஸ்திரிக்குத் தராநாடி அழன்ற வேகமுடைய கெதியாய் நடக்கிறது. அல்லது ஊர்த்துவ வேகமுடையதாய் நடக்கிறதென்றும் சொல்லலாம். ஆப்பொழுது துக்கம், கோபம், தீவிரமான வேதனை, காமஇச்சை, மனோசிந்தனை, அலுப்பு, ஆயாசம், தளர்ச்சி, ஆடல்பாடல் முதலிய விகாரச்சேட்டையான குணங்கள்

கண்டால் நாடியிரத்தோட்டத்தின் சீர், க்ஷீணகதியாக ஊடுருவி அதிக மந்தகமனமான நடையுடையதாய் நடக்கிறது.

குறித்துக் கூறிய குணங்கள் கொடுக்குமவுஷத வகையினால் வசமாகிற தன்மையிலும், வேகரோகிக்கும் நாடி அந்தச் சுரத்தின் கோபமான குணம் மாறி ஓதி காரணமாக வேறு குணத்தை எடுக்கிறது. அப்பொழுது நாடி சாந்தமான குணமாய் நடக்கிறது. குரோதம், காமபாதம், பயம், சிந்தனை, விசனம், ஆயாசம், களை; ஆடல், பாடல், நகைப்பு முதலிய விகாரச் சேட்டையான குணங்கள் மாறும்பொழுதும் நாடியின் நடை தொய்ந்து உறழ்ந்து அங்குஷ்ட மூலத்தில் ஆறுதலான மந்தநடையாக நடக்கிறது.( ஓதி என்பது இரத்தம் தங்குமிடங்களினின்று பலனைக் கொடுப்பது)

**தாகபூருவம், சுரரகிதமனுஷர் நாடி நடையின் வேற்றுமை**

தாபம் ஆரம்பமாகிறபொழுது நாடி; அதிகப் பிரயாசையினாற் களைத்துத் தொய்ந்தவன் நாடியைப்போலும், அச்சமுற்றவன் நாடியைப்போலும், சிலநேரம் பறையடியின் துடியைப்போலும், சிலநேரம் ஒரு கருமத்தைச் சிந்தித்து விட்டுவிட்டுத் தியானிப்பவன் நாடிநடையைப்போலும், வாசித்தலிற் புலனை விட்டுக் கலங்கினவன் நாடிநடையைப்போலும், சோககுணமுடையவன் நாடியைப்போலும் ' நடக்கிறது. சுரரகிதமாகிறவருக்கு இப்படி அனேக விதமாய்ப் பொருந்தி நடக்கிறது.

**செகராசசேகரம்**

…….. பித்தநாடி யணினநடை கொள்ளுமாயின்; வேதனையான காச்சல் மீழுமோர் சாமம் என்ப.

**நாடி சூத்திரம்**

**ஐயும் பித்து மடர்ந்துற நிற்கில்**

**மேய்யில் வியாதி மீழுகா ளெட்டே என்ப.**

**அசீரணரூப நிதானம்**

அசீரணரோகங்களில் பொதுவாய் நாடி கடினத்தன்மையான நடையையுடையது போலவும், பூரணப்பட்டது போலவும், பூரணப்படாத தன்மை கிரக்தியில் மறைந்திருப்பது போலவும், சாந்தமாகிற சுத்தமான நடையையுடையது போலவும், கெதியுடையது போலவும், உத்தாபமுடையது போலவும் தோற்றி எழும்பி நடக்கிறது.

**ஆமாசீரணம் பக்குவாசீரண ரோகங்களின் நாடி**

ஏகநடையிரட்டித்துப் பேதமடைகிறதில்லை; நாடி கடினம், இரத்தம் செல்லுநெறியில் இரசம் கலந்து சடமினமாற்றாகிறதில்லை; இந்த ஸ்திதியிற் சிலேஷ்மநாடி தொந்தியாமற் பலமற்றதாயும், களங்கமற்ற சீக்கிர வேகமுடையதாயும் நடக்கிறது.

அக்கினிமந்தம், அசீரணம், அலஸம், விஷூசிகாரோகம் என்பவைகளுக்கு சிலேஷ்மம் மிகுந்திருக்கும் பொழுது வமன அவுஷதமும், பித்தக்குணம் அதிகரித்திருக்கும் பொழுது மிருது விரேசன அவுஷதமும், வாததோஷம் அதிகரித்திருக்கும் பொழுது ஸ்வேதனச் சிகிச்சைகளையும் செய்து ரோகியைச் சுகப்படுத்த வேண்டியது. ஆனால் இந்தச் சிகிச்சைகள் ஒன்றுக்கொன்று எதிரிடையானவைகள். பத்தியா பத்திய விதியிற் கூறப்பட்டது.

**அசீரணரோக விசேட அளவை**

பக்குவாசீரணத்தில், நாடி பூரணப்படாத தன்மையாயும், அதிக ஆறுதலான நடையாயும் ஜடத்திற்றாங்கி கடக்கிறது. இரத்தம் பூரணநாடியிற் பிரசவித்து உஷ்ணத்தைக் கொடுக்கிறது. கருப்பவதிக்கு ஆமத்தோடொற்றுமையுடையது. கோதை அதமாதம குணங்களைத் தணித்துச் சாந்தமாகிறது. கருப்பஸ்திரிகளுக்கு அதிகரிக்கிற சோம்பலான குணமும் சாந்தியாகிறது.

ஸ்திரிகைநாடி இரத்த பூரணமான நாடியில் வெப்புடையதாய் அங்குஷ்ட மூலத்தை அடைகிறது. அது ஆமவாதகிநாடி நடைக்கு ஒப்பாக நடக்கிறது.

இலகு போசனத்தை எடுக்கிற, தீப்தாக்கினியுடைய பெண்ணுக்கு, நாடி வேகவதியின் கொள்கையைப்போலே நடக்கிறது மந்தாக்கினியுடையவருக்கும், தாதுப்பெலனற்றவருக்கும் நாடி மந்த நடையாகத் தோற்றுகிறது. அக்கினிபேதம மந்தமாகத் தாது உட்கி நோய் கொண்டவருக்கு நாடி அன்னப்புள்ளின் பழுதடைந்த நடையைப்போற்றோற்றி நடக்கிறது. அக்கினிபேதம் என்பது உதராக்கினியின் பேதங்கள்.

ஜடராக்கினியனைத்தும் மந்தாக்கினித் தன்மையாகிக் கோவை நெருங்கியிருந்தால் அவர் துர்ப்பலமான வாழ்வையுடையவராய்ப் பூமியிற் சீவிப்பவராம்.

சீதமும், இரத்தமும் விபரீதப்பட்டுண்டாகிற வருத்தம் பூரணம் அடையாத குணத்தில் நிகழுகிற நாடியின் நிதானம் அக்கிரபாகம்; நாடியின் இலக்ஷணம் சர்ப்பகதி அது போலவே; அது போலவே உணவுப் பிரியவீனம், உபவாசமிரண்டிலும் நாடி அக்கிரபாகமாகச் சர்ப்பத்தின் எழுச்சிக்கு ஆரம்பமான பூர்வச் செயலுக்குவமையாகப் பொருந்தி நடக்கிறது.

சீதமும், இரத்தமும் விபரீதப்படாமல் நடக்கிற வருத்தங்களில் நாடி அங்குஷ்டமூலத்திற் பேசாமலிருக்கிறபொழுது திரிதோஷங்களும் ஒன்றுடனொன்று சேர்ந்து தேகத்தை வித்தியாசப்படுத்திச் சதுர்த்தாம்சத்தைப் போஷிக்கின்றன. சர்ப்பத்தின் பூருவகதிக்கு மேற்பிரமாணமான படகதிக்கு உவமையாக நடக்கிறது. அந்தப் படகதியிலக்கணத்தை அக்கிரபாகம் அங்குஷ்டமூலத்திற்கீகிறது. இந்த விதமாகவே திருஷ்டான்னம் முதலிய தோஷமான போசனங்களை உண்டவருக்கும் , உபவாசமாயிருப்பவருக்கும்; நாடியிலக்ஷணத்திற்கமைந்த சர்ப்பகதி அக்கிரபாகமாக மாறி அங்கிருந்து சமலக்ஷணமான அங்குஷ்ட மூலத்திற்கு அளிக்கிறது.

**கிரகணிரோக நாடி**

பாதத்தில் ஓதிம நடையைப்போலும், கையில் தவளையின் பாய்ச்சலைப் போலும் குதித்து நடக்கிறது. பாதத்திலும், பைரவி நாடி அன்னப்பறவையின் உத்தமமான நடைக்குப் போலியாயும், பாதநாடி தவளையின் பாய்ச்சலுக்கு உவமையாயும் தளம்பி நடக்கிறதாம். உதராக்கினி மந்தமாகிற பொழுதும், தொந்தக் கிரகணி அதிசாரமுண்டாகிற பொழுதும் நாடியுள்ளடங்கியிருத்தல்.

ஆந்திரத்தைப் பற்றிய மலக்கழிச்சலில், நாடி ஆறுதலாய் நடக்கிறதில்லை; துண்டிக்கிற தன்மைபோற் சாந்தமாகிறது. கிரகணி ரோகத்திற்றெளிவாயப் பேசுகிறது. மற்று மதிசார பேதங்களில் தொய்ந்த நடையாக நடக்கிறது. விளம்பிகா சீரணத்தில் நாடிநடை, ப்லவகதி சிலவேளை நபுஞ்சகருக்கு ஆமாதி சாரத்தில், நாடி துாலகதியாகத் தோற்றுகிறது.

நிர்க்கிரகிக்கப்பட்ட தொந்தக்கிரகணி ரோகங்களில் கோநிமேஷம் பயிற்றுகிற உபராந்தம், சாந்தகுணமான வேகமான நடையை அளிக்கிறது. அதிசாரரோகம் மாறினவருக்கு உபாரந்தம் பலவீனப்படுகிறது.

**விஷூசிகா ரோகத்தை அறிதல்**

மல, மூத்திரங்கள் தங்கிச் செல்லும் பாதையில் உண்டாகிற மலபந்த மாறுபாடுகளிலும், விஷூசிகாரோகமென்னும், தேவதைக் குறைபாட்டினால் நிகழுகின்ற நாடியின் நடை தவளையைப் போல் நடக்கிறது.

சூரியன் நாடியின் மேலான வேகம் போய் மலசலம் பிரிந்து செல்லுமருநெறியினின்று சுஷ்க குணத்தையுண்டாக்கிப் பந்திக்கச் செய்கிறது. கேவலகுணமாகின்றன. கோ, தகுதியற்ற இயக்கமுடையதாகிறது. விஷூசிகாரேபகம் மாறும்பொழுதும் நாடி தவளையைப் போல் நடக்கிறது.

அதிசாரரோகங்களில், நாபிஸ்தானத்திற்குரிய அக்கினியின் பிரமாணம் குறைந்து நீசத்தன்மையடைந்து அர்த்த சந்திரனுக்குச் சமானமாய் வருகிறதாம். அதை உத்தம குணத்திற்கு கொண்டு வர, பத்தியவிதியிற் கூறிய தீபன பதார்த்தங்களும், இலகு போசனமும் கொடுத்துத் திருத்த வேண்டியது.

**விடுசிகைரோக விசிநடை தோற்றா**

திடையிடையுளதென் றியம்புதுஞ்சுருதி என்பது நாடித்திரட்டு.

**ஆநாக மூத்திரக் கிரீச்சர ரோகநாடி**

தங்கித் தங்கி அடிக்கடி இறங்கும் மூத்திர ரோகத்திலும், மூத்திரகிரிச்சரத்திலும், நாடி குரூரமான குறுநடை. அங்குட்ட மூலகாரணம் பாரி.

(பாரி என்பது – சிங்கேற்றுக்கும், மனைவிக்கும் பெயர்)

**அரவுபோனாடிமூன்று மங்கது சுற்றிநின்றாற்**
**கருதியசலக்கழிச்ச லென்றுதான் கருதலாமே.**
என்று தன்வந்தரீயம் கூறும்.

**சூலரோக நாடி**

சூலரோகங்களில், சிரையிலோடுகிற இரத்தம், பெரும்பான்மை அரிசியவிந்த கொதி சலத்திற்குச் சமமாகச் சூடுடையதாக ஓடுகிறது. ஆனபடியால் அந்த நாடியினிலக்ஷணம் வாதசூலையில் மருத்துக் குதிப்புற்றுச் சோதனாங்குலிக்க வக்கிரரூபமான இலணத்தைக் காட்டி நடக்கிறது. அப்படியே நெந்த நடை

பித்த சூலையிலும் மாறாமல் அதிகரிக்கிறது சாத்தியமல்லாத சூலையில் புஷ்டி ரூபமாக வளர்கிறது.

அனிலச்சூலை குணம்மாறி வேறு குணத்தை உண்டாக்கிற நியாயத்தில் பிரதான வாயுவினாலதிகரித்த சூட்டின் காரணம் நாடியின் அதிஷ்டிப்பு மிகுந்த வளையுடையதாய் அசையுந் தன்மையுடையதாகிறது. அனலச்சூலை குணம் மாறி மறுகுணத்தை எடுக்கிற நியாயத்திலும், அந்த வாயுவினால் அதிகரித்தி சூட்டின் காரணம். ஆமசூலம் குணம் மாறி வேறு குணமுண்டாகிற நியாயத்திலும் அந்த அதிஷ்டிப்புக்குரிய இயக்கம் வக்கிரவடிவமாக வளர்ந்து இணைந்து நடக்கிறது.

(அதிஷ்டிப்பு இரத்ஆூதஷ்ட ஆரம்பத்திற்கு முதன்மையாகவுள்ளது)

**பிரமேகரோக நாடி**

பிரமேகரோகத்தில் நாடி கிரந்திவடிவமாகத் தோற்றுகிறது. வேறுவிதமான குற்றங்களில் கபம் சூடுள்ள தன்மையாக நடக்கிறது. அந்தரங்கமான ஆகாரம் சுகமடைந்த வருத்தத்தையும் மறுபடியுண்டாக்கிறது. ஆமவாதரோகநாடி, ருதுகால பேதங்களில், உஷ்ணமான குணமாய் நடக்கிறது.

**விஷ்டம்பாகுன்ம ரோகம், சர்ப்பவிஷம், அர்த்திதவாதரோகம்இகைகளின் நாடி**

விஷ்டம்பா குன்மரோகத்திலும், விஷமுடைய சர்ப்பத்தாற் தீண்டப்பெற்ற காயங்களிலும் நடக்கிற செயல் வக்கிரரூபம் அதிகமான வாதப்பிடிப்புகளில் நாடி கீணோக்கிற நடையை உடையது. கண்டத்தின் மேற்பகுதியான ஊர்த்துவாங்கத்திலுள்ள பிரதானமான உறுப்புக்களில் யாதுமொன்றாயினும் பேதித்திருக்கிற குணத்தில் நாடி மேனோக்கி எழும்பி நடக்கிறது.

சர்ப்பாரிட்டத்திலும், கரவிடபக்ஷணத்திலும் உண்டாகிற நவீனமான குணங்களில், பிரத்தியக்ஷமாகிற “கோ” மறைத்திருக்கிறது. அந்தக் காலத்திற்குரிய நாடியைச் சரீரக் குறிப்பினால் அறிந்து கொள்ள வேண்டியது. அறிவு முதலியவுணர்ச்சியில்லாத குணம் ஓதை காரணமாகவுண்டானது. இந்தப் பீடைகளிலுண்டாகிற நவீனமான குணம் என்னவோ, அது உண்டாகிற முக்கிய காரணத்தை வைத்தியர் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டியது.

விஷ்டம்ப குன்மரோகம் குணங்களைக் காட்டியடைவது போலவே விஷபக்ஷணிகையிலும் பொருளுடையதாகிறது. விபரீதமாயுண்டாகிற குணங்களை ஓதி மூலமாக அறிந்துகொள்ள வேண்டியது. துர்ச்செயலான

நாடியின் நடை வக்கிராகாரமான பயனையளிக்கிற காரணம், இனனபிதானநாடி ஈவுகொடாததன்மை. பீடையின் குணம் மாறி வேறு வேறு குணங்களையனுபவிக்கிற நியாயம் மேலுமதிகமான வாயுவின் பிரகோபத்தினால், கோநிமேடமும் ஓய்ந்திருக்கிறது. அல்லது கோநிமேடம் மூடமாயிருக்கிறதென்றும் சொல்லலாம். நாடியிலோடுகிற இரத்தம் தடித்து நாடியை வீங்கச் செய்து இருதயத்தைத் தாக்கிக் கீணோக்கிக் தாங்கிச் செல்கிறது. இந்த விதமாகச் சூரியனாடி பிரிந்து தேகத்திற்குச் சுக பூரணமான வாழ்வின் ˙பலனைக் கொடாத பூருவரூபமான பீடையை உடைய அங்கபேதமான குணங்களில் நாடி பொதுவாய் ஊர்த்துவ கதியாய் நடக்கிறது.

**குன்மரோக நாடியளவையின் விசேஷமான** இலக்ஷணம்

நாடி; தனக்குரிய நடையினிலக்கணத்தைக் கையிலே தோற்றுவித்துப் பலனையளிக்கிற ஸ்தானத்தில் அங்குலி ஸ்பரிசத்திற்கு அந்தநடை பதறி எதிரிமேற்செல்ல முயலும் ஒரு பாராவதத்தின் நடையைப்போல் நடக்கிறது.

பதறும் குணமான கம்பிதக் கிரியையை யூகிக்கிற ‘‘கோ’’ குன்மரோக நாடியில் வழுக்களைத் திருத்தி நடத்துகிறதாம்.

**பகந்தரரோகத்தை அறிதல்**

உறுப்பில் விரணரோகங்கள் கடுமைப்படுத்துகிறபொழுது பீடையுற்ற பித்தமிடையிற்றோற்றி நடந்தது. பகந்தரரோகவினங்களைப் பற்றிய இயற்கையான நிலைமையில், நாடி விரணம் பிறக்கிறது. அதில் பீடிக்கப்பட்ட வாய்வு இடையில் சேர்ந்து உக்கிரமான குணத்தையுண்டாக்கி நரம்பின் கண் அக்கினிரூபமான குணத்தை அதிகரிக்கச் செய்கிறது.

விரணரோகிக்கு அபக்குவமான கெட்டகுணம் மாறிப் பக்குவமான குணத்தையெடுக்கிற பொழுது, நாடியின் நடை பித்த குணமான நாடியின் தன்மைபோலப் பலனையளிக்கிறது. பகந்தர ரோகத்தைப் போலவே நாடி விரணரோககுணம் மாறுகிறதும், அனுபவிக்கிறதும். இந்த நாடிகளுடைய நடை வாதநாடியின் தன்மையைப்போலொத்து அதிக உஷ்ணமான குணத்தை உண்டாக்கிறது.

**சர்த்தி, ஸல்யவிரணம், அபிகாதம், பிரதரம்முதலியவைகளை அறியும் நாடி**

வமனரோகம், ஸல்யவிரணம், கல்முள் கட்டைகளால் அறையுண்ட காயங்களிலும், ஸ்மரணை கெட்டிருக்கையில் விட்டனுபவிக்கிற ஏதுக்கள், மலசலந் தங்கிச் செல்லும் மார்க்கத்திற் போய்அடைத்து, பதைப்புறுவித்த குணத்தின் தன்மையிலும், நாடியின் நடை அரிஷ்டத்தினின்று தப்பிய தமனி; அது சிலேஷ்மம் மேற்கொள்ள முன். விண்நாகவேகமான கெதியையுடையதென்று சொல்லப்படுகிறது. ஸ்திரிகளுக்குண்டாகிற பிரதராதி, மாதாந்தரப் பூப்பையறிகிற கிரமத்தவறுகளிலும் நாடி இப்படி நடக்கிறது.

சுட்டிய ரோகிகளுக்குரிய நாடி சிலேஷ்மம் பிரத்தியக்ஷமான பொழுதும் தமனி நாடியில் ஷத்திரம் முதலிய அரிஷ்டம் தாக்கப்பெற்றாலும், அன்னம், ககீ என்பனவாகிய இந்தப் பறவைகளின் நடைகளுக்குச் சமானமாகநடக்கிறது. இந்த விதமாகவே ஸ்திரிகளுக்கு உண்டாகிற பிரதரம், அசிர்க்கரம் முதலிய ரோகங்களிலும் அறிய வேண்டியது.

(நாடி தர்ப்பணம்

**10.3 அங்காதிபாதத்தில் நோய் நிலையில் மூன்று நாடிகளின் பேதம் பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது…..**

சமனாக வாதபித்தமொத்தே நிற்றல்
தங்கிய நோய் எட்டா நாள் தண்ணில் தீரும்
கமனாக மீறியே பதறி யோடிற்
கனத்தநோய் வருமெனவே கண்டு கொள்வாய்
எமனாக வையமுடன் வாத மீறி
னீரைந்து நாழிகையி லிடரே செய்யும்
திமனாகப் பித்தமது பிசகா தோடிற்
றீங்கில்லை நெடுநாளிற் றீருந் தானே
(பொ-ள்)

வாதம் பித்தம் சமனாக ஒத்து நின்றால் எட்டு நாட்களுக்குள் நோய்கள் தீர்ந்துவிடும் ஒன்றேயொன்று மீறி அவதியுற்று நிற்குமானால் அதிகமான நோய் வரும். வாதமும் சிலேற்பனமும் அதிகரித்து நிற்குமானால் பத்து நாளிகைக்குள் தீமையைச் செய்யும். பித்தம் மாறாது நின்றோடுமானால் தீமையில் நோய் நீண்ட நாட்கள் சென்று தீரும் என்பதாகும்.

தானென்ற பித்தமுட னையங் கூடிச்
சமனாக நடந்திடுகி னோய்க டீரும்
தேரணவே நாகம்போற் றத்து மாகிற்
சுறுக்காகத் தீராது தொந்த மாகும்

பேணவே மதயானை போலே நிற்கிற்
        பிடிப்புடனே பலநோய்க ளெடுப்ப தாகும்
நாணவே சிறுத்தடங்கி யூரு மாகி
        னாளொன்றின் மரணமென நாடு வாயே

(பொ-ள்)

பித்தமும், சிலேற்பனமும் சரிசரியாக நடந்தால் நோயாளியின் நோய் சுகமாகும். இவற்றில் ஏதேனுமொன்று அதிகரித்து நின்றால் நோய் தீராது கொல்லும், பித்தமானது தனித்து நடுங்கி ஓடுமானால் மூளையில் சூடு பிடித்துத் தீர்ந்து போவதற்கு நாட்செல்லும் என்பதாகும்.

காணவே வாதந்தானாமை போலக்
        கடுமையின்றி நடந்திடுகில் வியாதிதீரும்
தோணவே காகம் போல் தத்துமாகில்
        சுறுக்காகத்தீராது தொந்தமாகும்
பேணவே மதயானை போல நிற்கில்
        பிடிப்புடனே பல நோய்களடுப்பதாகும்.
நாணவே சிறுத்தடங்கி யூருமாகில்
        நாளொன்றிற் சாவதென நாடுவாயே

(பொ-ள்)

வாதமானது ஆமை போல நடந்தால் நோய் தீரும் காகத்தைப் போல தந்தி நடந்தால் சீக்கிரத்தில் தீரமாட்டாது. மதயானையைப் போல் நடந்தால் வாதப்பிடிப்போடு பலவிதமான நோய்கள் உண்டாகும். அடக்கமாக ஊர்ந்து நடந்தால் ஒரு நாளில் மரணம் வருமென்பதாகும்.

நாடுவாய் பித்தமது கொதித்துப் பாய்ந்து
        நற்றவளை போனிற்கிற் பயித்திய மாகும்
வாடியே புரண்டுமயில் போலே யோடில்
        வந்தபிணி விரைவாக மாறுமென்க
கூடியே திரண்டுநெடுத் தோடு மாகிற்
        கொடியசுரம் வந்து மிகக் கோட்டி செய்யும்
ஆடியே மெல்லவசைந் தோடு மாகி
        வடங்கிவிடுஞ் சணத்தில்வந்த பிணிக டாமே

(பொ-ள்)

பித்தநாடி தவளைப்போல் பாயுமானால் பயித்தியமாகும். மயில் போல நடப்பதனால் வந்த நோய் கெதியாகக் குணமாகும். சுறுண்டு நீண்டு

ஓடுமானால் கரம் உண்டாகும். மெதுவாக ஆடி அசைந்து ஓடுமானால் வந்திருக்கின்ற நோய்களெல்லாம் கூடியகெதியில் மாறிவிடும் என்பதாகும்.

பிணியான சிலேற்பனந்தா னன்னம் போலே
பிசகிநடந் திடுகினோய் பிலனாய் நிற்கும்
துணிவான காகம் போற் றத்து மாகிற்
சுகமில்லை யத்திதனிற் சூடுண் டாகும்
தணிவாக வட்டையைப்போ லூரு மாகிற்
றரிப்பில்லை யமனுலகிற் சார்வதாகும்
அணியான சிலேற்பனத்தின் கொள்கை யீதென்
றறிந்திடுவாய் வாகடநு லடக்க மென்றே

(பொ-ள்)
சேற்பன நாடியானது அன்னம் நடப்பதுபோல் நடந்தால் வருத்தம் பெலத்து நிற்கும். காகம் நடப்பது போல தத்தியோடுமானால் சுகம் வரமாட்டாது. எலும்புருக்கிக் காய்ச்சல் உண்டாகும். மெதுவாக அடக்கி ஊர்ந்து நடந்தால் மரணிப்பதாகும். சிலேற்பனநாடியின் வைத்திய சாஸ்திரத்தின் சொல்லிய உண்மையிதுவாகும் என அறிந்து கொள்வாயாக என்பதாகும்.

அடங்கியே வாதந்தான் பதறு மாகி
லதிகமாய்ப் பழமலஞ்சிக் காகுமென்க
துடங்கியெழுந் தேநிற்கின் மந்த மாகிச்
சுரத்துடனே தீன் மறந்து சுகமின் றாகும்
மடங்கியே மெல்லவசைந் தோடு மாகில்
சயிற்றெரிப்புப் பலவிதனம் வந்து சேரும்
நடுங்கிவிறைத் தேநெடிதாய் நிற்கு மாகி
னாண்மூன் றிற் சன்னிவந்து கூடுந்தானே

(பொ-ள்)
வாதநாடியானது அமர்ந்து ஒளிக்குமானால் பழைய மலங்கள் கட்டுப்பட்டு நிற்கும். ஆதிகமாக எழுந்து ஓடுமானால் மந்தமுண்டாகிக் காய்ச்சலுடன் சாப்பாட்டில் விருப்பமற்று தாது குறையும். முடங்கி மெதுவாக அசைந்து ஓடுமானால் வயிற்றெரிவு முதலிய பலவத வேதனைகளுமுண்டாகும். நடுக்கத்துடன் இறுக்கமாக, நீண்டு ஓடுமானால் மூன்று நாட்களுக்குள் சன்னி நோய் வரும் என்பதாகும்.

கூடியே வாதங்கோ பித்தான் மந்தங்
கொண்டெழுந்து வாயுதனிற் குமிறி நிற்கும்
ஒடியே புழுப்போல வோடு மாகி

லுண்மூச்சுப் பிசத்தலிவை தோ‘ மாகும்
வாடியே மடங்கி வர லுள்ளாய் நிற்கில்
வாயுவுடன் சுரமடுத்து வருவ தாகும்
நாடி தான் பாய்ந்துபுழுப் போல நின்றா
னங்கைவயிற் றினிற்கருப்ப மாமென் றேதே

(பொ-ள்)

வாதநாடியானது கோபித்து எழும்பி நின்றால் மந்த நோய் உண்டாகி வாய்வானது அதில் சேர்ந்து நிற்கும். புழுப் போல ஓடுமானால் உள்மூச்சும் வாய் பிதற்றலுடன் சலதோ‘ம் உண்டாகும். சோர்ந்து முடங்கி விரலுக்குள் நிற்பதால் வாய்வும், சுரமும் வரும். புழுவைப் போல ஓடுவதனால் பெண் வயிற்றில் கெற்பம் தரித்திருக்கின்றதென்று சொல்வாயாக என்பதாகும்.

ஓதியவிட் டிலைப் போல வாத நின்றா
லுற்றகருப் பம் மூன்று மாதமாகும்
பேதியாத் திங்ககளது பத்து மட்டும்
பேலக்காம லுட்பதுங்கி மெல்லப் பாயும்
மோதிவெடித் துச்சிதறி வாத மோதின்
முந்துசுறே ணிதமடவார் வயிற்றிற் றங்கி
வேதனைசெய் தேயிடுப்பு வலித்து மாத
விடையதனை மறித்து மிகக் குத்துண் டாமே

(பொ-ள்)

வாதநாடியானது கருத்தரித்து மூன்று மாதங்கள் வரை விட்டில் வண்டு போலவும், அதன் பின் பத்து மாதங்கள் வரையும் உள்பதுங்கி மெல்லவும் பாயும். மோதி வெடித்துச் சிதறி ஓடுமானால் மாதாந்தம் கழிய வேண்டிய சூதக நீரானது கழியாது பெண்ணின் வயிற்றில் தங்கி நின்று இடுப்பு வலி முதலியவற்றை உண்டாக்கும் என்பதாகும்

குத்தியெழுந் தேபாயுற் குதிரை போலக்
கோபித்து வாமதது குமிறி நிற்கின்
நித்தியமாய்க் குதிரைவலி மூன்று நாளி
னேரிட்டு வந்து பொல்லா வருத்தஞ் செய்யும்
சுத்தியமாய் நாண்மூன்றுக் குள்ளே கொல்லுந்
துலைமயிரிற் பேன் போலத் தணித்தே யோடின்
மேத்துநா ளில்லையிரு கடிகை தன்னுள்
விட்டுயிரை யமனருகில் விரைந்து போமே

(பொ-ள்)

வாதநாடியானது குதிரையைப் போல் பாய்ந்து ஓடுமானால், மூன்று நாட்களுக்குள்ளே குதிரை வலி ஏற்படுவதுடன், கொல்லும் தலைமயிரில் பேன் நடப்பது போல் நடந்தால் இரண்டு நாழிகையில் மரணம் சம்பவிக்கும் என்பதாகும்.

விரைவாகப் பித்தந்தான் பெலத்தே யோடில்
மிகமூளை தானுருகி வரட்சி காணும்
திரைவாகப் புலிபோலச் சீறி நிற்கிற்
சிரசதனிற் கிறுகிறுப்பாய் வற்றுந் தேகம்
வரைவாக மந்தித்து நிற்கு மாகில்
வன்சுரமாய் மண்டைதனிற் றுத்துண் டாகும்
னீங்காத பிரமேக நெடிதுண்டாமே

(பொ-ள்)

பித்தநாடியானது விரைந்து பெலத்து ஓடுமானால் எலும்பினுள்ளே இருக்கின்ற மூளையானது இறுக்கம் குறைந்து சூடுதென்படும். புலி போல சீறி நிற்பதானால் கிறுகிறுப்போடு தேக எரிவும் உண்டாகும். குறைந்து நடந்தால் காய்ச்சலோடு தலையிடியுமிருக்கும். இலையின் புழுவைப் போல நடந்தால் பிறமேக நோய் உண்டாகி நீடிக்கும் என்பதாகும்.

நெடிதான பிரமேகம் வரட்சி சூடு
நீர்க்கடுப்போ டனல்வெக்கை நெருங்கி நிற்கும்
கொடிதான பித்தமது மடங்கி யோடிற்
கூக்குரலாய்ப் பிதற்றிக்கை கொட்டி யாடிக்
கடிதான பயித்தியந்தான் வந்து சேருங்
கனத்தபித்த மதுதிரண்டு நெடுத்தே யோடில்
வடிவான மெய்வெதுப்பு மெலிவு நாளும்
வந்துமிக நலிவுசெய்யு மங்கை யாளே

(பொ-ள்)

பித்தமானது இலைப்புழுவைப் போல் நடந்தால் பிற மேகம் மட்டு மல்லாது உலர்வு சூடு நீர்க்கடுப்பு முதலிய பல நோய்களும் வந்து சேரும். பித்தம் மடங்கியோடினால் பயித்தியம் வரும் திரண்டு தீண்டோடினால் வெப்புலத்தி நோய் வரும் பித்தத்தின் முறை இதுவென அறிந்து கொள் என்பதாகும்.

மங்கையே சிலேற்பனமா நாடி யோங்கி
வலுவக வேதனித்து நிற்கு மாகில்
தங்கியே யிருமலிழைப் புடனே விக்க

றான்சேரு மிறுகியே தடித்து நின்றால்
தொங்கியே மூச்சீழை பொல்லாக் காசஞ்
சுருங்கியே சழிவாண்டு பலவுங் காட்டும்
சிங்கியே திரண்டோடிற் பீனி சங்கள்
சிரநோய்நீரப் பாய்ச்சலிவை வருவதாமே

(பொ-ள்)

சிலேற்பன நாடியானது தனியாக உயர்ந்து பெலனாக நின்றால்,ஈளை, இருமல், விக்கல், சத்தி முதலியன உண்டாகும். முறுகிக்கனத்து நின்றால், உள்மூச்சு,ஈளை, சளி, வரட்சி முதலிய பலவற்றையும் காட்டுவதாகும். உருண்டோடுமானால் பீணிசங்கள் வேறுபலதலை நோய்கள் நீர்ப்பாச்சல் ஆகியன வரும் என்பதாகும்.

## 10.4 வைத்திய சிந்தாமணி எனும் நூலில் கூறப்பட்டுள்ளவை

**அசீரணநாடி, தீபனநாடி**

அசீரண நாடியானது மதயானையைப்போல் நடக்கும். தீபன நாடியானது சிறுகாக்கையினுறக்கம் போற் றுடிக்கும்

**சன்னிநாடி**

தலையின் பேரில் விறகுசுமையின் பாரத்தை தாங்கி அசைந்து அசைந்து செல்வதைப்போல நாடி சென்றிடினும் கிறுகிறுவென்று துடித்துப் பின் அன்னம் அட்டை இவைகளின் நடையைப்போல் தாழ்வடைந்து ஓடிடினும் சன்னிநாடி யென்பர்.

**சுகசன்னி**

நாடியானது மந்தமாக கோழி, பாம்பு, மூஞ்சுறு இவைகளின் நடையைப்பெற்று பின் விளக்கின் சுடர்போ லெழுந்து அசைவற்று நிற்பதைப்போலக் காணின் சுகசன்னி நாடி யென்பர்

**வாதசுரம்**

வாளைமீனின் பாய்ச்சலைப்போல் பாய்ந்து துடித்து மந்தகுணத்துடன் சிக்குண்டு அச்சப்பட்ட சர்ப்பத்தைப்போல் திபங்கிமௌனமுற்று மீண்டும் மதங்கொண்ட யானையைப்போல் ஆர்ப்பரித்து அருக்குமாயின் வாதசுர நாடியென்று புகல்வர்.

# 11. சுகதேகிகளில் நாடி

**நாடித்திரட்டிற் கூறிய துனி, பிரதிதுனி, அஷ்டீலம்,பிரதி அஷ்டீலம் இவைகளின் நாடி**

பணவம் போற்சிரை படபடத் தோடுங்
குணத்துனி பிரதியட் டீலப் பிணிகளே

களரவங காற்றிற் களிப்பது போலொரு
சுழனடை பிரதி துனிதுனி யென்னே.

**நாடி என்கிற அளவை**

நரம்பு மண்டலத்தோடு காரணமாக சக்தி ஸ்தானங்களில் நாடியி னிரத்தோட்டத்தை அறிகிறதற்கு உதவி காரணமாயிருக்கிற துடிப்பை எண்ணியறியும்வகை. அது கரத்தில் மணி பந்தத்திலும் பாதத்தில் குல்பஸ்தானத்திலும் சிறந்து விளங்கும்.

முப்பது வயசுள்ள ஒரு புருடனும், பதினெட்டு வயசுள்ள ஒரு புதல்வியும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு நாடியின் துடிப்பு 60 அவைகள் நெடிலக்ஷர ஒலியின் மாத்திரையளவினதாக அடித்துப் பெயருகிற இலக்ஷணத்தை அங்குஷ்ட மூலப்பார்வை பேசுகிறது.

முப்பது வயசின்மேல் நாற்பது வயது வரையுமுள்ள ஒரு ஆடவனுக்கும், பதினெட்டு வயதின்மேல் இருபத்துநான்கு வயது வரையுமுள்ள ஒரு அரிவைக்கும் பிறந்த பிள்ளைக்கு நாடியின் துடிப்பு 56 மாத்திரையடிக்கும்.

நாற்பது வயதின்மேல் நாற்பத்துநான்கு வயது வரையுமுள்ள ஒருவனும், இருபத்துநான்கு வயதின்மேல் முப்பது வயது வரையுமுள்ள ஒருத்தியும் கூடிப் பிறந்த பிள்ளைக்கு நாடி ஸ்பந்தன மாத்திரை 50.

நாற்பத்தாறு வயது தொடங்கி ஐம்பத்தாறு வயது வரையுமுள்ள ஒரு கணவனும், முப்பது வயது தொடங்கி முப்பத்தாறு வயது வரையுமுள்ள ஒரு காரிகையும் கலந்து பிறந்த பிள்ளைக்கு நாடி 40 மாத்திரை நடக்கும்.

ஐம்பத்து நான்கு வயதின் மேலுள்ள ஆணுக்கும், முப்பத்தாறு வயதுக்கு மேற்பட்ட பெண்ணுக்கும் ஜெனனமான குழந்தையின் நாடித்துடிப்பு 36 மாத்திரையில் நடக்கிறது.

நூாடி ஸ்பந்தன குணகாரம் கௌமார பருவத்தில் 40 மாத்திரை தொடக்கம் 50 மாத்திரையீறாக நடக்கும்.

ஸ்பந்தனம் என்பது இரத்தோட்ட ஆரம்பத்திற்குரிய பெயர்ச்சி குணகாரம் - எண்ணியறிதல், கௌமாரணபருவம் -

1. ஜெனனந்துவங்கி ஐந்து வயது வரையும்.
2. இளம் பெண்ணுக்குரிய பதினாறு வயது வரையும உள்ள காலம்.

யேளவன பருவத்தில் ஐம்பத்தாறு மாத்திரை முதல் அறுபது மாத்திரையீறாக நடக்கும். ஆனால் நோயுள்ள பிதா, மாதாவுக்கும் ஆயுசின் கிரமமில்லாத பிதா, மாதாவுக்கும் பிறந்த பிள்ளைக்கு நாடி யௌவன பருவத்தில், முப்பத்தாறு மாத்திரை நடக்கும்.

முப்பது வயது தொடங்கி ஐம்பத்தைந்து வயது வரையும் நடக்கிற பருவத்தில், இருபத்தொன்பது மாத்திரை நிகழுகிறது; அல்லது அந்தர்ஸ்தானத்தில், இருபத்தெட்டு மாத்திரை நடக்கிறது. நாடி சர்ப்பகதிக்குவமையாக நடக்கிற உற்பத்தி ஸ்பந்தன சம்க்யை முப்பது மாத்திரையில் மாறிப் பெயருகிறது.

விருத்தாப்பிய வயசில் முப்பது மாத்திரைக்கும் முப்பத்தொரு மாத்திரைக்கும் இடையில் சுப அனுகூலமாக அடித்து மாறுகிறது. ஆதின் காரணம் ஸ்பந்தன சங்க்கையக்குரிய பிரமம் உத்தமபன துவாரத்தோடு ஒற்றுமையாய் இருக்கிறது.

ப்ரௌட காலத்தில், புணர்ந்து பிரியாத ஸ்திரி புருஷருக்கு நாடி ஸ்தானத்தில் மாறிச் சமகுணமாகிறது. அப்படிப் புணர்ச்சியை விரும்பிய ப்ரௌட ஸ்திரிக்கு நாடி சங்க்யை இருபத்தொன்பது மாத்திரையும், கேவலமான ப்ரௌடபுருடனுக்கு நாடி ஸ்பந்தன சங்க்யை முப்பத்தொரு மாத்திரையும் நடைபெறுகிறது. அறுபது வயதின் மேல் எண்பத்து நான்கு வயது வரையும் தாதுப்பெலன் குறையாமல் இருப்பவனுக்கும், பெண்களுக்கு மாதாந்தரப் பூப்பு நின்ற பின்பும் நாடி முப்பத்தொரு மாத்திரை நடக்கும்.

பராக்கில் இருவருக்கும் ஒரு விநாடிக்கு 112 மாத்திரையடிக்கும். அவைகளில் இரண்டு மாத்திரை பகிர்கதமாகவும், 110 மாத்திரை அந்தர்கதமாகவும் நடக்கிறது. பராக்கு என்பது ருதுவாகும் பருவத்திற்கு முன்புள்ளகாலம்.

கருப்பந்தரித்த பெண்களுக்கு, அக்கருப்பமுண்டாகிச் சிசு பூமியிற் பிறக்கும் வரையும் ஒவ்வொரு நாடியுமிரண்டு கணமாத்திரை வீதம் நடக்கிறது. அந்தச் சிறார் சென்மித்த நாற்பது கிழமை வரையும் ஒவ்வொரு நாடியும் ஒவ்வொரு தினமுமொரு கணமாத்திரை வீதம் நடக்கும்.

**மாதாந்தரம்**

கருப்பஸ்திரிக்கு எட்டா மாதம் தொடங்கிச் சிசு பிறக்கும் வரையும் நாடிஸ்பந்தனம் 140 தீர்க்க மாத்திரையில் நடக்குமென்று கூறுவர்.

**புருண நாடித் துடிநூற்றறுபதே** என்று நாடித்திரட்டுக் கூறும்.

பிரசவ ஆரம்பத்தில் ஒவ்வொரு நாடியும் அறுபது மாத்திரை வீதம, மூன்று நாடிகளும் நூற்றெண்பது மாத்திரை நடக்கிறது. இதில் ஒவ்வொன்றிலும் பத்துப்பத்து மாத்திரையாக மூன்று நாடிகளிடமும் இருந்து தசவாயுவினொன்று கவர்ந்து சகஜ பெலனோடு உதரத்துளிருக்கும் சிசுவை வெளியே தள்ளுகின்றது. சில கர்ப்பிணிகளுக்குப் பிரசவ காலத்தில் சிசு வெளியே வராமல் இருப்பதின் நியாயம், பெலவீனமானவரிடமும் நோயாளிகளிடமும் அந்த வாய்வு தனக்குரிய மாத்திரையை நாடிகளிடமிருந்து அனுபவித்துக் கொள்ளாததினாலும், கருப்பாசயம் நோயுற்றிருக்கும் பொழுது கருப்பந் தரித்த காரணத்தினாலும், அகாலப் புணர்ச்சியை விரும்பி அனுபவித்துக்கொண்டவருக்குமாம்.

**பிரசவத்தின் பின்பு நாடி எண்குறிபிரசவ முடிவின் பின்சதச் சதுர்த்தச**

**மவைமுத னூற்றுமுப் பதுவரைப் பெண்குறி.**

என்று நாடித்திரட்டுக் கூறும்.

ஒரு பிள்ளை பிறந்த ஒரு வருஷம் வரையிலும் நாடியின் துடிப்பு நூற்றுமுப்பது மாத்திரைவீதம் நடக்கும். இரண்டாவது வருஷம் வரையிலும் நாடி நூற்றுப்பத்து மாத்திரை வீதம் நடக்கும். மூன்றாவது வருஷம் வரையும், அந்த மகவுக்கு நாடி ஸ்பந்தன அசைவு நூறு மாத்திரை வீதம் அடிக்கிறது.திரை

நாலு வயசு தொடங்கி ஏழு வயது வரையுமுள்ள ஒரு பிள்ளையின் நாடி பத்துப்பல மாத்திரை வீதம் நடக்கும்.

ஏழு வயது தொடக்கம் பதினைந்து வயது வரையும் நாடி பதினைந்துபல மாத்திரை வீதம் நடக்கும்.

பதினைந்து வயது முதல் முப்பது வயதீறாக நாடி முப்பத்தாறு பல மாத்திரை வீதம் நடக்கும்.

முப்பது வயது முதல் ஐம்பது வயதீறாகத் தோற்றும் நாடி ஸபந்தன ஸங்கியை எழுபத்தைந்து பல மாத்திரை வீதம் நடக்கிறது. இந்த

எழுபத்தைந்து பல மாத்திரை வீதமென்று சொல்லப்பட்ட ஸிராகதிப்பிரமாணத்தில், நாற்பத்துநான்கு பல மாத்திரை, நாடிகள் மூலமாக வெளியாகவும், முப்பத்தொரு பல மாத்திரை வாயுக்கள் மூலமாக மறைந்தும் நடக்கின்றன. ஸ்திரிசம்போகசமையகாலத்திலும், கோபமான காலங்களிலும் இந்த முப்பத்தொரு பல மாதிதரையை, வாயுக்கள் வெளிக்காட்டி மறைக்கின்றன.

இருபத்துநான்கு வயது முதல் முப்பத்தாறு வயது வரைக்கும் நாடி ஸ்பந்தனஸம்க்யை எண்பது பல மாத்திரை வீதம் நடக்கிதென்றும், அதின்பாகம் நாற்பது பலமாத்திரையை வாய்வுக்கள் கிரகித்துக் கொள்ளுகின்றனவென்றும், நாற்பது பல மாத்திரையை நாடிகள் வெளிக்காட்டி நடக்கின்றனவென்றும் கூறுகிறது.

நாடிகளின் நடை வயதின் கிரமப்படி அந்தந்தப் பராயங்களுக்குப் பொருத்தமாயும், தேகபல பேதத்திற்குத்தக்க பொருத்தமாயும் நடந்து, பின்பு ஷீணகதியை அடைகிறது.

குளிர் காலங்களில் நாடிகள், தங்களுக்குரிய நடையிலிருந்து இரண்டரைப் பல மாத்திரை குறைய நடக்கின்றன. இப்படி அநேக விதமான வருத்தங்களில் நாடி கால வித்தியாசங்களுக்கு தகுந்தபடி நடக்கிறது.

**நாடி சங்க்யை வாய்ப்பாடு**

10 மாத்திரை 1 பிராண மாத்திரை
6 பிராணமாத்திரை 1 பலமாத்திரை
60 பலமாத்திரை 1 தொண்டமாத்திரை

**இருதயரோகம் உண்டாவதின் காரணம்**

இருதயத்தின் முற்பக்கத்திற் சகிக்கமுடியாத குத்து, வலிப்புண்டானால், அது இரத்தாசயத்தினுள்ள இரத்தோட்டத்தை வாய்வுக்கள் நெருங்கித் தடை பண்ணுகிறதினாலுண்டாகிறது.

இருதயத்தின் பின்புறம் முதுகுப் பக்கத்தில் சூலை, இகீவு உண்டாகும்பொழுது, இரத்தோட்டம் அந்தப் புறத்தில் வியாபித்தால் வாயுவின் ஓட்டம் தடைப்பட்டு வருத்தத்தைக் கொடுக்கிறது.

மேலே பேசின வருத்தங்களில், இரத்தோட்ட யந்திரம் பிரதானமான பகுதி, ஸம்குசிதமான பலனையளித்தது. இரத்தோட்டத்தைக் குலதை

காரணமாக விருதயமனுபவித்துக் கொள்ளும் பொழுது, வாயுவின் வேகம் பந்தித்து நாடி நடைக்கு மந்த பலனை அளிக்கிறது.

நாடியின் நடை அதிக சூக்ஷுமகுணமாகத் தோற்றும்பொழுது மலபந்தமுண்டாகின்றது. மலபந்த முண்டாயிருக்கும் பொழுது அசீரணச்சுரம் உண்டாகிறது. அந்த அசீரண சுரத்தில் அற்ப பிரமாணமான இரத்தம் நாடியிலோடுகிறது.அந்த நாடி துர்ப்பல கதியிற்றொய்ந்து நடக்கிறது.

பூரணமான இரத்தமோடுகிற நாடியின் நடை கரதலப் பரீட்சைக்கு அடித்துத் தனக்குரிய இலக்ஷணத்தைப் பேசுகிறது. அல்லாத நாடியின் செயல் இரத்தோட்ட வித்தியாசத்தினால் பேதப்படச் சரீரசுபாவகுணமும் வித்தியாசமடைகின்றது. அது போலவே நோய் கொண்ட தேகத்திலோடுகிற வசாவெருவையும்; ரோககுணங்கள் மாறி, மாறியுண்டாக, நாடியின் நடையுட் வித்தியாசம் வித்தியாசமான இலக்ஷணமுடையதாய் நடக்கிறது. நிமேஸமென்னும் ஊக்கத்தினாற் கற்பிக்கப்பெற்ற உதிரம், திருப்தியடைந்த கையின் கண் எப்பொழுதும் நாடி இயக்கத்திற்கு முதற்காரணமான குறிப்பைத் தெரிவிக்கிறது. குறைந்த தானங்களை விட்டுப் பார்வையிடுகிற நடையின் வித்தியாசங்களை அங்குஷ்ட மூலத்திலறிய வேண்டியது. அந்த நாடிக்குரிய ஐவகை நடையின் அபிதானங்களையும் அவைகளமைந்து றடக்கும் இலணங்களையும் இதனடியில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

1.தேசபுஞ்சை; 2. சஞ்சலை; 3. ஷீணதை;
4. துர்ப்பலை; 5. தீரகாமினி; என்ப.

அவற்றுள் தேசபுஞ்சை என்பது உக்கிரமபன குணம், பிரகாசமான ரூபம், அக்கினித்தன்மை, அதிக வேகமான நடை, தைரியமான இராசிநடை, நிபிடமாத்திரை, இறுகியநடை.

2வது சஞ்சலை – லோலிதகுணம் அசைவுடையது, வாயு, மின்னிலின் விம்பம்.

3வது ஷீணதை – நுண்மை, உசிதம், சுஷ்கம், பழுது, தளர்ச்சி, ருசிகரம்.

4வது துர்ப்பலை – தொய்ந்தது, நெருக்கமில்லாதது, நோய்த்தது, பலயமானது.

5வது தீரகாமினி – உறுதியான நடை, சாந்தமான நடை, தூக்கமான நடை, தத்துவமான நடை, ஆழமான நடை, சுகநடை என்பன.

**சுஞ்சாலைகதி இயலும் தேசபுஞ்சைகதியியலும்**

இரத்தக் கொதிப்பிலும், சுரத்திலும் கெதியாய் நடக்கிற நாடி சஞ்சலை நடையியலைத் தோற்றுவிக்கிறது. சுரந்தொடங்குகிற பொழுது, வாதம் தேசபுஞ்சாகதியைச் சிரையிற் பிறப்பிக்கிறது.

இரத்தத்தின் சுபாவ வர்ன்னம் மாறி உஷ்ணமான குணம் உண்டாகும் பொழுது, நாடி கெதியாய் நடக்கிறது. சுரத்திலே அகங்களிப்புற்ற செயலில், சஞ்சலை நாடியின் நடைக்கு உவமை ஆகிறது. சுரப்பூருவ குணம் மாறி குணத்தை எடுக்கிற பொழுது வாத குணமான ரோகநடைகள் மாறி நடக்கிற நாடியைப் போலே தேசபுஞ்சை நடக்கிறது.

**துர்ப்பல நாடி, ஷீண நாடி இவைகளின் நடை**

சுரரோக குணங்களிலும், அதிசாரரோகத்திலும், நீர்ப்பாடு பெரும்பாட்டுக்குணங்களிலும் நாடி தொய்ந்த நடையை உடையதாகிறது. அவஸ்தைப்பாடான பிராணன் உடம்பை விட்டழிகிற பொழுதும், நாடி துர்ப்பல நடையாயும், ஷீணநடையாயும் நடக்கிறது.

(அவஸ்தைகுண மொழுங்கில்லாமல் நடக்கிற மரணத்தின்முன, நாடி பிரபலமுடையதாகவும், நிதானமில்லாத கெதியாகவும நடந்து சீவனழியும் பொழுது ஒடுங்குகிறது.

அதிசாரரோகம் பெரும்பாடு இவைகளில் சுரக்குணமிருந்தால் துர்ப்பலநாடி விகாரப்பட்டு நடக்கிறது. அப்படி நடந்தாலும், நாடி துர்ப்பலகதியின் பலனையே அளிக்கிறது.

**புராணரோகி நாடி**

அனேகநாட் சென்றும் மாறாத நீடித்த ரோகிக்கு நடக்கிற நாடியின் நடை தீரகாமினி.அந்த வருத்தங்களின் வேகமான குணம்,“கோ” என்னும் பிரதானமான கருவியை மறைக்கிறது. இருதயஸ்தானத்தில் ஸ்தாபிக்கிற நாடி தன்னிஷ்டப் பிரகாரம் இயங்குகிற பலனைக் காட்டுகிறது.

**சுகதேகர்க்குரிய நாடி நடை**

சௌக்கியம, சுகானுபவமுடையவராயப் பூமியிற் பிறந்து சீவிப்பவருடைய ஆரோக்கியம் நிலைபெற்றிருக்கிற எந்தக் காலத்திலும், அவருக்கு நாடி அன்னப்பறவையின் நடைதேய்ந்து பந்திக்கிற தன்மை போலும், அல்லது யானையின் நடை ஓய்ந்து நிலைக்கிற தன்மை போலும் நடக்கிறது.

(அன்னப்புள்ளியின் தூக்கமான நடையைப்போல் அல்லது யானையின் தூங்கலான நடையைப்போல் நடக்கிறதாம்)

இரத்தோட்ட ஆரம்பஸ்தானநிலை அமலத்தன்மையான லோலிதமும், மந்தத்துவ முற்றாயழிந்து போகாத அசைவும், நாடிக்குத் தீர்க்க நடையையும், சுபலக்ஷணத்தையும் உண்டாகிறது. (இலேசாயசைய வேண்டிய தென்பதாம்)

''கோ'' சுத்தமான பதவையிற் சஞ்சரித்துத் தானம் மாறி, நீதி யூகமான பிரமாணத்தையடைகிறதும், சந்தி நேத்திரஸ்தானங்களுக்குப் பரிசுத்தமான இனமாற்றத்தைச் சங்கற்ப்பிக்கிறதும், உத்தமமான லக்ஷணமென்று சொல்லப்படுகிறது. அதுவும் அமந்தத்துவம், சஞ்சலம் இவைகளினின்றும் ரஹிதமாகிச் சகல நாடிக்கும் உரிய குணங்களைச் சுபலக்ஷணமாகச் செய்கிறதாம்.

தோஷசமத்துவம் பரீக்கு இதயத் தொனியிலுமறியக் கூடியதாகிறது. அந்த இயல்பையுடைய நாடி கெதியாய் நடக்கிற நியாயத்தாலும் அல்லது வருத்தத்தின் குணங்கள் மேலும் மேலுமிருத்து வேதனையுண்டாக்கிற நியாயத்தாலுமிருக்கலாம். உற்பத்தி விகாரப்பாத தமனியின் தர்மப்பிரகாரமான நடை, பரக்ஷித்து நியாயங் கண்டறிதற்கு கர்ண்ணரந்திரங்களினாற் கேட்டறிதற்கு ஒலியை உண்டாக்கிறது.

வாய்வு கொடுக்கப்படுகிற துவாரம் ஒன்று, அது ரோகத்தின் குணங்களை மாறியெடுக்கிற நாடிக்குரிய தத்துவத்தைவிசித்திரமாக வரைந்து காட்டுகிறது.அந்த நாடியின்நடை பின்னம். முற்றும் சமஸ்த ரோகங்களுக்குமுரிய குணங்களழிந்து தோற்றுகிறது. நாடிதர்சனம் அங்குஷ்ட மூலத்திலஙிய வேண்டியது. ரோக இனங்களைப் பிரித்தறிந்து அதற்குப் பொருத்தமான அவுஷதங்களை விதிக்கி வைத்தியர், தான் கொடுத்த மருந்தினால் உண்டாகின்ற விசேஷமான குணங்களின் முடிபை யுக்தித் துவார நேத்திரங்களிலும் அறிந்து கொள்ள வேண்டியது. அதின் பயன் யாதெனின்: அந்த ரோகம் சிதறிச் சில்லறையாகித் துண்டிக்கிற குணமாக அறியப்படுகிறது. அப்படித் துண்டித்த குணத்தை ரோகம், தனக்கொரு விதைமுதலாக அடைந்து வைத்திருந்து இருதயத்திற் காட்டுகிறது. அல்லது அந்தப் பின்னமான குணம் இலக்கணப் பொருத்தமில்லாத நவீன ரோக இனமாக மாறி வளர்ந்து மிகுந்த கோபத்தையுண்டாக்கின. தோஷ சம்பந்தமான குணங்களாக அளிக்கிறது. அந்த அன்னிய அலக்ஷண ரோக குணத்தைப் பிரதியுவமையாகக் கொண்ட அந்தத் தோஷம் எதிர்நோக்கித் தாக்குகிறது. நுனைந்த நீசதானங்களிலும் சிறுப்பிரமாணங்களை விலக்கியறியப்படுகிறது. ரோகங்கள் சங்கீரணமாகியுண்டான வித்தியாசமான நாடி ஒரே விதமான நடையின் பயனைக் காட்டுகிறது.

# 12. அசாத்திய நாடியும் மரணக்குறிகளும்.

## 12.1 நோய் நாடல் நோய்முதல் நாடல் எனும் நூலில் கூறப்பட்டவை....

### 12.1.1 அகத்தியரால் அருளப்பட்ட மரணக்குறிகள்.................

1. சேத்துமத்தில் சேத்துமந் தமிர்தமா யறியுஞ் சொன்னோம்
ஆத்மா நல்லதல்ல அழிவது மெய்கண் டாயோ
கூற்றுவன்வந் திடுவதாகும்ங் குறுவழி வட்டங் கொள்ளும்,
சாத்திர மறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே".

(பொ.ள்) - ஐய நாடி தனித்து இரு மடங்கு ஓங்கி நின்று வாதமும் பித்தமும் அடங்கி விட்டால் மரணம் நிச்சயமாகும்.

2. காலமே சேத்துமநாடி கட்டுச்சி பித்தநாடி
மாலையில் வாதநாடி லகைதப்பப் பதறி நின்றால்
ஏலவே இவர்கட்கெல்லா மியம்பினா ரிதுதா னென்று
நாலஞ்சில்மரணமென்று நன்முனியருளிச் செய்தார்".

(பொ.ள்) - சிரமம் தவறி காலையில் ஐயநாடியும், நடுப்பகலில் பித்த நாடியும், மாலையில் வாத நாடியும் பதறி ஓடில் நாலைந்து நாள்களில் மரணம் நிச்சயம்.

3. குறித்திடுஞ் சேத்துமநாடி குதிரைபோல் நிமிர்ந்து நின்றால்
கறுத்திடு விழியாள்நல்ல காரிகை யாளே கேளாய்
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றில் புகன்றிடு மரண மென்றே".

(பொ.ள்) - ஐய நாடி குதிரை போல் நிமிர்ந்து நின்றால் திங்களொன்றில் மரணம் நிச்சயமாம்.

4. "சேத்தும நாடிதானுந் தியங்கிய மஞ்ஞை போல
நாட்டிய வட்டைபோல நடுங்கியே பதறி நின்றால்
கூட்டவே வேண்டாமெழு நாளில் மரண மென்று
நாட்டிய முனிவர்சொன்னார் நயம்படக் குறித்துப் பாரே".
(பொ.ள்) - ஐயநாடி மயில்போலும் அட்டை போலும் நடுங்கிப் பதறி நின்றிடில் ஏழு தினங்களில் மரணம் நிச்சயம்.

5. "இடைதுடை மார்பின் கீழே
எறிபடப் பதறி யோடில்,

முடுகிடு வீங்கு மாகில்
மூவரி லொருவ ரோடில்
படரவே தாக மிஞ்சிப்
பஞ்சிடுங் கண்ணும் வாயும்
அடாவிக் குணங்கள் கண்டால்
அறிந்துகொள் மரண மென்றே".

(பொ.ள்) - இடை, தொடை, மார்பின் கீழ் இவற்றில் நாடி படபடத்துப் பதறியோடில், அதிகத் தாகம் நாவறட்சி, கண் பஞ்சடைதல் ஆகிய இக் குறிகுணங்களும் காணில் மரணம் நிச்சயம்.

(அகத்தியர்)

### 12.1.2 திருமூலர் ஆல் அருளப்பட்ட மரணக்குறிகள்.....

1) "பதைக்கின்ற மூவரில் பக்குவந் தப்பியே,
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
சுதைக்கொண்டி ருந்தாலும் தோன்றி உயிர்விடும்
பிதைக்கொண்ட வாதபித்தம் பெலனாமே".

(பொ.ள்) - வாதமும், பித்தமும் அடங்கினால் மருத்துவம் செய்வதில் பயனில்லை.

(திருமூலர்)

2) "பித்தமடங்கி னாற் பேசாதே போய்விடு
எத்திய வையம் எழுந்திடிற் கிட்டாதே
எத்திய வாத மெழும்பின் மருந்துசெய்
எத்திய மூன்றி னியல்பை யறிந்திடே".

(பொ.ள்) - பித்தமடங்கினாலும், ஐயம் நாடி மட்டும் தனித்து மீறி நடந்தாலும் மருத்துவம் புரிவதில் பயனில்லை. வாதம் எழும்பின் மருந்து கொடு.

(திருமூலர்)

### 12.1.3 கண்ணுச்சாமியம் எனும் நூலில் குறிப்பிடப்பட்ட மரணக்குறிகள்.......

3) "கண்ட பித்தந் தானடங்கக் காட்டு மருந்தினால்
கொண்ட பயனில்லை குற்றமோ - டண்டு கபம்
ஓடப் பரிகார மோதுவதில்லைத் தெரிய

தேடவாத மேடிற் செய்".

(கண்ணுச்சாமியம்)

4) "ஒப்ப நாடிப்பதறவுற்று நடுங்கச் சுவைநாச்
செப்பவறண்டு செயலற்றுத் தப்பவழி
மேனோக்கக் கண்டத்தில் மீதுகபம் நின்றுழலும்
கானோக்கச் சாராதே கண்டு",
(பொ.ள்) - அதே போல நாடிகள் பதறவும் நடுக்கம், நாவறட்சி, கண் விழிகள் அசையாது மேல் நோக்கியும், மேல் மூச்சு தொண்டையில் கபம் ஆகிய இவைகளும் நேரின் குணமாகா.

5) "செய்யமூன் றொன்றாகச் சேர நடந்திடினும்
பைய வடங்கிடினும் பற்றற்று நொய்ய
வரணைவாற் போற்றுடி தானார்ந் திடினு மக்காற்
சுரணையற் றாவிபோஞ் சொல்".

(பொ.ள்) - மூன்று நாடிகளும் சேர்ந்து ஒரே மாதிரியாக மீறி நடப்பினும், அல்லது உள் அடங்கினும், அல்லது வெட்டுண்ட அரணை வால் போல் துடிக்கினும் விரைவில் இறுதிக் காலமென அறிக.

(கண்ணுச்சாமியம்)

**12.1.4 மரணக்குறி பற்றி பரிபூரண நாடியில் குறிப்பிடப்பட்டவை.........**

6) "நடக்கும் நாடி மிகப்பதறும்
நாவும் பல்லும் வறண்டிருக்கும்
மடுக்குங் கெட்டு விழிரெண்டும்
மேலே நோக்கும் விதி பார்க்கும்,
தொடுக்கின்ற சிலேத்துமம்
தொண்டை தன்னில் நின்றுலவும்
அடுக்கு மதுவே குறியானா
லங்கே செல்ல வேண்டாமே".

7) "மரணமதை அறிவதற்குக் குறியைக் கேளு
வலுவாக விசைநரம்பு குளிர்ந்து காணும்
விரணமெனும் பொறிகளெல்லாந் தளர்ந்து மொத்த
விசைநரம்பு தான்தளர்ந்து விரைந்து வாங்கி
நரணமெனப் பற்கடித்து மணியும் நட்டு
நாவுலர்ந்து மூச்சயர்ந்து நடுக்க முண்டாயத்
துரணமெனும் வாதபித்த சிலேத்தும மெல்லாம்
சோத்தியம் விட்டிலைப்போற் றுடிக்கில் சாவாம்".

(பொ.ள்) - விசை நரம்பு குளிர்ந்தும், ஐம்பொறிகள் தளர்ந்தும், பற்கடித்தாலும், நாவுலர்ந்தாலும், நடுக்கமுற்றும், மூச்சயர்ந்தும், கண்கள் நிலைக்குத்தியும் வாத, பித்த, ஐயம் மூன்று நாடிகளும் சேர்ந்து விட்டிலைப் போல் துடிக்குமாகில் மரணம் நிச்சயம்.

8) "நில்லப்ப வாதபித்த மிரண்டுங் கூடி,
நிலைதப்பிச் சிதறியது ஓடு மானால்,
கொல்லுமப்பா பதினைந்து நாளிற் றானும்,
குணமாக விதனுடனே ஐயங் கூடில்
வெல்லுமப்பா மண்டலத்தில் யாக்கை பாழாம்,
லவிதமாக மூன்றுமே ஒவ்வொன்றாய்க் கூடி
அல்லப்பா அரணைவால் துடியே காணில்
அப்பனே அவர்பிழையா ரறிந்து பாரே"

(பொ.ள்) - வாதமும், பித்தமும் சேர்ந்து சிதறியோடில் பதினைந்து நாளிலும் வாத பித்த ஐய மூன்றுஞ் சேர்ந்து சிதறியோடில் நாற்பது நாளிலும் மரணம்.

9) சன்னியெழும் போலிருந்த நாடி மூன்றும்
சாதகமாய்ச் சுழல்வண்டு தண்ணீர் மீதில்
உன்னியது பராபரத்தே ஓடு றாப்போல்
ஓடியெங்கும் வாதபித்த சிலேத்தும மெல்லாம்
கன்னியது சாதகமாய் வருமே யாகில்
கதிப்பாகும் வாதபித்தவையம் பம்பரம் போல்
பின்னியது விட்டிலைப்போல் கற்றறிந்து வீழில்
பேச்சில்லை மரணமென்று பிரித்துச் சொல்லே".

(பொ.ள்) - வாத, பித்த, ஐயம் மூன்றுங் கூடி சுழல் வண்டு தண்ணீர் மீது ஒடுறாப்போலோடினாலும், பம்பரம் போல் சுழன்றாலும், விட்டிலைப்போல் புரண்டு வீழ்ந்தாலும் மரணம் நிச்சயம்.

10) "பிழையாத வாதபித்தம் தேத்துமங்கூடிப்
பிரண்டுவருந் தேள்கொடுக்குப் போலோ யாடி
உளையாத ஓடம்போல ஓடு மானமல்
உத்தமனே திங்களிலே மரண மாவார்
குளையாத நாடியின் மெய்குறியைக் காணார்
கூட்டமிட்டுக் குருவெனப் பிரசங் கிப்பார்
விழியான கண்ணிரண்டும் மற்ற கண்ணும்
விதியறிந்தார் சன்னியுமே விலகும் பாரே".

(பொ.ள்) - வாத, பித்த, ஐயம் மூன்றும் ஏகோபித்து தேள் கொடுக்கைப் போலாடி ஓடம்போல் ஓடுமானால், மாதம் ஒன்றில் மரணமாகும்.

(பரிபூரண நாடி)

**12.1.5 குணவாகட நாடியில் கூறப்பட்ட மரணக்குறி..........**

11) "பித்தமிப் படியேயோடிற் பிதற்றிநாள் மூன்றிற் கொல்லும்
முத்திய வாதம்பித்த முயங்கியப் படியே யோடில்
பற்றறச் சொன்னோங் கண்டீர் பதினைந்து நாளிற கொல்லும்
நாற்றியவை யங்கூடில் நாற்பது நாளிற் கொல்லும்".

(பொ.ள்) - வாதமும் பித்தமும் சேர்ந்து சிதறி ஓடினால் பதினைந்து நாளிலும் வாத பித்த ஐயம் மூன்றுஞ் சேர்ந்து சிதறியோடில் நாற்பது நாளிலும் கொல்லும்.

12) "அரணைவாலிற் றுடிபோலடில் ஆங்கவன் பிழைபப்ப தில்லை
பரவுதேட் கொடுக்குப்போலும் பதைத்திடிற் சாவு திண்ணம்
கரையெறும் பதுபோலோடிற் கண்டிடாய் திங்கள் மூன்றில்
வரையணி முலைநம்பாதே மரணமென் றறிந்து கொள்ளே".

(பொ.ள்) - மூன்று நாடிகளும் எறும்புபோல் ஊர்ந்து ஓடில் மூன்று மாதத்தில் மரணமாம்.

13) ஏற்றிய தீபந்தன்னி லெரிசுடர் தீயைப் போல
போற்றிய நாடிதானும் பொலிவரத் தோன்று மாகில்
மாற்றறும் வாழ்வு நாளும் மாளுமோர் மாதத் தொன்று
நாற்றிசை யுள்ளோர்க்கெல்லாம் நாடிநீ நயந்து சொல்லே".

(பொ.ள்) - மூன்று நாடிகளும் தீபத்தில் எரிகின்ற சுடர்த் தீயைப்போல் தோன்றுமாயின் ஒரு மாதம் சென்று மரணமாம்.

(குணவாகட நாடி)

### 12.1.6 சாதக நாடி இல் குறிப்பிட்ட மரணக்குறி...........

14) "வணங்கியதோர் வாதபித்த சிலேத்துமந் தன்னில்
வலுவான பித்தமது தளர்ச்சி யாகும்
பிணங்கியதோர் வாதமதிற் சிலேத்து மஞ்சேர்
பின்னல்கொண் டிளைப்பாகி உடல்வெ ளுத்து
இணங்கியதோர் கைகாலுங் குளிர்ந்து நெஞ்சம்
எடுத்தெடுத்துக் கண்மூக்கில் நீரும் பாய்ந்து
உணங்கியநா வறண்டுபல்லுங் கறுத்து வாந்தி
உண்டாகில் மரணமென வுரைக்க லாமே".

(பொ.ள்) - முக்குற்றங்களில் பித்தமடங்கி வாத ஐயம் தொந்தித்து உடல் இளைத்து வெளுத்து கைகால் குளிர்ந்து நெஞ்சு தூக்கித்தூக்கி மூச்சு விட்டும் கண்ணிலும் மூக்கிலும் நீர் வடிந்தும் நாவறண்டும் பல்லுங் கறுத்தும் வாந்தியுமுண்டாகில் மரணம் நிச்சயம்.

15) "உரையான பித்தமொடு வாதந் தாழ்ந்து
உற்றசிலேற் பனமிளகிச் சக்தி விக்கல்
விரையாகவே யடுத்து நெஞ்ச டைத்து
மேலிளைப்பாய்க் குருகுலத்து வியர்வை யாகி
வரையாக விழிசொருகி மூக்க டைத்து
வாயாலே சுவாசமும் நாவறண்டு தானால்
துரையாக விருந்தாலும் மரணம் வந்து
சுருக்காக மரிப்பதுவுந் திண்ணந் தானே".

(பொ.ள்) - பித்தமும் வாதமுமடங்கி ஐயம் இளகி நின்று வாந்தி விக்கல், நெஞ்சடைப்பு, மேல் மூச்சு, வியர்வை, கண்கள் சொருகி, மூக்கடைத்து, வாயால் மூச்சுவிட்டு, நாவறண்டுமிருக்குமானால் சீக்கிரத்தில் மரணம் நிச்சயம்.

(சதக நாடி)

### 12.1.7 பரிபூரண நாடி மற்றும் குணவாக நாடி இல் கூறப்பட்ட அசாத்திய நாடி.......

16) "துடிகண்ட சேத்துமந்தான் வெள்ளம் போலே
சுறுசுறுக்காய் மடமடென ஓடுமாகில்
அடிகண்டு மற்றாம்நாள் மரண மாகும்
அப்பனே பித்தமது சிதறி யோடில்
முடிகொணட மூன்றாம்நாள் சாவார் சொன்னேன்

முழுமையுமே வாதமது சிதறி யோடில்
இடிகொ்ட எட்டாம்நாள் மரண மாவார்
இன்பமாய்க் கண்டறிந்தே இசைந்து நில்லே".

(பரிபூரண நாடி)

"வெள்ளம் நீரோடும்போல் சிலேத்துமம் மீறியோடில்
வள்ளல்தா னறியச்சொன்னோம் மரிப்பது மற்றாம் நாளில்
தெள்ளிய வாதந்தானுஞ் சிதறியே ஓடு மாகில்
வள்ளியநா ளோரெட்டில் உறுதியாய்ச் சாவா ரென்னே".

(குணவாகட நாடி)

(பொ.ள்) - ஐயநாடி தனித்து வெள்ளம் போல் மடமடென்று ஓடினால் மறுநாளிலும், பித்த நாடி தனித்து சிதறி ஓடினால் மூன்றாம் நாளிலும், வாத நாடி தனித்துச் சிதறியோடில். எட்டாம் நாளிலும் மரணமாம்.

## 12.2 கண்ணுச்சாமியம் மற்றும் வைத்திய சாரசங்கிரகம் எனும் நூல்களில் மரணக்குறி பற்றி கூறப்பட்டவை.......

17) "பேசக் கபமீறிப் பின்பற்றப் பித்தமதைப்
பாசவுல காசையறும் பண்டிதரே வாசலிலே
நாடுவதேன் வாதத்தை நாடுங் கபமாயின்
ஓடுமுயிர் நாழிகையி லொப்பு".

(கண்ணுச்சாமியம்)

"ஐயந்தான் பித்தந்தன்னை யனைத்தேதுத் தேறுமாகில்
நையவோர் நாளிற்காலன் நாடியே வருவதுண்மை
பையவே ஐயம்பாய்ந்து வாதத்தைப் பற்றி நின்றாற்
செய்யும் வாறென்ன சாவோர் நாழிகை திண்ணந்தானே".

(வைத்திய சாரசங்கிரகம்)

(பொ.ள்) - ஐயம் அதிகமாகிப் பித்தத்தைப் பற்றுமாயின் ஒரு நாளிலும், அல்லது பித்தமடங்கிய பின் ஐயமானது வாதத்தை பற்றினால் ஒரு நாழிகையில் மரணம் நிச்சயம்.

## 12.3 அங்காதிபாதம் எனும் நூலில் மரணக்குறி பற்றி கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது......

"வையமுது வாதத்தின் நாடிதானும்
வளைந்து மடங்கிப்பருக்கில் வாதையுண்டாம்
செய்ய பித்தநாடியுறப் பிரண்டு விம்மி
சிலுப்பியே திரண்டுகிற் சேரும் நோய்கள்

ஐய்யமாகிய நாடிதனித்தே யோங்கி
யசைந்திடுகிற் பல நோய்களடுப்பதாகும்
பையவேதொந்தமது தொடுத்துப் பின்னிப்
பதறிடுகிற் காலெனனப் பறையலாமே".

(பொ.ள்) - வாத நாடியானது சுருண்டு, திரும்பி பெருத்து நின்றால் வருத்தமுண்டாகும். பித்தநாடியைச் சோர்ந்து பெருத்து அசைந்து சேருமானால் நோய்கள் சேருவதாகும். சிலேற்பன நாடியானது தனியாக உயர்ந்து ஆடுமானால் பல வித நோய்கள் வந்து சேரும்.

- தொந்த நாடியானது நீண்டு பின்னித் துடித்தால் மரணம் வரும் என்பதாகும்.

"சாவதாம் வாதமது நாளொன் றோடில்
தப்பாது மூவாண்டில் மரணமாகும்
ஆவதிருநாளோடி லாணண்டிரண்டாகு
அடுத்தெரு நாளாகிலிறப்பாண்டிடென்றாகும்
போவதிது வெனவாயுள் மறையுன்ந்தே
புண்ணியர்கள் சொன்னபடி புகன்றிட்டேன் யான்
வாவுகுயிற்கிளி மொழி மெல்லிடையஞ்சாயல்
மயிலியலாய் மரணத்தின் வகையிதாமே".

(பொ.ள்) - வாத நாடியானது

- தொடர்ந்து ஒரு நாள் முழுவதும் ஓடுமானால் மூன்று வருடத்திற்குள்ளும்,
- இரண்டு நாட்கள் தொடர்ந்து ஓடுமானால் இரண்டு வருடங்களிற்குள்ளும்,
- மூன்று நாட்கள் தொடர்ந்து ஓடுமானால் ஒரு வருடத்திற்குள்ளும் மரணம் ஏற்படும்.

"பறையக்கேன் வாதமது முன்பின்னாக
பாயந்து வளைந்தோடி லெட்டு நாளிற் சாவாம்
நிறையுற்ற கயிற்றூசல் போல் நின்றோடில்
நீங்குமொரு பட்சத்தில் விறைந்தே யோடில்
குறைவுற்ற நாள் மூன்றில் மரணமாகும்
குதிரையின்றன் பாய்ச்சலெனக்கு மிறியோடில்
மறைவுற்ற நாளிரண்டிற் சாவதாகும்
மயிருறுபேன் என்னிடன் மரிப்பதாகும்".

(பொ.ள்) - வாத நாடியானது

- முன் பின் வளைந்து பாயுமானமல் எட்டு நாட்களிலும்,

- கயிற்று ஊசல் போல் ஓடுமானால் பதினைந்து நாட்களிலும்,
- நிமிர்ந்து ஓடுமானால் மூன்று நாட்களிலும், குதிரைப் பாய்ச்சல் போல் ஓடுமானால் இரண்டு நாட்களிலும்,
- பேன் போல் ஊருமானால் அக்கணமே மரணம் என்பதாகும்.

"மரித்திடவே வரும்பித்த நாடிபாம்பு
வளைந்தோடல் போல் நிற்கில் படசமொன்றாம்
தெரிந்திடு தேள் கொடுக்கில் மாதமொன்றில்
தீண்டு சுடாக்கொழுந்தாகில் நாள் மூன்றாகும்
பெருத்தது தான் படபடத்தாலெட்டு நாளில்
பிசகில்லை யானை வாற்றுடியோர் நாளில்
அரிந்திடு நீர்தவளை யெனக் குதிக்கு மாகி
லையாறு நாள் தனியே மரணமாமே".

(பொ.ள்) - பித்த நாடியானது

- பாம்பு போல் நடந்தால் பதினைந்து நாட்களிற்குள்ளும்,
- கொடுக்கன் போல் நடந்தால் ஒரு மாதத்திற்குள்ளும்,
- விளக்கின் சுடர் கொழுந்து போல் நடந்தால் மூன்று நாட்களிற்குள்ளும்,
- படபடத்தோடுமானால் எட்டு நாட்களிற்குள்ளும்,
- யானை வால் போல் துடிக்குமானால் ஒரு நாளிற்குள்ளும்,
- தவளை போல் குதித்து ஓடுமானால் முப்பது நாட்களிற்குள்ளும் மரணம்.

"வகையாகப் பித்தமது நாளொன்றோடில்
மறலிநகர் தனிலாறு மதியிற் சொல்லும்
பகையாக நாளிரண்டு நீங்கா தோடில்
பற்று விட்டு மும் மதியிற் பறந்து போகும்
தொகையாக மூன்று நாட்படபடத்து
தொடர்ந்தோடிலை யொன்பாளிற் சாவாம்
மிகையாகப் பித்த மிந்தப் படியே நின்றால்
மிஞ்சாமல் நமனுலகில் மேவுவாரே".

(பொ.ள்) - பித்த நாடியானது

- ஒரு நாள் ஓடுமானால் ஆறு மாதத்திற்குள்ளும்,
- இரண்டு நாட்கள் தொடர்ந்து ஓடுமானால் மூன்று மாதத்திற்குள்ளும்
- மூன்று நாட்கள் தொடர்ந்து ஓடுமானால் நாற்பத்தைந்து நாட்களிற்குள்ளும் மரணம் வரும்.

“மரணமது வாருமை நாடிதானும்
வந்த துடியடி போலநிற்குமாகில்
விரணமதாய் நாளொட்டில் மரணமாகும்
மிக்கமுயற் பாய்ச்சலெனில் நாள் மூன்றாகும்
தரணமதாம் போன் போல ஊருமாகில்
சற்பத்தின் புணையலெனச் சாவோர் நாளில்
அரணையத்தின் வால் போல நேர்ந்து நின்றால்
லைந்து நாளிகைதனிற் சாவதாகும்”.

(பொ.ள்) - சிலேற்பன நாடியானது

- யாணைக்கன்றின் நடையைப் போல நடந்தால் எட்டு நாட்களிற்குள்ளும்,
- முயல் பாய்வது போல நடந்தால் மூன்று நாட்களிற்குள்ளும்,
- பேன் ஊர்ந்தாலும், பாம்பின் சேர்க்கை போல பின்னிக்குளைந்தாலும் ஒரு நாளிலும்,
- அரணை வாலைப் போல தேய்ந்து நடந்தாலும் இரண்டு மணித்தியாளத்திற்குள்ளும் மரணம் என்பதாகும்.

“மேவுசிலேற்பன நாடி நாள் மூன்றுக்கு
மீளா மலோடிலைந்து நாளிற் சாவாம்
வாவியே நாளிண்டுக் கோடுமாகில்
மரணமது வந்துவிடும் பத்து நாளில்
பாவிய நாளென்றினுக்கு நிற்குமாகில்
பதினைந்து நாளதனிற் பகைத்துக் கொல்லும்
கூவிய நாளிகை முப்பதைய மோடில்
கொலையது தான் நாளெட்டிற்கிட்டும் பாரேன்”.

(பொ.ள்) - சிலேற்பன நாடியானது

- தொடர்ந்து மூன்று நாட்கள் ஓடுமானால் ஐந்து நாட்களிலும்,
- இரண்டு நாட்கள் ஓடுமானால் பத்து நாட்களிற்குள்ளும்,
- ஒரு நாளில் ஓடுமானால் பதினைந்து நாட்களிற்குள்ளும்,
- முப்பது நாளிகை ஓடுமானால் எட்டு நாட்களிற்குள்ளும் மரணம் என்பதாகும்.

“கிட்டியே கைபிடித்துப் பார்த்த போது
கிளர்ந்தெழுந்த நாடிகள் தான் தொங்கித் தொங்கி
அட்டமதாய்ப் பதறியேயோடுமாகில்
அது காலனூர் புகுமென்றறிந்து கொள்ளு
தொட்டது தான் மேலெழுந்து விரைந்து கீழாய்த்

துரிசாகவே சுழன்று நிற்குமாகில்
எட்டு நாட்செல்லுமுன்னா் ஊா்விட்டோடும்
ஏந்திளையே நாடிகளினியக்கமாமே".

(பொ.ள்) -

- கைபிடித்துப் பாா்க்கும் போது மூன்று நாடிகளும் பக்கம் பக்கமாக குதித்து குதித்து பதறி ஓடுமானால் அவ்வுயிா் மரணித்து விடும்.
- அந் நாடிகள் மேலே எழும்பிக் கீழே விழுந்து சுற்றி நிற்குமானால் எட்டு நாட்களில் மரணம் அகும்.

"இயங்கிய தோா் வாதமாம் நாடிதானும்
எழும்பிய பித்தத்தின் வீட்டைச் சோ்ந்து
மயங்கியே பித்தமென்ற நாடி தானும்
மன்னியே சேற்பனத்தின் வீட்டைச் சோ்ந்து
தயங்கியே சேற்பன நாடி வீடு விட்டுச்
சென்றுதான கண்டத்திற் சேருமாகில்
வயங்கிய ரொதற்குன்றனைய முலையினாளே
மறலியுலகத்திலே வசிப்பதாகும்".

(பொ.ள்) –

வாத நாடியானது தனது இருப்பிடத்தை விட்டு எழும்பி பித்தத்தின் இருப்பிடத்தை சேரப் பித்தமானது இருப்பிடத்தை விட்டு போய்ச் சிலேற்பனத்தின் வீட்டைச் சேர சிலேற்பன நாடி தனது இருப்பிடத்தை விட்டு போய் தொண்டையில் நிற்குமானால் அவ்வுயிா் மரணத்தில் நின்று தப்ப முடியாது.

## 12.4 யூகிமுனி எனும் நூலில் குறிப்பிடப்பட்ட மரணக்குறி........

"பேசவே பிங்கலையின் நாடி தானும்
பேணிநாண் முழுதுதேடிற் பிரளா மற்றான்
வாசவே மூவிரண்டின் மரணஞ் சொல்லும்
வாதமா நாடியது வலிமை யாகி
ஏசவே யிரண்டுநாள் முழுது மோடில்
ஈராண்டின் ரணமென வியம்ப லாகும்
நாசவே நாண்மூன்று வழுவா தோடில்
நமனுக்கங் கிறையாவா னாண்டிற் றானே" .

“தானென்ற பித்தத்தி னாடி தானும்
தரியாம னாளொன்று தயங்கு மாகில்
ஆனென்ற வாறுதிங்கள் மரணஞ் சொல்லும்
அசைவிலா திரண்டுநா ளோடு மாகில்
மோடினென்ற மூன்றுதிங்கட் குணம நிப்பன்
மூர்க்கமாய் மூன்றுநா ளோடு மாகில்
நானென்ற நாற்பதோ டைந்தா நாளில்
நசிக்குமே நமனிடத்தி னல்கு வானே”.

“நல்கவே சேட்பத்தி னாடி தானும்
நாள்மூன்று கடிதோடி லைந்து நாளாம்
மல்கவே யிரண்டுநா ளோடு மாகில்
மரித்திடு வனீரைந்து நாளிற் றானும்
ஓல்கவே யொருநாளே யோடு மாகில்
உறுசீவன் பதினைந்து மட்டுநிற் கும்
பல்கவே பத்துநாழி கையே நின்றால்
பயமில்லை பார்தனிலே பாலிப் பாரே”.

“பாலித்த பித்தத்தி னாடி தானும்
பகட்டியே மூன்றுநாள் புரளு மாகில்
ஆவித்த வரவினாக் கசைதல் போலும்
ஆடியே யமர்ந்துதானி ருக்கு மாகில்
மாவித்த மணியசைத லோசை போலும்
மகத்தான வுடுக்கையின்றன் தொனியைப் போலும்
கோலித்த நாடியினிற் குறிகள் கண்டால்
கொடுமறவி நகர்தனையே குடிகொள் வீரே”.

**12.5 ஆயுள்வேதக்களஞ்சியம் எனும் நூலில் கூறப்பட்டவை ......**

- திரி நாடிகளும் உயர்ந்து வில் துடிப்பது போல் உதறிக்காட்டில் உடனே ஆவி நீங்கும்.
- ஐயம் வாதத்தில் சார்ந்து தவளை போற் குதிக்கினும் பாம்பு நடை கொள்ளினும் மரணம் சம்பவிக்கும்.
- மூன்று நாடிகளும் கற கற எனச் சுழன்று பாம்பு போற் சீறில் உடனே மரணம் நிச்சயம்.
- மூன்று நாடிகளும் கிறு கிறு எனச் சுழன்று சிதறிக்காட்டில் தச நாளில் மரணம்.
- வாதம் சற்று கதித்து பித்த மாத்திரை 18 ஆகி ஆமை போன்றசைந்தாலும் ஐந்து ஆண்டில் மரணம்.

- பித்தமடங்கி பித்த மாத்திரையை ஐயம் கொண்டு ஐயம் பாம்பின் படம் போல அசையின் நாற்பது நாளில் மரணம்.
- திரி நாடிகளும் ஒன்றோடொன்று தாக்கி கீழ் மேற்புரண்டு சா்பம் எனக் காட்டில் 45 நாழிகையில் மரணம்.
- பித்தம் அரணைவாற் போல் துடித்து ஐயத்தில் சார்ந்திருந்தால் மரணம்.

## 12.6 அகத்தியர் 2000 இல் குறிப்பிடப்பட்ட மரணக்குறிகள்........................

ஒரு மாதத்தின் மரணக்குறிகள்....

- வாழ்மகன் மடவா் வியாதி வலியவன் கையை வாங்கிக்
  கொள்ளென விரலால் தன்னைக் குறித்துட னேசை பார்க்கில்
  தெள்ளெனத் தெரிந்து சற்றே திரிகுணஞ் செய்யுமாகில் நாளொரு மாதந்
  தன்னில் நாடியே மரணநந்தானே.

(பொ.ள்) - நாடி திரிகுணமாக ஓடினால் ஒரு மாதத்தில் மரணம் சம்பவிக்கும்.

பத்து மாதத்தில் மரணக்குறி.......

- மரணமே யுனக்குச் சொன்ன மாலயன் தேவர்நாடி
  உரகன்வாய் நாவே யுன்னில் ஓங்கியே மரணமாகும்
  மரனிதா னட்டை போல வங்காது உன்னுமாகில்
  காணமே பத்து மாதங் காலனென் றறிய லாமே.

எட்டு நாட்களுள் மரணக்குறி......

- விண்ணுற வெழுந்த நாடி விரைந்து கீழே நோக்கி
  லுன்னுற வதுவே வாங்கி யுயா் தனுப் போலவாகு
  மென்னும்நா வலா்போ யாகிலெரிந்திடு மெட்டுநாளில்
  திண்ணமே போகா தென்று தெளிவுற வறிந்து.

(பொ.ள்) - நாடிகள் கீழே நோக்கி ஓடினால் உடல் வில்லைப் போல் விரைந்து நிற்கும். எட்டு நாட்களில் மரணம்.

### 12.7 நாடி தர்ப்பணம் எனும் நூலில் கூறப்பட்டுள்ள மரணக்குறி…..

**மாதாந்த உற்பத்திகாலங்களை அங்குஷ்ட மூலத்திற் பார்த்துமுடியுரைத்தல்**

### 12.7.1 ஒரு மாச அந்தத்தில் மரணக்குறி

பூலதை, புஜங்கம் ஆகிய இந்தப் பிராணிகளின் நடையை ரூபக இலக்கணமாகக் குறிப்புக்காட்டின் நாடி, நடையை ஒழித்து ஒன்றோடொன்று சேர்ந்து பின்னப்பட்டு தானம் பிறழ்ந்து ஒரு மலைமேலேறுந் தன்மை போலுருணடுருண்டு நடத்தல், உட்கிச் சிதைவுற்ற நடையாகத் தேய்ந்து தேய்ந்து நடத்தல் ஆகிய இந்தக் குறி உற்பத்தியான நேரம் முதல் ஒரு மாசத்தின் அந்தத்தில் மரணம் சீவனை எடுக்கின்றது.

சிலேஷ்மநாடி பூலதையின் வேகம் போற்றுடித்து அழிந்தாலும் அந்தத்துடிப்பு மெலிந்து கிருசநடை கொண்டாலும் நெந்தக் கிருசநடை குடிலப்பட்டு நிலையற்றுத் தளம்பினாலும் மரணம் ஒரு மதியினெல்லையில் முடிகிறது.

ஐயநாடி சர்ப்பத்தின் ஓட்டத்தைப் போல் அகன்று பலமுடையதாய் வாங்கி நிலையற்றுத் தளம்பினாலும் அல்லது அதிக கிருசகமனமாகத் தோற்றியக்கடையைக் காட்டும் ரேகை விளக்கமில்லாமல் அழிந்து போகிறதும்; அப்பொழுது கபவிருத்திக்குரிய கொடிய குணங்கள் மேற்பட்டு இருதயகோசத்தைச் சூழ்ந்து கோவின் சமாதான ஆக்கத்தையுந் தாழ்மையுறச் செய்து, துர்க்குணமான ரோகிக்கமைந்திருக்கிற துாஸரியின் மேன்மை ஞானமடையும் பேதமடைந்து மரணம் சந்தேகமில்லாமல் ஒரு மாசத்தின் முடிவிலுண்டாகிறது.

### 12.7.2 ஏழாம் எட்டாம் நாட்களில் மரணக்குறி

சாந்தமாக நடந்த சிலேஷ்மநாடி மத்திமை விரலிற் சேர்ந்து ணப்பொழுது வேகமாய் நடந்து இல்லாமலற்றுப் போகிற குணம் ஏழாம் நாளில் மரணத்தைப் பிறப்பித்தது.

கபாதிக்கமான குணங்கள் தலைப்பட்டுச் சிலேஷ்மநாடி மறைந்து நிலைதளம்பித் தாம் பிறழ்ந்து தீவிரமான கெதிகாட்டியுடனே அழிந்துபோகுதல், திரட்சி, வீக்கம் முதலிய நீர்ப்பிடிப்பான வியாதிகளாற் ரேகவர்ன்னம் மாறியிருத்தல், வெளிகாட்டாமல் உள்ளடங்கியிருத்தல்; இந்த நாடிநடை உண்டான அமையத் தொடக்கம் ஏழாம், எட்டாம் நாளில் காயமிழந்து போகிறது.

### 12.7.3 நாலு நாளில் மரணக்குறி

வலது பாதநாடி பழுதடைந்தால், தர்சனக் குறிப்பிடத்தில் மூன்று தாதுக்களையும் பகுத்து ரோகம் சாத்திய நிலைக்குரியதோ அல்லது அசாத்திய நிலைக்குரியதோ என்பதை அறிவது சந்தேகம்; முகநாடி நித்தியமும் நீரோட்டத்தைப் போல் ஓடினால் அது பிறந்த நேரந் தொடங்கி நான்காம் நாளில் யமகண்டமென்றுன்னு.

பைரவி நாடிகள் ரூபக இலக்கணப் பாகுபாட்டை வேற்றுமையடைகிறதினால் அங்குஷ்ட மூலத்திற் பகுத்தறிந்து கொள்வது இயலாதது. அதுபோலவே நாடி ஆரம்பத்திகுரிய முதற்காரணமும் பேதப்பட்டு நித்தியநாடி (தமனி) யின் சலனம் ஆற்றின் நீரோட்டத்தைப் போலும் உறுப்புக்களுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் ஸ்பந்தன காரணம் போலும், பலவிதமாக மாறுபடுகிறது. ரோகிக்கு இந்த விகடமான நடையுண்டான அமையந் தொடங்கி நான்காம் நாளில் உயிர் உடம்பை விட்டுப் பிரிகிறது. இதில் முன் பேசப்பட்ட சப்ததினாந்த அசாத்திய நாடி கபம் தற்சனி விரலிற் மாறி மாறி அதிவேகமாக நடந்து நாலு மினிற்றிலில்லாமல் அழிந்து போகிறது.

### 12.7.4 மூன்று நாளில் மரணக்குறி

தாபக்குணம் அதிகரித்துக் காய்கிற சுரரோகங்களில் உண்டான தோஷம் அதினுடைய உக்கிரமான அழற்சியினால் நெருக்கப்பட்டுச் சடத்திற்கியல்பாயுள்ள திரிதோஷங்களின் ஸ்பர்ஸத்தை உணவாக்கிக் கொள்ளுகிறது. அந்த உணர்ச்சியின் ஒரு பகுதியாவது உடம்பிலிருக்க இல்லாமல் உற்பத்தினுக்கிரமத்தினாற் அழிந்து போனவுடன் நாடிநரம்பும் விறைத்துச் சடுதியாய் மரணம் உண்டாகிறது. அது தவறினால் மூன்று தினவெல்லையில் இறப்பு உண்டாகின்றது. அந்த ஸ்பர்ஸபாகத்தைத் தாபத்தின் கொடூரம் தாக்காமலிருந்தால் மூன்று தோஷங்களுக்கும் உரிய இயல்பான குணம் வளர்ந்து மரணமும் விட்டு நீங்குகிறது.

சுரத்தினழற்சி அதிகரித்துச் சூடுள்ளடங்கியிருக்கிற சன்னிபாத சுரத்தில் நாடி சீதளமாயும், அமலமாயும் நடந்தால், மூன்றாம் நாளந்தம் நான்காம் நாள் முதலில் மரணம் சம்பவிக்கிறது.

### 12.7.5 ஒரு நாளில் அநிச்சய மரணக்குறி

பிரமரக மனத்தைப்போல் நாடியின் நடை தேய்கிற, வளர்கிற சுழற்சி ஒரு தினத்திற் ரேகத்தையழிக்கும் அல்லது விடும்.

### 12.7.6 ஒரு நாளில் மரணக்குறி

பிராணிக்குரிய நாடி ஜீவனைக் கோறும் பொருட்டுக் கையிலே சுழன்று வண்டைப்போற்றெறித்து வீழ்கிறது. அது அங்குஷ்ட மூலத்திலிருந்து தூர வீழ்ந்து மார்பை அறைந்து அச்சத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு அதிர்ச்சியை உண்டாக்கி உட்கிப்போகிறது. ஆதற்கு நியாயம் யாதெனின்; தானத்தைவிட்டுப் பெயர்ந்த தாதின் அவகுணமான செய்கை மனசுக்குரிய இஷ்டார்த்தமான கருவியைச் சுற்றித் திரும்பச் செய்கிறது. அல்லது இயற்கையான குணத்திற்கு விரோதமாகச் செய்கிறது. மிருத்து ஒரு தினத்தை எடுக்கிறது.

### 12.7.7 சுழுமுனா நாடியின் நடையினாலுண்டாகும் பலாபலம்

சுழுமுனா நாடி எப்பொழுதும் எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் ஸ்பந்தன காரணமாயுடையது. அது நாடிரூபக அங்குலிகளில் ஒருமுறைக்கு அதிகமாய் நடத்தல் அல்லது அதற்கு எதிரிடையாக மற்றைய நாடிகள் செல்லுதல் மரணத்தை உண்டாக்குகிறது.

உடுக்கைப் பறையின் துடிப்புக்குச் சமமாகக் கனிந்து ஒலித்த குறிப்பைக் காட்டின தோற்றம் ஒரு நாளிற் காயத்தை அழிக்கிறது அல்லது விடுகிறது.

அங்குஷ்ட மூலத்தில் உடுக்கைப் பறையின் துடிப்பைப் போல் துடித்துச் சைகை காட்டின. நாடியை மரண காரணமும் இனமாற்றாக்குகிறது; அதின் நியாயம் அந்தத் துடிப்பு அருமையாகத் துடித்து மறைந்தால் மரணமில்லை. இடைவிடாமற் கனிந்து ரம்கதி பண்ணித் தரித்தால் மரணம் ஒரு நாளாந்தத்தில் மாற்றிச் சீவனை எடுக்கிறது.

பாதநாடி கையிலே தூலித்த வடிவமாயடர்ந்து நிலைக்கப்பட்ட ஓசையுடன் காணப்படுகிறதும், முகம் செந்தாமரைப் புஷ்பத்தைப் போற் பிரகாசமுடையதாய்த் தோற்றப்படுகிறதுமாகிய இந்தக் குணங்களைப் பொருந்தியிருக்கிறவனுக்கு; மரணம் விட்டுத் தூரமாய்யெடுக்கிறது.

நவிலப்பட்டவனுக்குப் பாதநாடி ப்ரதீதமான நல்ல நிலையை அடைந்து நடக்கிறது. பெண்ணுக்குப் பாதநாடி துாலித்து இனமாற்றாகிறதில்லை. ஆகையால் அவளுக்குப் பிராணாபாணமான காலனாடி கர்மாந்தரக் கிரியைக்குரிய தேகத்தின் பகுதியிலிருந்து நடக்கிறது.

வ ரு ஷக் கணக்காக மாறாமல் நீடித்திருக்கிற வருத்தங்களின் நாடி, திரிதோஷதொந்தத்தில் வாதம், பித்தம், சிலேஷ்மம் மூன்றும் நடக்க முயலுந் தன்மையில்லாமற்றொய்ந்து கிருச்சரமானது சாத்தியம்; வலுக்கொண்டு நடக்கிறது அசாத்தியம் இது நிச்சயமானது.

### 12.7.8 பதினாறு நாளில் மரணக்குறி

நாடிகெதியாய் நடந்தால் மலபேதமும், சீதளவாதமும் உண்டாகிறது. அந்தக் குணங்கள் மருந்தின் செய்கையாற்றிருந்தா விட்டால் மரணத்திற்குக் கணிக்கப்பட்ட பதினான்கு நாட்களுள் முதல் இரண்டாந் தினத்தில் மிருத்துநாடி சாதுரியமான மனதை ரம்மியப்படுத்தி உள்ளடங்கிய வன்னியை அளவின் மேலதிகரிக்கச் செய்து தான் பழகிய திவசங்களொன்றில், இரண்டு கிழமைக்குள் மரணத்தையாற்றி விடுகிறது.

மேலே பேசப்பட்ட நாடி, மலாசயத்தினின்று தனக்குரிய துர்க்குணங்களால் மலசலந் தங்கிச் செல்லு மொழுக்கத்தைப் பழுதடையப்பண்ணி, ப்ரதீதமான சமநிலையையுடைய கோவையுங் களங்கமுறச் செய்து குளிரடையப் பண்ணுகிறது. அந்த நம்பிக்கையீனமான வுரோகிக்குக் குறித்த தினங்கள் இரண்டாம் நாள், ஏழாம் நாள், இவைகளிளொன்றில் தப்பியிருந்தால் பதினான்காம் நாளில் மரணம் சம்பவிக்கிறது. இந்த வித்தியாசங்களால் அங்குஷ்ட மூலத்தில் நாடியறிவு இல்லாமலற்றப் போனது.

### 12.7.9 ஏழு நாளில் மரணக்குறி

வாதநாடி ஒருநேரந் தீவிரவேகம் உடையதாயிருத்தல். இன்னொரு நேரம், சீதளகுணமுடையதாயிருத்தல், மரணவியர்வை முதலிய தசாவத்தைக் குறிகாணல், இருதயத்திற்குச் சிரேஷ்டமாக ஸ்தாபனம் பண்ணப்பெற்றிருக்கிற தாதுகள் வரண்டு போகுதல், அல்லது நெந்தப் புச்சமாகிய கூந்தல்களாவியாய்ப் போகுதல், இந்த அவலக்ஷணங்களையும் துர்ச்செயல்களையும் பொருந்திய ஏதமுடையவருக்புச் சீவன் ஏழிராவந்தத்திற் கேத்தில் நிலைத்திருக்க மாட்டாது.

மேலே கூறிய வாதநாடி தீவிரகெதியாகவும், சிலேஷ்மநாடி தாமதமான மந்தநடையாகவும் நடக்க, நிகளநாடி யொழிந்த மற்றுமுறுப்புகள் அதிகமாய் விகாரப்பட்டு வேற்றுமையை அடைந்திருந்தால் ஏழுநாள் முடிவிலந்தக் தனுபூதல சீவியத்தை இறந்து விடுமென்பதாம்.

### 12.7.10 அரை மாதத்திற் மரணக்குறி

தேகம் அதிக குளிரடைந்திருத்தல், அல்லது ஒரு சாரதியின் செயலுக்கொப்பாகக் கை, கால்களைப் போட்டுலைத்தல், கண்களைத் திமிட்டித் திமிட்டிப் பார்க்குதல், அல்லது ஏற்றுவிழிக்கொப்பாக இருத்தல், நாடி அதிக அழற்சியுடையதாய வரண்டிருத்தலாகச் சொல்லப்பட்ட குணங்களுண்டாகி அரைமாதம் சீவனோடு இருக்கிறவனுக்கு அந்த மரணநாடி ஊடாட்டமான நாள் முதல் பதினான்காம் நாள் உயிரை வதைக்கிறது.

### 12.7.11 பதினைந்து நாளில் மரணக்குறி

சாரீர சுபாவகுணம் மாறிச் சீதமதிகரித்திருத்தல், வதனகாந்தி குறைந்து மேல்மூச்சு, தேக எரிச்சலுண்டாயிருத்தல், உடனே நாடி நிலையற்று அலைவுற்றுத் தீவிர வேகமாக நடத்தல்; பதினைந்து தினத்திலாயுள் கழிகிறது.

### 12.7.12 மூன்று ராத்திரியில் மரணக்குறி

முகநாடி எந்த நேரத்தில் தன்னுடைய விலக்கணத்தையிறந்து, முறையிறழ்ந்து, நடுவிரலினின்று குளிரை அதிகரிக்கச் செய்ததோ அப்பொழுது ஆயாசம், களை முதலிய ஆவேசமான குணங்களும் அதிகரித்து நாடியுந் தோற்றாத மந்தகதியுடையதாய் நடந்தால் மூன்றல்களில் பிராணனைக் கோறுகிறது.

மேற்படி கூறிய மரண காலத்தில் வாதநாடி முறைபிறழ்ந்து நடக்கிறது. அது புலரிப்போழ்திற்றோற்றாமல் அந்தர்கதியாக நடக்கிறது. கோ, சீதளகுணமுடையதாகி உடனே மனசுக்கு அமுக்கமான குணத்தைப் பிறப்பித்துக் கோள்புரிய முயலுகிறது. அப்பொழுது நாடி அதிக மாறுதலான மந்த அசைவு; ரோகியினுயிர் நிலை மூள்றல்கலிலழிகிறது.

**12.7.13**

**சீதங் கோவுறச் சிறந்த நாடி**

**யூதை பிறழ்ந்தொழித் துலாவுமென் றனரே.**என்பது நாடிசூத்திரம்.

மருத்துவன் தான் ஆண்டுவந்த அவுடதங்களை முறைப்படி உபயோகித்து குணமாகாமல் அசாத்தியமாகவந்த வருத்தத்தில் நாடி தனக்குரிய வடிவிலதிகம் சுருக்கிச் சூக்சுமமாயும், அதிக வேகமாயும், சீதளமாயுந் தோற்றியிருந்தால், அந்த வருத்தங்களை அனுபவித்திருக்கிறவனுக்கு வேறுபட்ட ஆயுளை அழித்து விடுகிறது.

சீவனுக்காதாரமாயுள்ள ஞானேந்திரியங்கள் வித்தியாசப்பட்டிருக்கிற ரோகியின் ஆயுள் அழிந்த நியாயம், மரணசமீப காலத்தில் நாடி தன்னடையைச் சிதறிச் சூக்கும வேகமாய்த் தோற்றிச் சீதள குணத்தை அதிகரிக்கச் செய்ததினால்.

பிணியுடையவருக்கு நாடி மின்னலைப்போல் தோற்றாமல் தோற்றுகிறது. அகாலவிதியின் துர்க்குறி; அணுப்பிரமாணத்தின் ஒருபகுதி உயிர்ப்பு, செங்கோற்கடவுண்டனைக்குட்பட்டது.

**தற்சனி விரலிற் றடித்துக் கரந்த**
**உற்பவ மோர்தினத் துள்ளுயிர் வீவே.**

என்பது நாடித்திரட்டு.

குறுநாடி அக்கினிக்குச் சமானமாகவும், நெடுநாடி அரவினோட்டத்திற்குச் சமானமாகவும் செல்லுதல்; கண்டத்திற்கபம் நிறைந்திருத்தல் ஆகிய இந்த இலட்சணங்களைப் பொருந்திய ரோகியின் வாழ்நாள் துர்பலமானது.

**12.7.14 மூன்றேகால் நாழிகையிலாயுளினிறப்பு**

கபநாடி பதறி வேகமாக நாசிக்காதாரமாயுள்ள சீதத்தை இருதயஸ்தானத்தில் அடையச்செய்த காரணம், ஒன்றரை மணித்தியாலத்தில் இருந்து மருவினது.

அந்தக் கபநாடி இரத்தமோட வேண்டிய துவாரங்களை அடையப்பண்ணுகிறது. அப்பொழுது நாசி வழியாக விழுகிற கோழை சுவாசப்பையை அடைந்து நெருங்குகிறது. கோ, சீதளத தன்மையை பொருந்துகிறது. இந்த கெட்ட குணங்களைத் தங்கியிருக்கிற ரோகிக்கு நாடி பர்சனஸ்தானத்தில் வாத சிலேஷ்மங்கள் தானுமறியக் கூடியதாகவில்லை.

அவனை மரணம் ஒரு சாம வரைப்பில் அல்லது மூன்று மணித்தியாலத்தில் எடுத்தது.

அழற்சுரத்தில் மலக்குடலைப் பேதிக்கிற நாடி சீக்கிரமான நடை; பித்தம் ஏக தினத்தில் மீண்டிருப்பவனை இரண்டாம் நாளில் இறங்கச் செய்கிறது. அதாவது ரோகிக்கு மூன்று தோஷங்களுந் தொந்தப்பட்டு நாடியின் நடையுமதிக குடிலப்பட்டு நீசத்துவமான இலக்ஷணத்தைப் புணர்ந்து நிலைதளம்பும் பொழுது சிதறிய துடிமத்திமை விரலிலாடி நடக்கிறது. அது நடைகொண்ட ஒரு பகலுக்குள் அக்கினிக்குச் சமானமான சுரத்தைப் பிரவேசிக்கச் செய்கிறது. அந்தச் சுரத்தை அனுபவித்த ரோகி ஒரு திவாவுக்குச் சீவித்திருப்பது அருமை; அந்த நாட்டப்பினாலெடுத்த தினமிறந்து விடுவானென்றெண்ணலாம்.

### 12.7.15 பன்னிரண்டாம் யாமத்தில் மிருத்து

சுழுமுனாநாடி தர்சனங்குலி மத்தியிலடிக்கடி தோற்றி நடத்தல் பன்னிரண்டாம் யாமபேதத்தில் இருந்துண்டாகிறது. ஆனால் இதில் யூகித்தறிகிறதற்கொன்றுமில்லை; நாடி நடை தோற்றுகிறதில்லை.

சுழுமுனாநாடி எப்பொழுதும் நடுவிரலின்கணின்று மற்ற நாடிகளுக்குரிய நடையை விளக்குந் தத்துவமுடையது; அது மலசலந் தங்கிச் செல்லுமொழுக்கத்தினின்று வேதனை கொடுத்து மலாசயத்தை விபரீதப்படுத்துகின்றது; படகதியில்லாமல் இடைக்கிடை உன்னியுன்னி கையிலே பரிசம் இல்லாமல் அடைகிறது. இந்தச் செயல்களை அபகரித்திருக்கிற ரோகியை மரணம் மூன்று மணித்தியாலத்தில் எடுத்தது. கையிலே வாதகபங்கடானுமறியக் கூடியதாகவில்லை.

கூர்ம வடிவான நபடிச்சக்கரத்தின் வக்கிரத்தில் ஸ்தாபித்த நாடி சடுதியாய்ப் பிறப்பித்த வித்துத்து, ஓதியைப் புணர்ந்து ஊறுபடுத்திப் பலனை இல்லாமற் கெடுத்தது. இந்த அபத்தமான செயலினாலுண்டான குணத்தைணனுபவித்த பிராணன் ஏகதிவசம் மீண்டிருந்தால இரண்டாம் நாள் பொறுத்திறந்து விடுமென்பது தீர்மானிக்கப்பட்டது.

மேலே சொல்லப்பட்ட குணமமைந்த ரோகிக்கு நாடி ஆதாரவோதை அக்கிர பாகமாக மாறி அல்லது வேறுபடுத்திக் காடியுடன் கலந்த கறிகுழம்பைப் போல் மனதைக் கலக்கி அதைதத்துச் சீவனை வதைக்கிறது. தடபம் இருதயத்தை யகைத்தவுடனிறவாதிருந்தால் அது உண்டான நேரந்தொடங்கி ஒரு தினத்திலிறப்பு; அதுவுந் தப்பினால் இரண்டாமல்கலில் அக்கினி கடமைக்குரியவனாக மாட்டான்.

மேல் மாடங்களிலிருந்து தவறி வீழ்ந்தவனுக்கு நாடி எந்த நேரத்தில் ஆற்றின் நீரோட்டத்தைப் போலும், புரண்டும் நடக்கிறதோ அப்பொழுதும் அக்கினிச் சுவாலைக்குச் சமானமானயழன்று மாருத கதியைப் போலலையுற்று மோதினாலும் உடனே இருதயத்திற் அளவுக்கு மேலான அங்கி குடிகொண்டு நிலைக்கிறது. இரத்தோட்டம் எதிர்முகமாக ஓடுகிறது. ''கோ'' இடம் பிறழ்ந்து பேதைமையடைகிறது. கையிலே சிலேஷ்மநாடி அசைகிறது. நடை கலங்கியிருக்கிறதினால் அசைகிறது தனிச் சிலேஷ்மம் என்றும் சொல்ல முடியாது. இருதயத்தின் சுபாவ இயல்பு மாற்றப்பட்டுத் தீவிரமான தாபத்தை அனுபவித்து விடுகிறது. இந்தக் குணங்கள் விருத்திப்பட இருதயத்திலோரிரைப்புடன் நடத்தல், அது மாறி எரிச்சல் காரணமாகுமதல் ஆகிய இந்தக் குணங்களிலிருக்கும் வரையும் சீவன் நிலைத்திருக்கும்.

### 12.7.16 அரையாமத்தில் மரணக்குறி

நாடி அங்குஷ்ட மூலத்திலிருந்து விலகி, நீரிற்றாழ்ந்து சுழியோடி மிதக்கும் சர்ப்பத்தைப்போல், தன்னுடைய நடையையொழித்தொழித்துத் துவய அங்குலிகளிற் காட்டினால் ஒன்றரை மணித்தியாலத்தில் இருந்து மேற்கொள்ளுகிறது.

விதி விகிதமில்லாத நடை அங்குஷ்ட மூலத்திலருத்தமாகி விலகித் தர்ச்சனிவிரல் கருப்பை முதலான இடங்களில் மாறி மாறி நடக்கிறது. சூரியன் நாடி மத்திமை அனாமிகை விரல்களிற் சேர்ந்து கேவலத் தன்மையாக நடக்கிறது. நல்ல குணங்கள் முற்றாயழிந்து கெட்ட குணங்களை உணவாகக் கொள்ளுகிற ரோகிக்கு முடிபு அருத்தசாம பேதத்திலென்று சொல்லலாம்.

### 12.7.17 ஒரு சாமபேதத்தில் மரணக்குறி

கபநாடி துவய அங்கலிகளிலருத்த பாகமாகத் தொந்தித்து நீரிற் சுழியோடி மிதப்பதுபோல் தோற்றியும் தோற்றாமலும் இருந்தால் மரணம் மூன்று மணித்தியாலயத்தில் நிச்சயிக்கப்படுகிறது. ஞானார்த்தமான அறிவு குருவை வணங்கி நின்றுது.

அங்குஷ்ட மூலத்திலிருந்து இரண்டங்குலம் விலகிக் கேவலப்பட்டனாமிகையிற் றடித்துப் பாதிபாதியாகி விகாரப்பட்டு விரலின் இருபுடையிலும் விம்மி விம்மித் தோற்றினாலும் ஒரு சாமபேதத்தில் அல்லது இரண்டாஞ் சாமத்தில் மரணமுண்டாம்.

### 12.7.18 மூன்று நாளில் மரணக்குறி

பாதத்தின் பெருவிரலிலே வைக்கப்பட்ட நாடி மின்னலைப் போற்றோற்றி நிலையற்று மூன்று விரலிலும் நடை கொண்டு, உறையிட்டது போல் மறைந்து நின்றுவிட்டால்; இந்தக் குணத்தை நண்ணியிருப்பவனைக் கைவிடுகிறதற்குக் குறிக்கப்பட்ட திவசம் மூன்றில் மரணம் சந்தேகமில்லாமல எடுக்கிறது.

ப்ரதீதமான நிலமைகளையுடைய ‘‘கோ’’ வாத பித்த கபங்களாற் சூழ்ச்சியுற்றசைவற்றிருந்தாலும் மத்திமை விரலுக்கு உரிமையான நாடி, பாதத்திரய தொந்தங்களால் விலக்கப்பட்டாலும் அனாமிகை விரலினாடி சகல உறுப்புக்களுக்குங் கொடுத்து அனுபவியாது இருந்தாலுஞ் சொல்லப்பட்ட ரோகிக்கு மரணாவஸ்தையான குணங்கள் அதிகரித்து மூன்று நாளாந்தத்தில் மரணந் தண்டிக்கிறது.

நாடி தர்ச்சனி விரலினின்று சகல உறுப்புக்களையும் இயங்குந் தன்மையும், மத்திமை விரலின் நாடி கோவினால் வியாபிக்கப் பெற்ற சதுர்த்தாம்ஸத்தை மாறி மாறிக் கிரமப்படி ஒன்றின் பின் ஒன்றாய் உயர்ந்தவர்ணமாகச் சங்கறபிக்கிற அறிவும், ப்ரதீத நிலைமையையுடைய ‘‘கோ’’ தமனி, தாமனி, இடது பாதத்திரயம் இவைகளை விதிவிகிதப்படி கற்பிக்கிற அதிகாரமும், இன்னுமந்தப் பித்த இடதுபாதத் திரயத்தையும், சிலேஷ்மம் சகல அம்சங்களையும் நல்ல குணமாக நடத்துகிற தன்மையிருக்கும் வரையும் சித்த நிதானத்திற்குரிய ப்ரதீத நிலைமை அழியமாட்டாது.

சதுர்த்தாம்ஸம் என்பது – கோ சூழ்ச்சியுற்றிருக்கும் அமசங்கள் நான்கு. கோவினால் வியாபிக்கப் பெற்றவை. அந்த அம்சங்களின் ஒரு பகுதி கோவுக்குரிய ப்ரதீதமான குணங்கள் கெடாமலிருக்கும் வரையும் அம்சங்கள் நான்கும் ஏகார்த்தமான பொருள் அடைகிறதில்லை.

### 12.7.19 ஐந்து நாளில் மரணக்குறி

பாதத்தின் விரலிலே வைக்கப்பெற்ற நாடி உஷ்ணத்தை வேகமாகக் காட்டி நடந்தால், மரணம் ஐந்தாம், ஆறாம் நாட்களிலுண்டாம்.

வாதநாடியும், பித்தநாடியும், நாடி ஆரம்பத்திலுள்ள அம்சங்கள் நான்கினொன்றை வேறுபட்ட இனமாகச் செய்கின்றன. அவற்றை வியாபித்திருக்கின்ற ‘‘கோ’’ வளைந்து மறைந்து குற்றமுடையதாய் அசைகிறது. நாடி தொய்ந்து மாத்திரை சிறுத்து நீசமாகித் தெறித்து வீழ்கிற உஷ்ணமான செயல், ப்ரதீத நிலையைக் குலைக்கிறது. அப்பொழுது மிருத்து உற்பத்தியாகிறது. இந்த அபசகுணங்களைப் பொருந்திய ரோகிக்கு ஐந்தாம்

நாளீற்றில் இருதயஸ்தானத்தில் அமைக்கப்பெற்றுள்ள நளினியின் சேர்க்கையான இதழ்கள் யாதுமொன்றற்குரிய துவாரம் இயல்பிலுமகன்று அல்லது அடைந்து இருந்தாலும், அல்லது மாமிச கண்டத்தில் வெடிப்புண்டாகியிருந்தாலும், ஐந்தாம், ஆறாம் நாட்களில் மரணமுண்டாமென்று சுட்டிக் கூறிய மிருந்துற்பவனை ஒரு தினமேனும் காத்திருக்க வேண்டியதில்லை.

சரணாங்குஷ்ட மூலத்தில் நடந்த நாடி, எப்பொழுது மந்தம் மந்தமாகத் தோற்றுகின்றதோ, அந்த நேரந்தொடங்கி ஐந்து பகலுக்கு அவஸ்தைப்படுகிறவனுக்குச் சாவு அந்தத் தினங்களில் உண்டாகும் என்பது நிலைபரமானதல்ல.

நாடி ஆரம்பமாகிற முதலில் வாதந் தலைப்பட்டு கடக்கப் பித்தத்தின் குணம் அம்சங்கணான்கினொன்றை இனமாற்றாக்கினாலும், அவற்றை வியாபிக்கிற "கோ" மந்தம் மந்தமாகக் களங்கமுற்றசைகிறது. இந்த அவகுணங்களை அனுபவித்திருந்த ரோகிக்கு ஐந்தாம்நாள் மீண்டடுத்த தினம் மிருத்துண்டானது.

**நாடி ஸ்பந்தன காரணமாக நாடி தர்ப்பணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது**

இருதயத்தை பற்றி நிற்பவனாகிய தமனியுமதைச் சேர்ந்த கிளைகளும் உடம்பு முழுவதிலும் வியாபித்துச் சோணிதத்தின் பெருக்கை கொண்டு செல்கின்றவனாய்ச் சரீரத்தை வளர்கின்றன.

இருதயம் ஓடங்குவதனார் ஓரயவினதாகிய இரத்தம் தன்னியை அடைந்து அதனாலே சேர்க்கபட்டு ஊர்த்துவ மார்க்கமாக ஸ்தாபித்திருக்கின்ற நரம்பையும் மற்ற நரம்புகளையும் பிரவேசித்து தேகமுழுவதிலும் செறிந்து அதன் பின் புப்புசத்தை அடைகின்றது. புப்புசத்தினின்று இருதயத்தை அடைகின்றது. இப்படியே தொழில் பின்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கின்றது.

இருதயம் குவியும் தன்மையும் விரியுந் தன்னையுமுடையது. அதற்கு இருதயகமலம் என்றும் ஒரு பெயர் இரத்தாசயத்தின் கீழ்ப்பகுதியைப் பக்கத்திலமையப் பெற்ற தடித்த மாமிசத்தசையானது நெருக்குகிறதினால் இரத்தங்கள் வீரிட்டும் போகும் பொழுது நிமிர்ந்து நிற்கின்ற நரம்புகளிலும் இரத்த ஓட்டத்திற்குரிய மற்றும் நரம்புகளிலும் பிரவேசித்துத் தேகமுழுவதிலும் ஓடிப்பின்னர் புப்புசத்தை அடைகின்றன. புப்புசத்திலிருந்து இருதயத்தை அடைந்து அஙடகே பரிசுத்தமான இரத்தமாகப் பெறுகின்றது. தமனியோடு

கூடிய சமஸ்தசிறு நரம்பின் கரியை இப்படியே பின்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கின்றது.

(கறைநீளமையங் கறைபுற மோவா
ஓவியசொம்பா லுட்செல விரிந்து
மூடவு மரரி மூன்று புதவுபோ
னாடியுற் பவத்தினவின்ற வரணே)

என்று நாடித்திரட்டுக் கூறும்.

இரதமோடுகின்ற வேகத்தினாலே தமனியடிக்கடி ஸ்பந்திக்கின்றது.பெருக்கினது இயற்கையின் வேறுபாட்டால் ஸ்பந்தனத்திற்கும் வேறுபாடுண்டு.

மேலே சுட்டிய நாடிகளுக்குரிய வித்தியாசமான சலன காரியங்களை அங்குஷ்ட மூலத்திலுமறிய வேண்டியது. இருதய ஸ்தானத்தில் முக்கிய பிரயோசனமுடையதாய் நின்று சஞ்சரிக்கின்றன தமனிநாடி தேகமெங்கும் வியாபித்து அவ்வுறுப்புகளை உயர்ந்த இனமாகச் செய்கிறது. அந்த நாடிகொண்டு செல்கின்ற உத்தரம் மேராக பஞ்சேந்திரியங்களின் குணங்களையுடைய நரம்மின் மார்க்கமாகச் சென்று கைகளைப் போஷித்து நல்ல குணமாகச் செய்கின்றது. மனரகிதமான உதிரத்தின் உயர்ந்தகுணம் கண்களைப் பேஷிக்கின்றது. கைகள் நல்ல குணமாகப் பேஷிக்கிற இரத்தம் சரீரத்தை நடப்பிக்கின்றது.ந்ீசமான தானங்களை நீக்கிச் சிரேஷ்டமான உறுப்புகளைப் பூரணப்படுத்துகின்றன.தமனியின் ஒற்றுமையான பிரதியிடம் இருதயஸ்த இரத்தாதார யந்திரமென்று சொல்லப்படுகின்றது. அந்தக் கருவி ஸ்தாபிக்கப்பெற்ற தானம் எந்த உறுப்போ அதில் ஸ்தூல மாமிசரூபமான ஏகதலிகையைப் பெற்றிருக்கிறது. அது உபரகதரத்தில் எதிராகத் தர்கித்து லோலிதகாரணமடியறைகிறது. நளினி சமுதாயம் தமனியின் மூலபாகம் தமனி சம்பந்தமான அநேக கிளைநரம்புகள் பிரதி கிளைகள் நிகளத்திலிருந்து பிரிந்து தேகமுற்றும் வியாபிக்கின்றன. அவைகளில் தொண்டையை மருவிய சகை நாவுக்குரிய குணங்களுக்குத் தகுந்த உற்சாகத்தைப் புரிகின்றன. சமஸ்த சூஷ்மருபமான நலகமம் தூலரூபமான மாம்ஸ் நலிகையுந் தமனி காரணமாக வியலுந் தன்மையுடையவைகள். தேகமுற்றிலுஞ் சுற்றியோடுகின்ற இரத்தத்தை இருதயம் பிரதியாகச் சேர்ந்துத் தமனி மார்க்கமாக அந்தந்த உறுப்புகளுக்கிணங்க அங்குஷ்ட மூலங் கற்பனை செய்கிற பிரமாணத்தின்படி போஷணை செய்ய அவ்வுறுப்புக்கள் அனுபவிக்கின்றன. சமகுணம் பொருந்திய இருதயமென்னும் இயந்நிரத்தின் சுபாவ நிலைமை குலதை மௌதை என்பனவாகிய இக்காரணங்களிலிருந்து இஷ்டமாக்கிக் கொள்ளுதல் ஜலபூர்ணமஸக இரைச்சல் இராண்டாந் தாதாகிய பித்தத்தின் கோபமான பார்வை என்று சொல்லப்படுகிறது.அந்த அமங்கலமான மஸகம் சுத்த பாவகனின் அளவுக்கதிமான சொலிப்பை உதிரஞ் சொல்லுகின்ற நாடி நரம்பகளின் சந்தித்துவாரம் அங்குஷ்ட மூலம் இவைகளை உயர்ந்த வர்ணமாக்கி அங்கிருந்து வேகமாக நிகளத்தை அனுசரிக்கிறது. இருதயத்தில்

தங்கிருக்கின்ற அசுத்த இரத்தத்தின் அம்ஸம் ஸ்தூல தமனியிலுயர்ந்த சாதியாகிக் கையின் பொருட்டுச் சமீப உறுப்பிற் பிரவேசித்தபடியால் மிகவுமற்பணற்பனாக முன் நெற்றியைச் சேருகிறது. பருவப்பெயர்சியினந்தம் ஆரம்பம் ஆகிய இந்தக் காலங்களில் குதிப்புறுகிற இரத்தம் தமனியின் துவாரங்களைப் பிரவேசித்தார் அது தேகமுற்று மலைந்து திரிந்து பேதப்பட்டு அங்குஷ்டமூலத்தையும் சூழ்ந்து புப்பசத்தையும் வித்தியாசப்படுகின்றது. அந்த இரத்தம் மறுபடியும் (முன் இறந்த ஒரு சீவன் தன் சந்ததி வழியில் வந்த ஜென்மிப்பது போல்) அடையப்பப்பெற்ற ஓதை காரணமாகக் கைகளுக்கு உற்பத்தியானது. அந்தக் காலங்களில் மலசல வேதனை பிரசவ வேதனை காரியங்களும் நிகழ்ந்தால் விபரீத மடைந்து அவை வெளிதோற்றிய வண்ணம் இருதயமிட்டமாகிக் கொள்கிறது. அந்த இரத்தம் ஸ்தானத்திலிருந்து பிரசவமாகும் பொழுது அதிக வில்லங்கமுடையதாய் வெளிப்படுகிறது. அப்பொழுது மனசுக்கு ஒரு வகையான கலக்கமுடையது போற்றோற்றி வித்தியாசத்தைக் காட்டுகிறது. அந்த உதிரம் பிரவேசமான பின் இருதய மிஷ்டப்பிரகாரமான தன்மையடைகின்றது. இந்தக் காரணங்களைச் சுவாச ஸ்தானத்திற் சோதனை பண்ணி அறியவேண்டியது.

ஜெயங்கொள்ளபப்பட்ட இரத்தம் நிந்தனைக்குரியதாய்த் தேகவர்னத்தையும் வித்தியாசப்படுத்துகிறது. சித்தம் பயம் கிலேசம் முதலிய துர்க்குணங்களை உணருந்தருணம் எப்பொழுதோ அப்பொழுது அதிக வுசிதமான ஊக்கமும் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தினம்தோறும் நல்ல பலனையுண்டாக்கி அளிக்கிற ஹோதி இவைகள் அனுபவிக்கறதில்லை.துக்கம் பயங்கரம் இவைகள் காரணமாக வியப்புற்ற உதிரத்தின் முதன்மையான குணம் பூரணதமனியிலெதிர் தாக்கிய படகதியல ஷணமாக நாடியோட்டத்தையும் நடக்கச் செய்கிறது.

தேகாரோக்கித்திற் கிடையூறான இரத்தம் எதிர்த்து மேலோக்கித் தமனியிலோடும் பொழுது அந்த நாடிக்குரிய விசித்திரான துவரங்களையும் வேற்றுமைப்படுத்தி அங்குஷ்ட மூலத்திற் பிரவேசமாகி நல்ல வேகமான லோலித காரணங்களை உன்டாக்கிறது. . அவைகளை இருதய ஸ்தானத்திலறிந்து கொள்ள வேன்டும். இந்தக் காரணங்களினாலே தமனி நாடியில் உக்கிமம் அதிகரித்தத் தடபலணத்தை முயலத்தனமாகிறது.

உதிரத்திற்குரிய ‘‘கே’’ எப்பொழுது சுழலுந் தன்மையைப் பொருத்தி நடக்கிறதோ அப்பொழுது சரீரப் பிரகிருதி பேதங்களும் தமனியின் தடபடகதியும் ஓதை காரணமாக வித்தியாசமடைகிறதாக அறிய வேண்டியது. அதாவது இரத்தம் தங்கி மேனோக்கி அல்லது எதிர்நோக்கி மந்தவேகமாயோடினாலந்த நாடியும் மந்த கதியாக நடக்கிறது. இரத்தம் மேனோக்கி அல்லது எதிர்தாக்கி துரிதமாயோடினால் அந்த நாடி கோபங்கொண்டு சடுதியாயெழும்பித் தானத்தை விட்டுப் பெயருகிறது.

இந்த ஸ்திதியையுடைய நாடி இரத்தாயத்திற்கு சமீபமான உறுப்புகளில் பிரயோசனமற்றதாய்த் திரிகிறது. ஜென்மத்திற்குரிய மூலாதாரநாடி தூலகதியிலடீணமாகவும் குஃமகதியிலடீணமாகவும் உற்பத்தியானது இந்த விதமாகவே கடினபேதமான நியாயத்திலுங்கொள்க. இந்த லடீணங்களமைநடத நாடிகளை உதிரத்தின் அணுப்பிமாணத்தின் ஒரு பகுதி நவீரம் அதற்கு கே என்று பெயர்.அது உதிரத்தை இனமாற்றாக்குகிறது.அந்த இனமாற்று உயர்ந்த சாதியான இரத்தமோ தாழ்ந்த சாதியான இரத்தமோ என்பதை தேகநிலைமையிலறிய வேண்டியது குறித்துக் கூறிய நாடிரோக அவஸ்தையிலதிக திவிர தீவிரமான கெதி தேய்கிறது. அப்பொழுது அந்த வேகம் சிரசிலேறிந் தாக்கிக் கனிபண்ணி மரணத்தை உண்டாக்கிறது.

## 12.8 காலம் நாடித்துணிவு அசாத்தியம் என தேரையர் யமக வெண்பாவில் கூறப்பட்டவை

‘‘வைகறையை நண்பகலை மாலையைமே லேலவுயில்

வைகறையை பித்தமுயிர் மாறிமுன்போர் - வைகறையை

மாட முறைகொல் வழிமூ நரம்பினை

மாடமுறை கொல்சொல் யமன்’’

## 12.9 தேரையர் காப்பியத்தில் அசாத்தியம் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றும் முறையே அரசனாகவும், அமைச்சனாகவும், சேனைத் தலைவனாகவும் இருந்து கொண்டு நாட்டைக் காப்பது போல மாறுதல்களையும், மாறுதல் இன்மைகளையும் உடலில செய்து வருகின்றன். நாடிகள் தத்தமக்குப் பொருந்துகின்ற வகையில் நடப்பதும், அன்னம் நடப்பது போல் அமைதியாக நடந்தாலும் நோய்கள் தீருவது சாத்தியமாகும் அப்படி அல்லாமல் கொக்கைப் போல் தாவித்தாவி நடந்தாலும், தேன் நடையைப் போல் நடந்தாலும் நோய்கள் குணமாவது அசாத்தியமாகும். வீணையின் நரம்பு ஒலியைப்போலப் படிப்படியாக நடை அடங்கிக்கொண்டு வந்தால் அந்த அறிகுறி நோய்கள் நச்சுத் தன்மையை உண்டாக்கி மரணத்தைக் காட்டும் அறிகுறியாகும்.

# 13. தொகுப்புரை

கிடைக்கப்பெற்ற நூல்களிலிருந்து நாடி பற்றி குறிப்பிடப்பட்டவைகளில்

நாடி என்பது துடிப்பு மட்டுமல்லாது நோய்க்குரிய காரணத்தை எழுவகைத் தோற்றம் முதல் கொண்டு ஆராய்ந்து கண்டு பிடிப்பது என தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு கூறப்பட்டுள்ளது. நோயை நிதானிப்பதற்கு 8 வகை பரீட்சை முறைகளில் நாடியைக் கொண்டு நோயை நிதானிக்க வேண்டும் எனவும் யூகிமுனி வைத்திய சிந்தாமணி, அகத்தியர் 2000 ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

72000 நாடியில் 10 நாடிகள் வளம் பெறும் நாடி என்றும் நல்லதோர் நாடி 3 என்றும் கூறப்படுகின்றது.

நாடி பார்க்கும் இடங்கள் பல கூறப்பட்ட போதும் எல்லா நூல்களிலும் மணிக்கட்டிற்கு மேலாக பெருவிரற் பக்கம் பார்க்கவேண்டும் என கூறப்படுகின்றது. மூன்று விரல்களால் கணபதியை மனதில் நினைத்து பார்க்கவேண்டும் எனவும் அவற்றில் மோதிரவிரலில் கபமும், நடுவிரலில் பித்தமும், ஆட்காட்டி விரலில் வாதமும் புலப்படும் என பதினெண் சித்தர்கள் நாடி, அகத்தியர் 2000 ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஒரு சித்த வைத்தியனுடைய இலக்கணம் எவ்வாறு இருக்கவேண்டும் என்றதும் அந்த இலக்கணத்துடன் இறைவனது சிந்தனையை மனதில் இருத்தினாலும் மாத்திரமே நாடியை அறிந்து கொள்ளமுடியும். பெண்களிற்கு இடது கையில் நாடியும் ஆண்களிற்கு வலது கையில் நாடியும் பார்க்க வேண்டும் என அகத்தியா 2000,(பதினெண் சித்தர் நாடிசாஸ்திரம்) என்னும் நூல்களில் கூறப்பட்டுள்ளது. காரணம் சிவனுடைய இடப்பாகம் பெண் என்பதால் ஆக இருக்கலாம்.

நாடி பார்க்கும் முன் கைகளில் நெட்டை வாங்குமாறு கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் குருதிச்சுற்றோட்டம் சீராக ஓடுவதற்கு உதவும்.

நாடி நடை தங்கியுள்ள காரணிகள்:

நாடி நடைக்கும் ஒரு நாளிற்கும், வாரத்திற்கும், மாதத்திற்கும் தொடர்பு உண்டு. நாடியானது காலையில் (உதயத்தில்)வாதமும் மதியத்தில் (உச்சியில்) பித்தமும் மாலையில் கபமும் அதிகரித்துக் காணப்படும் எனவும் ஆய்வு செய்த நூல்களில் ஒரு நாளின் பொழுதில் நாடி நடை தங்கியுள்ளது என கூறப்பட்டுள்ளது.

வாரங்களில் நாடி நடையின் சிறப்பு பற்றி நூல்களில் கூறப்பட்டுள்ளது. வாதநாடியானது திங்கள், புதன், வெள்ளி சுக்கிலபட்சத்து வியாழன்

என்பவற்றில் காலையில் சிறப்பாக நின்றால் சுகம் என்றும் பித்த நாடியானது ஞாயிறு, செவ்வாய், சனி, கிருஷ்ண பட்சத்து வியாழன் என்பவற்றில்காலையில் சிறப்பாக நின்றால் சுகம் என்றும், மாதங்களிற்கும் வாத பித்த கபத்திற்குமான தொடர்புபற்றி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. காரணம் ஒரு வருடத்தை உத்தராயணம், தட்சனாயணம் என மாதங்களை அடிப்படையாக வைத்து பிரித்துக் கூற முடியும். இக்காலங்களில் பஞ்சபூதங்களில் மாற்றம் ஏற்படுகிறது. இம்மாற்றத்துடன் உடலில் உள்ள பஞ்சபூத அம்சங்களும் மாற்றமடையும். இதனால் வாத பித்த கபங்கள் மாறுதலடையும். இவை மாறுதலடையாது சமனிலையில் பேணுவதற்கு ருதுசரியையில் அதற்குரிய ஆகார, விகார, ஔடதங்களை எடுத்தல் வேண்டும் இக்காலங்களில் கார்த்திகை மாசி மாதங்களில் கபம் சிறப்புற்றுக் காணப்படுகிறது. நாடியில் ஆடி முதல் ஐப்பசி வரை வாதம் தன்னிலையில் கூடிக் காணப்படும். பங்குனி முதல் ஆனி வரை, பித்தம் கூடிக் காணப்படும். நாடிகளிற்கும் சுவைகளிற்குமான தொடர்பு பற்றி கூறப்பட்டுள்ளது. நாடி நடையானது சுவைகளில் தங்கியுள்ளது. கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு இவ்வாறான சுவைகளை அளவில் அதிகம் உள்ளெடுக்கையில் வாத, பித்த, கபம் தன்னிலை விருத்தியடையும். V,P,K ன் சமநிலைகளை நாடி மூலம் பார்க்கலாம் 1: ½: ¼என்ற விகிதத்தில் காணப்படும். தொடர்ந்தும் ஒரே மாதிரி சுவைகளை உட்கொண்டால் தாது பிறநிலை விருத்தியடைந்து சப்ப தாதுக்களைத் தாக்கி நோயை உண்டாக்கும். எத்தாது பிறநிலை விருத்தியடைந்துள்ளதோ அந்த நோய் உண்டாகும். வாதம் தன்னிலை,பிறநிலை அடைந்து, இது பின்னர் கபம் பித்தத்தை தாக்கலாம். இவற்றை நாடியை வைத்து அறிய முடியும். ஆனால் சாதாரண வாத, பித்த, கப நாடி நடையை நன்கு பார்த்து பயிற்சி பெற்றால் மட்டுமே இவ்வேறுபாட்டை அறியமுடியும். நாடி பலகாரணிகளில் தங்கியிருப்பதால் அவற்றையும் மனதில் வைத்து நாடியை பார்க்கவேண்டும்.

அங்காதிபாதம்,சிகிச்சா ரத்ன தீபம்என்னும் வைத்திய சிந்தாமணி என்னும் நூல்களில் 96 தத்துவங்களின் கீழ் தச நாடிகளாக இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, அலம்புருடன், காந்தாரி, அதிதி, குரு, அலம்புடை, சங்கினி கூறப்பட்டுள்ளது. இந்தப் பத்து நாடிகளும் மூன்று நாடிகளில் ஒடுங்கும் எனவுமஇ அப்போது வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் வேறுபாட்டை விளங்கிக் கொள்ள முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது

இடைகலை
பிங்கலை } வாதத்தில் ஒடுங்கும்(சுட்டுவிரல்)
சுழுமுனை

சிகுவை
அலம்புருடன்
காந்தாரி
அத்தி

} பித்த நாடியில் ஒடுங்கும் (நடுவிரல்)

குரு
அலம்புடை
சங்கினி

} இம்மூன்றும் கபத்தில் ஒடுங்கும் (மோதிரவிரல்)

அங்காதிபாதம் என்னும் நூலில் தசநாடி என்னும் தலைப்பின் கீழ்

" வரிசையாய்த் தசவாய்வின் செயலீதாகும்

வாய்வுகளுக்காதாரமாயிருக்கும்

துரிசான தசநாடி தன்னைக் கேளு

சுழிமுனையோடிய கலைபின் கலை காந்தாரி ……."

எனும் பாடல் மூலம் தசவாயு (பிராணன்,வியானன், உதானன், அபானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்) இவைகள் உடலில் பல செயல்களிற்கு காரணமானவை, இவ் 10 வாயுக்களையும் தசநாடிகள் இயக்குகின்றன என கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக, பிராண வாயு, இது தசவாயுக்களில் ஒன்றாகும். இது சுவாசத்தை நடத்தும். உத்தம தேகிக்கு நாழிகை(24 நிமிடம்) ஒன்றுக்கு 360 சுவாசமாக கொல்லன் துருத்திக்குள் காற்றேறுவது போலேறும். இப்படி ஏறும் சுவாசமானது இராப்பகலாகிய 60 நாழிகையுள்ள நாள் ஒன்றுக்கு 21, 600 சுவாசம் ஏற்படுத்தும். இதனில் 7200 சுவாசம் வெளிப்படும். 14,400 சுவாசம் உள்ளடங்கும்.


இதனைக் கட்டுப்படுத்துவது தசநாடிகளில் இடைகலை, பிங்கலை ஆனது சுழுமுனை வழி ஓடி கபாலத்தைச்(சிரசு –Brain) சுற்றி நாசிவழியாகப் புறப்பட்டு நான்கு விரற்கிடைப் பிரமாணம் மீந்து தான் நின்ற ஸ்தானத்திலேயே தாக்கும் என கூறப்பட்டுள்ளது.

இதனை மேற்கத்திய வைத்தியத்தில் சுவாசப் பொறிமுறையுடன் ஒப்பிடமுடியும். இதில் Respiratory center மூளையில் Medulla oblongata, Pons என்னும் இடங்களில் உண்டு. அத்துடன் brain இல் இருந்து வரும் motor nerve, (Intercostal nerve, Phrenic nerve) இவற்றின் தூண்டலால் சுவாசம் நடைபெறுகின்றது. 1 நிமிடத்தில் 15-16 சுவாசம் என மேற்கத்தேய நூல்கள் கூறுகின்றது. இதையே சித்த மருத்துவத்தில் தெளிவாக தசநாடியும்(இடைகலை, பிங்கலை) தசவாயுவும்(பிராணவாயு) இரண்டையும் தொடர்புபடுத்தி சுவாசப் பொறிமுறை கூறப்பட்டுள்ளது. சுவாச எண்ணிக்கை 1 நாழிகையில் 360 சுவாசமாக கூறப்பட்டுள்ளது. 1நாழிகை = 24 நிமிடம் எனவே 1 நிமிடத்தில் 15 சுவாசம் ஏற்படுவதாக 1927 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலான அங்காதிபாதம் என்னும் சித்த வைத்திய அரிச்சுவடி, வைத்திய சிந்தாமணி எனும் நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இதில் சுழுமுனை என்னும் நாடியானது மூலாதாரத்தில் இருந்து சிரசு மட்டும் நீண்டு தூண் போல (Spinal cord) நிமிர்ந்து நிற்க இடைகலை, பிங்கலை என்ற நாடிகளிரண்டும் மூலாதாரத்திலிருந்து (cauda equiana) எழுந்து சுழுமுனையில் பின்னிச் சுற்றி (Cross) ஏறி சிரசளவாக நீண்டு நிற்கும் என அங்காதிபாதம் என்னும் அரிச்சுவடி எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதனையே வைத்திய சிந்தாமணி எனும் நூலில்

“வலம் இடக்காற் பெருவிரலினின்று அசைந்திளகி மேலேறி கத்தரிக்கோல் மாறலாகப் பின்னிச் சுழுமுனையிற் றாக்கிச் சிரசில் முட்டி மீண்டும் கீழிறங்கி இடம் வலநாசிகளில் ஊடுருவிப் பாய்ந்து திரும்பி மூலஸ்தானத்தைப் பற்றும்” எனக் கூறப்பட்டுள்ளது.

**படம் 04 :** இடைகலை, பிங்கலை நாடிகளின் பாதை



மூலஸ்தானம் நிற்கும்

Pre central gyrus(Motor area)

**படம் 05 : ஐம்பொறிகள் உணரும் உணர்ச்சிகள்**

Sense என்பது Special sense, normal sense என இருவகைப்படும்.

Sense

**special sense - ஐம்பொறிகளுள் வாய், மூக்கு, கண், காது**

1. Taste – Mouth
2. Smell – Nose
3. Vision – Eyes
4. Hearing - Ears

**Normal sense– ஐம்பொறிகளுள் மெய்**

1. Touch
2. Pain
3. Pressure
4. Temperature
5. Vibration
6. Position
7. two.five(2.5)

இதில் touch, position, vibration,2.5 discriminationஇவைகளை posterior spinothalamic tract கடத்தும். Pain, temperature, touch இவை anterior spinothalamic tract ஆல் கடத்தப்படும் என மேலத்தைய மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

இது தெளிவாக புலன் உறுப்புகளில் இருந்து ஐம்பொறிகளாக 96 தத்துவத்தின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. மெய், வாய், கண், மூக்கு, செவி என sensory organs ஐயும் அதில் உடலில் உணரும் உணர்ச்சி ( Touch, Pain, Temperature, Position, Vibration) மற்றும் Special sense organs (வாய்- நா, கண், மூக்கு, செவி) ஆல் உணரும் உணர்ச்சி சுவை, பார்த்தல், மணத்தல், கேட்டல் என்பவையாகும். உடலில் உணரும் sensation (Touch, pain, temperature – sensory tract)) இடைகலை, பிங்கலை மூலம் சுழுமுனை

ஊடாக சிரசை தாக்கி அங்கிருந்து மீண்டும் கீழ்நோக்கி (motor tract) உடலில் பரவி (spinal nerves) மூலாதாரத்தை சுழுமுனை வழியாக அடையும்.

சுழுமுனை என்பது மேற்கத்தேய வைத்தியப்படி medulla oblongata வின் தொடர்ச்சியாக spinal cord உம் அதன் முடிவில் cauda equina உம் காணப்படுகின்றது. இதனையே மூலாதாரத்திலிருந்து தூண்போல் சிரசில் முட்டுகின்றது என்பதாகும். இதனை சுழுமுனை எனவும், மற்றும் இடைகலை, பிங்கலை என்பது இரண்டு கால்களிலும் உள்ள sensory nerves (அதாவது காற்பெருவிரலில் இருந்து மேலேறி கத்தரிக்கோல் வடிவாக cross( வைத்திய சிந்தாமணி) மற்றும் சுழுமுனையை பின்னிச் சுற்றி (அங்காதிபாதம்) என spinal cord ல் sensory nerve cross (Lateral and anterior spino thalamic tract) பண்ணுவதையும் பின் மேலேறி brain ல் respiratory centre ல் தாக்கி சுவாசத்தை அதாவது பிராணவாயுவை தூண்டி சுவாசத்தை ஏற்படுத்துவதாகவும் மற்றும் சிரசில் முட்டி (precentral gyrus ஐ அடைந்து) motor tract {Pyramidal tract- Spinal nerves- motor nerves} மூலம் மீண்டும் மூலாதாரத்தை அடையும் எனவும் கூறப்பட்டுள்ளது.,

எனவே இடைகலை, பிங்கலை, சுழுமுனை மூன்றும் nervous system உடன் தொடர்பாயுள்ளது. இதனையே இம்மூன்றும் வாத நாடியில் ஒடுங்கும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதத்தின் தொழிற்பாட்டை பார்த்தால் ஆடுதல், ஓடுதல்(சமானன்), விழுங்குதல், விக்கல், ஏப்பம், மலம் சலம் வெளியேற்றம் (அபானன்) என உடலின் இயக்க செயற்பாட்டிற்கு காரணமாக இருக்கிறது. உடலில் வாதம் தோஷம் அடைந்தால் மேற்கூறிய தொழிற்பாடுகள் ˙பாதிப்படையும். இதன் பாதிப்பால் வரும் நோய்களை வாதரோகம் 80 ன் கீழ் அடக்கப்பட்டுள்ளது. இதன் குறிகுணங்களைப் பார்த்தால் ˙நீட்டல் (Extension) முடக்கலில் (Flexion) பாதிப்பால் வரும் வேதனை(Pain), உளைவ (ache) என்பவற்றுடன் சமிபாடு, சுவாசம்,என்பவற்றில் ஏற்படும் குறிகுணங்களில் அடங்கும். இதனை மேற்கத்திய வைத்திய முறையுடன் விஞ்ஞான ரீதியாக பார்த்தால் வாதம் (வளி + ஆகாயம்) வளியை கண்ணால் பார்க்க முடியாது. அசைவின் மூலம் உணரலாம். அசைவிற்கு வெளி தேவை. எனவே வாதம் தொழிற்பட வெளி தேவை. வாதத்தின் தொழிற்பாட்டால் nervous system தொழிற்பாடுகளுடன் ஒப்பிட முடியும் Impulse ஐ கண்ணால் பார்க்க முடியாது. அசைவிற்கு காரணமானது impulse ஆகும். இந்த movements நடக்க space (வெளி)தேவை. உதா:

Lung – thoraxic cage (பிராண வாயு)

Heart – Pericardial space

Colon movement – Peristaltic movements (abdominal cavity) (சமான வாயு, வியான வாயு)


Micturation, Defeacation – Pelvic cavity (அபான வாயு).

இவற்றில் ஏற்படும் பாதிப்பால் உருவாகும் நோய் நிலைகளை நாடியில் வாதநாடியில் (சுட்டு விரல் மூலம்) ஏற்படும் மாற்றம் மூலம் நோயை நிதானிக்க முடியும். இதனையே மந்தம், மலக்கட்டு, சோம்பல் என்பவற்றை வாத நாடி மூலம் அறியமுடியும் என வைத்திய சிந்தாமணி எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. ஆடுதல், ஓடுதல், நடத்தல் (activities) இவை motor functions– வாதத்தின் தொழிற்பாடுகள் ஆகும். இதனாலேயே இத்தொழிற்பாடுகள் பாதிப்படைகையில் paralysis என்கிறோம். இதனையே நாம் வாத ரோகத்திற்குள் ஒன்றான பக்கவாதத்திற்கு ஒப்பிட முடியும் என்னும் நோயில் இதேபோல் வாதநோய்களில் உளைவு(ache) குத்து (Pain)போன்ற உணர்ச்சிகள் பாதிப்புறும் நிலையில் குறிகுணங்கள் உண்டாகும். இதற்கு மேலத்தைய வைத்தியத்தில் nervous system பாதிப்பால் ஏற்படும் குறிகுணங்கள் என கூறப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தில் தசநாடிகளில் இடைகலை, பிங்கலையும் இவற்றை கட்டுப்படுத்தும் தசவாயுக்களும் காரணமாகும். Pain ஒரு sensation. வாத நோயில் pain பிரதானமானது. வரும் நோயாளியின் நாடியில் இதனைப் பார்க்க முடியும்.

காந்தாரி நாடியானது பித்தநாடியில் ஒடுங்கும். இது நாபியில் எழுந்து ஏழு பெருநரம்பு (வாதம்) வழியாக கண்டத்தில் பரவி – நாவின் அடியில் அமர்ந்திருக்கும் என வைத்திய சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது.

காந்தாரி நாடி பித்தநாடியில் ஒடுங்கமுன் வாத நாடியுடன் (ஏழு பெருநரம்பு) சென்று ஒலியை ஏற்படுத்தவும், உமிழ்நீர் சுரப்பையும் ஏற்படுத்தும் என அங்காதிபாதத்தில் கூறப்பட்டுள்ளது.

**படம் 06** : காந்தாரி நாடியின் பாதை




ஐம்பொறிகளில் நாக்கு, ஐம்புலன்களில் சுவை

அங்காதிபதம் எனும் நூலில் காந்தாரி உமிழ்நீர் சுரத்தல், ஒலியை உண்டாக்கல் ஆகிய தொழில்களைச் செய்வதாக கூறப்படுகின்றது.


காந்தாரியை பார்க்கும்போது இது நாபியில் இருந்து எழுந்து சுழுமுனையில் பெருநாடியுடன் சேரும் என கூறப்படுகிறது. இது பித்த நாடியில் ஒடுங்கும். தசநாடியில் ஒன்றான காந்தாரி சுழுமுனை ஊடாக(அதாவது spinal cord மூலம்,spinal nervesவழியாக தொண்டையை அடைந்து vocal cord ஐ) கண்டத்தை அடைந்து ஒலியை எழுப்பும் எனவும் மற்றும் (facial nerve, glossopharangial nerve, parasympatheticஉடன் இணைந்து salaivary gland ஐ தூண்டி saliva வை சுரக்கும்.) நாவின் அடியில் உமிழ்நீரைச் சுரக்கச் செய்யும். இவ் உமிழ்நீர் மூலம் சுவை உணரப்படும். இது ஐம்பொறிகளால் அறியப்படும் புலனான சுவையாகும். இதில் 96 தத்துவங்களில் தசநாடிகள், தசவாயுக்கள், பஞ்சபூதங்கள், ஐம்புலன்களுக்கும் தொடர்பு உண்டு.

வைத்திய சிந்தாமணியில் அத்தி, சிகுவை மூலத்தில் தோன்றி மேலோடி இரண்டு செவிகளிலுமமர்ந்து சப்தங்களை அறிவிக்கும் கருவிகளைக் காக்கும் என சொல்லப்பட்டுள்ளது.

செவி – ஐம்பொறிகளும் கேட்டல்- ஐம்புலன்களில் ஒன்று.

அங்காதிபாதத்தில்


**படம் 07 :** அத்தி, சிகுவை நாடியின் பாதை





வைத்திய சிந்தாமணியில் அலம்புருடன், அலம்புடை இவையிரண்டும் அடிமூலத்தைப் பற்றி மேலேறி வல இடக் கண்மணிகளி லமர்ந்து ஆட்டுவிக்கும் என கூறப்படுகிறது.

அங்காதிபாதத்தில்

**படம் 08 :** அலம்புருடன், அலம்படை நாடியின் பாதை



கண்- ஐம்பொறிகளில் ஒன்று, பார்வை ஐம்புலன்களில் ஒன்று.

எனவே 96 தத்துவங்களில் ஐம்பொறிகள், ஐம்புலன்களை கட்டுப்படுத்துகின்றது.

சங்கினி- பொக்குளில் மறைவிடத்தில் வலிமையாக நின்று உடலை இயக்குகின்ற 96 தத்துவங்களிற்கும் வலிமை பொருந்திய தொடர்புகளை மிஞ்சிப் போகவிடாது. ஒழுங்காக சமப்படுத்திக் கொண்டிருப்பான் என கூறப்படுகிறது.

மற்றும்

**அட்டவணை 02** : ஐம்புலன் தசநாடி தோஷம் இவற்றிற்கு இடையேயான தொடர்பு

| இல | ஐம்புலன் | ஐம்பொறி | Western aspect | தசநாடி | தோஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | மெய் | ஊறு | Normal sense | இடைகலை,பிங்கலை, சுழுமுனை | வாதம் |
| 2 | வாய் | சுவை | Taste | காந்தாரி | பித்தம் |
| 3 | கண் | ஒளி | Vision | அத்தி, சிகுவை | பித்தம் |
| 4 | மூக்கு | நாற்றம் | Smell | காந்தாரி | பித்தம் |
| 5 | செவி | ஓசை | Hearing | அத்தி, சிகுவை | பித்தம் |

அத்தி, சிகுவை (பித்த நாடி) - இவை நரம்பைப் பற்றி (வாதம்) செவியை அடைந்து அங்கு கேட்டலையும் மற்றும் கண்ணை அடைந்து பார்த்தலையும் உண்டாக்கும்.

எனவே 96 தத்துவங்கள், தசநாடிகள், ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் தொழிற்பட வைக்கின்றன. 96 தத்துவங்களையும் சரிவர நடத்தும் நாடி சங்கினி ஆகும். இது கபநாடியில் ஒடுங்கும்.

எனவே 10 நாடிகளினதும் தொழிற்பாட்டையும் அவற்றில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் மூன்று நாடிகளின் (V,P,K)மூலம் அறிய முடியும். 3 நாடியின் மூலம் உடலின் தொழிற்பாட்டை அறிய முடியும்.

ஆரோக்கியமான ஒருவரில் V,P,K என்பவை 1: ½ : ¼ என்னும் விகிதத்தில் காணப்படும். உதாரணமாக இதில் சுட்டுவிரலில் உணரும் துடிப்பும் நடுவிரலில் உணரும் துடிப்பும் சமமாக இருந்தால்

1. வாதம் தன்னிலையில் க்ஷீணமடைதல்
2. பித்தம் பிரகோபம் அடைதல்

இவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். இதனை மேலும் உறுதிப்படுத்த நோயாளியின் அட்டவித பரீட்சை மூலமும், நோயாளியின் நோய் வரலாறு மூலமும் ஏனைய குறிகுணங்களை அறியலாம். உதாரணமாக பித்தம் பிரகோபமடைந்தால் சுரம், வெப்பம், எரிவு காணப்படும். இவற்றின் மூலமும் மலம், சிறுநீர், பித்தத்தின் குறிகுணங்களை வைத்தும் பித்த பிரகோபத்தை நிதானிக்க முடியும். இதனை வைத்தே சிகிச்சைக்கு பித்தகர ஔடத, ஆகார விகாரங்களை ஒரு சிறந்த சித்த வைத்தியனால் தீர்மானிக்க முடியும். இதையே சிகிச்சையில் சமனம் அதாவது கூடிய தோஷத்தை தன்னிலைக்கு கொண்டு வருவது, குறைந்தால் கூட்டுவது என கூறமுடியும். சிகிச்சை முறை தீர்மானிப்பதில் நாடி மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது.

.

உசாத்துணை நூல்கள்:


1. கந்தசாமி முதலியார்(அச்சிட்டவர்) பதினெண் சித்தர்கள் அருளிய நாடிசாஸ்திரம், பிரசுரித்தோர் டீ.இரத்தினநாயகர் அண்ட் ஸன்ஸ், திருமகள் பதிப்பகம்.

2. யூகிமாமுனிவர் ,யூகிவைத்தியசிந்தாமணி, இந்தியமருத்துவம் - ஓமியோபதித்துறை சென்னை.1998.
3. டாக்டர் எஸ். வெங்கடராஜன்,'அகஸ்தியர் இரண்டாயிரம்',தஞ்சாவூர் சரஸ்வதி மகால்.1981.

4. வெங்கட்ராஜன். எஸ்.,"தன்வந்திரிவைத்தியம் (முதல் பாகம்)", 1884. தஞ்சைசரசுவதிமகால் வெளியீட்டு
5. கந்தசாமிமுதலியார், 'பதினெண்சித்தர்கள் அருளிச்செய்த ஆத்மரட்சாமிர்தம் மென்னும் வைத்தியசாரசங்கிரகம்', 1952, இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ்,திருமகள் விலாசஅச்சகம், சென்னை.
6. சிறீ.மு.வாசுதேவ சாஸ்த்ரிகள்.டீ.யு யனெ சிறி.மு.ளு.சுப்பிரமணிய சாஸ்திரிகள்,'நாடி சக்கிரம்'சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை.
7. சண்முகவேலு. ம.,நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு(இரண்டாம் பாகம்),3ம் பதிப்பு, 2003,திருவாளர்கள் எம்.எல்.எம். பிரிண்டர்ஸ்,சென்னை
8. பொன் இராமநாதன்,"மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்" முதலாம் பதிப்பு,2009, சிறீ சாயி ஓவ்செட் பிரிண்டர்ஸ், கொக்குவில்.
9. டாக்டர்.கு.மு.வேணுகோபால்,'உடல் தத்துவங்கள்', இந்திய மருத்துவம் மற்றும் கோமியோபதி இயக்கம், சென்னை.
10. கண்ணுசாமிப்பிள்ளை, கண்ணுச்சாமியம் எனும் வைத்திய சேகரம்", ஒன்பதாம் பதிப்பு, இரத்தின நாயகர் அன்ட் சன்ஸ், சென்னை
11. பொன்னையா.ஐ.,"அங்காதிபாதம்(வாகடத்தத்துவத்துடன்)",1938., திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை, சுன்னாகம்.
12. திருவள்ளுவர்.,"திருக்குறள்"
13. சித்தர் கையேடு
14. வினாயகமூர்த்தி. வை.க. "அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி", முதலாம் பதிப்பு,2010, சண் அச்சகம்,மட்டக்களப்பு,
15. வெங்கட்ராஜன். எஸ்.,"தன்வந்திரிவைத்தியம் (முதல் பாகம்)", 1884. தஞ்சைசரசுவதிமகால் வெளியீட்டு, தஞ்சாவூர்.
16. சிதம்பரநாதர் வைத்தியர்,"நாடி தர்ப்பணம்", 2011,மீள் பதிப்பு, மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வட மாகாணம், சிவரஞ்சனம் ஓவ்செட் பிரிண்டர்ஸ், கோண்டாவில்.

17. தேரையர்,“தேரையர் யமக வெண்பா”, இரண்டாம் பதிப்பு, 2003, திருவாளர்கள் எம்.எல்.எம். பிரிண்டர்ஸ், சென்னை
18. தேரையர் மாமுனி, “தேரையர் காப்பியம்- மூலமும் உரையும்” 1975, முதலாம் பதிப்பு, பண்டித் எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை வெளியீடு. 61
19. அகஸ்திய மாமுனிவர், “பரிபூரணம் - 400”, முதலாம் பதிப்பு, இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை
20. அகஸ்திய முனிவர் திருவாய்மலர்ந்தருளிய “வயித்திய ரத்தினச் சுருக்கம்” , முதலாம் பதிப்பு, 1898, இராமசாமிநாயிடு பிரஸ், சென்னை.